# தமிழரசு

ஜூன் 2007
விலை ரூ.10/-

செய்தி மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு





மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படும்
திட்டப் பணிகளில் குழந்தைகள் மையத்திற்கு எரிவாயு இணைப்புடன் அடுப்பு மற்றும்
அடுகலன் (குக்கர்) வழங்கினார்கள்.
மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் டாக்டர் (திருமதி) பூங்கோதை,
வணக்கத்திற்குரிய சென்னை மேயர் திரு.மா.சுப்பிரமணியன் ஆகியோர் உடன் உள்ளனர் (1.6.2007)

# தமிழரசு

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு
திருவள்ளுவர் ஆண்டு 2038
வைகாசி - ஆனி ஜூன் 2007
மலர் : 38 இதழ் : 12

**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர்

முனைவர் **ஆ.சி.மோகன்தாஸ், இ.ஆ.ப.,**
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத் துறை

நிருவாக ஆசிரியர்

துரை. தாமரைச்செல்வம்
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மை பொறுப்பாசிரியர்

மு. ஸ்ரீநாகேஷ்
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான

செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

எஸ்.பி.எழிலழகன்
ஆர்.சேகர்

உதவி ஆசிரியர்கள்

க.இராஜராஜேஸ்வரி
இரா.சுரேஷ்
வீ.இரா.நவநீதகிருஷ்ணகுமார்
இரா.இளவரசி

நிருபர்கள்

கோ.சண்முகம்
மாய குமரேசன்

இதழ் உதவியாளர்கள்

தி.பெரியார் சாக்ரடீசு
ஜெ.ஜெயசிம்ஹன்

புகைப்படக்காரர்

வி.ராதாகிருஷ்ணன்

கணினி வடிவமைப்பு

பி.ஏ.லூயிஸ் பெரியநாயகம்
அ.மதன்

ஆர்.பாலாஜி,
ஒப்பந்த தொழில்நுட்ப கணினி இயக்குபவர்

சென்னை - தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணாசாலை, சென்னை-600 002.

தொலைபேசி : 25368926/25364906
தொலைநகல் : 25364906
மின்அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in




**கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்**
**உடையானாம் வேந்தர்க் கொளி**

நலவாழ்வுக்கு வேண்டியவற்றை வழங்கியும், நிலையுணர்ந்து கருணை காட்டியும், நடுநிலை தவறாமல் ஆட்சி நடத்தியும், மக்களைப் பேணிக் காப்பதே ஓர் அரசுக்குப் புகழொளி சேர்ப்பதாகும்.

- கலைஞர் திருக்குறள் உரையிலிருந்து


★ **சட்டப்பேரவையில் கலைஞர் பொன்விழா**

**தமிழ்நாட்டுக்கு பேரும் புகழும் சேர்த்த கண்ணியமான தலைவர்**
- மேதகு ஆளுநர் அவர்கள் புகழாரம் ........ 3

**நீங்கள் இட்ட கட்டளையை நிறைவேற்றக் காத்திருக்கின்றேன்**
- மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரை ........ 29

**மக்களின் மனங்கவர்ந்த மக்கள் தலைவராய்**
**ஏழைகளின் நெஞ்சங்களில் வாழ்கிறார் கலைஞர்**
- மாண்புமிகு நாடாளுமன்ற சபாநாயகர் அவர்கள் உரை ........ 34

**பெரியார் - அண்ணா வழியில் 50 ஆண்டுகாலம்**
**சட்டமன்றப் பொதுவாழ்க்கை நடத்தியிருக்கின்றேன்**
- மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரை ........ 48

**தமிழகத்திற்கு மட்டுமல்ல இந்தியாவிற்கும் கலைஞர் அவர்கள்**
**ஆற்றியுள்ள பணி சிறப்பானது**
- மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் உரை ........ 52

**கலைஞருடைய தாக்கம் மூன்று தலைமுறையாக**
**தமிழகத்திலே இருக்கின்றது**
- திருமதி.சோனியா காந்தி அவர்கள் உரை ........ 54

★ **மாநிலங்களுக்கிடையிலான நதிகளை தேசியமயமாக்க வேண்டும்**
- மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரை ........ 57

★ **மரபு சாரா எரிசக்தித் துறையில் தமிழ்நாடு**
**இந்தியாவிலேயே முதல் இடத்தை வகிக்கிறது**
- மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரை ........ 62

★ **மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிட**
**கலைஞர் அரசு எப்போதும் காத்திருக்கின்றது**
- மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் உரை ........ 68


★ **தமிழகத்தில் அர்ச்சகர் பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டன** ........ 73

★ **நல வாரியங்கள்**
- மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவிப்பு ........ 75


**அட்டைப் பட விளக்கம்**


முதலாம் பக்க அட்டை

புதுதில்லியில் 28-5-2007 அன்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சந்திப்பு



# சட்டமன்றத்தில் கலைஞர் பொன்விழா

சட்டமன்றத்தில் கலைஞர் பொன்விழாவினையொட்டி கண்கவர் ஒளிவிளக்குகளாலும், மணம் கமழும் மலர் மாலைகளாலும், அழகுற அலங்கரிக்கப்பட்ட தமிழ்நாடு சட்டமன்றப்பேரவை மண்டபத்தில் 2007ஆம் ஆண்டு மே திங்கள், 11 ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10–00 மணியளவில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், சட்டமன்றப்பேரவை உறுப்பினர்களும், சிறப்பு அழைப்பிதழ் பெற்ற மாண்புமிகு மத்திய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.





மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவருடன் மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் காலை 10 மணியளவில் சட்டமன்றப் பேரவை மண்டபத்தை வந்தடைந்தார்கள்.

அனைவரும் எழுந்து நிற்க, தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்பெற்றது.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். பின்னர், சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் மற்றும் அவை முன்னவர், மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் உரையாற்றினார்கள். பின்னர் மேதகு தமிழக ஆளுநர் திரு.சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் உரையாற்றினார்கள். அவரது உரை வருமாறு :

# தமிழ்நாட்டுக்குப் பேரும் புகழும் சேர்த்த கண்ணியமான தலைவர்

## மேதகு ஆளுநர் புகழாரம்

"தமிழ்நாடு முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராய்த் தொடர்ந்து 50 ஆண்டுகள் பணியாற்றிய பொன்விழாவின்போது அவரைப் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

'எந்தப் பணியில் ஈடுபட்டாலும் அந்தப் பணியில் ஒன்றிச் செயல்படுபவர்களே உண்மைத் தலைவர்கள் ஆவார்கள்' என்று மேக்வெல் ட்ரோக் சொன்னதுபோல, தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக ஆக்கும் முயற்சியில் டாக்டர் கலைஞர் அவர்கள் மனமும் செயலும் ஒன்றிச் செயல்பட்டு கொண்டிருக்கிறார்.

நான் கலைஞரை கிட்டத்தட்ட நாற்பது ஆண்டுகளாக அறிவேன். அவர் பஞ்சாபுக்கு வந்தபொழுது, நான் அந்த மாநிலக் கல்வி அமைச்சர். தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் இடுக்கண் வந்தபோதெல்லாம் நெருக்கடிகள் நெருக்கிய போதெல்லாம் மலைக்காமல் உறுதியுடன் நின்றார். தமிழ்நாட்டுக்குப் பேரும் புகழும் சேர்த்த கண்ணியமான தலைவர் அவர்.

பிரதிநிதித்துவ ஜனநாயகத்தில் ஒரு சட்டமன்ற உறுப்பினர் மக்களின் கண்ணும், காதும், குரலுமாகச் செயல்பட வேண்டுமென்று நாடாளுமன்ற மரபறிந்த ஓர் அறிஞரான ஜான் ஸ்டுவர்ட் மில் என்பவர் குறிப்பிட்டிருக்கிறார். சட்டமன்றம் மக்கள் விருப்பத்தை வெளிப்படுத்தும் ஓர் அமைப்பு. கலந்துரையாடி கூட்டு முடிவெடுக்கும் ஓர் அமைப்பு முறை அது.

சட்டம் இயற்றும் திறமையுடன் கூட பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்கள் கொள்கை முடிவுகளை வரையறுப்பதிலும், சிக்கலான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலும் வல்லவர்களாக இருக்கிறார்கள். சிக்கலான பிரச்சினைகள் உருவான பொழுதெல்லாம் கலைஞர் எளிதாகத் தீர்வு கண்டிருக்கிறார்.

சட்டமன்ற விவாதங்களில் அவருடைய பங்கு மிகச் சிறப்பானது. கடும் உழைப்பு, ஆழமான படிப்பு, அன்றாட நிகழ்வுகளுக்குத் தம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வது போன்ற பண்புகளே அவரது வெற்றிக்குக் காரணம். பொருளாதாரப் பிரச்சினைகளை மிக ஆழமாக அலசி ஆய்ந்து நெளிவு சுளிவுகளைப் புரிந்து கொள்ளும் அவருடைய திறமையால்தான் அவரால் அந்தப் பிரச்சினைகளை எளிதாகக் கையாள முடிகிறது.

பொதுவாழ்வில் உண்மையான ஈடுபாடும், கூர்த்த மதிநுட்பமும் படைத்தவர் அவர். தமிழ் – தமிழ்நாட்டு மக்களிடம் மிகுந்த கடமை உணர்வும் பொறுப்புணர்வும் கொண்டவர் அவர்.

**சமூக நீதியே அவர் கனவு**

அவர் பல்துறை அறிவும் பன்முகப் பார்வையும் கொண்ட ஓர் உயர்ந்த அறிவாளி. மிக உயர்ந்த நிருவாகி. வாதம் புரிவதில் வல்லவர். சமூகநீதியே அவர் கனவு. அரசியல் – நிருவாகங்களில் கலைஞரைப் போல் நுண்ணறிவு படைத்தவர்கள் மிகக் குறைவே. தமிழ்நாட்டில் புதுப்புதுத் தொழில்களைத் தொடங்க உதவுவதில் அவர் முனைப்பாக இருக்கிறார். பொருளாதார முன்னேற்றம், வேலைவாய்ப்புக்கான வழிமுறைகளை உருவாக்குவதில் அவர் மிகுந்த அக்கறை காட்டுகிறார். சுறுசுறுப்பும் ஆற்றலும் சேர வழிகாட்டும் அவரது தலைமைக்கு ஏற்ப அதிகாரிகளும் ஆட்சி அமைப்பும் இணைந்து ஒத்துழைக்கிறார்கள்.

பொதுமக்களின் பல பிரச்சினைகள் பற்றி கலைஞர் சட்டமன்றத்தில் தம் ஆற்றலை வெளிப்படுத்தி இருக்கிறார். சிக்கல்கள் மிகுந்து குழப்பம் நிலவும் சூழ்நிலையில் கூட அவர் தம்முடைய நகைச்சுவை உணர்வால் அவையில் கலகலப்பூட்டி நிலைமையின் இறுக்கத்தைத் தளர்த்துவார்.

தனித்தகுதிகள் இல்லாமல் யாரும் சிறப்பான இடத்தைப் பெற்றுவிட முடியாது. ஒரு மனிதர் தாம் போட்டியிட்ட எல்லாத் தேர்தல்களிலும் வெல்வது என்பதும், ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக வருவது என்பதும் உண்மையிலேயே மிகப் பெரிய சாதனை ஆகும். 14 ஆம் வயதில் அரசியலில் நுழைந்தவர் அவர். நீதிக்கட்சித் தலைவர்கள்பால் அவருக்கு ஓர் ஈர்ப்பு ஏற்பட்டது. "தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம்'' என்ற ஓர் அமைப்பை அவர்

**"சட்டமன்ற விவாதங்களில் அவருடைய பங்கு மிகச் சிறப்பானது. கடும் உழைப்பு, ஆழமான படிப்பு, அன்றாட நிகழ்வுகளுக்குத் தம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வது போன்ற பண்புகளே அவரது வெற்றிக்குக் காரணம்''**

தொடங்கினார். அதுவே திராவிட இயக்கத்தின் முதல் மாணவர் அமைப்பு ஆகும். இந்த இளைஞர் இயக்கமே அவரைச் சட்டமன்றம் வரை கொண்டு வந்திருக்கிறது. முதன்முதலாக 1957இல் அவர் சட்டமன்றத்தில் நுழைந்தார். 11 முறை தேர்தல்களில் ஈடுபட்டு எல்லாவற்றிலும் அவர் வெற்றியே கண்டார்.


நான் தமிழ்நாட்டின் ஆளுநராக இரண்டு முறை இருந்திருக்கிறேன். சமூகநீதியில் அவருக்கு இருக்கும் அக்கறை, அரசியலை முழுமையாகப் புரிந்துகொள்ளும் பேராற்றல், சிறந்த நிருவாகத் திறமை ஆகியவற்றை நான் நெருக்கமாக இருந்து பார்த்து வியந்திருக்கிறேன்.

பொதுவாகத் தலைவரைத் தேடித் தொண்டர்கள் செல்வது இயல்பு. ஆனால், தலைவர் அண்ணா கலைஞரைத் தேடி வந்தார் என்று அறிந்து வியப்படைந்தேன்.

அண்ணாவின் திராவிட நாடு இதழில் 14 வயதுள்ள கலைஞர் எழுதிய ஒரு கதை அவரை மிகவும் கவர்ந்ததால் கலைஞரைப் பார்க்க அண்ணா விரும்பினார். பிறகு ஒரு முறை அண்ணா பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள திருவாரூர் வந்த பொழுது கலைஞரைப் பார்க்க விரும்பினார். 14 வயது சின்னப் பையனை அவர்முன் கொண்டு வந்து நிறுத்தியபோது அண்ணா மகிழ்ச்சியும் பரவசமும் அடைந்து கலைஞரைத் தழுவிக் கொண்டார்.

**பெரியாரின் கனவு நனவாகியிருக்கிறது**

அதேபோல் பெரியார் கலைஞரைத் தம்முடைய மாணவனாக ஏற்றுக் கொண்டதும் நினைவில் நிற்கும் ஒரு நிகழ்ச்சியாகும். புதுச்சேரியில் 1945இல் பெரியாரும் அண்ணாவும் கலந்துகொண்ட ஒரு கூட்டத்தில் கலைஞரும் கலந்துகொண்டதாகச் சொன்னார்கள். அந்தக் கூட்டத்தை ஒட்டி ஏற்பட்ட கலவரத்தில் அரசியல் எதிரிகள் கலைஞரை அடித்து சாக்கடையில் தூக்கி எறிந்து விட்டார்கள். பெரியார் கலைஞரைத் தேடிக் கண்டுபிடித்து அவரது காயங்களுக்கு மருந்திட்டு நடந்த நிகழ்ச்சிக்காக வருத்தப்பட்டார். பெரியார் ஈரோடு திரும்பியபோது கலைஞரையும் தம்முடன் அழைத்துச் சென்று 'குடி அரசு' இதழில் துணை ஆசிரியராக அமர்த்திக் கொண்டார். இப்படி பெரியாரின் மாணவரான கலைஞர் இன்றுவரை பெரியாரின் சமுதாயச் சீர்திருத்தக் கொள்கைகளுக்கு வடிவம் கொடுத்து அவற்றைச் சட்டமாக்கவும் செய்திருக்கிறார். இந்த வகையில் எல்லாச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்று அண்மையில் சட்டமாக்கப்பட்ட சமூக சீர்திருத்த நடவடிக்கையையும் சொல்லலாம். இதில் பெரியாரின் கனவு நனவு ஆகி இருக்கிறது.




கலைஞர் தம்முடைய ஆற்றல் மிக்க எழுத்துக்களால் மக்கள் நெஞ்சங்களில் இடம் பெற்று இருக்கிறார். 150 புத்தகங்களுக்கு மேலே எழுதி அவர் ஒரு சமூகப் புரட்சியே உண்டு பண்ணி இருக்கிறார். தமிழ் இலக்கியத்துக்குப் புத்துயிர் கொடுத்தவராக மக்கள் அவரைப் போற்றுகிறார்கள். கலைஞர்

**“கண்ணொளி வழங்கும் திட்டம், பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டம், கை ரிக்ஷாக்களுக்கு பதிலாக சைக்கிள் ரிக்ஷா அறிமுகம், குடிசை மாற்று வாரியம், திருமண உதவித் திட்டம், சமத்துவபுரத் திட்டம், உழவர் சந்தை, நிலமற்ற ஏழைகளுக்கு தரிசு நிலம் வழங்குதல், இலவச வண்ணத் தொலைகாட்சிப் பெட்டி வழங்குதல், ஏழைகளுக்கும், அடித்தட்டு மக்களுக்கும் இலவச எரிவாயு இணைப்பு, கிலோ 2 ரூபாய்க்கு மானிய விலையில் அரிசி வழங்கல் உள்ளிட்ட திட்டங்கள் மூலம் ஏழைகளின் வாழ்வும் உயர்வு பெற அவரின் அர்ப்பணிப்புச் செயல்களை மேற்கொண்டு வருகிறார்.’’**

திரைப்படத்தின் மூலமாகவும் சிறப்பாகச் சமுதாயச் சீர்திருத்த முயற்சிகளை மேற்கொண்டார்.

இலக்கியம் மட்டுமல்லாமல் கட்டடக் கலை, நுண்கலைகள் மூலமாகவும் தமிழ்மொழிக்குச் சேவை செய்திருக்கிறார். திருக்குறளைக் குறளோவியமாகத் தந்த கலைஞர் வள்ளுவருக்கு ஒரு கோட்டமே கட்டிச் சிறப்புச் சேர்த்திருக்கிறார். கன்னியாகுமரியில் திருவள்ளுவருக்கு 133 அடி உயரச் சிலை அமைத்ததன் மூலம் கலைஞர் திருவள்ளுவர் மீது வைத்திருக்கும் பெருமதிப்பை நாம் புரிந்துகொள்ள முடிகிறது.

கலைஞரின் மொழி ஆளுமைதான் அவரது புகழ்ச் சிகரத்தின் அடிப்படையும் ஆதாரமும் ஆகும். இந்தப் பேராற்றல்தான் அவரது அரசியல் எதிரிகளைக் கூட வசியப்படுத்தி விடுகிறது.

‘சொலல்வல்லன் சோர்விலான் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது’

என்று திருவள்ளுவர் ஒரு திருக்குறள் பாவில் சொல்லி இருக்கிறார். இது கலைஞருக்கு மிக மிகப் பொருத்தமாகும். சோர்வு என்பதையே அறியாதவர் கலைஞர். அஞ்சாமை அவரது அரும்பண்புகளில் ஒன்று. அவரது மாற்றார்கூட இந்த உண்மைகளை மறுக்க முடியாது.

**இராஜாஜி-காமராசர் பாராட்டு**

கலைஞரின் மிக உயர்ந்த அரசியல் பண்பாடு 1972–இல் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியின் மூலம் வெளிப்பட்டது. இராஜாஜி உட்பட பல விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு 1972–இல் நினைவுப் பரிசுகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. 2.10.1972ல் நடைபெற்ற அந்த விழாவிற்கு இராஜாஜி வர இயலாத நிலை. இராஜாஜி கலைஞரிடம் தமக்குப் பதிலாக அந்த நினைவுப் பரிசைப் பெற்றுத் தமக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொண்டார்.


2.10.1972 அன்று கலைஞர் விழாவுக்குச் சென்றுஇராஜாஜியின் சார்பில் அந்தப் பரிசைப் பெற்றுக் கொண்டார். அது பெரிதல்ல. அடுத்த நாள் 3.10.1972 அன்று கலைஞர் இராஜாஜியின் வீட்டிற்குச் சென்று அவருக்கு மாலை அணிவித்து அரசு வழங்கிய அந்த நினைவுப் பரிசையும் அவரிடம் ஒப்படைத்தார்.

மாநிலத்தின் முதலமைச்சரே தம் வீட்டிற்கு நேரில் வந்து அந்த நினைவுப் பரிசை வழங்கியதை இராஜாஜி வெகுவாகப் பாராட்டினார்.

அதேபோல் கலைஞருக்கும் காமராசருக்கும் அரசியல் ரீதியாக பல்வேறு மாறுபாடான கருத்துக்கள் இருந்தபோதும் மற்ற யாரையும்விட காமராசரை கலைஞர் அவர்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளார்கள். உண்மையில் சொல்லப்போனால் தன்னுடைய வாழ்நாளில் காமராசர் அவர்கள் கலைஞர் அவர்களை உயர்வாகவே பாராட்டியுள்ளார்.

**மக்களின் முதலமைச்சர்**

தமிழக மக்களின் இதயங்களை குறிப்பாக ஏழைகள் மற்றும் அடித்தட்டு மக்களின் இதயங்களை வெகுவாகவே கவர்ந்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள். மக்களின் முதலமைச்சர் என்றே அவரை அழைக்கலாம். அவர் அறிமுகம் செய்த பல்வேறு



திட்டங்களான கண்ணொளி வழங்கும் திட்டம், பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டம், கை ரிக்ஷாக்களுக்கு பதிலாக சைக்கிள் ரிக்ஷா அறிமுகம், குடிசை மாற்று வாரியம், திருமண உதவித் திட்டம், சமத்துவபுரத் திட்டம், உழவர் சந்தை, நிலமற்ற ஏழைகளுக்கு தரிசு நிலம் வழங்குதல், இலவச வண்ணத் தொலைகாட்சிப் பெட்டி வழங்குதல், ஏழைகளுக்கும், அடித்தட்டு மக்களுக்கும் இலவச எரிவாயு இணைப்பு, கிலோ 2 ரூபாய்க்கு மானிய விலையில் அரிசி வழங்கல் உள்ளிட்ட திட்டங்கள் மூலம் ஏழைகளின் வாழ்வும் உயர்வு பெற அவரின் அர்ப்பணிப்புச் செயல்களை மேற்கொண்டு வருகிறார்.

அரசியலில் பொதுவாக நல்ல பேச்சாளராக, சீரிய பேச்சாளராக மக்களைக் கவரும் வண்ணம் சிரிப்பூட்டும் வகையிலும், எடுத்துக்காட்டுகளின் வகையிலும், இருப்பாரே யானால் அவர் பல்வேறு நிகழ்வுகளை நினைவு கூர்ந்து பேசக்கூடியவராக மக்களின் இதயங்களை கொள்ளை கொண்டவராக இருப்பார். பார்வையாளர்களைக் கவரும் வண்ணம் பல்வேறு ஆதாரங்களில் இருந்து பல எடுத்துக்காட்டுக்களை நல்ல பேச்சாளர்கள் குறிப்பிட்டு பேசுவார்கள். அத்தகைய திறமை என்பது ஒரு சிலருக்கே அமையும் அத்தகைய திறமை வாய்ந்த ஒரு சிலரில் டாக்டர் கலைஞர் அவர்களும் ஒருவர்.

**மீண்டும் மீண்டும் தொடர்ந்து வெற்றி**

உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடாகத் திகழ்வது இந்தியா. இங்கே நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் மக்களின் பிரதிநிதிகள் இருந்து செவ்வனே செயலாற்றி வருகிறார்கள். நம்முடைய ஜனநாயகம் என்பது கண்ணியமும், வரிமையும் கொண்டதாக திகழ்கிறது. சிறந்த முறையிலும் திறமையான முறையிலும் நிருவாகம் செய்வதன் அடிப்படையில் மக்களின் நம்பிக்கையையும் அவர்களின் மரியாதையையும் கவர்ந்தவராக டாக்டர் கலைஞர் அவர்கள் திகழ்கிறார். அதன் காரணமாக கடந்த 50 ஆண்டுகளாக சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் மீண்டும் தொடர்ந்து வெற்றி பெற்று வருகிறார்.

அவருடைய விரிவான பேச்சு, கவிதைத் திறன், அரசியல் விவேகம் இவைகள் தமிழக மக்களின் இதயங்களை கொள்ளை கொள்ளும் வகையில் இருந்து வருகிறது.

தமிழக மக்களின் தேவாமிர்தமாக மனம் கவர்ந்த உரிய மனிதராக டாக்டர் கலைஞர் அவர்கள்

கருதப்படுகிறார். 50 ஆண்டுகளாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துக் காட்டாகவே அவர் திகழ்ந்து வருகிறார்.

நாம் பல்வேறு பொன்விழாக்களை கண்டிருக்கிறோம். ஜனநாயக நாட்டில் 50 ஆண்டுகாலம் சட்டமன்றத்தில் தொடர்ந்து ஒருவர் பணியாற்றி பொன்விழா காணுகிறார் என்றால் அவர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். இந்திய ஜனநாயக தத்துவத்தை பொறுத்தவரையில் அவர் மிகப்பெரிய சாதுர்யம் மிக்கவர் என்பதை நிரூபிக்க இதுவொன்றே போதும்.

ஜனநாயகத்தைப் பொறுத்தவரையிலும், மக்களைப் பொறுத்தவரையிலும் சட்டமன்றத்தில் அர்த்தமுள்ளதாக விவாதங்கள் இருக்க வேண்டும். அந்த வகையில் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆற்றி வரும் பணி மிகவும் பாராட்டுதற்குரியதாகும்.

தமிழக மக்களுக்கும், இந்திய மக்களுக்கும் அவரது பணி தொடர்ந்து கிடைக்க வேண்டும். அரசியலில் பணியாற்றி வருபவர்களுக்கு, அரசியலுக்கு வருபவர்களுக்கு கலைஞர் அவர்களது வாழ்க்கை ஒரு எடுத்துக்காட்டாக அமைய வேண்டும் என்றும் அவர் நீண்ட நாள் நல்ல திடகாத்திரமாக வாழவேண்டும் என்றும் நான் வாழ்த்துகிறேன். தமிழ்நாட்டிற்கும், இந்திய மக்களுக்கும் அரிய சேவைகளை இன்னும் பல்லாண்டுகள் அவர் ஆற்ற எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய சுதந்திரப்போரின் 150ஆவது ஆண்டு விழா இன்று நடைபெறுகிறது. இதே நாளில் கலைஞர் அவர்களின் சட்டமன்ற பணிகளுக்கான பொன்விழாவும் நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது டாக்டர் கலைஞர் அவர்களுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

# இந்தியாவில் எந்த முதல்வரும் செய்யாத நலத்திட்டங்களை அளித்த முதல்வர்

மாண்புமிகு பேரவைத் தலைவர்
திரு. **இரா.ஆவுடையப்பன்** அவர்கள்
தமது வரவேற்புரையில் குறிப்பிட்டதாவது :

“சமுதாயக் கொடுமைகள் என்ற சமூகச் சரிவுகளில் சிக்கித் தவித்த தமிழ் மக்களைக் கரையேற்ற வந்த கலங்கரை விளக்கமாய், ஒளிவிளக்காய், உழைப்புச் செம்மலாய், தமிழ்நாடு சட்டமன்றப்பேரவைக்கு 1957ஆம் ஆண்டு முதல் போட்டியிட்ட ஒவ்வொரு பொதுத் தேர்தலிலும் வெற்றி பெற்று,



50 ஆண்டுகளுக்கு மேல் சட்டமன்றத்தில் பங்குபெற்ற பெருமைக்குரிய வரலாறுகளைப் படைத்துவரும் மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களை வாழ்த்துகின்ற இந்நாள் ஒரு திருநாள்; தமிழகத்தின் வருங்கால வரலாற்றை உருவாக்கும் ஒரு பொன்னாள். தமிழக வரலாற்றின் பொன்னேட்டில் ஒரு புது அத்தியாயத்தைத் தொடங்குகிற நிகழ்ச்சியாக தமிழகத்தில், ஏன் இந்தியாவிலேயே, உலகிலேயே எந்த முதல்வருக்கும் இல்லாத பெருமை, ஐந்தாம் முறையாக முதல்வராக அமர்ந்து நல்லாட்சி நடத்திவரும் சிறப்பு, நம் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் ஒருவருக்கே உரியது. ஒடுக்கப்பட்ட மக்களின் ஒப்பற்ற தலைவரும், இந்தியத் துணைக் கண்ட வரலாற்றில் ஜனநாயக நெறிகளைக் கட்டிக்காப்பவரும், மனித உரிமைக்கு உரத்த குரல் கொடுப்பவரும், பெரியாரின் சலியாத உழைப்பும், பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் அயராத தொண்டும், பேரறிஞர் அண்ணா அவர்களின் பரந்த உள்ளமும், இவை அனைத்திற்கும் இலக்கணமாகத் திகழ்பவரும், தமிழனுக்காகவும், தமிழ் மொழிக்காகவும் தன்னை அர்ப்பணித்து வாழ்பவரும், தன் அரசியல் அனுபவங்கள் அத்தனையையும் மனிதநேயத் திட்டங்களை நிறைவேற்றுவதிலே பயன்படுத்திக் கொண்டு இருக்கும் நம் தலைவர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் இப்பொன் விழா நிகழ்ச்சியில், பாராட்டுரை வழங்க வந்துள்ள, ஹரியானா மாநிலத்தில் பிறந்து, சட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்று, வழக்கறிஞராகப் பணியாற்றி, சட்டமன்ற உறுப்பினராக, பாராளுமன்ற உறுப்பினராக, மத்திய அமைச்சராக, பஞ்சாப் மாநிலத்தின் முதலமைச்சராக, இன்றையதினம், தமிழகத்தில் இரண்டாவது முறையாக ஆளுநராக இருக்கும் மேதகு திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களே! நெல்லைச் சீமையிலே சாமானியனாகப் பிறந்து, வழக்கறிஞராக பணியாற்றத் தொடங்கிய என்னை, சரித்திரப் புகழ்வாய்ந்த இந்தச் சட்டமன்றத்தில் பேரவைத் தலைவராக உயர்ந்த நிலையில் அமர வைத்து அழகு பார்க்கும் என் குடும்பத் தலைவர், தமிழ் இனத்தின் பகைக் கூட்டத்தை எதிர்க்கும் உறுதி படைத்து, தமிழ் மொழியைப் பாதுகாக்கும் உணர்வுக்கு வடிவம் தந்தவர், நீதிமன்றத்தில் தமிழில் வாதாட உரிமையைப் பெற்றுத் தந்தவர், ஆதிதிராவிட மக்களின் உரிமைகளை நிலைநாட்டி அவர்கள் வாழ்க்கையில் வளம் சேர்த்தவர், பகுத்தறிவு தந்த தந்தை பெரியாரின் கரம் பற்றி, அவர்தம் பாசறையில் பயிற்சி பெற்று பேரறிஞர் அண்ணாவின் உள்ளத்தில் இடம் பெற்று, இன்று தமிழக மக்களின் உள்ளங்களில் கொலுவீற்றிருக்கும் பொன்விழா நாயகர் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களே! பேரவை முன்னவர், நிதி அமைச்சர் அவர்களே மற்றும் அமைச்சர் பெருமக்களே! சட்டமன்றக் கட்சித் தலைவர்களே! பேரவை உறுப்பினர்களே! சிறப்பு அழைப்பாளர்களே! பத்திரிகையாளர்களே! வருகை தந்திருக்கும் அறிஞர் பெருமக்களே!

நான் நெல்லை மாவட்டத்திலே மாவட்ட கழகச் செயலாளராகப் பணியாற்றியபோது, இயக்கத்தின் 50–ஆவது ஆண்டு பொன்விழா மாநாட்டை வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து சிறப்பாக நடத்தும் பெரும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதே வகையில் ஐந்தாவது முறையாக அரியணையில் வீற்றிருக்கும், கழகத் தலைவர் கலைஞர் அவர்களின் சட்டமன்றத்தில் கலைஞர் பொன் விழா நிகழ்ச்சியிலும், பேரவைத் தலைவராக இருந்து கலந்துகொள்கின்ற ஒரு பெரும் பேறு எனக்குக் கிடைத்துள்ளது. இது யாருக்கும் கிடைக்காத அரிய பேறு. இதனைப் பெற நான் என்ன தவம் செய்தேன் என பூரிப்பும் பெருமையும் அடைகின்றேன்.

நான் பேரவைத் தலைவராகப் பொறுப்பேற்ற அன்றையதினம் என்னை இந்தப் பதவியில் அமர்த்தி தமிழ்நாடு ஒரு ஜனநாயகத் தோட்டம் என்பதனை நாட்டுக்கு, உலகுக்கு அறிவிக்க அனைவரும் உதவிடுவோம் என்று என்னை வாழ்த்தி, தலைவர் கலைஞர் அவர்கள் இந்த இருக்கையிலே அமர வைத்தார்கள். 1957 ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் அண்ணா அவர்கள் முதன்முதலாக அன்றைய அவைத் தலைவர் டாக்டர் கிருஷ்ணாராவ் அவர்களைப் பாராட்டிவிட்டு கீழ்க்கண்டவாறு கூறினார்கள்:

"நம் நாட்டில் ஜனநாயகம் குழந்தைப் பருவத்தில் இருக்கிறது. நாங்கள் இதுபோன்ற பாராளுமன்ற அமைப்புகளின் நடவடிக்கைகளுக்குப் புதியவர்கள், தங்களுடைய புன்சிரிப்போடு கூடிய கட்டளையினால் எங்களைத் திருத்தவேண்டும். பண்படுத்தப்பட்ட ஜனநாயகவாதிகளாக ஆக்கவேண்டும். இன்று இந்த நாட்டில் அரசியல் பெருந்தன்மை என்பது அதிகமாகத்

தேவைப்படுகிறது. அரசியல் பெருந்தன்மை என்பது கொடுத்து வாங்கப்படவேண்டிய ஒன்றே தவிர, ஒரு வழி வியாபாரம் இல்லை'' என்றார்.

**சிறந்த ஜனநாயகவாதி**

இன்றையதினம் கலைஞர் அவர்கள், எதிர்க்கட்சிகளுடைய கருத்துகளுக்கு மிகுந்த மதிப்பளித்து, ஜனநாயக மரபுகளைக் காத்து, அவர்களின் பேச்சுக்கு முதலிடம் கொடுத்து, பதிலுக்குப் பதில் அளித்து, சுவை கெடாது, விரசம் தலை நீட்டாது, விரோத உணர்ச்சிகளுக்கு வித்திடாமல் ஜனநாயக மரபுகளைக் கட்டிக்காத்து பெரும் பெருமை பெற்ற ஜனநாயகவாதியாக பீடுநடை போடுகிறார்கள். எதிர்க்கட்சிகளுக்கு எந்த அளவிற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்றும், எதிர்க்கட்சிகளை எடுத்தேன், கவிழ்த்தேன் என்று பேசி அலட்சியப்படுத்துவது ஒரு ஆளுங்கட்சியின் இலக்கணமாக அமைந்துவிடக் கூடாது என்று 1966 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பேரவையில் எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்து பேசியது மட்டுமின்றி, இன்றையதினம் ஆளும் கட்சியாக இருந்துகொண்டு எதிர்க்கட்சிகளுக்கு அளிக்க வேண்டிய முக்கியத்துவத்தை அளித்து, ஏன், சில நேரங்களில், பிரதான எதிர்க்கட்சிகள் விதிகளுக்கு முரணாக செயல்பாடுகளில் ஈடுபடுகின்றபொழுதுகூட, அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க பிற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒருமித்த கருத்தில் குரல் எழுப்பியபோதும் மாண்புமிகு முதல்வர் அவர்கள், எதிர்க்கட்சிகளும் தங்களது ஜனநாயகக் கடமைகளை ஆற்றவேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு, மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பொறுத்து சிறந்த ஜனநாயகவாதியாக சட்டமன்றத்தில் செயல்படும்விதம் சபையோருக்கும், இந்த நாட்டு மக்களுக்கும் தெரியும். எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கருத்துகளையும், கண்டனங்களையும் திறந்த மனத்தோடு எதிர்கொள்கின்ற அரசியல் நாகரிகம் மிக்கவர் நீங்கள் ஒருவரே. சட்டசபை விவாதங்களில் வேகம் இருந்தால்கூட வெப்பம் ஏற்பட்டுவிடக் கூடாது, வெப்பத்திற்குப் பதில் ஒளி கிடைக்கவேண்டும் என்ற கருத்தை இன்றையதினம் அவையில் செயல்படுத்தி வருகிறீர்கள். சூடாகத் தொடங்கும் வாக்குவாதங்களைக்கூட சுவையாகவும், அவையைச் சிரிப்பில் ஆழ்த்தும்விதமாகவும் முடிக்கும் பாங்கு உங்களுக்கே உரியது.

தமிழ்கூறும் நல்லுலகம் அனைத்தும் இன்றையதினம் சட்டமன்றத்தில் கலைஞர் பொன்விழா கொண்டாடுவதில் பூரிப்பெய்துள்ளது. இந்தியத் துணைக் கண்டம் மட்டுமல்ல, உலகத்தில் வாழும் கோடானுகோடி தமிழ் மக்களும் இன்றையதினம் நம் தலைவர் கலைஞர் அவர்களைப் பாராட்டுகின்றார்கள். ஆனால், மாண்புமிகு கலைஞர் அவர்களே! கடல் அலைகள் கடும் புயலை பயன்படுத்திக்கொண்டு வானத்தைத் தொட்டுவிடலாம் என உயர்ந்து உயர்ந்து பார்க்கின்றன. தொட முடியாத கோபத்தில் தன்னைத் தாங்கிக்கொண்டு இருக்கும் பூமியின் பகுதிகளை அழிக்க முயலுகின்றன. இன்றையதினம், தலைவர் கலைஞர் அவர்களின் புகழைக் கண்டு பொறுக்க முடியாத சிலர் கழகத்தின் முன்னேற்றத்திற்கும் தங்களது உன்னத முயற்சிகளுக்கும் தடைக் கற்களாக இருக்க முயற்சிக்கிறார்கள். ஆனால், அத்தனை தடைக் கற்களையும் படிக் கற்களாக ஆக்கி வரும் பாங்கு தங்களுக்கே உரியது.

ஆக, நாட்டுக்குப் பெருமையையும் புகழையும் தேடித் தந்து, தன்னுடைய நேரத்தையும், உழைப்பையும், பெருமையையும் பயன்படுத்தி, அவற்றின் மூலம் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் மேம்பாடு தந்து சமுதாயத்திற்கும் ஏற்றம் தந்து, இந்நாட்டுக்கு நன்மையைத் தேடித் தரும் தங்கள்

**"இந்தியாவில் எந்த முதல்வரும் செய்யாத அளவிற்கு நலத் திட்டங்களை அளித்திருக்கிறார்கள்.''**

பணியினை நாட்டு மக்கள் மனதெனும் மணி மண்டபத்தில் வைத்து போற்றிப் பாராட்டுகிறார்கள். இன்றையதினம் ஆன்றோர்களும், சான்றோர்களும் உலகத்தில் வாழும் இலட்சோப லட்சம் தமிழ் உள்ளங்கள் அனைத்தும் தங்களைப் பாராட்டுகின்றார்கள். ஐயன் வள்ளுவர் கூறுகின்றார்:

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு."

அதாவது, நன்மையையும், தீமையையும் காத்து பிறருக்கும் தமக்கும் நன்மைகள் பயக்கும் பயன்களை விளைவிக்கின்ற அளவுக்கு, யார் யார் பாடுபட்டு வருகிறார்களோ, அவர்களுடைய பண்புகளை இந்த உலகம் பாராட்டும். அந்த வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் சலியாத உழைப்பும், விடாத முயற்சியும், இன்றையதினம் தமிழர்கள் ஆகிய நமக்கெல்லாம் முன்னுதாரணமாக இருந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு கலைஞர் அவர்கள், ஏழையெளிய மக்கள், பாட்டாளி மக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள், நெசவாளப் பெருங்குடி மக்கள், பாடுபட்டு உழைத்து வாழ்க்கை நடத்துவோர், திக்கற்றவர்கள் ஆகியவர்களுக்கு எல்லாம் வழிகாட்டவும், உற்ற துணையாக இருக்கவும், உதவி புரிய வேண்டுமென்ற எண்ணத்துடனும், எந்தெந்த வகையில் உதவி புரிய வேண்டுமோ, அந்தந்த வகைகளில் உதவிகளைப் புரிந்து அந்த நோக்கங்களையெல்லாம் நிறைவேற்றுகின்ற முறையில் தன்னுடைய நேரத்தையும், நினைப்பையும், உழைப்பையும் பயன்படுத்தி வருகின்றார் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள். இன்றையதினம் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்கப் பொன் விழா நிகழ்ச்சியில் தலைவர்கள் எல்லாம் வாழ்த்துரை வழங்க உள்ளார்கள்.

இந்தியாவில் எந்த முதல்வரும் செய்யாத அளவிற்கு நலத் திட்டங்களை அளித்திருக்கிறார்கள். அடித்தள மக்களுக்குக் குரல் கொடுக்கும் இயக்கமாக இருக்க வேண்டுமென்ற அண்ணாவின் இலட்சியத்தை நிறைவேற்றும் வகையில் அடித்தள மக்களின் சுய தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக எத்தனையோ திட்டங்களைச் செயல்படுத்தி உள்ளார்கள்.


இன்று தங்களை வாழ்த்த வயதில்லை என்றாலும் தங்களை வணங்கி போற்றக் கடமைப்பட்டுள்ளேன். சட்டமன்ற விழாவில், பொன் விழா கண்டுள்ள கலைஞர் அவர்கள் முதலமைச்சர் பொறுப்பிலே பொன் விழா காண வேண்டும். புகழுடன் நிறை வாழ்வு வாழ வேண்டும் என வாழ்த்தி வணங்கி இவ்விழாவிற்கு வருகை தந்திருக்கும் உங்கள் அனைவரையும் வரவேற்று அமர்கின்றேன்.

வணக்கம்.

# கலைஞருக்கு ஈடாக யாரும் இல்லை

**பேராசிரியர் க. அன்பழகன்**
அவை முன்னவர்
மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு தமிழக ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களே, சட்டமன்றத்தில் பொன் விழா காணுகின்ற பெருமைக்குரிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களே, வாழ்த்துரை வழங்கி உரையாற்றி இருக்கின்ற சட்டமன்றக் கட்சித் தலைவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, சட்டமன்ற உறுப்பினர்களே, விருந்தினர்களாக வந்து இருக்கின்ற மைய அரசின் அமைச்சர் பெருமக்களே, நாடாளுமன்ற உறுப்பினர்களே, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களே, பெரியோர்களே, நண்பர்களே, இந்த விழாவில் சட்டமன்றத்தில் 50 ஆண்டுகள் எட்டி இருக்கின்ற, தொடர்ந்து மேலும் பல ஆண்டுகள் நீடிக்க இருக்கின்ற கலைஞரை வாழ்த்துகிற இந்த விழாவில் தமிழ் கற்றுக் கொள்வதிலே ஆர்வம் கொண்டு, இங்கே ஆற்றிய உரையெல்லாம் கேட்டு மகிழ்கின்ற சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களுடைய



வாழ்த்தும் இடம் பெறுவது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கின்றது.

பாராட்டப்படுவது கலைஞர்தான், வாழ்த்துரைக்கப்படுவது கலைஞர்தான். ஆனால், நான் உடல் எல்லாம் மெய் சிலிர்த்து, புளகாங்கிதத்திலே ஆழ்ந்து, என்ன பேசுவது என்று தெரியாமல் தவித்துக் கொண்டே நிற்கிறேன். நான் பேசத் தொடங்கிய அந்த நாட்களில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் ஒரு விழாவிலே, நான் மாணவன், அந்த விழாவிலே பேசுகிறபோது என்னுடைய உரையை கேட்டுவிட்டு, புரட்சிக் கவிஞர் சொன்னார். நானும் என்னைப் போன்றவர்களும் பிறந்து வளர்ந்து பேசக் கற்றுக் கொண்டோம், பேசுகிறோம். அன்பழகன், பேசிக்கொண்டே பிறந்தவன். அதனால் பேசுகிறான் என்று சொன்னார்.

ஆனால், நான் பேச முடியாதவனாக நிற்கிறேன். ஏனென்றால், இந்த அவையில் இன்றைக்குப் பேசிய கட்சித் தலைவர்கள் ஒவ்வொருவருடைய பேச்சும், இன்னும் ஒரு முறை பேச மாட்டார்களா, தொடர்ந்து கேட்க மாட்டோமா, இப்படிப் பேச எங்கேதான் கற்றுக் கொண்டார்கள்? இந்த அவையில் கலைஞர் இடம் பெற்று இருக்கிற காரணத்தால் அவர்களுக்கு இந்தப் பேச்சுக் கலையும் வந்துவிட்டதோ! அல்லது அவர்கள் பேசுவதற்கு எடுத்துக்கொண்ட அந்தப் பொருள் அவ்வளவு உயர்ந்த பொருளாக ஆகிவிட்ட காரணத்தால், அவர்களும் உயர்ந்துவிட்டார்களோ! என்று நான் எண்ணுகிறேன், வியக்கிறேன். என்னுடைய உள்ளத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் இன்று இருந்து, இதைக் காணவில்லையே என்ற ஓர் ஏக்கம் பிறக்கிறது. மற்றவர்கள் எல்லாம் பல அருமையான கருத்துகளை நூலாக அச்சிட்டு, வெளியிடப்பட்டு, பல இலட்சக்கணக்கான ஏடுகள் மூலமாக பரப்பப்படவேண்டிய கருத்துகளை இங்கே உரையாற்றினார்கள். அந்தக் கடமையை இந்த விழாக் குழுவினுடைய பொருளாளர் ஆற்காடு வீராசாமி அவர்கள் ஏற்றுக்கொண்டு நிறைவேற்றுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

**கொள்கையை பரப்புவதற்காகவே படித்தவர்**

இங்கே கலைஞரை வாழ்த்துவதற்கு எங்களுக்கு வயதில்லை என்று என்னுடைய நண்பர் சுதர்சனம் அவர்களும் சொன்னார்கள். ஆனால், எனக்கு அந்தப் பஞ்சம் இல்லை. எனக்கு வயதும் இருக்கிறது; வாழ்த்துகிற உரிமையும் இருக்கிறது; வாழ்த்திய பழக்கமும் இருக்கிறது. அவரை வைவதற்குத்தான்

**"நான் அறிந்த பெரும் புலவர்கள், தமிழ் அறிஞர்கள், என்னோடு பழகியவர்கள், எனக்கு ஆசிரியர்களாக இருந்தவர்கள் அவர்களெல்லாம்கூட கலைஞரைப்போல் இன்னொருவரால் தமிழை வளர்க்க முடியாது, எழுத முடியாது என்று பாராட்டியிருக்கிறார்கள்.''**

எனக்குச் சந்தர்ப்பம் இல்லை. தொடக்கத்தில் கலைஞரை அறிஞர் அண்ணா அவர்கள் பார்த்த அந்த நாளில் நானும் அவரை ஒரு மாணவனாக, யாரோ சொன்ன நினைவு, எனக்குச் சரியாக நினைவில்லை, அரைக்கால் சட்டை மாணவனாக கலைஞரை 14, 15 வயதில் அண்ணாவோடு பார்த்தவன் நான். திருவாரூர், விஜயபுரத்தில் சிக்கந்தர் ஹயத் கான் என்ற சிந்து மாநிலத்தினுடைய தலைவர், முஸ்லீம் லீக் ஜனாப் ஜின்னாவினுடைய கட்சியிலே விளங்கியவர், அவர் மறைவுக்கு ஒரு இரங்கல் கூட்டம், அதை நடத்திய நிகழ்ச்சிக்கு அண்ணா வந்தார். அவருக்குத் துணையாக நான் சிதம்பரத்திலிருந்து சென்றிருந்தேன். அங்கே அவரை அழைத்து வரச் சொல்லி அண்ணா பேசினார். அதற்குப் பின்னால் இந்த சட்டமன்றத்திலே நுழைகிறபோது நாங்கள் இருவரும் ஒன்றாகத்தான் நுழைந்தோம். நானும் அவரும் ஒன்றாக நுழைந்தோம், அவர் எங்கோ போய்விட்டார்! நானும் எங்கெங்கோ போய்விட்டு இங்கே வந்துவிட்டேன். நான் பாராளுமன்றத்திலே 4 ஆண்டு காலம் திருமதி இந்திரா காந்தி பிரதமராக இருந்த காலத்திலே இடம் பெற்றவன், மேலவையிலே 5 ஆண்டு காலம் இடம் பெற்றவன். அவருக்குப் பெருமை சேர்ப்பதற்காக நான் இரண்டு முறை தேர்தலிலே தோற்றவன்! எனவே, கலைஞர் அவர்களும், நானும் பெரியாரிடத்திலே பற்றுகொண்ட சிறுபிள்ளைகளாக அவரைப் பார்த்தவர்கள், கண்டவர்கள், அவரிடத்திலே சென்று பணியாற்றிய அந்தப் பெருமை அண்ணாவுக்கு உண்டு, கலைஞருக்கு உண்டு, என் தோழர் நாவலருக்கு உண்டு. நான் ஐயாவினிடத்திலே பற்று கொண்டவன். குடும்ப வழியிலேயே என்னுடைய தந்தையார் மூலமாக பழகி பற்றுகொண்டவன். 7 வயதிலேயே பார்த்தவன், 9 வயதிலேயே அவருடைய பேச்சைக் கேட்டவன். ஆனால், அவருடைய பேச்சைக் கேட்டு புரிந்துகொள்ளாத காரணத்தால் நான் அவர் பின்னால், நேராக அவரிடத்திலே செல்லவில்லை. அந்தக் கருத்துகளிலே ஒரு தெளிவு பிறந்த மனம் கலைஞரிடத்திலே இருந்த காரணத்தால் 14 வயதிலேயே எழுதத் தொடங்கினார், கொள்கையைப் பரப்பத் தொடங்கினார். நம்முடைய சிவபுண்ணியம் அவர்கள் சொன்னதுபோல, மன்னார்குடி வரையிலே நடந்து சென்று நன்கொடை பெற்று வந்து ஏடு நடத்த வேண்டிய நிலையிலே இருந்தார். ஆனால், அப்போது நான் அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவன், என்னை அழைத்து ஓர் ஆண்டு விழாவிலே, அவருடைய ஏட்டினுடைய வெளியீட்டு ஆண்டு விழாவிலே பேச வைத்தார். அது முதல் அவரை அறிகிற வாய்ப்பு எனக்கு உண்டு. ஆனால், இளமையிலே அவருடைய எழுத்தாற்றலினுடைய திறமை எனக்குத் தெரியவில்லை. அறிஞர் அண்ணா புரிந்துகொண்டார். 'நீ எழுதுவது நன்றாக இருக்கிறது, ஆனால் இன்னும் கொஞ்சம் படித்துவிட்டு எழுதென்றார்'. அவர் பள்ளிக்கூடத்திலே படிக்கிறபோது அந்தப் படிப்பிலே அவருக்கு ஈடுபாடு அதிகமில்லை. ஆனால், அதிகம் படித்தார். அதைவிட பல மடங்கு படித்தார். இன்னும் சொல்லப்போனால், ஒரு எழுத்தாளனாக உயர்கிற நோக்கத்துடனேயே படித்தார், கொள்கையைப் பரப்புவதற்காகவே படித்தார். அப்படி

எல்லாம் படித்து, எழுதி, பெரியாருக்குப் பக்கத்திலே இருந்து தொண்டாற்றி, பெரியாருடைய அன்பைப் பெற்று, பாராட்டைப் பெற்று, இன்றைக்கு அவருக்கு ஈடாக யாரும் இல்லை என்ற அந்த நிலையில் நம்முடைய பாராட்டைப் பெற்று வருகிறார்.

நான் தொடக்க காலத்திலே என்னுடைய அறிவு, என்னுடைய மன நிலை, என்னுடைய மனப் போக்கு இவை காரணமாக, யார் எழுதியதையும் ஒரு முறைக்கு மேல் மறுமுறை படிக்கமாட்டேன். படிக்க ஆர்வம் வராது. ஆனால், நேற்றையதினம் இந்த அவையில் பேசிய, பராசக்தியை எடுத்து ஒ. சுப்பிரமணியம் பேசுகிறபோது, அந்த பராசக்தி பேச்சு, வசனத்தை அப்படியே இங்கே பேசியபோது, இன்னும் 50 ஆண்டுகள் கழித்துப் பேசினாலும் அந்த அளவுக்கு ஈர்க்கக்கூடிய ஆற்றல் அந்த வசனத்திற்கு இருக்கிறது.

ஒரு வசனம், உரையாடல் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பொருத்தமாக இருந்தால் அது வசனம். அது பாராட்டப்படும். இந்த வசனம் எவ்வளவு காலத்திற்குப் பொருத்தமாக இருக்கிறது என்று பார்க்கிறபோது, கலைஞருடைய காலமெல்லாம் பேசப்படுகிற வசனமாக, இந்த இயக்கம் உள்ளளவும் பேசப்படுகிற வசனமாக, கருத்துக் கருவூலமாக, சிந்தனைக் களஞ்சியமாக விளங்குகிற ஓர் உரையாடலை, வசனத்தை அவரால் அந்த வயதிலேயே எழுத முடிந்தது என்று சொன்னால், அவர் பெற்றிருந்த ஆற்றல் சாதாரணமானது அல்ல.

நான் அறிந்த பெரும் புலவர்கள், தமிழ் அறிஞர்கள், என்னோடு பழகியவர்கள், எனக்கு ஆசிரியர்களாக இருந்தவர்கள் அவர்களெல்லாம்கூட கலைஞரைப்போல் இன்னொருவரால் தமிழை வளர்க்க முடியாது, எழுது முடியாது என்று பாராட்டியிருக்கிறார்கள்.

அவர் சங்கத் தமிழ் எழுதிய காரணத்தால்தான் சங்கத் தமிழுக்கே பெருமை ஏற்பட்டது. நான் சங்கத் தமிழைப் படித்தவன்தான், அதைப் போற்றுகிற உணர்வைப் பெற்றவன்தான், புறநானூறும், அகநானூறும் ஓரளவு தெரிந்தவன்தான். ஆனால், அதை இவ்வளவு அழகாகச் சொல்லக்கூடிய வாய்ப்புடையதாக அந்த இலக்கியம் இருக்கிறது என்பதை கலைஞர் எழுதிய சங்கத் தமிழ்தான் காட்டியது.

திருக்குறள் அறிவுரையாகத்தான் இருக்கும். ஆனால், குறளோவியமாக அவராலேதான் மலர்ந்தது.

**கலைஞரின் தனிச்சிறப்பு**

அவர் எழுதிய சிலப்பதிகாரத்தைப் பூம்புகாராக மாற்றினாரே அந்தப் பூம்புகார், அறிஞர் அண்ணாவால் வியந்து பாராட்டப்பட்டது. எனவே, இவைகளையெல்லாம் நாம் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருப்பது என்பது, இந்த நேரத்தில் போதுமான அளவு காலம் இல்லாத சூழ்நிலையில், அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன்.

அவருடைய புகழ், பெருமை இவையெல்லாம் சட்டமன்றத்திற்கே பெருமை சேர்த்திருக்கிறது. சட்டமன்றத்திலே எண்ணங்களை வெளியிடுவது என்பது சட்டமன்றத்திலே மரபு எண்ணங்களைச் சற்று அழகுபடுத்தி எடுத்துச் சொல்வது என்பது சட்டமன்றத்திலே உரையாற்றுவதற்குச் சிறப்பு. மற்றவர்களுடைய எண்ணங்களையெல்லாம்கூட தன்னுடைய எண்ணத்திற்கு உட்பட்டதாக வைத்துக்கொண்டு, அதைவிட்டு மிஞ்சிப் போகாமல், ஆட்கொள்வது என்பது கலைஞருடைய தனிச் சிறப்பு. அது காரணமாகத்தான், இந்த அவை, வேண்டுமென்றே இந்த அவையில் பல நேரத்தில், பல நோக்கத்தோடு, பல உறுப்பினர்கள் நடந்துகொள்கிற நிலைமை இருந்தாலும்கூட, அமைதி, அடக்கம், கட்டுப்பாடு, அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதுபோல, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவற்றைக் காப்பாற்றுகிற ஓர் அமைப்பாக இந்த அமைப்பை கலைஞர் அவர்கள் வழி நடத்திச் சென்றிருக்கிறார்கள்.

கலைஞர் எங்களையெல்லாம், உடனிருக்கிற நண்பர்களை, தோழர்களையெல்லாம் ஏமாற்றி அறிஞர் அண்ணா அவர்களுடைய இதயத்தை இரவலாக வாங்கிக் கொண்டார்கள். ஆனால், நான் அறிஞர் அண்ணாவின் இதயத்திலேயே இருந்தவன். அதனால், அவர் இரவலாக வாங்கியபோது நானும் அவருக்குள்ளேயே அடக்கமாகிவிட்டேன்!

அதனால்தான், என்னை எம்.ஜி.ஆர். அவர்களே அழைத்தபோதுகூட, என்னையா அழைத்தீர்கள் என்றுதான் நான் கேட்டு அனுப்பினேன். மறுபடியும் அவரிடமிருந்து பேச்சு இல்லை. அதைச் சொல்வதற்குக்கூட ஒரு காரணம், கலைஞருக்காக அல்ல. திராவிட இயக்கத்தை தந்தை பெரியார் அவர்கள் எந்த நோக்கத்தோடு தோற்றுவித்தார்களோ, சுய மரியாதை உணர்வை ஊட்டினார்களோ, பகுத்தறிவு இயக்கக் கருத்தைப் பரப்பினார்களோ, எதற்காக உழைத்து, உழைத்து, உழைத்து, அலைந்து, அலைந்து, அலைந்து, தன்மானத்தைப் பற்றிப் பேசினார்களோ, அதைக் காப்பாற்றுவதற்கு, அவரைவிட்டால் ஒரு திறமையுள்ள தலைவர் தமிழகத்திலே இல்லை.

அறிஞர் அண்ணா அவர்கள் எந்த லட்சியத்தோடு தந்தைப் பெரியாரைவிட்டு வெளியே வந்து தந்தைப் பெரியாருடைய லட்சியத்தைக் காப்பாற்றுகிற பணியை தான் மேற்கொண்டு, அதை அரசியல் வடிவத்திலே வளர்த்து, கொள்கைகளை நாட்டில் சட்டப்படி நிறைவேற்றக்கூடிய ஒரு வாய்ப்பை சட்டமன்றத்தின் மூலமாக உருவாக்க வேண்டுமென்ற உணர்வோடு, ஜனநாயகப் பாதையிலே இந்த இயக்கத்தை அழைத்துச் சென்றார்களோ அந்தப் பாதையில் நடைபோடக்கூடிய, வழிகாட்டக்கூடிய ஆற்றல் கலைஞருக்கு ஈடாகப் பெற்றவர்கள் வேறு யாரும் இல்லை.

இவற்றையெல்லாம் இன்னும் எந்த வகையிலே பெருமைப்படுத்தி அவரைப் பேசுவதாக இருந்தாலும், நான் பேசினாலும்கூட, அவரோடு உள்ளவன் பேசுகிறான் என்ற வகையிலேயும் மற்றவர்கள் எல்லாம் பேசினாலும்கூட, அவரைவிட இளைஞர்கள் பேசுகிறார்கள் என்ற முறையிலேயும்தான் உலகம் கருதும். அவரைப் பார்த்து தெரிந்து கொண்டதை நாம் பேசுகிறோம் என்று கருதுவார்கள். நான் தெரிந்து கொண்டதை பேசுகிறபோது, நம்மைவிட வளர்ந்தவரைப் பற்றிப் பேகிறோம், நம்மைவிட உயர்ந்த நிலையிலே உள்ளவரைப் பற்றி பேசுகிறோம். நாமெல்லாம் வியக்கக்கூடிய அளவிற்கு ஆற்றல் படைத்தவரைப் பற்றி நாம் பேசுகிறோம் என்று நாம் நம்முடைய பேச்சுக்கு ஓர் எல்லையிட்டுக் கொள்ளவேண்டிய அந்த ஒரு நிலையில் நாம் இருக்கிறோம்.

**தமிழர்களுக்குப் புதுவாழ்வு தருபவர்**

ஆனால், அவரைப் பற்றி பெரியார் அவர்கள் சொன்னார்கள். தந்தை பெரியார், சிறுவனாக கலைஞரைப் பார்த்துப் பெரியார், கலைஞரையும், என்னையும் நாங்கள் ஓர் இடத்திலே பேசியது பெரியாருக்கு கோபம் வந்த காரணத்தால், அன்பழகனையும், கருணாநிதியையும் இன்று முதல் பத்திரிகையிலே அவர்களுடைய பெயரை வெளியிட வேண்டாம் என்று பெரியார் அறிக்கை கொடுத்து, குத்தூசி குருசாமி அவர்கள் அப்படி வெளியிட்டார்கள். அது அப்படி வெளியிட்டாலும், மறுபடியும் பெரியாரிடத்தில்தான் நாங்கள் நின்றோம். அது வேறு. ஆனால், அவர்கள் சொல்கிறார்கள் "நமது கலைஞர் அவர்கள் தலைசிறந்த பகுத்தறிவுவாதியாவார். இத்தகைய பகுத்தறிவாளராகவும், ஆட்சிக் கலையில் அரிய ராஜதந்திரியாகவும், முன்யோசனையுடனும் அவர் நடந்து வருவதன்மூலம், தமிழர்களுக்கு புது வாழ்வு தருபவர் ஆகிறார். அவர் பல்லாண்டு வாழ்ந்து, அவர் பணி வெற்றி அடைய வேண்டும் என ஆசைப்படுகிறேன்''.

அவரே சொல்கிறார்; ஒரு கட்சியை ஆரம்பித்து, ஆரம்பித்த முக்கியஸ்தர்களில் ஒருவராக இருந்து, இருந்தாரா என்று சில பேருக்கு சந்தேகம். ஆரம்பித்த முக்கியஸ்தர்களில் ஒருவராக இருந்து, அந்தக் கட்சிக்கு ஏற்பட்ட எதிர்ப்புகளையெல்லாம் சமாளித்து, அந்தக் கட்சியை நாடாளும் ஸ்தாபனம் ஆக்கியவர் கலைஞர்.

அவர் அறிவில் சிறந்தவர், நிருவாகத்தில் சிறந்தவர். பொதுத் தொண்டிற்காக தியாகம் செய்ததில் சிறந்தவர். இதைச் சொன்னவர் பெரியார். ஆட்சியிலே இருக்கிறபோது நிறைவேற்றிக் காட்டக் கூடியவற்றை வேறு எவருக்கும் தோன்றாத கருத்துகளை சிந்தித்து, வெளியிட்டு, நிறைவேற்றிக் காட்டக் கூடியவர் கலைஞர். இதைவிட அவருடைய அறிவு, ஆற்றல், திறன், தொண்டு, தியாகம் இவற்றைப் பாராட்டிச் சொல்ல வேறு வார்த்தை இல்லை என்று நான் கருதுகிறேன்.



அறிஞர் அண்ணா சொன்னார்; தமிழ்நாட்டின் வரலாற்றில் அதன் முற்பகுதியை நான் பேசியுள்ளேன், மன்னார்குடியில். அதன் பிற்பகுதியை தம்பி கருணாநிதி பேசுவார் என்று. மற்றொரு நேரத்திலே சொன்னார், தண்டவாளத்தில் தலை வைத்துப் படு என்று சொன்னாலும், அமைச்சர் பொறுப்பேற்று பணி ஆற்று என்று சொன்னாலும், இரண்டையும் ஒன்றேபோல் கருதி ஏற்பவர்தான் என் தம்பி கருணாநிதி.

உணர்ச்சிக்கு உரு அமைப்பது ஓர் எழுத்தாளனுக்கு எளிதான காரியம் அல்ல. கருணாநிதி யாரையும் விஞ்சுகின்ற அளவில் ஒப்புவமையற்ற நடையழகு காட்டும் எழுத்தாளர். தமிழ் இலக்கியத்திற்கு நற்பணியாற்றியுள்ள கலைஞர் புகழ் திசை எட்டும் பரவுக. அண்ணா அவர்கள், கலைஞருடைய புகழ் திசை எட்டும் பரவுக என்ற வாழ்த்தினார்.

பலமுறை பலவாறு கலைஞரின் அறிவாற்றலை, இலக்கியப் புலமையை, நடை சிறப்பை, பாத்திர படைப்பை, அரசியல் பணியைப் பாராட்டியுள்ள அண்ணா அவர்கள், ஒருமுறை சொன்னார். என் தம்பி கருணாநிதியிடம் நாடு நிரம்பவும் எதிர்பார்க்கிறது. பல வகையிலும் தங்களுடைய விருப்பத்தை நிறைவேற்ற வல்லவர் என்று அவரை எதிர்ப்பார்க்கிறது என்று அண்ணா குறிப்பிட்டார். அந்தப் பணியை நிறைவேற்றி கொண்டு இருப்பவர் கலைஞர்

மூதறிஞர் இராஜாஜி சொன்னார், கருணாநிதி வேறு எவரையும்விட ஒரு சிறந்த முதலமைச்சராக விளங்குவார் என்பதில் சந்தேகம் இல்லை. அவரும் முதலமைச்சராக இருந்தவர். பதவிகளில் இல்லாவிட்டாலும் காங்கிரசிலே மிகப் பெரிய தொண்டு செய்தவர் என்ற பெருமைக்குரியவராக விளங்கிய டி. செங்கல்வராயன் அவர்கள், அண்ணாவினுடைய நண்பர், அவர் சொன்னார். கலைஞர் 20 ஆண்டுகள் தொடர்ந்து சட்ட சபை அங்கத்தினராக இருந்து வந்தது ஒரு சரித்திர சாதனை. 20 ஆண்டிற்கே! சரித்திர சாதனை. அவர் சிறந்த பேச்சாளர், உயர்ந்த எழுத்தாளர். அவர் நிர்வாகத் திறமை பெற்றவர். செய்யாததைச் சொல்ல மாட்டார், சொன்னதைச் செய்யாமல் இருக்க மாட்டார்.''

இந்தச் சட்டமன்றத்திலேயே நிதியமைச்சராகவும் விளங்கி, மத்தியிலேயும் பெரிய பொறுப்புகளை, வேளாண்மைத் துறை முதலானவற்றினுடைய அமைச்சராக விளங்கிய சி.எஸ். அவர்கள், "இப்போது கலைஞர் சிறந்த அனுபவமும் அறிவாற்றலும்

பெற்று சிறந்த முறையில் ஆட்சி நடத்தி வருகிறார்; பல எதிர்ப்புகளைச் சமாளித்து நாட்டின் முன்னேற்றத்திற்கு பாடுபட்டு வருகிறார்'' என்று சி.எஸ். அவர்கள் பாராட்டினார்கள். நேருவினுடைய குடும்பத்தினுடைய புகழுக்குரிய தலைவராக விளங்கிய திருமதி இந்திரா காந்தி அவர்கள், கருணாநிதி அவர்களைப்பற்றி "உறவு என்றாலும் பகை என்றாலும் கருணாநிதி உறுதியோடு இருப்பார்."

இந்தியாவினுடைய சமூக நீதி காவலராக பெருமைபெற்ற வி.பி. சிங் அவர்கள் சொன்னார்கள், எழுதியனுப்பினார்கள். கடந்த முறை அவருடைய பிறந்த நாளில், "Karunanidhi is a multi-faceted personality of Indian politics. He is not only my colleague, but a friend who is close to my heart. He is a popular leader and is highly regarded and adored by the minority, backward, dalit and unprivileged communities since he has relentlessly strived for their upliftment" என்று.

**ஆங்கிலேயர்களுக்கு அபயம்**

முன்னாள் முதலமைச்சர் பெரியவர் பக்தவத்சலம் சொன்னார், "சிறு வயதிலேயே கலை மனம் கொண்ட கலைஞர், சமூகப் புரட்சிக் கருத்துகளால் ஈர்க்கப்பட்டு, பெரியாரின் சீடராக திராவிடர் கழகத்தில் சேர்ந்தார். நாஸ்திகர்களைப் புறக்கணிக்காமல், ஆஸ்திகர்களுக்கு அபயம் கொடுக்கிற சிறந்தொரு ஜனநாயகப் போக்கைக் கலைஞரிடத்திலே காணலாம்." இது கலைஞருடைய ஜனநாயகக் கடமை என்ற முறையில் அவர் அனைவருக்கும் உரிய கடமையை எப்படி நிறைவேற்றுகிறார் என்பதை பக்தவத்சலம் அவர்கள் பாராட்டிச் சொன்னது.

இங்கே சுதர்சனம் அவர்கள் பேசுகிறபோது, மூப்பனார் அவர்கள், கபிஸ்தலம் மூப்பனார் கருப்பையா அவர்கள், அந்த நாளில் வாழ்த்திச் சொன்ன, அந்த கருத்தைச் சொன்னார்கள். "சுதந்திர இந்தியாவில், தமிழகத்தில் தமிழகத்தினுடைய சரித்திரம் கலைஞருடன் பின்னிப் பிணைந்தது என்று சொன்னால் அதில் தவறில்லை." அவர் சொல்கிறார், "ஓர் அரசியல் கட்சியின் தளபதியாக, சிறந்த சிந்தனையாளராக, அற்புதமான இலக்கியவாதியாக, கவிஞராக, நிர்வாகத் திறமைகொண்ட முதலமைச்சராக, வாதிடும் வல்லமை கொண்ட எதிர்க்கட்சித் தலைவராக, சிறந்த பத்திரிகையாளராக, இப்படிப் பல்வேறு பரிமாணங்களில் முழுமையாகப் பரிணமித்த கலைஞர் தமிழினத்திற்குக் கிடைத்தது மிகப் பெரிய சிறப்பு."

**கலைஞர் ஒரு ரோஜா மலர்**

அரசியலிலே மாறுபட்டு, கலைஞரிடமிருந்து சற்று வேறுபட்டு, வேறு கட்சியைத் தொடங்கிய எம்.ஜி.ஆர். அவர்கள், இந்த இயக்கத்திலே இருக்கிறபோது அவர்கள் சொல்கிறார்கள். "கலைஞர் ஒரு ரோஜா மலர். எல்லோருக்கும் பிறந்த நாள் வருகிறது. விரல்விட்டு எண்ணக்கூடிய சிலரது பிறந்த நாள்தான் சமுதாயத்தின் கவனத்தைக் கவரும் சிறப்பைப் பெறுகின்றது. நாள்தோறும் இந்த நாட்டு மக்களுக்காகப் பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்த பாதையில், மகத்தான சாதனைகளைச் செயல்படுத்தி வரும் வேகத்தால், கலைஞரின் பிறந்த நாள் ஆண்டுக்கு ஒரு முறை அல்ல, பல முறைகள் வருவது போல் மனதில் பசுமையாக இருந்து வருகிறது." தொடர்ந்து நாள்தோறும் கலைஞரை அவருடைய பிறந்த நாளாகக்கொண்டு கலைஞரை வாழ்த்துகிற அந்த உணர்வை அவர் வெளியிட்டிருக்கிறார்.

குறிப்பாகச் சொன்னால், கலைஞர் ஒரு சகாப்தம். தந்தை பெரியாரைப் பற்றி, அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதுபோல, கலைஞர் ஒரு சகாப்தம். அந்த சகாப்தம் தொடரும். தொடர்வதுமூலமாக திராவிடர் இயக்கத்தினுடைய பொது நோக்கம் மேலும் மேலும் இந்த நாட்டில் உரம் பெறும் என்ற நம்பிக்கையை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிந்திக்கும் முறையினாலே, சீரோங்கிய நோக்கத்தாலே, செந்தமிழ்ப் பண்பாலே, செஞ்சொல் நலத்தாலே, பகுத்தறியும் பாங்காலே, சீர்திருத்தும் நெறியாலே, பண்படுத்தும் திறத்தாலே, விரவி வரும் சுவையாலே, விளக்கிடும் உவமையாலே, பரவி நிற்கும் தமிழர் நெஞ்சம் தடவி வரும் பேருரை ஆற்ற வல்லவர் கலைஞர் என்று அவரை நான் பாராட்டி,


தூங்காமை என்றால் ஓய்வு கொள்ளாமை.

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு''

என்று சொன்னார் வள்ளுவர். இந்த மூன்றும் ஒருவருக்கு உரியது என்பதைக் கலைஞரைப் பார்த்துத்தான் வள்ளுவர் எழுதியிருப்பார் என்று கூறி, "வாழ்க கலைஞர், வளர்க அவரது தொண்டு'' என்று என்னுடைய வாழ்த்தைக் கூறி, என் உரையை நிறைவு செய்கிறேன்,

வணக்கம்.

# கலைஞர் பெரியாரின் தொடர்ச்சி



திரு. **கு. செல்வம்**
(விடுதலைச் சிறுத்தைகள் கட்சி)

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு தமிழக ஆளுநர் அவர்களே, எங்களது முத்தமிழ் அறிஞர், சமத்துவப் பெரியார், தமிழக முதல்வரின் சட்டமன்றப் பணிகளுக்குப் பொன் விழா. இது நாட்களைக் கடந்த பொன் விழா அல்ல, வரலாறுகளைப் படைத்தப் பொன் விழா.

அரசியல் மேதை, சிந்தனையின் சிற்பி, எழுத்தில் ஓர் புரட்சியாளர், சொற்பொழிவின் சிகரம், கவிஞர், நாடக ஆசிரியர், பத்திரிகை ஆசிரியர், வெளியீட்டாளர், அரசியலில் ராஜதந்திரி என எல்லா துறைகளிலும் கலைஞருக்குப் போட்டியாக இந்தியாவிலே யாரும் இல்லை என்று கூறமுடியும்.

அவர் பாதை பெரியார் பாதை, பயணம் சமத்துவப் பயணம், நெருக்கடிகளும், சவால்களும் நிறைந்த நீண்ட பயணம். ஆரூர் வீதியில் அனல் வீசும் புயலாய் ஆர்த்தெழுந்த அவரது பயணம் எள் முனையளவும் எழுச்சி குன்றாமல் 70 ஆண்டுகளாய் ஏறுநடை போடுகிறது. அவர் பொது வாழ்வில் பொன் விழாவை மட்டுமின்றி, பவள விழாவையும் கொண்டாடப் போகும் பாராட்டுக்குரிய முதுபெரும் தலைவர். அவர்தாம் முத்தமிழ்ச் செம்மல் எங்கள் முதல்வர் கலைஞர் அவர்கள்.

குளித்தலையிலே தொடங்கி, சேப்பாக்கம் வரையில் சந்தித்த களம் அனைத்திலும் வெற்றி நாயகராய் வீறுநடை போடும் எங்கள் கலைஞர், தற்போது சட்டமன்ற வாகைப் பொன்விழாவையும் சந்திக்கிறார். பேரவை உறுப்பினராய் அடியெடுத்து வைத்து, முதல்வராய் முடி சூடி, கடந்த 50 ஆண்டுகளாய் தமிழகத்தின் ஆட்சி அதிகார அவையினை ஆளுமை செய்து வருகிறார். அவர் பேரவை உறுப்பினர், அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், முதலமைச்சர் என வெவ்வேறு நிலைகளில் கடமைகளை ஆற்றியிருந்தாலும், கடந்த அரை நூற்றாண்டுகளாக தமிழக அரசியலில் மையப் புள்ளியாக இயங்கி அனைத்துத் தலங்களையும் இயக்கி வருகிறார்.

### கலைஞரின்றி தமிழக அரசியல் அசைந்ததில்லை

'அவனின்றி ஓர் அணுவும் அசையாது' என்று சிவபெருமானின் பெருமையைப் பற்றி மாணிக்க வாசகர் குறிப்பிடுகிறார். அதைப்போல, கலைஞரின்றி தமிழக அரசியல் கடந்த 50 ஆண்டுகளில் அசைந்ததில்லை என்று கூறலாம். அத்தகைய பெருமைக்குரிய கலைஞரின் பேராற்றல், பெரியார் என்னும் பெரு நெருப்பிலிருந்து பெறப்பட்டதாகும். அதனால்தான் கலைஞரின் ஆற்றலானது, பெரியதாய், வலியதாய் மென்மேலும் பெருகிக் கொண்டே,

விரிவடைந்து கொண்டே, நீண்டு கொண்டே இருக்கிறது. கலைஞர் பெரியாரின் தொடர்ச்சி, அதனால் தான் பெரியாரின் எதிரிகள் இன்னும் கலைஞருக்கு எதிராய்க் கல்லெறிந்து கொண்டே இருக்கிறார்கள். பின்னால், ஒளிந்து சதிவலைகளைப் பின்னிக் கொண்டிருக்கிறார்கள். அவற்றுக் கெல்லாம் அஞ்சி பின்வாங்காமல், பகைமையை முறியடித்து, துரோகத்தைத் தோலுரித்து, அரசியல் அரங்கில் வேரூன்றி, அடுத்த தலைமுறையினருக்கும் தலைமை தாங்கி வருகிறார்.

50 – ஆவது தலைமுறைக்கும் தலைமையேற்கும் அளப்பரிய ஆற்றல் கலைஞருக்கு உள்ளது.

ஆதிக்க வெறியர்களுக்குச் சமத்துவம் என்கிற சொல்லே பிடிக்காது. ஆதிக்கம் எந்த வடிவில் வந்தாலும், அதனை எதிர்த்துப் போராடுபவர்களால் மட்டுமே சமத்துவத்தைத் தேட முடியும். சமத்துவம் என்கிற சொல்லையே கையாள முடியும். அந்த வகையில், சமத்துவபுரம் அமைத்தது, சமத்துவப் பெருவிழா கண்டது போன்ற புரட்சிகர நடவடிக்கைகள் மூலம் கலைஞர் அவர்கள் ஆதிக்கமற்றச் சமுதாயத்தை அமைத்தே தீருவது என்பதில் உறுதியுடன் உள்ளார் என்பதை உணர முடியும்.


பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் கொட்டக்காய்ச்சியேந்தல் ஆகிய ஊராட்சிகளில் தாழ்த்தப்பட்டவர்களைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கும் வகையில், தேர்தலை நடத்திக் காட்டியிருக்கிறார் நம்முடைய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள். அங்கே கடந்த 10 ஆண்டுகளாக நிலவிய ஆதிக்கத்தின் இறுக்கத்தை உடைத்து, அவ்வூராட்சிகளில் சமத்துவத்தை மலரச் செய்ததன்மூலம் தந்தை பெரியாரின் களப் பணிகள் கலைஞர் வாழ்வில் நிறைவேறி வருகின்றது என்பதை நம்மால் உணர முடிகிறது.

கோயிலின் கருவறைக்குள் ஆதிதிராவிட மற்றும் பிற்படுத்தப்பட்டவர் நுழைய முடியாது என்கிற கொடுமையை வேரறுக்கத் துடித்தவர் தந்தை பெரியார். அந்த வேட்கையைத் தணிக்கும் வகையிலே, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டத்தைக் கொண்டு வந்துள்ள கலைஞர் அவர்கள், கோயிலின் கருவறையாக இருந்தாலும், கல்லறையாக இருந்தாலும், அங்கே சமுத்துவத்தை நிலைநாட்ட வேண்டுமென்ற வகையிலே, பெரியாரின் தாகத்தைத் தணித்து வருகிறார் நம்முடைய முத்தமிழ் அறிஞர் சமத்துவப் பெரியார் கலைஞர் அவர்கள்.

உலகத்திலே எந்தத் தலைவருக்கும் உதிக்காத ஒரு அறிவாற்றல் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு. ஆண்டாண்டு காலமாக, ஆயிரம் ஆண்டு காலமாக தாழ்த்தப்பட்டவன், மனிதக் கழிவை மனிதனே சுமக்கும் ஓர் அவல நிலை இந்தியாவிலே நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஏன் உலகத்திலேயே நடைபெற்றுக் கொண்டிருந்தது. நம்முடைய முத்தமிழறிஞர் மிகவும் ஆர்வத்துடன் அதை ஆராய்ந்து மனிதக் கழிவை மனிதன் சுமக்கக்கூடாது என்று ஆணையிட்டு, அதற்காக அவர்களுக்கு மறு வாழ்வளித்துள்ளவர் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

**"சமத்துவபுரம் அமைத்தது, சமத்துவப் பெருவிழா கண்டது போன்ற புரட்சிகர நடவடிக்கைகள் மூலம் கலைஞர் அவர்கள் ஆதிக்கமற்றச் சமுதாயத்தை அமைத்தே தீருவது என்பதில் உறுதியுடன் உள்ளார் என்பதை உணர முடியும்.''**

# அனைவரையுமே பாராட்டுகின்ற பண்பாளர்



**வை. சிவபுண்ணியம்**
(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி)

**மா**ண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுடைய உழைப்பைப் பற்றி இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்கிறபோது, எனக்கு நினைவுக்கு வந்த வரையிலே மன்னார்குடியிலே பிறந்து, முன்னாள் அமைச்சராக இருந்து, மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கு நெருங்கிய நண்பராக இருந்து செயல்பட்டு மறைந்த முன்னாள் அமைச்சர் மன்னை அவர்கள், அவர்களுடைய பிறந்தநாள் விழா பிரம்மாண்டமான பொதுக்கூட்ட நிகழ்ச்சி மன்னை தேரடியிலே நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு மாண்புமிகு கலைஞர்கள் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். அப்போது அதைக் கேட்பதற்கான வாய்ப்பினைப் பெற்றேன். அதிலே அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னது என்பது, இன்றைக்கு இவ்வளவு பெரிய இயக்கமாக, ஆல்போல் தழைத்து வளர்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் என்ற இயக்கத்தை வளரச் செய்வதற்குரிய வாய்ப்பை உருவாக்கியது என்பது அவருடைய எழுத்தும், பேச்சும் என்பதை யாரும் மறுக்க முடியாத உண்மை. அப்படி, இந்த எழுத்து, பேச்சு என்று சொல்கிறபோது, அவர் தொடக்க காலத்தில் முரசொலியைக் கொண்டுவருவதற்கான முயற்சி என்ற அடிப்படையிலே அவர் எடுக்கிறபோது, வெறும் கைப்பிரதியாகவே அதை வெளியிடுவதற்கான முயற்சிகளை எடுத்து, அதிலே இன்னல்பட்டதை, வேதனைப்பட்டதை, கஷ்டப்பட்டதை எல்லாம் அந்த நிகழ்ச்சியிலே குறிப்பிட்டுப் பேசினார்கள். அப்படிப் பேசுகிறபோது, "கைப்பிரதியை வெளியிடுவதற்காக திருவாரூரிலேயிருந்து மன்னார்குடிக்கு 30 கிலோமீட்டர் தூரம் நடந்தே வந்து மறைந்த மன்னை அவர்களிடத்திலே 8 அணா காசைப் பெற்றுக்கொண்டு, திரும்பவும் நடந்தே திருவாரூருக்குச் சென்று அங்கே கடைத் தெருவிலே இருக்கிற அந்த பேப்பர் கடைக்குச் சென்று, அந்த 8 அணாவிலே ஒரு 4 அணாவுக்கு பேப்பரை வாங்கி, அதிலே பேனா வாங்கி, அதிலே தேவையான செலவுகளையெல்லாம் அதற்குள்ளேயே முடித்து, கைப்பிரதியை எழுதி, அதைத் தினசரி வெளியிடுவதற்காக அந்த முயற்சிகளை நான் எடுத்தேன். அதற்கு உதவி செய்தவர் மன்னை" என்று அன்றைக்கு வாழ்த்துரையிலே குறிப்பிட்டுச் சொன்னார்கள். இதை நான் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம், இப்போது பேசிக்கொண்டிருக்கிற நான் உட்பட இந்த விஷயங்களை நாம் எண்ணிப்பார்க்கிற பொழுது, 30 கிலோ மீட்டர் தூரம் கடந்துவந்து ஒரு கைப்பிரதியை வெளியிடுவதற்காக அயராது பாடுபட்டு அதையே உறுதியான கொள்கையாக மேற்கொண்டு, அதை எழுதி, உருவாக்கி, அதை விற்பனை செய்து இன்றைக்கு ஆல்போல் தழைத்திருக்கிற இயக்கமாக உருவாகியிருக்கிறது என்று சொன்னால், அதற்கு முழு முதற் பொறுப்பும் டாக்டர் கலைஞர் அவர்களையே சாரும். அதனால்தான் அவருடைய உழைப்பை யாராலும் குறைத்து மதிப்பிட முடியாது என்பதற்கு உரிய ஓர் சான்றாக இன்றைக்கும் நம் கண் முன்னாலே காட்சியளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**பொதுவுடைமை இயக்கத்தின் மீது தணியாத பற்று**

குறிப்பாக, கலைஞர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளிலே அடிக்கடி குறிப்பிட்டுச் சொல்வதுண்டு. அதிலும் குறிப்பாக,

கம்யூனிச இயக்கத்தினுடைய ஒப்பற்ற தலைவர்களைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்கிறபோது, அவருக்கு மிகவும் நெருக்கமான, விருப்பமான தலைவராக விளங்கியவர் எங்களது ஒப்பற்ற தலைவர் ஜீவா அவர்கள். தலைவர் ஜீவா அவர்களைக் குறிப்பிட்டுப் பேசுகிறபோது அண்ணன் ஜீவா அவர்கள் என்றேதான் அடிக்கடி குறிப்பிட்டுச் சொல்வார்கள். அவர்கள் மறைந்த செய்தி கேட்டு துடிதுடித்துப் போனார்கள், நம்முடைய கலைஞர் அவர்கள். அவர் மறைந்த செய்தியைக் கேட்டவுடனே எல்லா தலைவர்களும் அவருடைய மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தார்கள், அஞ்சலி தெரிவித்தார்கள். ஆனால், கலைஞர் அவர்கள் அன்றைய காலகட்டத்திலே ஜீவா அவர்களைப்பற்றி, அவர் மீதிருந்த அந்த மதிப்பு, மரியாதையின் காரணமாக ஒரு கவிதையை வெளியிட்டு, அது அன்றையதினம் மிகப் பிரபலமாக தமிழகம் முழுமையிலும் வெளி வந்தது. அது இப்போது கவிதை நூலாகக்கூட வந்திருக்கிறது. அதிலே, தலைவர் ஜீவா அவர்களைப்பற்றிக் குறிப்பிட்டுச் சொல்கிறபோது, முதல் வரியிலேயே

*நா மணக்கும், நல்ல தமிழ் மணக்கும்*
*நாஞ்சில் என்ற பெயர் மணக்கும்*
*பா மணக்கும், பூதப்பாண்டி எனும் ஊர் மணக்கும்*
*பண்பாளர் ஜீவா புகழ் பாடுகின்ற தேன் மணக்கும்*

என்று எங்களது அருமைத் தலைவர் ஜீவா அவர்களைப்பற்றி மிக அழகாகக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். இதையெல்லாம் நான் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம், அவர்கள் பழகியவர்கள் யாரெல்லாம் இருக்கிறார்களோ, அவர்களோடு ஏற்றத்தாழ்வற்ற முறையிலே எதிர்க்கட்சியா, ஆளும் கட்சியா என்ற முறைகளையெல்லாம் பார்க்காமல், அந்தப் பண்பாடு குறையாமல் அனைவரையுமே பாராட்டுகின்ற ஒரு பண்பாளர் நமது ஒப்பற்ற தலைவராக இருக்கிற நமது முதல்வர் அவர்கள் என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக கம்யூனிஸ்டுகள் ஆகிய எங்களுக்கு இருக்கிற பெருமை என்பது நாங்கள் எங்களுடைய காலத்திலேயே எங்களுடைய இயக்க நிகழ்ச்சிகளிலேயே அவர்களை அழைத்து நாங்கள் பாராட்டுகிறபொழுது, அவர்கள் பல மேடைகளிலே சொன்னது காஞ்சிபுரத்துப் பாதையையும், ஈரோட்டுப் பார்வையையும் வரித்துக் கொண்ட திருக்குவளை மைந்தன் அவர்கள் சொன்னது, தந்தை பெரியாரையும், பேரறிஞர் அண்ணாவையும் தான் சந்தித்திருக்கா விட்டால் நான் ஒரு கம்யூனிஸ்டாகவே ஆகியிருப்பேன் என்று பல மேடைகளிலே திரும்பத் திரும்பச் சொன்னார்கள். அப்படி எங்களது பொதுவுடைமை இயக்கத்தின்மீது தணியாத பற்றும் பாசமும் அந்தக் கொள்கையின்மீதும் அவர்களுக்கு இருக்கிற அந்த நம்பிக்கையையும், ஆர்வத்தையும் காட்டுகிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.


எங்களுடைய கோரிக்கைள் என்ற முறையில் பல கோரிக்கைகள் நாங்கள் வைத்தாலும்

**"விவசாயத் தொழிலாளர்களுக்கான நல வாரியம் அறிவித்திருக்கிறார்கள். விவசாயிகளுடைய கடன் சுமையிலிருந்து 7,000 கோடி ரூபாயை தள்ளுபடி செய்தது இந்திய நாட்டிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத மகத்தான சாதனை புரிந்து, விவசாயிகளுக்கு நல்வாழ்வு அளித்திருக்கிறார்கள். அதேபோல, நீதிமன்றத்திலே தமிழ்மொழியைக் கொண்டு வருவதற்கான அனைத்து முயற்சிகளையும் எடுத்தார்கள். அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற ஓர் ஒப்பற்ற சட்டத்தைக் கொண்டுவருவதற்கான அந்த முயற்சிகளை எடுத்தார்கள்''.**

அவராகவே பல கோரிக்கைகளை அறிவித்து, ஜீவா நூற்றாண்டு விழாவை அரசு விழவாகக் கொண்டாடுவதற்காக அனுமதித் திருக்கிறார்கள். அதேபோல எங்களது ஒப்பற்றத் தலைவர் சீனிவாச ராவ் அவர்களுக்கு நினைவு மண்டபம் 25 இலட்சம் ரூபாயிலே கட்டுவதற்காக அனுமதி அளித்தார்கள். அதேபோல விவசாயத் தொழிலாளர்களுக்கான நல வாரியம் அறிவித்திருக்கிறார்கள். விவசாயிகளுடைய கடன் சுமையிலிருந்து 7,000 கோடி ரூபாயை தள்ளுபடி செய்தது இந்திய நாட்டிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத மகத்தான சாதனை புரிந்து, விவசாயிகளுக்கு நல்வாழ்வு அளித்திருக்கிறார்கள். அதேபோல, நீதிமன்றத்திலே தமிழ்மொழியைக் கொண்டு வருவதற்கான அனைத்து முயற்சிகளையும் எடுத்தார்கள். அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற ஓர் ஒப்பற்ற சட்டத்தைக் கொண்டுவருவதற்கான அந்த முயற்சிகளை எடுத்தார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக நேற்றையதினம்கூட இந்த அவையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. வாழ்விலே எல்லாம் நசிந்து, ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்டிருக்கிற மக்களுக்கெல்லாம் வாழ்வளித்திருக்கிற கலைஞர், இந்தச் சமுதாயத்திலே இருக்கிற ஊனமுற்றோர்களுக்கும் நல வாரியம் அமைக்கப்படும் என்ற அந்த அறிவிப்பை செய்து அவர்களுடைய வாழ்விலேயும் ஒளியேற்றி வைத்திருக்கிறார்கள்.

# ஜனநாயக உரிமைகளைக் காக்க போரிட்டவர்



**சி.கோவிந்தசாமி**
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு ஒரு வகையிலே நெம்பர் 11 இராசியானது என்று நான் கருதுகிறேன். 11 முறை சட்டப் பேரவைக்கு போட்டியிட்டு வெற்றிபெற்ற நீங்கள் கடந்த மே மாதம் 11 ஆம் தேதி ஐந்தாவது முறையாக நீங்கள் முதல்வராகப் பொறுப்பேற்பதற்கான வெற்றி செய்தி கிடைத்த நாள் மே 11. இந்த மே 11 உங்களுடைய 50 ஆண்டுகால நிறைவைக் கொண்டாடுகிற வகையில் பொன்விழா காண்பதும் மே 11 ஆகவே, சிலருக்கு 9 இராசியாக இருக்கலாம். ஆனால், உங்களுக்கு 11 இராசியாக இருக்கிறது என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

ஒரு பின்தங்கிய குடும்பத்திலே பிறந்து, அதுவும் மிக மிகப் பிற்படுத்தப்பட்ட ஒரு குடும்பத்திலே பிறந்து, இளம் வயதிலேயே அரசியலில் ஈடுபாடு கொண்டு, மிகச் சிறந்த சிந்தனையாளராக, பேச்சாளராக, எழுத்தாளராக, கவிஞராக, பத்திரிகையாளராக, நாடக ஆசிரியராக, சிறந்த அரசியல் ராஜதந்திரியாக, இவற்றிற்கெல்லாம் மேலாக சிறந்த மனித நேயமிக்க மகத்தான மனிதராக உயர்ந்து நிற்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள், கடந்த 1957ஆம் ஆண்டு முதல் முறையாக குளித்தலையிலே தொடங்கி, சட்டப்பேரவை உறுப்பினராகத் தேர்வு பெற்று, இந்த அவையிலே காலடி எடுத்து வைத்து, சட்டமன்ற உறுப்பினராக சில ஆண்டுகள் மேலவை உறுப்பினராக, அமைச்சராக, 5 முறை முதலமைச்சராகச் செயல்பட்டு, இந்த 2007 ஆம் வருடம் 50 வருடங்களை நிறைவுசெய்து பொன்விழா காணும் பெருமதிப்பிற்குரிய தலைவர் கலைஞர் அவர்களுக்கு நான் என்னுடைய வயதையொட்டி அவரை வாழ்த்த வயதில்லை என்றாலும், வாழ்த்துவதற்குரிய தகுதி படைத்த மார்க்சிய கம்யூனிஸ்ட் இயக்கத்தின்

**"பெண்களுக்குச் சமத்துவம் கிடைக்க வழிவகுக்கும்' என்கிற உணர்வோடு, பெண்களுக்குச் சொத்திலே சமஉரிமை என்கிற சட்டம் கொண்டுவந்து, பெண்களைச் சமப்படுத்திய மகத்தானத் தலைவர் கலைஞர் அவர்கள். அதற்காகப் பாராட்டுகிறேன்.''**

சார்பாக என்னுடைய வாழ்த்துகளையும், எங்கள் சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாக வாழ்த்துகளை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள, மனநிறைவான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கொள்கைக்காக பதவியை இழந்தவர்**

பதவி என்கிற துண்டுக்காக, கொள்கை என்கிற வேட்டியை இழப்பவர்கள் நிறைந்துள்ள இந்த நாட்டில், கொள்கைக்காகப் பதவியை இழந்தவர் நீங்கள். அதற்காகப் பாராட்டுகிறோம், பெருமைப்படுகிறோம். அவசர காலப் பிரகடனம் செய்தபோது, அதற்கு எதிராக ஜனநாயக உரிமைகளைக் காக்க அந்த மகத்தான போரிலே கலைஞர் அவர்களே, நீங்கள் ஆற்றிய அந்தப் பணி, வரலாற்றில் என்றென்றும் பேசப்படும். அதற்காக நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே பாராட்ட விரும்புகிறேன். அவசர நிலைக்கு எதிராக இதே சட்டமன்றப் பேரவையிலே நீங்கள் ஆற்றிய ஒரு அற்புதமான உரை அன்றைக்குப் புத்தகமாக ''வாளும் கேடயமும்'' என்கிற ஒரு சிறு புத்தகமாக வெளிவந்தது. அன்றைக்கும் நான் அதைப் படிக்கிற வாய்ப்பைப் பெற்றேன். ஆகவே அந்தப் புத்தகம், ஜனநாயகத்தை நேசிக்கிற ஒவ்வொருவரும், அதைத் தன்னுடைய வாளாகவும் கேடயமாகவும் கருதிப் போற்றினார்கள் என்பதையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களே, கலைஞர் அவர்களே, அவசர நிலையை ஒருவேளை நீங்கள் ஆதரித்திருந்தால், பதவியைப் பாதுகாத்திருக்க முடியும். அந்தக் காலத்தில் பதவி, மேலும் ஓராண்டு நீட்டிக்கப்பட்ட காலம். பதவியிலும் நீடித்திருக்க முடியும். அதேபோல, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய எண்ணற்ற தோழர்கள் சிறைக் கொடுமைகளுக்கும், சித்திரவதைக்கும் ஆளாகி இருக்க வேண்டிய அவசியம் இல்லை. சிட்டிபாபுவை நீங்கள் இழந்திருக்க வேண்டியதில்லை. இங்கே எதிரிலே அமர்ந்திருக்கிற எனது அன்புக்குரிய நண்பர் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அடியும், சித்திரவதையும் பட்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் பதவியிலே நீடித்திருக்கலாம். ஆனால், அவற்றிற்கு மாறாக அதெல்லாம் நடந்திருந்தால், உங்களுடைய நெடிய வரலாற்றிலே ஒரு சிறிய கறை பட்டிருக்கும். ஆகவே, அந்தப் பதவியை நீங்கள் துச்சமென மதித்து, அவசர நிலையை நீங்கள் எதிர்த்து நின்று, ஜனநாயகத்திற்காக நீங்கள் நடத்திய மகத்தான அந்தப் வீரப் போராட்டம் வரலாற்றிலே முக்கியப் பங்காற்றியிருக்கிறது. ஆகவே, கலைஞர் அவர்களே, நீங்கள் காட்டிய அந்த உறுதியை இந்தச் சந்தர்ப்பத்திலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பெருமையோடு இங்கே குறிப்பிட விரும்புகிறது; அதற்காக மனதாரப் பாராட்ட விரும்புகிறது.


பெண்களுக்குச் சமத்துவம் கிடைக்க வழிவகுக்கும்' என்கிற உணர்வோடு, பெண்களுக்குச் சொத்திலே சம உரிமை என்கிற சட்டம் கொண்டுவந்து, பெண்களைச் சமப்படுத்திய மகத்தானத் தலைவர் கலைஞர் அவர்கள். அதற்காகப் பாராட்டுகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், ஏழைகளுக்கு நிலப் பட்டா வழங்குகிறபோது, அந்தப் பட்டா பெண்கள் பெயரிலே வழங்கப்படும் என்று சொல்லி, பெண்களுக்குப் பெருமை சேர்த்தவர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள். அதற்காக நான் உங்களைப்

பாராட்டுகிறேன். நம்முடைய தமிழக வரலாற்றில், ஒரு வேளை சோற்றுக்குக்கூட வழியில்லாமல் வாடி, வதங்கிக் கொண்டிருந்த, வறுமையில் சிதைந்து கொண்டிருந்த அந்த ஏழையெளிய மக்களுக்கு, அரசு தரிசு நிலங்களையெல்லாம் எடுத்து, 'ஏழைகளுக்கு இரண்டு ஏக்கர் வீதம் வழங்குவோம்' என்று சொல்லி, தற்போது அமலாக்கத் தொடங்கியிருக்கிறீர்களே, அது வரலாற்றில் மகத்தான பெருமைக்குரிய ஒரு செய்தியாக நான் இங்கே குறிப்பிடுகிறேன். அதற்காகவும் உங்களை வாழ்த்த விரும்புகிறேன்.

ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதிலே, திராவிட முன்னேற்றக் கழகமும், மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியும் பல காலக்கட்டங்களில் ஒருசேர சிந்தித்திருக்கிறது; ஒன்றுபட்டுச் செயலாற்றியிருக்கிறது. 1975–லே அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டபோது, இடதுசாரி இயக்கங்களும், ஜனநாயகச் சக்திகளும் இந்த நாட்டிலே அதனுடைய தலைவர்கள் எல்லாம் வெளிப்படையாகச் செயல்படமுடியாதபோது, அவர்களுக்கெல்லாம் தமிழகத்திலே நீங்கள் அடைக்கலம் கொடுத்து, அவர்களைப் பாதுகாத்து, அந்த ஜனநாயகத்திற்காக உயிரூட்டினீர்கள். அதற்காகவும் இங்கே நான் பாராட்ட விரும்புகிறேன்.

# எல்லா முறையும் ஒரே கட்சியின் தலைவராக இருந்து வெற்றிபெற்ற சரித்திர நாயகர்



**கோ.க.மணி**
(பாட்டாளி மக்கள் கட்சி)

**பு**றப்படுகிற நேரத்தில் இன்று கலைஞர் அவர்களைப் பாராட்ட வேண்டுமென்று எங்களுடைய நிறுவனத் தலைவர் மருத்துவர் அய்யா அவர்களிடத்திலே சொன்னேன். வருகின்றபொழுது சொன்னார்கள். உரிய நேரத்தில் பெருமைக்குரியவர்களை, பெருமையை முன்வைத்து பாராட்டுபவன்தான் தமிழன். ஆகவே, தமிழனத் தலைவரை தமிழன் பாராட்ட வேண்டும். ஆகவே, ஓஹோ என்று பாராட்டுங்கள், உயர்ந்த இடத்திற்கு எடுத்துச் சென்று பாராட்டுங்கள் என்று என்னிடத்திலே சொல்லி அனுப்பினார்கள். ஆகவே எங்களுடைய நிறுவனத் தலைவர் மருத்துவர் அய்யா அவர்கள் சார்பிலேயும், எங்கள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் சார்பிலேயும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலேயும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நான் இங்கே பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

தமிழகத்தை இந்தியத் திருநாட்டை, உலக நாட்டுத் தலைவர்களை, உலக நாட்டு அரசியலை, ஜனநாயகத்தை நாம் பார்க்கிறோம். அப்படிப் பார்க்கின்ற வேளையில் ஒரு கட்சி ஆட்சி நடத்துகின்ற நாடுகளையும் நாம் எண்ணிப் பார்க்கிறோம். ஒரு கட்சி தொடர்ந்து ஆட்சி நடத்துகிற நாடுகளில், ஒரே தலைவர் வென்றாரா என்றால், இல்லவேயில்லை. மாறி மாறி வெற்றி பெற்றிருக்கிறார்கள். இது உலக நாடுகளின் நியதி. ஆனால், கட்சிகள் மாறி மாறி ஆட்சிக்கு வருகிற நாடுகளில், தலைவர்கள் மாறி மாறி வென்றாலும், எல்லா முறையும் ஒரே கட்சியின் தலைவராக இருந்து வெற்றி பெற்ற சரித்திர நாயகர்தான் டாக்டர் கலைஞர் அவர்கள் என்பதை நான் இங்கே மீண்டும் ஒருமுறை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல, டாக்டர் கலைஞர் அவர்கள், தன்னுடைய வாழ்க்கையில் குறளோடு இணைந்து வாழ்ந்து வருபவர். குறளோவியம் கண்டவர். குறளை நேசிப்பவர். திருக்குறளாக நின்று, சமத்துவம் கண்ட

பெரியாராக மட்டுமல்லாமல், இன்று திருக்குறளைத் தன்னகத்தே நிறுத்தி வாழும் வள்ளுவராக வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்று எல்லோரும் பாராட்டிக் கொண்டிருக்கிறோம். அப்படிப் பாராட்டுகிற வேளையில், ஐந்தாவது முறையாக முதலமைச்சர்; ஐம்பது ஆண்டுகள் காணக்கூடிய முதலமைச்சர். இந்த வேளையில், குறட்பாக்களிலே, நிறைய குறட்பாக்களை, அவருக்குப் பொருத்தமாக இருக்கின்ற குறட்பாக்களை நான் எண்ணிப் பார்த்து, தேடிப் பார்த்தேன். எந்தக் குறளைப் பார்த்தாலும், ஒப்புவமையாகவே இருக்கின்றன. அதிலே 5 குறட்பாக்களைத் தேர்ந்தெடுத்தேன். அதிலே,

''தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.''

"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்."

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்."

"வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு."

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு."

இப்படி, ஐந்து குறட்பாக்களோடு ஒப்பிட்டுப் பார்த்தேன். முதலமைச்சர் அவர்களுக்கு எல்லாத் திருக்குறளும் பொருத்தமாக இருந்தது. இன்னும் திருக்குறளிலே ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தேன். நிறைய குறள்கள் இருக்கின்றன. திருக்குறளிலே இறைமாட்சி என்கிற ஒரு அதிகாரம் இருக்கிறது. அந்த அதிகாரத்திலே 10 குறட்பாக்கள் இருக்கின்றன. அவற்றைப் படித்தேன். அவை அனைத்தையும் சொல்வதற்கு நேரம் இல்லை. இருந்தாலும்கூட, "படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்...'' என்றும், "அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்...'' என்றும், "தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்...'' என்றும் வரிசையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த பத்து குறட்பாக்களையும் அவற்றிற்கான பொருளையும் படித்துப் பார்ப்போம் என்றால், இறைமாட்சி என்று வள்ளுவர் அன்று சொன்னார்; ஆனால், வள்ளுவர் இன்று இல்லை. வள்ளுவர் இன்று வாழ்ந்துகொண்டிருந்தால், இது இறைமாட்சி அல்ல, இது கலைஞர் மாட்சி என்றே சொல்லியிருப்பார்! அந்த அளவிற்குத் திருக்குறளோடு, தன் வாழ்க்கையைப் பின்னிப் பிணைத்துக்கொண்டு, திருக்குறளாக வாழ்ந்து கொண்டிருக்கிற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களைப் பாராட்டுவது சாலப் பொருத்தம் என்றே கருதுகிறேன்.

இந்த வயதான காலத்தும் இந்தத் தமிழன் உயர வேண்டும். தாழ்ந்து நிற்கிற தமிழர்கள், தலை நிமிர்ந்து வாழவேண்டுமென்று சொல்லி, வாழ்ந்து கொண்டிருக்கிற மாமனிதராக நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்று தமிழனுக்கும், தமிழர்களுக்கும், தமிழ்நாட்டிற்கும், மொழிக்கும், இனத்திற்கும், நாட்டிற்கும் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கிற மாமனிதராக கலைஞர் அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார் என்பதை நான் இங்கே மீண்டும் ஒருமுறை மகிழ்ச்சியோடு சுட்டிக்காட்டுகிறேன்.

**ஓய்வே அறியாத சூரியன்**

அதைப்போல கலைஞர் என்பது ஒரு வரலாறு. இந்த வரலாற்றிலே ஓர் இயக்கமாகப் பார்க்கிறோம். "மரம் ஓய்வை நாடினாலும், காற்று அதை ஓயவிடாது" இதைச் சொன்னவர் பாட்டாளிகளின் தோழர், மாவோ. இயக்கம் இயற்கையின் நியதி என்பதைத்தான் இவ்வளவு எளிமையாக, அவ்வளவு அருமையாகச் சொன்னார் மாவோ. ஆனால் நான் கலைஞர் அவர்களை இங்கே பார்க்கும்பொழுது, அவர் இயக்கமாகவே நின்று கொண்டிருக்கிறார்; மாபெரும் இயக்கமாக நின்று கொண்டிருக்கிறார் என்பதை நான் சுட்டிக்காட்டுகிறேன். ஓய்வை நாடுவது என்ன, ஓயவிடாமல் தடுப்பது என்ன, ஆனால், ஓய்வுக்கே ஓய்வு கொடுத்தவர் கலைஞர் அவர்கள்தான்.

ஆகவே, அவர் ஓய்வே அறியாத சூரியன். ஆம், உழைப்பின் உயிரொளி. அவர்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அதுமட்டுமா, உழைப்பது என்பதை நாம் வகைப்படுத்த முடியும். அதில் ஈடுபடுவோரின் செயல்தன்மையைப் பொறுத்தே அது


வகைபடுகிறது. அந்த வகையில் கலைஞர் அவர்களின் உழைப்பு, ஓயாத உழைப்பு, அயராத உழைப்பு, கனமான உழைப்பு, அது கடினமான உழைப்பு. அவரின் உழைப்பு ஒரு சரித்திரம். அதுதான் போராட்டம். அந்தப் போராட்டத்தின் வாழ்க்கையில் இடைவிடாத உழைப்பின், ஓயாத போராட்டத்தின் கலைவடிவமாக திகழ்வதிலே அவர்தான் கலைஞர்.

கலைஞரின் உழைப்புப் போர் எத்தகையது என்று சொன்னால், கல்விக் கண் திறந்த கர்மவீரர் காமராஜரின் மக்கள் நலப் பணிகளை உள்வாங்கிக் கொண்டதாகும். அதுமட்டுமா, கலைஞர் என்னும் இபக்கத்தின் வயது 84, இது அவரது பொதுவாழ்வில் வயது 70, பொதுவாழ்வில் அவரது சட்டப்பேரவைப் பணியின் வயது 50, தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் நாளிலிருந்து, இன்று வரை பாராட்டும் அளவிற்கு சிறந்து பணியாற்றி கொண்டிருக்கிறார் என்பதை மீண்டும் இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று ஏற்றத்தாழ்வு நிறைந்திருக்கிற சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்டவர்கள், இன்னும் கீழ்நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறார்கள், வாழ்க்கையிலே உயர்வே இல்லை, கல்வி, வேலைவாய்ப்புகளிலே உயர்வு பெறமுடியாது என்று எங்களுடைய நிறுவனர் சமூக நீதிக் காவலர் அவர்கள் இட ஒதுக்கீடு கேட்டுப் போராடினார்கள். 23 உயிரைப் பலி கொடுத்தார்கள். அன்றைய ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக வந்தார்கள். அழைத்துப் பேசினார்கள். இதுவரையிலே அடக்கப்பட்டு வாழ்ந்த மக்களுக்கு, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் என்றப் பிரிவை உருவாக்கி 20 விழுக்காடு கொடுத்து, அந்த மக்களை வாழ வைத்தவர்தான், சமூக நீதிக்கு வித்திட்டவர்தான் கலைஞர் அவர்கள் என்பதை மீண்டும் ஒரு முறை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பாட்டாளி மக்கள் கட்சிக்கு பல்வேறு கொள்கைகள் இருந்தாலும்கூட, அதனுடைய உயிர் மூச்சுக் கொள்கை சமூக நீதிக் கொள்கை. சமூக நீதிக் கொள்கையை தொடர்ந்து வெற்றி கண்டு கொண்டிருப்பவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள். ஆகவே, கலைஞர் அவர்களை இன்று பாராட்டுகின்ற வேளையிலே, அவர் பல்வேறு நேரங்களிலே சமூக நீதியை வென்றவர் என்ற காரணத்தினாலேதான் 'சமூக நீதி வென்ற பெரியார்' என்று இந்த விழாவிலே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

# சட்டமன்றப் பணியில் பொன்விழா - இதுவே உலக வரலாற்றில் முதல் முறை



**டி. சுதர்சனம்**
(இந்திய தேசிய காங்கிரஸ்)

டாக்டர் கலைஞர் அவர்கள் பெரியாருடைய பள்ளியிலே பயின்று, பேரறிஞர் அண்ணாவினுடைய பல்கலைக்கழகத்திலே முதிர்ச்சியைப் பெற்று, முன்னாள் முதல்வர் பக்தவச்சலம் அவர்களாலே பாராட்டப்பெற்று, பெருந்தலைவர் காமராஜர் அவர்களாலே அன்பைப் பெற்று இந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்கு பல்வேறு வழிகளிலே நீங்கள் பேருதவி செய்திருக்கிறீர்கள். அதுமட்டுமல்லாமல், உங்களுடைய சட்டமன்றப் பயணம் குளித்தலையிலே

**"உழைப்பது என்பதை நாம் வகைப்படுத்த முடியும். அதில் ஈடுபடுவோரின் செயல்தன்மையைப் பொறுத்தே அது வகைபடுகிறது. அந்த வகையில் கலைஞர் அவர்களின் உழைப்பு, ஓயாத உழைப்பு, அயராத உழைப்பு, கனமான உழைப்பு, அது கடினமான உழைப்பு. அவரின் உழைப்பு ஒரு சரித்திரம். அதுதான் போராட்டம். அந்தப் போராட்டத்தின் வாழ்க்கையில் இடைவிடாத உழைப்பின், ஓயாத போராட்டத்தின் கலைவடிவமாக திகழ்வதிலே அவர்தான் கலைஞர்''.**

தொடங்கி சேப்பாக்கம் வரை இன்றைக்கு வந்திருக்கிறது. இன்னும் வருகின்ற காலங்களிலே நிறைய இடங்கள் உங்களுக்கு வரும். அதிலே யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது.

உலக ஜனநாயக வரலாற்றில் பல பொன் விழாக்களைப் பார்த்துள்ளோம். பாராளுமன்றங்களுக்கு பொன் விழாக்கள் நடப்பது உண்டு, சட்டமன்றங்களுக்கு பொன் விழாக்கள் நடப்பது உண்டு. ஆனால், ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு சட்டமன்றப் பணியில் பொன் விழா நடப்பது இதுவே உலக வரலாற்றில் முதல் முறை.

அரசியல் தலைவர்கள் இருந்தது உண்டு, இராஜ தந்திரிகள் இருந்தது உண்டு, இலக்கியவாதிகள் இருந்தது உண்டு, நிருவாக நிபுணர்கள் இருந்தது உண்டு, கவிஞர்கள் இருந்தது உண்டு, கதாசிரியர்கள் இருந்தது உண்டு, நடிகர்கள் இருந்தது உண்டு, எழுத்தாளர்கள் இருந்தது உண்டு, சொல்லாற்றல் மிக்க சொல்லேர் உழவர்கள் இருந்தது உண்டு. ஆனால், இத்தனையும் ஒன்று சேர்ந்து all in one–ஆக ஓர் அற்புதமான இரசவாதக் கலவை உண்டு என்றால், அது தமிழகத்தினுடைய முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மக்களை தன் இதயத்தில் நேசிப்பவர்**

மக்கள் அனைவருக்கும் சமமானவர்கள், கடவுள் அனைவருக்கும் பறிக்க முடியாத சில உரிமைகளைக் கொடுத்திருக்கிறார். அதுதான், வாழ்க்கை–Life, சுதந்திரம்–Liberty, மகிழ்ச்சி–Happiness என்ற அடிப்படை உரிமைகள், இது அனைவருக்கும் சமமாகக் கிடைக்க வேண்டுமென்றுதான் டாக்டர் கலைஞர் அவர்கள் அரை நூற்றாண்டு காலமாக போராடிக் கொண்டிருக்கிறார். நாம் எங்கு பிறந்தோம், எங்கு வளர்ந்தோம் என்பது முக்கியமல்ல. நாம் வாழ்ந்த இடங்களில் நாம் செய்த நல்ல காரியங்கள் எவை என்பதுதான் முக்கியமானது. இதை உணர்ந்து சட்டமன்றத்திலே 50 ஆண்டு காலம் தன் பணியினைச் செய்துகொண்டு வருபவர்தான் டாக்டர் கலைஞர் அவர்கள். தன் கரங்களைக் கொண்டு வேலை செய்து வாழ்பவன் ஒரு கூலியாளியாக இருப்பான், கைகளையும் மூளையையும் உபயோகப்படுத்தி வருபவன் தொழில்நுட்பம் தெரிந்த ஒரு தொழிலாளியாக இருக்கலாம். ஆனால், கைகள், மூளை, இதயம் ஆகிய மூன்றையும் பயன்படுத்தி வாழ்பவர் யார் என்றால், அவர் ஒரு கலைஞராகத்தான் இருக்க முடியும். அப்படி ஒவ்வொரு நாளும் முரசொலிக்கு அரை நூற்றாண்டு காலமாக எழுதிக் கொண்டிருப்பது, தன்னுடைய மூளையால் நாட்டு மக்களுக்கு தான் எப்படியெல்லாம் பயன்பட வேண்டுமென்று யோசித்து வருவதும், தமிழ்நாட்டு மக்களை தன் இதயத்தில் நேசித்துக் கொண்டிருப்பவர்தான் டாக்டர் கலைஞர் அவர்கள். பலர் நாட்டிலே தான் கொண்ட கொள்கைகளை சிக்கெனப் பிடிக்காததால்தான் பல சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால், கலைஞர் அவர்கள் அப்படியல்லாது மாணிக்கவாசகப் பெருமான் சொன்னாரே, 'சிக்கெனப் பிடித்தேன்' என்று அப்படி நீங்கள் கொண்ட கொள்கையில் என்றும் உறுதியாக

இருப்பதால்தான் தள்ளாத வயதில்கூட, தளராது, எதற்கும் துயங்காது எதையும் தாங்கும் இதயத்தோடு இங்கே நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். ஒரு தலைமுறைக்கு மூன்று தேவை என்று சொல்வார்கள். அறிவு சம்பந்தப்பட்டது–knowledge, செய்திறன்–skill, மனோபாவம்–attitude. இந்த மூன்றும் தங்களிடம் இருப்பதால்தான், பேரறிஞராக, ஏன், முத்தமிழறிஞராக நீங்கள் இருக்கின்றீர்கள்.

டாக்டர் கலைஞர் அவர்கள் பின்னாலே, கோடானு கோடி மக்கள் தழுவி நிற்கின்றார்கள். திருவள்ளுவருக்கு சென்னையிலே வள்ளுவர் கோட்டம் அமைத்துக் கொடுத்தீர்கள். தென்கோடியிலே திருவள்ளுவர் சிலையை 133 அடி உயரத்தில் அமைத்துக் கொடுத்தீர்கள். அந்த விழாவிலே கலந்துகொண்ட எங்களுடைய மக்கள் தலைவர் மூப்பனார் அவர்கள் பேசுவதற்கு எழுந்தபோது, நேரம் இல்லை. கடைசியிலே அவர் சொன்னார், "டாக்டர் கலைஞர் அவர்கள் இப்படிப்பட்ட ஒரு மிகப்பெரிய செயலைச் செய்திருக்கின்றார்கள். அதற்காக இங்கே இருக்கின்ற இலட்சக்கணக்கான மக்கள் எழுந்து நின்று, இரு நிமிடங்கள் கைகளைத் தட்டுங்கள்" என்று சொல்லிவிட்டு, அவ்வளவு பெரிய மக்கள் கூட்டத்தின் மத்தியிலே மிகப் பெரிய கரவோசையை எழுப்பிவிட்டு அமர்ந்துவிட்டார். அப்படிப்பட்ட புகழைப் பெற்றிருக்கின்ற நீங்கள் திருவள்ளுவர் சிலையை அங்கே நிறுவியிருக்கின்றீர்கள். வள்ளுவர் சொற்படி வாழ்ந்துகொண்டும் வருகின்றீர்கள். அதனால்தான் ஐந்தாவது முறையும் முதலமைச்சராக உங்களை பொறுப்பேற்க வைத்து தமிழக மக்கள் அழகு பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள். அதுமட்டுமல்ல, உங்களை வாழ்த்துவதற்காகவும், பாராட்டுவதற்காகவும், இந்திய நாட்டுப் பிரதமர் அவர்களும், அன்னை சோனியா காந்தி அவர்களும் முன்னாள் பிரதமர்களும், ஏன், பாரத நாடே உங்களை பாராட்டுவதற்காக இன்று மாலை காத்துக்கொண்டிருக்கின்றது.

ஆட்சிப் பீடத்திலே இருக்கும்போது, மற்றவர்களுக்கும், கலைஞர் அவர்களுக்கும் உள்ள வேறுபாடு என்ன என்று நீங்கள் கேட்கலாம். சிலர் ஆட்சிப் பீடத்திலே இருக்கும்போது, மற்றவர்களை விரட்டுவார்கள். ஆனால், டாக்டர் கலைஞர் அவர்களோ, மற்றவர்களை ஊக்கப்படுத்துவார். சிலர் ஆட்சிப் பீடத்திலே இருக்கும்போது, மற்றவர்களுக்கு பயத்தை உண்டாக்குவார்கள். தலைவர் கலைஞர் அவர்கள் மக்கள் மத்தியிலே அன்பு காட்டுவார்கள். ஆட்சிப் பீடத்திலே மற்றவர்கள் இருக்கும்போது, நான், எனது, என்று நினைப்பார்கள். எனது ஆட்சியிலே என்று சொல்வார்கள். ஆனால், டாக்டர் கலைஞர் அவர்கள் நமது, நம்முடையது என்று கூறுவார்கள்.

மற்றவர்கள் ஆட்சிப் பீடத்திலே இருக்கின்றபோது மற்றவர்கள் செய்த தவறுகளையெல்லாம் ஒன்றுக்கு ஐந்தாக சுட்டிக்காட்டுவார்கள். ஆனால் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்றபோது, தவறு நடக்காது இருப்பதற்கு வழி தேடுவார். மற்றவர்கள் அகங்காரத்தோடு நடந்துகொள்வார்கள். தலைவர் கலைஞர் அவர்கள் அடக்கத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார். அதனால்தான் நீங்கள் அரசியல் சாம்ராஜ்யத்தில் புனித ஜார்ஜ் கோட்டையில் ஐந்தாவது முறையாகப் பொறுப்பேற்று அமர்ந்திருக்கிறீர்கள்.

இந்த நாட்டில் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னால் இந்த நாட்டிலே என்ன ஆகுமோ என்று எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில், யாரும் செய்ய முடியாத ஒரு நிலையிலே, காஷ்மீரத்திலேயிருந்து கன்னியாகுமரி வரையிலே இருக்கின்ற மக்கள், மணிப்பூரிலேயிருந்து ஜெய்சல்மார் வரை பரந்து இருக்கின்ற இந்த பாரத தேசத்திலே இருக்கின்ற எந்தத் தலைவரும் சொல்ல முடியாத ஒரு செயலை, இந்தக் கூட்டணி வெற்றி பெறுமேயானால், இந்த நாட்டிற்குப் பிரதமராகக்கூடிய தகுதியும், திறமையும் அன்னை சோனியாகாந்தி அவர்களுக்கே உண்டு என்று நீங்கள் அறிவித்து, தேர்தல் முடிந்த பின்னாலே, டெல்லிக்குச் சென்று எந்த மதவாத சக்திகளும் அங்கே தலைதூக்கிவிடக் கூடாது, இந்த நாட்டிலே இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்கள், எளிய மக்கள், ஏழை மக்கள் வாழ்வதற்கு உத்தரவாதம் அளிக்கக்கூடிய ஓர் ஆட்சி அமைய வேண்டுமென்று சொன்னால், அதற்கு சோனியா காந்தியை விட்டால் வேறு யாரும் இல்லையென்று நீங்கள் அறிவித்தீர்கள். அதற்குப் பின்னாலே, பல சதிகாரர்கள் சதி செய்ததன் பயனாக, அன்னை சோனியா

காந்தி பதவியேற்க முடியவில்லை; டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் பதவியேற்றார்கள். அப்போது நீங்கள் கூறினீர்கள். இந்திய நாட்டின் தியாகத் திருவிளக்காக அன்னை சோனியா காந்தி அவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள் என்று நீங்கள் குறிப்பிட்டீர்கள். அதை காங்கிரஸ் பேரியக்கம் ஒருநாளும் மறக்காது. அரசியலுக்கும், அரசியல் கட்சிகளுக்கும் அப்பால், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் நினைத்துப் பாருங்கள். 84 வயதான பிறகும், சட்டமன்றத்திலே இவ்வளவு பொலிவோடும், தெளிவோடும் அமர்ந்து ஆட்சி புரியும் முதலமைச்சரை நம் வாழ்நாளிலே எப்படியாவது பார்க்க முடியுமா? தாயுமானவர் பெருமான் சொன்னார், ''எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்றும் அறியேன் பராபரமே'' என்று. அதுபோல, தான் மட்டுமல்ல, தமிழர்களும், தமிழ்ச் சமுதாயமும் இன்புற்று வாழ, சமூகப் புரட்சியும், சமுதாயப் புரட்சியும் செய்து, நூற்றாண்டு காலத்திற்கு மேல் வாழ்ந்தாரே பகவத் ராமானுஜம், அப்படி நீங்கள் வாழ வேண்டுமென்று இறைவனை வேண்டுகிறேன்.

# நீங்கள் இட்ட கட்டளையை நிறைவேற்றக் காத்திருக்கின்றேன்

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி**
அவர்களின் ஏற்புரை



மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களே, அவை முன்னவரும், என்னுடைய அன்புக்குரியவருமான பேராசிரியர் அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே வாழ்த்துரை வழங்கி, என்னை ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்தியுள்ள, உணர்ச்சிவசப்படுத்தியுள்ள சட்டமன்றக் கட்சிகளின் தலைவர்கள் திரு. சுதர்சனம் அவர்களே, திரு. கோ.க. மணி அவர்களே, திரு. கோவிந்தசாமி அவர்களே, திரு. சிவபுண்ணியம் அவர்களே, திரு. செல்வம் அவர்களே, வருகை தந்துள்ள நாடாளுமன்ற, சட்டப்பேரவை உறுப்பினர்களே, பல்வேறு கட்சிகளின் தலைவர்களே, நண்பர்களே.

இன்றைய தினம் இந்த அவையிலே என்னுடைய பணியின் 50–வது ஆண்டு பொன்விழா என்ற பெயரால், என்னுடைய உள்ளம் சிலிர்க்க, உடல் சிலிர்க்க

உணர்ச்சிவயப்படுகின்ற அளவிற்கு நம்முடைய ஆளுநர் அவர்களும், அவை முன்னவர் அவர்களும், சட்டமன்றத்திலே உள்ள கட்சிகளின் தலைவர்களும் உரையாற்றி இருக்கின்றீர்கள். அந்த உரையை வரவேற்று எழுப்பிய கையொலி இத்தனை நாளும் ஒரு பக்கத்திலே கேட்டுக்கொண்டிருந்த கையொலி. இன்று ஒருசேர இருபுறத்திலும் கேட்டு, என்னை இப்படியும் எல்லா நாளும் இருக்கக்கூடாதா என்ற ஏக்கப் பெருமூச்சை எனக்கு வரவழைக்கின்ற அளவிற்கு இருந்தது என்பதை நான் மறக்க முடியாது.

நம்முடைய நண்பர் கோவிந்தசாமி பேசும்போது, எண் 11 என்பதைக் குறிப்பிட்டு, 11 ஆம் தேதிதான் இந்த ஆட்சிக்கான அறிகுறி தோன்றி, தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டது என்று தேதி 11–ஐக் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு இந்த விழா நடைபெறுகின்ற நாளும் 11 என்று குறிப்பிட்டார்கள். 11 அதோடு முற்றுப்பெறவில்லை. இந்த அவையிலே உள்ள கட்சிகளுடைய எண்ணிக்கையும் 11 தான். தி,.மு.க., அ.தி.மு.க., காங்கிரஸ், பா.ம.க., சி.பி.எம்., சி.பி.ஐ., ம.தி.மு.க. வராவிட்டாலும் பெயரைக் குறிப்பிடுவது நல்லது அல்லவா? விடுதலைச் சிறுத்தைகள், தே.மு.தி.க., இந்திய யூனியன் முஸ்லீம் லீக், புரட்சி பாரதம், ஆக, 11 கட்சிகள் இந்த அவையிலே இடம் பெற்றுள்ள கட்சிகள் ஆகும். அதுவும் 11 தான்.

1967 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைப்பதற்கு, தேர்தலிலே நிதி திரட்டியபோது கிடைத்தத் தொகையும் 11 இலட்சம்தான். அந்தத் தொகையைப் பெற்றுக்கொண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள், சைதாப்பேட்டைத் தொகுதியில் நிற்கப்போவது யார் தெரியுமா? Mr. 11 இலட்சம் என்று குறிப்பிட்டதும் என்னைத்தான். அந்த 11 இலட்சம் இப்பொழுது உங்களுக்கு நன்றிகூறப் போகிறது. இன்றைக்கு நடைபெறுகிற இந்த நிகழ்ச்சியில் நான் எவ்வளவு மகிழ்ச்சியோடு இருப்பேன் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். ஏனென்றால், 50 ஆண்டுக் கால சட்டமன்ற வாழ்வில், இந்த மன்றத்தை 50 ஆண்டுக் காலமாகப் பார்த்துக்கொண்டிருக்கிற நான், பழைய நினைவுகளையெல்லாம் சேகரிக்கிறேன் நினைவில். அப்படிச் சேகரிக்கும்போது, எனக்கு இங்கே அமர்ந்திருந்த பெருந்தலைவர் காமராஜர் தெரிகிறார். அவரை வணங்குகிறேன். இங்கே அமர்ந்திருந்த பெரியவர் பக்தவச்சலம் தெரிகிறார், வணங்குகிறேன். இங்கே அமர்ந்திருந்த என் ஆசான் அறிஞர் அண்ணா தெரிகிறார், அவரை வணங்குகிறேன். இங்கே அமர்ந்திருந்த என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். தெரிகிறார், அவரை ஆரத் தழுவி அன்பைப் பரிமாறிக் கொண்டு இங்கே பேசுகின்றேன். எத்தனையோ பெரியவர்கள், தலைவர்கள் அலங்கரித்த இடம் இந்த இடம். நான் சிலருடைய பெயரை இங்கே குறிப்பிடாவிட்டாலும்கூட, நேரம் இல்லாத காரணமே தவிர வேறல்ல. அவர்களுக்கெல்லாம் நாம் வணக்கம் செலுத்தி, தொடர்ந்து இந்த அவையிலே ஜனநாயகத்தைக் காப்பாற்றுகின்ற அந்தப் பொறுப்பை ஏற்பதற்கு இந்த நாளை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கேதான் என் எதிரே இருக்கின்ற வள்ளுவருடைய படத்தைப் பார்க்கிறேன். பக்தவச்சலத்தினுடைய நினைவு எனக்கு வருகிறது. நான் சட்டமன்ற உறுப்பினராக எதிர்க்கட்சி வரிசையிலே, எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்தபோது, நான், இந்தப் படம் மயிலாப்பூரிலே முதன்முதலாக வரையப்பட்டு, அதை வரைந்த நண்பர் இந்தப் படத்தை அரசின் சார்பிலே நீங்கள் வெளியிடலாம் என்று என்னிடத்திலே சொன்னார். அந்தப் படத்தை அறிஞர் அண்ணா சென்று பார்த்தார், பெரியவர் பக்தவச்சலம் பார்த்தார், நாவலர் நெடுஞ்செழியன் பார்த்தார், நம்முடைய பேராசிரியர் அன்பழகனார் பார்த்தார், நான் சென்று பார்த்தேன்; புலவர் பெருமக்கள் எல்லாம் பார்த்தார்கள். அது அரசின் சார்பிலே வெளியிடப்பட்டால் இதுவரையிலே திருவள்ளுவருக்கு என்று ஒரு உருவம் அறுதியிட்டு அடையாளமாகக் காட்டப்படாதிருக்கிற அந்த நிலையை மாற்றலாம் என்ற எண்ணத்தோடு, சட்டமன்றத்திலே நான் ஒருநாள் எழுந்து ‘இப்படி ஒரு படம் மயிலாப்பூரிலே ஓர் அருமையான ஓவியரால் தீட்டப் பட்டிருக்கிறது, அந்தப் படத்தை இங்கே சட்டமன்றத்திலே வைப்பீர்களா’ என்று கேட்டேன். ஆனால், பெரியவர் பக்தவச்சலம் அப்போது வைக்கப்படும் என்றோ, முடியாது என்றோ சொல்லாமல் மிகத் தந்திரமாகச்

சொன்னார். 'சட்டமன்ற உறுப்பினர், இந்தக் கேள்வியைக் கேட்ட சட்டமன்ற உறுப்பினர் அவருடைய செலவிலே அந்தப் படத்தை இங்கே வைப்பதாக இருந்தால் வைக்கப்படும்' என்று சொன்னார். தயங்காமல் நான் மறுநாளே, 'அதற்கு எவ்வளவு செலவாகும், நேற்று சொன்ன, முதலமைச்சர் சொன்ன அந்த உறுதியை நான் காப்பாற்றுகிறேன்' என்று கடிதம் எழுதினேன். இவன் வம்புக்காரனாக இருப்பான் போலிருக்கிறது என்று கருதி மறுநாள் பக்தவச்சலமே கருணாநிதி வாங்கி அந்தப் படத்தை வைத்தான் என்று வந்து விடக் கூடாது காங்கிரஸ் ஆட்சியிலே, ஆட்சிக்கு அந்த அவப் பெயர் வந்து விடக் கூடாது என்ற காரணத்தால் அவரே, இங்கே வேணுகோபால் சர்மா தீட்டிய அந்த வள்ளுவர் படம் கருணாநிதி அன்றைக்குக் கேட்டுக்கொண்டாரே அந்த அடிப்படையில் வைக்கப்படும் என்று சொன்னார். அவர் சொன்னபடி அந்தப் படம் இங்கே வைக்கப்பட்டது. ஆகவே, இங்கே வள்ளுவர் இருப்பதற்குக் காரணம் என்னுடைய கேள்வியும் பெரியவர் பக்தவச்சலனார் அவர்களுடைய நல்ல தன்மையும்தான். அதற்குப் பிறகு, இன்றைக்கு வள்ளுவர் எந்த அளவிற்கு தமிழகத்திலே பிரச்சாரம் செய்யப்பட்டிருக்கிறார், எந்த அளவிற்கு அவருடைய உருவங்கள் பரவியிருக்கின்றன, அவருடைய கருத்துகள் எந்த அளவிற்கு இப்போதும் பரப்பப்படுகின்றன என்பதெல்லாம் உங்களுக்குத் தெரியும். ஆகவே, இந்தச் சட்டமன்றத்திலே வள்ளுவருடைய திருவுருவத்தை பார்த்தவுடன் எனக்கு வந்த நினைவை நான் இங்கே சொல்லாமல் இருக்க முடியவில்லை, ஆகவே, சொன்னேன்.

### காமராஜரின் கொச்சைத் தமிழ்

இங்கேதான் பெருந்தலைவர் காமராஜர் எத்தனையோ விஷயங்களைச் சொல்லியிருக்கிறார். அவர் அதிகம் பேசுவது இல்லை; இன்னும் சொல்லப்போனால், பேசுவதேகூட இல்லை. அவருக்குப் பதிலாக சி. சுப்ரமணியம் அவர்கள்தான் பேசுவார்கள். அவர் பேச வேண்டிய கருத்துகளை சி. சுப்ரமணியம், நிதி அமைச்சர் அப்போது அவர்தான் பேசுவார். ஒன்றிரண்டு கருத்துகளை அவர் சொல்லி மற்றவர்கள் பேசுவார்கள்.


ஆனால் ஆட்சியின் சக்கரத்தைச் சுழற்றிக்கொண்டிருந்தவர் பெருந்தலைவர் காமராசர் என்பதை நாடறியும்; உலகறியும்; நானிலம் அறியும். அவர் இலக்கண, இலக்கியத்தோடெல்லாம் பேசக்கூடியவர் அல்ல. அவர் பேசும் தமிழ் கொச்சையான தமிழாக அப்பொழுது இருக்கும். ஆனால், அந்தக் கொச்சைத் தமிழ் கேட்பதற்கு மேலும் மேலும் நமக்கெல்லாம் எவ்வளவு இச்சையாக இருக்கும் என்பது அந்தக் கருத்துகளில் விளங்கும். இந்த இடத்திலேதான் இன்னும் நெருக்கமாக மேசைகள் போடப்பட்டிருக்கும். ஒரு பக்கத்திலே பெருந்தலைவரும், மற்ற அமைச்சர்களும் அமர்ந்திருப்பார்கள். இங்கே அண்ணாவும், நானும், பேராசிரியர், நாவலர் போன்றவர்களெல்லாம் அமர்ந்திருப்போம். ஒரே நேரத்திலே நாங்கள் இங்கே அமர்ந்து இருந்ததில்லை. ஆனால், அண்ணா இருக்கும்போது நான் இங்கே இருந்தேன். அப்போது கல்யாணசுந்தரம் அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் இங்கே இருந்தார். யார் யார் பெரியவர்களெல்லாம் இங்கே இருந்தார்கள் என்பதற்காக அவர்களையெல்லாம் நினைவுபடுத்துகின்றேன். அவர் இங்கே இருந்தார். அவர் ஒரு நாள் தமிழ்தான் இங்கே ஆட்சி மொழியாக வைக்கப்படவேண்டும், ஆங்கிலத்தை அறவே அகற்றவேண்டுமென்று வேக வேகமாகப் பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது பெருந்தலைவர் காமராசர் என் பக்கமாகக் குனிந்து, கையை அசைத்தார்கள். 'இங்கே கிட்டே வாருங்கள் என்று'. இப்பொழுது சொன்னால் வரமுடியாது. அப்பொழுது மேசை இருந்த நிலையில், அண்ணாவும், நானும் குனிந்து என்னவென்று கேட்டோம். அப்பொழுது தலைவர் காமராசர் சொன்னார், கல்யாணசுந்தரம் பேசுகிறார் என்றால், நீங்களும் தலையாட்டுகிறீர்களே, இது நியாயமா? என்று அவருடைய தமிழிலேயே கேட்டார். உங்களுக்கு நியாயம்தானா என்று நாகரிகமாகக் கேட்டார். புத்தி இருக்கிறதா என்று கேட்கிறமாதிரி இருந்தது. நீங்களும் தலையாட்டுகிறீர்களே என்றார். என்ன என்றார் அண்ணா. ஒன்றுமில்லை, அவர் சொல்கிறாரே, English வேண்டாம், தமிழ்தான் முழுக்க முழுக்க இருக்கவேண்டுமென்று சொல்கிறாரே, தமிழையே முழுக்க வைத்துவிட்டால்

என்ன ஆகும்? இப்பொழுது English இருக்கிற இடத்தில் இந்தி வந்து குந்திக்கும் என்றார். அப்படியே சொன்னார். இவ்வளவு பெரிய இந்தி எதிர்ப்பாளரைப் போய், நாம் இந்தி ஆதரவாளர் என்று நினைத்தோமே என்று அண்ணா என்னிடத்திலே சொன்னார். பிறகு காரில் போகும்போது, அண்ணா முன்வரிசையில் உட்கார்ந்திருக்கிறார். நான் பின்வரிசையில் உட்கார்ந்திருக்கிறேன். கருணாநிதி, காமராசர் பேசியதைக் புரிந்துகொண்டாயா? என்றார் அண்ணா. என்ன அண்ணா என்றேன். எவ்வளவு பெரிய தத்துவத்தை, அதுவும் கொச்சையாக அதுவும் சாதாரண உதாரணத்தில் சொன்னார் பார்த்தாயா? ஆங்கிலத்தை அறவே அகற்றிவிட்டால், அங்கே தமிழ் வந்து கொஞ்சி விளையாடாது. அங்கே இந்தி வந்து குந்திக்கும் என்று சொன்னாரே! அதுதான் காமராசர், ஞாபகம் வைத்துக்கொள் என்று அண்ணா சொன்னார். இந்த ஒரு ரகசியத்தை உணர்வதற்கு இந்தச் சபை எனக்கு ஒரு காலத்திலே வாய்ப்பாக இருந்தது.

**நாடு பாதி நங்கவரம் பாதி**


என்னுடைய பேச்சு, நான் குளித்தலை தொகுதியிலே வெற்றி பெற்று இங்கே முதன்முதலாக வந்து அமர்ந்தபோது 170–வது இடமோ, 171–வது இடமோ தெரியவில்லை. இங்கே பின்னால்தான் அமர்ந்திருந்தேன். முன்வரிசையில் அண்ணா, வி.கே. இராமசாமி முதலியார் போன்றவர்கள் எல்லாம் அமர்ந்திருப்பார்கள். நான் பேசிய பேச்சு, முதல் பேச்சு, கன்னிப் பேச்சு, என்னுடைய தொகுதியிலுள்ள நங்கவரம் பண்ணையைப் பற்றியது. 'கையேர் வாரம், மாட்டேர் வாரம்' என்ற ஒரு பிரச்சினை பற்றியது. கையேர் வாரம் என்றால் – உழவர்கள், அவர்களே ஏர் எடுத்துக்கொண்டு சென்று, மாடும் ஓட்டிக்கொண்டு சென்று, அவர்களே அங்கே பணியாற்றி, மிராசுதாரர்களுக்கு உதவினால், அதற்குப் பெயர் மாட்டேர் வாரம் – உழவர் மாத்திரம் அங்கே போய், பண்ணையார் மாடும் கொடுத்து, ஏரும் கொடுத்து, கலப்பையும் கொடுத்து அங்கே உழுதால், அதற்குப் பெயர் கையேர் வாரம். வெறும் கையோடுதான் போவார்கள். அதனால் கையேர் வாரம். மாடும் மற்ற பொருட்களும் கொடுத்தால் அது மாட்டேர் வாரம். அதில் கையேர் வாரத்திற்குள்ள கூலி என்ன, மாட்டேர் வாரத்திற்குள்ள கூலி என்ன என்பதிலே பெரிய வித்தியாசம் இருந்தது. வித்தியாசத்தைக் குறைக்கவேண்டு மென்பதற்காகப் போராட்டம் நடக்கிறது. அப்பொழுது நாங்களும் கம்யூனிஸ்ட் கட்சிகளும் சேர்ந்துதான் நங்கவரத்திலே அந்தப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தோம். கேள்விப்பட்டிருப்பீர்கள், "நாடு பாதி, நங்கவரம் பாதி" என்று. அவ்வளவு பெரிய பண்ணை அது. அங்கே அந்தப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். நாங்கள் அசெம்பிளிக்கு வரவேண்டிய நாள் அன்று. காலையில் என்னுடைய வீட்டிலே எம்.எல்.ஏ.–களுக்கெல்லாம் விருந்து. முதன்முதலாக சட்டமன்றத்திற்குப் வரப் போகிறோம். அதனால் வீட்டில் விருந்து. அண்ணா இருக்கின்றார். நாவலர் அப்பொழுது அசெம்பிளிக்கு வர முடியவில்லை. காரணம், அவர் சேலத்திலே வெற்றி வாய்ப்பை இழந்துவிட்டார். நம்முடைய பேராசிரியர் இருக்கிறார்; எல்லோரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கும்பொழுது நாவலர் கேட்டார், "என்னய்யா கையேர் வாரம், மாட்டேர் வாரம் என்று சும்மா, சும்மா சொல்லுகின்றீர்களே! அது என்ன?" என்று கேட்டார். நான் அதை விளக்கிச் சொல்லிக் கொண்டிருந்தேன். ஒரு பத்து நிமிடமாக நான் சொல்ல, சொல்ல, அவரும் தோண்டித் தோண்டிக் கேட்டார். நானும் சொல்லிக் கொண்டிருந்தேன். இதைத் தொலைவிலே உட்கார்ந்திருந்த அண்ணா கவனித்தார். கவனித்துவிட்டு, நாவலரைக் கூப்பிட்டு "நெடுஞ்செழியன், கருணாநிதி உனக்கு விளக்கம் சொல்லிக்கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறாயா? இல்லை, அவன் இன்றைக்குப் பேசப் போகிறான், உன்னிடம் ஒத்திகை பார்த்துக்கொண்டிருக்கிறான்" என்று சொன்னார். இதை ஏன் சொல்கிறேன் என்றால், நீங்களும் இப்படி ஒத்திகை பார்த்துவிட்டு வந்து பேச வேண்டும். அதற்கு நானே உதாரணமாக அன்றைக்கு இருந்திருக்கிறேன் என்பதற்காகத்தான் நான் அதை நினைவூட்டினேன்.

இப்படி ஒரு வேடிக்கையையும் சொல்லவேண்டும்; அது இந்த அசெம்பிளியில் நடந்தது. கிருஷ்ணா ராவ் பேரவைத் தலைவராக இருந்தார். அவருக்குத் தமிழ் அதிகம் வராது. மழலைக் குரலிலே பேசுவார்.



ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுவார். பெரிய மனிதர், மேதை, ரொம்ப நல்லவர். அண்ணாவிடத்திலே, எங்களிடத்தில் எல்லாம் மிகுந்த அன்பு கொண்டவர். ஒரு நாள் சேலத்து காங்கிரஸ் உறுப்பினர் பேசினார். சேலத்து காங்கிரஸ் உறுப்பினர் என்றால் எங்களுக்கெல்லாம் கோபம். ஏனென்றால் நாவலரைத் தோற்கடித்தவர் அவர். மாரியப்பன் என்று பெயர். கொஞ்சம் வித்தியாசத்தில், 200 ஓட்டிலே நாவலரைத் தோற்கடித்தவர். அந்தக் கடைசியிலேதான் அவர் உட்கார்ந்திருந்தார். இலக்கிய சர்ச்சை ஒரு நாள் பேச்சிலே வந்தபோது, மாரியப்பன் எழுந்திருந்து, எங்களுக்குப் பதில் சொல்வதாகக் கருதிக் கொண்டு – அவருக்கு இந்த லகர, ளகரம் சரியாக வராது – "திருவல்லுவரை எடுத்துக் கொல்லுங்கள், கம்பரை எடுத்துக் கொல்லுங்கள்" என்று சொன்னார். நான் இதுதான்சமயம் என்று பார்த்து, அவர் மேலே உள்ள கோபத்திலே, "அவைத் தலைவர் அவர்களே!" என்று கிருஷ்ணா ராவ் அவர்களைப் பார்த்து கேட்டேன் . என்ன என்றார் அவர். "இந்த அவையிலே பலாத்காரமான வார்த்தைகளைப் பயன்படுத்தலாமா? இது Point of Order–க்கு உட்பட்டதல்லவா? Parliamentary வார்த்தையா?" என்றேன். "No, No, No." என்று திரு. கிருஷ்ணா ராவ் சொல்லிவிட்டு, "Mr. Mariappan, ஜாக்கிரதையாகப் பேசுங்கள். அது பலாத்காரமான வார்த்தை, அதைப் பயன்படுத்தாதீர்கள்" என்று சொன்னார்.

இப்படியெல்லாம் நடைபெற்ற வேடிக்கைகளை, விளையாட்டுகளை, தமாஷ்களை எல்லாம் நான் இங்கே எண்ணிப் பார்க்கிறேன். அதேநேரத்தில் அவர்கள் எல்லாம் இப்போது இல்லையே!. பேராசிரியர் பேசும்போதும் சொன்னார்கள். இதையெல்லாம் பார்க்க, ரசிக்க அண்ணா இல்லையே என்று சொன்னார்கள். அம்மா இல்லை என்ற கவலையைவிட, அண்ணா இல்லையென்ற கவலை எனக்குப் பெருங்கவலை என்பதை அவரும் அறிவார், எல்லோரும் அறிவார்கள். ஆனால் எல்லாக் கவலைகளையும் போக்குகின்ற அளவிற்கு, அந்தக் கவலைகளையெல்லாம் தீர்க்கின்ற அளவிற்கு, அதற்கெல்லாம் பரிகாரமாக நீங்கள் எல்லாம் இருக்கின்றீர்கள் என்ற ஒரே ஒரு ஆறுதலோடு உங்களோடு கூட நான் இருக்கிறேன். நீங்கள் இட்ட கட்டளைகளை நிறைவேற்றக் காத்திருக்கிறேன். நாம் அனைவரும் சேர்ந்து இந்த நாட்டை வாழ வைக்க, இந்தச் சமுதாயத்தை முன்னேற்ற பாடுபட இன்றைக்குச் சூளுரை மேற்கொள்வோம். அதுதான் இந்த நாளில் நீங்கள் என்னைப் பாராட்டி, ஊக்கப்படுத்திய இந்த விழாவில் நாம் எடுத்துக்கொள்கின்ற சூளுரை என்று குறிப்பிட்டு, இந்தச் சூளுரையையே என்னுடைய ஏற்புரையாகக் கருத வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த அளவில் அமைகிறேன். நன்றி. வணக்கம். ★



# மக்களின் மனங்கவர்ந்த மக்கள் தலைவராய் ஏழைகளின் நெஞ்சங்களில் வாழ்கிறார் கலைஞர்

சட்டமன்றத்தில் இரண்டாம் நாளாக, கலைஞர் பொன்விழாவினையொட்டி கண்கவர் ஒளி விளக்குகளாலும், மணம் கமழும் மலர் மாலைகளாலும், அழகுற அலங்கரிக்கப்பட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் 2007 ஆம் ஆண்டு மே திங்கள், 12 ஆம் நாள் சனிக்கிழமை காலை 11–00 மணியளவில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர்களும், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும், சிறப்பு அழைப்பிதழ் பெற்ற மாண்புமிகு மத்திய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவருடன் மாண்புமிகு மக்களவைத் தலைவர் திரு. சோம்நாத் சாட்டர்ஜி அவர்கள், காலை 11–00 மணியளவில் சட்டமன்றப் பேரவை மண்டபத்தை வந்தடைந்தார்கள்.

அனைவரும் எழுந்து நிற்க, தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்பெற்றது.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன் அவர்கள் வரவேற்புரையாற்றினார்கள்.

"சட்டப் பேரவையில் கலைஞர் பொன்விழா" 2ஆம் நாள் நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்களவைத் தலைவர் திரு. சோம்நாத் சாட்டர்ஜி பங்கேற்று நிகழ்த்திய உரை வருமாறு:–

''எல்லோருக்கும் வணக்கம்.

தமிழ்நாட்டுச் சட்டமன்ற அவைகளில் நெஞ்சில் என்றும் நிலைத்திடும் வகையில் கலைஞர் கருணாநிதி அவர்கள் ஆற்றியிருக்கிறப் பங்கினைப் பாராட்டும் இந்த விழாவில் பங்குகொள்ளும் நல்வாய்ப்புக் கிடைத்ததை எண்ணிப் பெருமகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்கிறேன். இந்த அரிய சாதனைக்காக மதிப்புக்குரிய என் நண்பர் கருணாநிதி அவர்களை வாழ்த்தக் கிடைத்த ஒரு பெரிய வாய்ப்பாகக் கருதுகிறேன்.

தமிழகத்து அரசியலிலும் இந்திய அரசியலிலும் பெருமையுடன் குறிப்பிடத்தக்க வகையில் பணியாற்றி இன்னமும் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கிற ஒரு மாபெருந் தலைவரின் வாழ்க்கையில் இந்த நிகழ்ச்சி நினைவில் போற்றி மகிழத்தக்க ஒன்றாகும். திரு.கருணாநிதி அவர்கள் சட்டமன்றத் தேர்தல்களில் 11 முறை வெற்றி பெற்று தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் தன்னிகரற்ற வாய்ப்பைப் பெற்றிருக்கிறார். 1980களில் தமிழ்நாடு சட்டமன்ற மேலவையிலும் அவர் உறுப்பினராக இருந்திருக்கிறார். இப்படித் தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறார் என்றால் அது கருத்துத் தெளிவும் முன்னேற்றக் கொள்கைகளும் கொண்ட தமிழ்நாட்டு மக்கள் அவர் மீது கொண்டிருக்கும் அன்பையும் மரியாதையையும் காட்டுவதோடு, இந்த மாநிலத்தின் விரைவான முன்னேற்றத்துக்காக ஆற்றும் பணியை அங்கீகரிப்பதும் ஆகும்.

அவருடைய செல்வாக்கு என்பது குறிப்பிட்ட ஒரு தொகுதியோடு நின்றுபோய்விடவில்லை. அவருடைய அரசியல் அரங்கம் இந்த மாநிலத்தை மட்டுமல்ல, அனைத்து இந்தியாவையும் உள்ளடக்கியதாகும்.

எந்தத் தொகுதியில் அவர் தேர்தலில் நின்றாலும், அந்தத் தொகுதி மக்கள் எவ்விதத் தயக்கமும் இன்றி நம்பிக்கையுடனும், மகிழ்ச்சியுடனும் தங்கள் பிரதிநிதியாக அவரைச் சட்டமன்றத்துக்கு அனுப்புகிறார்கள்.


**முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் விளங்குகிறார்**

இந்த நீண்டகாலப் பட்டறிவில் அவர் அரசியல் அமளிகளை, சூறாவளிகளைச் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் இருந்து மட்டுமின்றி, ஆளுங்கட்சியினரிடையே கூட சந்தித்திருக்கக் கூடும். ஐந்து முறை அவர் முதலமைச்சராக இருந்திருக்கிறார். அதுவேகூட ஒரு சாதனைதான். இதில் அவர், அவருடைய நல்ல நண்பர் ஜோதிபாசுவின் சாதனையை நெருங்கி வருகிறார் என்று கூடச் சொல்லலாம். சட்டமன்றத்தில் அவர் சட்டமன்ற உறுப்பினராய், எதிர்க்கட்சித் தலைவராய், அமைச்சராய், முதலமைச்சராய் பல நிலையாற்றிய பழுத்த அனுபவம் நிறைந்தவர். அதுமட்டுமல்ல, 1949 ஆம் ஆண்டு பெரிய தலைவர்களுக்குத் துணையாக இருந்து தொடங்கப் பெற்ற திராவிட முன்னேற்றக் கழகம் என்ற ஒரு மாபெரும் அரசியல் கட்சியை ஒப்பாரும், மிக்காரும், எதிர்ப்பாரும் இன்றி அரவணைத்து நடத்திச் செல்லும் வல்லமை மிக்கவராக விளங்குகிறார். பொதுவாழ்வின் எந்தப் பணியிலும் அவர் ஈடு இணையின்றி ஈடுபாட்டுடன் கடமை ஆற்றி இருக்கிறார்.

அரசியல் தெளிவும், முயற்சியும் முனைப்பும் கொண்ட மக்களைக் கொண்ட தமிழ்நாட்டில் சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்புகளை நிறைவேற்றுவது ஒரு பெரிய சுமையாகக் கூடக் கருதப்படலாம். ஆனால் அவர்களுக்கெல்லாம் திரு.கருணாநிதி ஒரு முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் விளங்குகிறார்.

**40 ஆண்டுகளாக தலைவர்**

பெருமைக்குரிய அவரது பொதுவாழ்வில் கருணாநிதிக்கு அவருடைய தொகுதி மக்களின் ஒத்துழைப்பும், நல்லெண்ணமும் துணை நிற்கின்றன. தொடர்ந்துவரும் தொல்லைகளையும், அலைக்கழிக்கும் அரசியல் குழப்பங்களையும் மீறி அவர் மேலும் மேலும் வளர்ந்து வருவதற்கு அவர் மீது மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையும் நல்லெண்ணமும்தான் காரணம் ஆகும். மக்களின் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு எளிதில் தம்மை யாரும் சந்திக்கலாம் என்ற நிலையில், தொண்டர்கள் தோழர்களின் வாழ்வு வளமாக அமைந்திட முனைப்புடன் எப்போதும் வருமுன் காப்பவராய்ப் பணியாற்றுவது அவரது பணியின் சிகரமாய் அமைந்திருக்கிறது. தமது அரசியல் வாழ்வின் உச்ச நிலையிலும் கூட அவர் சாலையோரத்துச் சாமான்யர்களை மறந்ததில்லை. அடிமட்டத் தொண்டர்களை, அமைப்பின் வேர்களாய் உள்ளவர்களை அவர் என்றும் மறந்ததில்லை. வறிய நிலையில் பசியும் பட்டினியுமாய் வாழும் மக்களைப் பற்றியே அவர் எப்போதும் எண்ணி, அவர்களுக்காகவே போராடிக் கொண்டிருக்கிறார். கிட்டத்தட்ட கடந்த 40 ஆண்டுகளாய் கட்சியின் தலைவராய் இருந்து அவர் அதைக் கட்டிக் காத்திருக்கும் திறமை பாராட்டுக்குரிய ஒன்று. அவர் காலத்து மூத்த தலைவர்களுக்கும் இன்றைய தலைமுறைத் தொண்டர்களுக்கும் அவர்



ஒரு நல்லுறவுப் பாலமாக விளங்குகிறார். அவருடைய வாழ்க்கை வழி, இன்றைய தலை முறையில் பொதுவாழ்விலும் அரசியலிலும் ஈடுபட விரும்புகிற இளைஞர்களுக்கும் பெரியவர்களுக்கும் ஒரு முன்மாதிரியாகவும் வழிகாட்டியாகவும் இருக்கிறது.

தமிழக மக்களின் உயர்ந்த அரசியல் தெளிவும், பண்பாடுமிக்க அரசியல் செயல்முறைகளும் பொறுப்பும் அரசியல் முதிர்ச்சியும் திரு.கருணாநிதி அவர்களைப் போன்ற சீரிய தலைவர்களால்தான் எனலாம். விவரம் தெரிந்த இத்தகைய தலைவர்களின் வழிகாட்டுதலில்தான் இந்த மாநிலத்து மக்கள் பொதுவாழ்வில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் பெற முடிந்திருக்கிறது.

**கொள்கை வழி தியாகம்**

திரு.கருணாநிதி தமிழ்நாட்டு மக்களின் மனங்கவர்ந்த மக்கள் தலைவராய் அவர்கள் நெஞ்சங்களில் நிறைந்து இருக்கிறார். அவரைப்போல எங்கிருந்து எத்தகைய தாக்குதல் வந்தாலும் கொள்கை வழி நின்று எத்தகைய தியாகத்தையும் செய்து அதை எதிர்க்கும் துணிவுடையவர்கள் விரல்விட்டு எண்ணத் தக்கவர்களே இருப்பார்கள்.

ஏழை எளிய ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வை உயர்த்துவதும், அதற்காகத் துணிவுடன் எதையும் செய்யும் ஆற்றலும் நிறைந்த தியாக வாழ்க்கை அவரது வாழ்க்கை. கிட்டத்தட்ட 35 ஆண்டுகள் இந்த மாநிலத்தின் முதலமைச்சராய் இருந்து அவர் ஆற்றிய பணிகள் பலதரப்பட்டவை. சமூகப் புரட்சியை முன்னோக்கி எடுத்துச்சென்றது மட்டுமல்ல, ஒரு புதிய தமிழகத்தை உருவாக்க, பல திட்டங்களை – இதுவரை யாரும் நினைத்திராத திட்டங்களைத் தீட்டி அவற்றைச் சட்டமாகவும் அவர் ஆக்கி இருக்கிறார். இந்தியாவில் எங்கும் இல்லாத நிலையில் கருணாநிதிதான் தமிழகத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல்வாழ்வுத் துறையை முதன்முதலில் அமைத்தார். 1989 முதலே அவர் ஒடுக்கப்பட்ட நலிந்த மக்களின் வாழ்வை உயர்த்தப் போராடி வருகிறார்.

அண்மைக் காலங்களில் தமிழ்நாட்டில் பல துறைகளிலும் ஏற்பட்டிருக்கும் பன்முக வளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்கும் அவருடைய தொலைநோக்குப் பார்வையும் அரசியல் சாதுரியமுமே காரணம் ஆகும். முழுக்க முழுக்க மதச்சார்பற்ற தன்மை, மிக உயர்ந்த சமூக நெறி, ஒட்டுமொத்தமாக நாட்டை முன்னெடுத்துச் செல்லும் பண்புகள் இவற்றையெல்லாம் உள்ளடக்கிய ஒரு வளர்ச்சியே திரு.கருணாநிதி காண விரும்பும் வளர்ச்சி.


தொடர்ச்சி 45 பக்கம்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களிடம்
மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின்
2006-2007ஆம் ஆண்டிற்கான ஈவுத்தொகையாக ரூ.4 கோடியே 40 இலட்சத்திற்கான காசோலையினை
மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு.ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் அளித்தார்.
தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி,இ.ஆ.ப. உடன் உள்ளார் (2.4.2007)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்,
சென்னை பெருநகரப் பகுதிக்கான வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளை தமிழில் வெளியிட்டார்கள்.
முதல் பிரதியை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர்
திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் பெற்றுக்கொண்டார். (4.4.2007)






மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்,
பத்மபூஷன் டாக்டர் ஆர்.எம்.அழகப்பச் செட்டியாரின் நினைவு அஞ்சல் தலையினை வெளியிட்டார்கள்.
மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் திரு.ப.சிதம்பரம், மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன்,
மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர்
திரு.கே ஆர். பெரியகருப்பன் ஆகியோர் உடன் உள்ளனர் (6.4.2007)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில்
தலைமைச் செயலகத்தில் காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பின் மீது விளக்கங்கள் கோரும்
அம்சங்கள் குறித்து அனைத்துக் கட்சி கூட்டம் நடைபெற்றது. (15.4.2007)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் முன்னிலையில்
கோயம்புத்தூர் மற்றும் காஞ்சிபுரம் பகுதிகளில் அமையவுள்ள தகவல் தொழில்நுட்பப் பூங்கா மற்றும்
உள் கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய இரண்டு வளர் நகரங்கள் உருவாக்குதல் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம்
தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கும், ஐக்கிய அரபு எமிரேட்டை சேர்ந்த ராஸ் அல் காய்மா முதலீட்டு நிறுவனத்திற்கும்
இடையே கையெழுத்தானது. மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு.ஆற்காடு நா.வீராசாமி மற்றும்
தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி,இ.ஆ.ப. ஆகியோர் உடன் உள்ளனர். (28.4.2007)



மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திரு.என்கேகேபி.ராஜா அவர்கள்,
சென்னை வானவில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள
சித்திரை கைத்தறித் துணிகள் கண்காட்சியினை குத்துவிளக்கேற்றி தொடங்கிவைத்து
பார்வையிட்டார்கள் (2.5.2007)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களை
முன்னாள் உள்துறை அமைச்சர் மறைந்த திரு. கக்கன் அவர்களின் மகன் திரு. பாக்கியநாதன் கக்கன்,
தனது குடும்பத்தினருடன் நேரில் சந்தித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த உதவிக்காக
தமது நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார். (4.5.2007)



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்,
சென்னையில் தமிழக அரசுக்கு நன்றி தெரிவிக்கும் தமிழ்நாடு நர்சரி, பிரைமரி, மெட்ரிக்குலேஷன்,
மேல்நிலைப்பள்ளிகள் சங்கத்தின் சிறப்பு மாநில மாநாட்டினை குத்துவிளக்கேற்றி தொடங்கிவைத்து,
மாநாட்டு மலரினை வெளியிட்டார்கள். உடன் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு,
மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு ஆகியோர் உள்ளனர். (4.5.2007)




மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தாம்பரம் இரயில் நிலையம் அருகில் இரயில்வே மேம்பாலம் மற்றும் தாம்பரம் - வேளச்சேரி சாலையில் (எம்.பி.ஐ.சாலை) பள்ளிக்கரணையில் மேம்பாலம் ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டினார்கள். மாண்புமிகு மத்திய கப்பல் மற்றும் தரைவழிப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.டி.ஆர்.பாலு, மாண்புமிகு மத்திய இரயில்வேதுறை இணை அமைச்சர் திரு.அரங்க.வேலு, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன், மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு.வெள்ளக்கோவில் மு.பெ.சாமிநாதன், ஆகியோர் உடன் உள்ளனர். (5.5.2007)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், நான்கு பத்திரிகையாளர் குடும்பங்களுக்கு குடும்ப நல நிதி உதவியாக ரூ.7.00 இலட்சமும், ஒரு பத்திரிகை புகைப்படக்காரருக்கு மருத்துவ நிதி உதவியாக ரூ.1.50 இலட்சமும் வழங்கினார் (18.5.2007)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், தலைமைச் செயலகத்தில், கொடுஞ்செயல் எதிர்ப்பு நாளை முன்னிட்டு, முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள். தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப. உடன் உள்ளார் (21.5.2007)



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையில், மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் புதிய நவீன ரக தொடர் பேருந்துகளை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு, மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் உடன் உள்ளார்கள். (22.5.2007)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில், சிறுபான்மையினருக்கு இடஒதுக்கீடு வழங்குவது தொடர்பான சட்டப் பிரச்சினைகளைப் பற்றி ஆய்வு செய்ய கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத் தலைவர் நீதியரசர் திரு.எம்.எஸ்.ஜனார்த்தனம், நிருவாகச் சீர்திருத்த ஆணையத்தின் தலைவர் நீதியரசர் திரு.ஏ.கே.ராஜன், நீதியரசர் திரு.சண்முகம், திராவிடர் கழகத் தலைவர் திரு.கி.வீரமணி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.(5.6.2007)



கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் அவர்களின் 112ஆவது பிறந்த நாளன்று, சென்னை, திருவல்லிக்கேணி, வாலாஜா பெரிய பள்ளிவாசல் வளாகத்தில் அமைந்துள்ள அவருடைய நினைவிடத்தில் மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி, மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் டாக்டர் (திருமதி)பூங்கோதை ஆகியோர் மலர் போர்வையை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.(5.6.2007)



ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், பத்தாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் மாநில அளவில் அதிக மதிப்பெண்களுடன் முதல் மூன்று இடங்களில் சாதனை படைத்த மாணவ, மாணவியருக்குப் பரிசும், பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கி வாழ்த்தினார்கள். மாண்புமிகு மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. ஆ.ராசா, மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் மற்றும் மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு ஆகியோர் உள்ளனர். (9.6.2007)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், தமிழகத்திலுள்ள ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கு மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கிவைத்து, தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி. இ.ஆ.ப., அவர்களுக்கு, மடிக்கணினியினை (Laptop Computer) வழங்கினார்கள். (10.6.2007)

36 ஆம் பக்க தொடர்ச்சி...

சமூக மாற்றத்துக்கும், தொழில் வளர்ச்சிக்கும், பொருளாதார ஏற்றத்துக்கும் அரசியலை ஒரு வலுவான ஆயுதமாக அவர் பயன்படுத்த விரும்புகிறார். நலிந்த நிலையில் கவனிப்பாரற்றுக் கிடப்பவர்கள் தாங்களாகவே முன்னேறிவிடுவார்கள் என்று விட்டுவிடக் கூடாது; அவர்களைக் கைதூக்கி விடும் கடமை அரசுக்கும் உண்டு என்பது அவர் கருத்து. அவர்களை முன்னேற்றுவதற்காக பல திட்டங்களை அவர் தீட்டி இருக்கிறார். கண்பார்வை குன்றிய ஏழை மக்களுக்குக் கண்ணாடி வழங்குதல், மருத்துவமனைகளில் இலவச அறுவை சிகிச்சை, கையால் இழுக்கும் ரிக்ஷாவை ஒழித்துவிட்டு இலவசமாக சைக்கிள் ரிக்ஷா வழங்குதல், நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு சீர்செய்யப்பட்ட நிலங்களை இலவசமாக வழங்குதல், குடும்பச் சொத்தில் பெண்களுக்குச் சம பங்கு உண்டு என்று சட்டம் செய்வது, பெண் குழந்தைகளுக்கு இலவசப் படிப்பு, திருமண வயதில் உள்ள பெண்களுக்குத் திருமணத்திற்கான உதவித் தொகை வழங்குதல் போன்ற திட்டங்கள் ஏழை எளியவர்களுக்காக, பெண்களின் முன்னேற்றத்துக்காக திரு.கருணாநிதி செயல்படுத்தி வரும் திட்டங்களாகும்.

**திராவிடர் அடையாளத்தை நிலைநிறுத்தும் பணி**

வீடு இல்லாதவர்களுக்கு வீடு கட்டித் தருவது, மிகக் குறைந்த விலையில் ஏழைகளுக்கு உணவு தானியங்கள் வழங்குதல், ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்குதல், வசதி இல்லாத குடும்பங்களுக்கு இலவச எரிவாயு அடுப்பும், எரிவாயு இணைப்பும், பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு தருவது – இப்படி சமூகத்தின் பலதரப்பட்ட மக்களையும் கருத்தில் கொண்டு அவர் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டிருக்கிறார்.

சட்டமன்ற உறுப்பினராக மட்டுமின்றி, ஒரு நிருவாகியாக சமூகப் பொருளாதார முன்னேற்றத்துக்கு மிகக் கணிசமான – குறிப்பிடத்தக்க வகையில் பணியாற்றி இருக்கிறார். ஒரு நல்ல சமச்சீரான சமூக வாழ்க்கைமுறை அமைய இவையெல்லாம் முன் முயற்சித் திட்டங்களாகும்.

ஒப்பற்றத் தலைவர் அண்ணாவின் வழிநின்று ஓய்வறியாமல் திராவிடர் என்ற அடையாளத்தை நிலைநிறுத்த தம் பேச்சாற்றல், எழுத்தாற்றலை முழு அளவில் பயன்படுத்திப் பகுத்தறிவுடன் கூடிய சமத்துவ சமுதாயம் அமைய அவர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். சமூக அதிகாரம் என்ற ஒளிச் சுடரைக் கையில் ஏந்தி அதை உயர்த்திப் பிடிக்க பாடுபட்டுக் கொண்டிருக்கிறார். சமூக உணர்வுள்ளவர் அவர். அதனால்தான் இந்துக் கோவில்களில் எல்லாச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற கொள்கைக்குச் சட்ட வடிவம் கொடுத்துச் செயல்படுத்துகிறார்.


**சமூக சீர்திருத்தவாதி**

அவர் ஒரு சமூக சீர்திருத்தவாதியும்கூட, சாதிபேதம் அற்ற சமத்துவ சமுதாயம் அமைக்கும் அவரது முயற்சியை, பணிகளை மக்கள் என்றும் நினைவில் வைத்திருப்பார்கள்.

மத்திய அரசில் கட்சிகளின் கூட்டணி ஆட்சி முறையும், மாநிலங்களின் கூட்டு ஆட்சி முறையும் வெற்றி பெற திரு.கருணாநிதி குறிப்பிடத்தக்க அளவில் பணியாற்றி இருக்கிறார். மாநிலங்கள் வலுவாக இருக்க வேண்டும், வலுவான மாநிலங்களின் கூட்டாகவே ஒன்றிய அரசு அமைய வேண்டும் என்பதில் அவர் நம்பிக்கை உடையவர். நாட்டின் ஒற்றுமைக்கும், இறையாண்மைக்கும் எத்தகைய ஊறும் ஏற்படாமல் மாநிலங்களின் உரிமைக்காக அவர் போராடிக் கொண்டிருக்கிறார். இந்தியா போன்ற பன்முகச் சமுதாய அமைப்புள்ள நாட்டில் அதிகாரத்தைப் பரவலாக்குதல் என்பது அரசியல் தேவை என்பது மட்டுமல்ல, பொருளாதாரக் கட்டாயமும்கூட என்பது திரு.கருணாநிதியின் கருத்து. இதற்காக 1972 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் அவர் பேசிய கருத்தைக் கூர்ந்து பார்ப்பது அவசியம் ஆகிறது.

**இராஜதந்திரி**

''புதிய பொருளாதார முறைகளால் ஏற்படும் சிக்கல்களைச் சமாளிக்க நம்முடைய பெரிய நாட்டில், அதிகாரங்களைப் பரவலாக்குவது கட்டாயத் தேவை ஆகும். நாட்டின் வளங்களைத் திறமையாக நிருவகிப்பதற்காகவும், நாட்டு நலன்களைப் பற்றிய முக்கிய பிரச்சினைகளைத் திறம்பட எதிர்கொள்ளவும் ஒரு வலிவான மத்திய அரசு தேவைப்படுவதாலும், நம்முடைய மக்களின் குறைந்தபட்சத் தேவைகளைக் குறுகிய காலத்திற்குள் சிறப்பாக நிறைவேற்றிடவும் ஆக இந்தக் கருத்துகளை முன்வைத்துதான் மாநில சுயாட்சி என்ற கோரிக்கை முன்வைக்கப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.''



இந்தக் கருத்து மத்தியில் உள்ள கூட்டாட்சி அமைப்பை வலுப்படுத்துவதில் அவர் கொண்டிருக்கும் முயற்சியை வெளிப்படுத்தும் ஒரு பெரிய இராஜதந்திரியின் பேச்சாகவே தோன்றுகிறது. திரு.கருணாநிதி நாட்டின் ஒற்றுமையிலும் இறையாண்மையிலும் முழு நம்பிக்கை உள்ளவர்.

தமிழக அரசால் மாநில சுயாட்சி பற்றி அமைக்கப்பட்ட இராஜமன்னார் குழுவின் பரிந்துரை பற்றி தம் அரசின் கருத்தை விளக்க நேர்ந்தபோது தமிழ்நாட்டுச் சட்டமன்றத்தில் 1974ஆம் ஆண்டு ஏப்ரல் 16ஆம் நாள் கவிதை நயத்தோடு விளக்கியதை இங்கே சொல்ல நினைக்கிறேன்.

சூரியக் கதிர்பட்டு தேசியக்கொடிப் பட்டொளி வீசிப் பறக்கிறது. கொடியின் கம்பீரத்தைக் காண்பதற்குக் கண்களை உயர்த்தி மேகங்களுக்கு மேலே வானத்தைப் பார்க்கிறோம். வங்காளத்துத் தாகூரின் தங்கக் குரலில் நமது தேசியகீதம் ஒலிக்கிறது. குற்றால அருவியின் இனிய மெல்லிசையாய் அது நம் காதில் விழுகிறது. ஆம்! அன்னிய ஆதிக்கத்திலிருந்து நம்நாடு விடுதலை பெற்றுவிட்டது. இந்திய விடுதலைக்காக நாம் நடத்திய வீரப்போர் உலக சரித்திரத்தில் பொறிக்கக் பட்டிருப்பதை எண்ணி நம் தலை பெருமையில் உயர்கிறது.

**தேர்ந்த இலக்கியவாதி**

திரு.கருணாநிதி அவர்கள் பன்முகப் பரிமாணம் உடையவர் என்பதை நாம் அறிவோம். நகைச்சுவை நயம் மிளிரும்ஆற்றொழுக்குப் பேச்சாளரான அவர் இந்தக் கவிப்பெருக்கில் ஒரு தேர்ந்த இலக்கியவாதியின் நாடக வசனம் போல ஒரு சொல்லோவியத்தைப் படைத்திருக்கிறார். கவிதை, நாடகம், நாவல், சிறுகதை, திரைப்படம் என தமிழிலக்கியத்தின் எல்லாத் துறைகளிலும் வல்லவர். சீரழிந்து கிடக்கும் மக்களைக் கரையேற்றும் முயற்சியாக, தம்முடைய உணர்ச்சி மிக்க எழுத்துகளால், ஆதிக்க மனோபாவம் படைத்த சமூகத்தின் கொடுமைகளைச் சாட இலக்கியத்தை ஒரு சக்தி வாய்ந்த கருவியாகக் கையாளுகிறார். நான் நாடாளுமன்றத் தலைவராகப் பொறுப்பேற்ற பிறகு, நிரந்தர இலக்கியமாகப் போற்றப்படும் மாக்சிம் கார்க்கியின் 'தாய்' என்ற கவிதைப் படைப்பின் ஆங்கில மொழிபெயர்ப்பிற்கு முன்னுரை எழுதும் பெருவாய்ப்பு எனக்குக் கிடைத்தது. பின்னர் 2005ஆம் ஆண்டில் இங்கே சென்னையில் அதே நூலை வெளியிடும் மகிழ்ச்சியான பேறும் எனக்குக் கிடைத்தது. அந்தப் புத்தகத்தைப் படித்தது எனக்கு ஓர் இனிமையான அனுபவமாக இருந்தது.

திரு.கருணாநிதியின் தமிழ் இலக்கிய அறிவும், மொழிப் புலமையும் அவரது வளமான பேச்சாற்றலுக்குத் துணை நின்று மக்களிடையே தம் கருத்தை ஆழப்பதிக்கும் கருவியாக அமைந்து விடுகிறது. இதுவரை அவர் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பொதுக்கூட்டங்கள், சிறப்புக் கூட்டங்கள், கருத்தரங்கங்கள், மாநாடுகளில் அவர் உரையாற்றி

இருப்பதாக அறிகிறேன். இந்தத் தமிழ்நாட்டுச் சட்டமன்றப்பேரவையில் பல நேரங்களில், பல பொருள்கள் பற்றி திரு.கருணாநிதி ஆற்றியிருக்கும் பேருரைகள் என்றென்றும் எதிரொலித்துக் கொண்டிருக்கும்.

இதுவரை அவர் பெற்றிருக்கும் கௌரவப் பட்டங்கள், பல்வேறு மதிப்புரைகள் அவருடைய படிப்பின் ஆழ அகலங்களும், புலமையும், மக்களிடம் அவர் பெற்றிருக்கும் செல்வாக்கும் மதிப்பும் காலமெல்லாம் பேசப்படும்.

இவற்றுக்கெல்லாம் மேலாக திரு.கருணாநிதி என்ற மனிதர் அவருடைய மக்களுக்கு அவர் கலைஞர், அவர் மக்களின் தலைவர். ஏழை தொழிலாளர் வர்க்கத்தின் காவலர், ஆற்றொழுக்குப் பேச்சாளர், தேசிய விழுமியங்களை நிலைநிறுத்தப் பாடுபடுபவர். அரசியல் கொள்கை வேறுபாடுகளைக் கடந்து அனைவராலும் மதிக்கப்படுபவர்.

**ஒளிவீசும் உதாரணம்**

சட்டமன்ற உறுப்பினராக இருத்தலில் சலுகையும், கௌரவமும் ஒன்றிணைந்து உள்ளது. அஃது குறிப்பிட்ட உரிமைகள் மற்றும் பொறுப்புகளையும் கூட அதனிடத்தே ஒன்று சேர்த்துக் கொள்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் மக்களின் தலையாய உரிமைகள் ஆனவை நம் சட்டமன்ற அமைப்புகளில் வடிவு பெறுகிறது. மக்கள் நம் மீது வைத்துள்ள நல்லெண்ணம் மற்றும் நம்பிக்கை ஆகியவைக்காக அவர்களின் நல்வாழ்வுக்காக கண்ணியத்துடனும், அர்ப்பணிப்புடனும் நியாயம் நிலைபெறச் செய்தல் அவசியமாகும்.

மக்களின் பிரதிநிதிகளாக, ஜனநாயகத்தின் சுடர் பிரகாசமாக ஒளிர்ந்திடச் செய்ய வேண்டும் என்ற சவலான கடமையை நாம் பொறுப்பாக கொண்டுள்ளோம், அவ்வாறே திரு. கருணாநிதி அவர்களின் சட்டமன்றப் பணியானது மக்கள் மீது கொண்டுள்ள அர்ப்பணிப்புக்கு ஒரு ஒளிரும் உதாரணம் ஆகும். அதுவே எல்லா இடத்திலும் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழி காட்டும் ஒரு கலங்கரை விளக்காக அமைதல் வேண்டும்.

நம் மக்களின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சி ஆகியவற்றுக்கு மிகவும் ஏற்பு உடைய வழியாக நம் நாட்டில் பாராளுமன்ற முறையிலான ஆளுமையை நம் அரசியல் சாசனத்தின் அஸ்திவாரம் அமைத்த பெரியோர்கள் தீர்மானித்தார்கள். இந்த முறையின்படி, சட்டமன்ற அமைப்புகள்தான், மக்களின் மிக முக்கியத்துவமான நிலையங்கள் ஆகும். அவற்றை மக்கள் தேர்வு செய்து தங்கள் பிரதிநிதிகள் அவரவர் கடமைகளை அர்ப்பணிப்பு, கண்ணியம் மற்றும் அப்பழுக்கற்ற நாணயத்துடன் ஆற்றுவார்கள் என்று எதிர்பார்க்கிறார்கள். நம் நாட்டில் பல்வேறு சட்டமன்றங்கள் செயல்படும் விதம் கண்டு சமீப காலங்களில் மக்களிடையே நம்பிக்கைக் குலைவு அல்லது அவநம்பிக்கை ஏற்பட்டு விடும் போக்கு உள்ளது. இவை மிக முக்கியமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும். இவற்றால் நம் அரசியல் அமைப்பின் அடிப்படைகள் ஆட்டம் காண்கின்றன. ஏன் – நம் அரசியலின் முழுக் கட்டமைப்பே பாதிப்புக்கு உள்ளாகிறது. நம் நாட்டில் உள்ள சட்டமனற உறுப்பினர்களிடம், நான் முழுப் பணிவுடன் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் தங்கள் அரசியல் அமைப்பு வலிமை அடைந்திட சேவை ஆற்றுகிறார்களா? இல்லையா? என்பதை தாங்களே சுயமாக ஆராய்ந்திடல் வேண்டும். தங்களைத் தேர்வு செய்தவர்களே அசலான எஜமானர்கள் என்று அவர்களுக்கு கௌரவம் அளித்திருக்கிறார்களா? இல்லையா ? என்று எண்ணிப் பார்த்திடல் வேண்டும். சட்டமன்ற உறுப்பினரின் நடத்தை மற்றும் பழக்க வழக்கத்துக்கு டாக்டர் கருணாநிதி அவர்களின் வாழ்க்கையே ஒளி வீசும் உதாரணம். அதை முறையாகப் போற்றி பின்தொடர்தல் தகும்.

பல்வேறு செயல்திறன் மிக்க ஆற்றலாலும், அயராத பொதுத் தொண்டின் காரணமாகத்தான் தமிழக மக்களால் திரு.கருணாநிதி அவர்கள் பெரிதும் மதிக்கப்படுகிறார். அதுமட்டுமின்றி நாட்டு மக்களாலும் உயர்ந்தவராகக் கருதப்படுகிறார். நாட்டு மக்களுக்கு அவர் செய்து வரும் அளப்பரிய பணிகளே அவரது வாழ்நாளிலேயே அவரை உன்னத மனிதராக மாற்றியுள்ளது.

இவைகள் மட்டுமின்றி, உண்மையிலேயே அவர் ஒரு மக்களின் தலைவராகத் திகழ்கிறார். தான் சார்ந்த தொகுதி மக்களின் கவலைகளையும் விருப்பங்களையும் தேவைகளையும் அறிந்து அதற்கேற்ப செயல்பட இந்த சட்டமன்ற அவையை அவர் சிறப்பாக திறமையாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளார்.

இந்த நல்ல நேரத்தில் இந்த தலைசிறந்த மக்கள் தலைவராக விளங்குபவருக்கு நடத்தும் இந்த பாராட்டு விழாவில் நானும் பங்கேற்கிறேன். இந்த வார்த்தைகளுடன், திரு.கருணாநிதி அவர்கள் நல்ல உடல்நலத்துடன் மென்மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து நாட்டிற்கு சேவை செய்ய வேண்டும் என்று வாழ்த்துகிறேன். ★

# பெரியார் - அண்ணா வழியில் 50 ஆண்டுகாலம் சட்டமன்றப் பொது வாழ்க்கையை நடத்தியிருக்கிறேன்

*சட்டமன்றத்தில் 12.05.2007 அன்று நடைபெற்ற* **“சட்டப்பேரவையில் கலைஞர் பொன்விழா’’** *இரண்டாவது நாள் நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்* **கலைஞர் மு. கருணாநிதி** *அவர்கள் ஆற்றிய உரை.*

“சட்டப்பேரவையில் நான் ஆற்றிய பணிகளுக்கான பொன் விழா நிகழ்ச்சியிலே

ஆந்திர மாநிலச் சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, புதுவை மாநிலச் சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,



கலந்துகொள்ள வந்துள்ள நாடாளுமன்றத்தின் மதிப்புமிகு அவைத் தலைவர், அமைதியை உருவாக்கும் தலைவர், அமளிகளை அடக்கும் தலைவர் திரு. சோமநாத் சாட்டர்ஜி அவர்களே,

வரவேற்புரையாற்றிய மாண்புமிகு தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர் ஆவுடையப்பன் அவர்களே,

அவை முன்னவர் என் அன்புக்கினிய ஆருயிர் சகோதரர், பேராசிரியப் பெருந்தகை அன்பழகனார் அவர்களே,

வருகை தந்துள்ள மத்திய, மாநில அமைச்சர் பெருமக்களே, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, அனைத்துக் கட்சித் தலைவர்களே, உங்கள் அனைவருக்கும் என் வணக்கத்தையும், நன்றியையும் உங்களுடைய காலடிகளிலே குவிக்கின்றேன்.

இந்த இனிய விழாவை, மணமிக்க விழாவை, எழில் பொதிந்த விழாவை,கடந்த இரண்டு நாட்களாக நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து, நான் முதலிலே தடுத்தும்கூட, என்னை ஓரத் தள்ளிவிட்டு, ஒப்பற்ற முறையில் இந்தப் பொன்விழாவை நடத்தியே

தீருவோம் என்று என்னிடத்திலே சூளுரைத்து, நடத்திய பிறகு சொல்லுங்கள், எப்படி நடத்தினோம் என்று – என்னிடத்திலே அறைகூவல் விடுத்து – அந்த அறைகூவலிலே வெற்றி பெற்றிருக்கின்ற விழாக் குழுவினர்களான - விழாக் குழுவின் தலைவர் பேராசிரியர் அவர்களே, ஆற்காடு வீராசாமி அவர்களே, சுதர்சனம் அவர்களே, ஜி.கே. மணி அவர்களே, பீட்டர் அல்போன்ஸ் அவர்களே, கோ.சி. மணி அவர்களே, வீரபாண்டி ஆறுமுகம் அவர்களே, துரைமுருகன் அவர்களே, சி. கோவிந்தசாமி அவர்களே, சிவபுண்ணியம் அவர்களே, மலர்க் குழுவிற்குப் பொறுப்பேற்று, அதை மகத்தான முறையிலே வெளியிட்டு, வழங்கியுள்ள பொன்முடி அவர்களே, எ.வ. வேலு அவர்களே, செல்வப் பெருந்தகை அவர்களே, வெளிப்புறத்திலும், நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்கும் ஏற்பாடுகளைக் கவனித்து, பாழ்பட்டுக்கிடந்த அந்த நிலத்தை, பசுமை நிறைந்த ஓர் இடமாக மாற்றியமைத்துள்ள வடசென்னை பலராமன் அவர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியை, வணக்கத்தை மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம்முடைய நாடாளுமன்றத்தின் அவைத் தலைவர் சாட்டர்ஜி அவர்கள், நான் எந்த அளவிற்கு இந்த மாமன்றத்திலே பணியாற்றியிருக்கிறேன் - இந்த மாமன்றத்தை ஒரு பாசறையாகக்கொண்டு, எந்த அளவிற்குத் தமிழ் நிலத்திலே தொண்டு தொடர்ந்திருக்கிறேன், இந்த ஐம்பதாண்டு காலம் என்பதை அவருக்கே உரிய பாச உணர்வோடு, அவருக்கே உரிய கொள்கை உறுதியோடு இங்கே எடுத்துச்சொல்லி, என்னை வாழ்த்தியிருக்கிறார்கள்.

நேற்றைய தினம் இந்திய அரசின் காவலர்களாக உள்ள பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களும், அங்கே நடைபெறுகின்ற அரசுக்கு வழிகாட்டியாக அமைந்துள்ள திருமதி சோனியா காந்தி அம்மையார் அவர்களும் என்னைப் பொதுக் கூட்டத்திலே பல பட வாழ்த்திப் பாராட்டியிருக்கின்றார்கள். இன்றைக்கு இந்த மாமன்றத்தில் சட்டமன்றத்திலே ஆளுநர் ஒருநாள் அமர்ந்து, உங்களையெல்லாம் வாழ்த்திப் பாராட்டியது போதாது என்பதை எடுத்துக்காட்டுகின்ற வகையிலோ என்னவோ, இந்தியாவே, நாடாளுமன்றமே வாழ்த்துகிறது – சட்டமன்றம் இங்கிருந்து வாழ்த்தியது, நாடாளுமன்றம் வந்து வாழ்த்தியது என்ற முறையிலே நம்முடைய பெருந்தகை சாட்டர்ஜி அவர்கள் என்னை வாழ்த்தியிருக்கிறார்கள்.

**50 ஆண்டுகால சட்டமன்ற பொதுவாழ்க்கை**

நான் என்னால் இயன்ற அளவிற்கு, என்னுடைய அமைச்சரவை சகாக்களை துணைகொண்டு, இந்த மாமன்றத்திலே அமர்ந்திருந்த எல்லாக் கட்சிகளைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களின் துணைகொண்டு ஆற்றிய காரியங்களை, நான் ஆற்றியதாகவே இங்கு என்னைச் சிறப்பிப்பதற்காக, இந்த ஐம்பதாண்டு காலத்திலே ஆற்றினேன் என்று எடுத்துச் சொல்லப்பட்டாலும்கூட, பொன்விழா நடைபெறுகிறது, இவைகளையாவது சொல்லித்தானே ஆகவேண்டும் என்ற முறையிலே சொல்கிறான் என்ற அளவிலே நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமேயல்லாமல், ஆமாம், நான்தான் இந்தக் காரியங்களை ஆற்றினேன், வேறு யாரால் இதை ஆற்ற முடியும் என்று சொல்லுகின்ற வீம்பு, வீறாப்பு, ஆணவம், அகம்பாவம் எனக்கு ஏற்பட்டதும் இல்லை, ஏற்படப் போவதும் இல்லை. அதற்குக் காரணம், என்னை ஆளாக்கிய தந்தை பெரியாரும், வழி நடத்திய பேரறிஞர் அண்ணாவும் அந்தப் பாடத்தை எனக்குக் கற்றுத் தரவில்லை. எனவே, அவர்களுடைய வழியில் ஐம்பதாண்டு காலம், சட்டமன்றப் பொது வாழ்க்கையை நான் நடத்தியிருக்கிறேன்.

இந்தச் சட்டமன்றத்திலேதான், சுயமரியாதை திருமணச் சட்டம் உருவாயிற்று. சுயமரியாதை திருமணங்கள் பல ஆண்டு காலம் சட்டரீதியாக நடைபெறாவிட்டாலும், தந்தை பெரியாருடைய கொள்கையை, அவருடைய ஆணைக்கிணங்க சுயமரியாதைக்காரர்கள் தங்களுடைய வீடுகளிலே திருமணங்களை சுயமரியாதை முறையிலே நடத்திக்கொண்டார்கள் என்றாலுங்கூட, அதற்கு நான் சட்ட சம்மதம் பெற்றுத் தருகிறேன் என்று சபதம் செய்து ஆட்சியைக் கைப்பற்றி இந்த ஆட்சிப் பொறுப்பிலே வந்து அமர்ந்த அண்ணா அவர்கள், சுயமரியாதை திருமணத்திற்கு சட்ட வடிவம் தந்ததும் இந்த அவையிலேதான் என்பதை நான் சாட்டர்ஜி அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

**சுயமரியாதை திருமணம்**

நான் ஏன் இதை ஞாபகப்படுத்துகிறேன் என்றால் – தம்பி டி.ஆர்.பாலு அவர்கள் வீட்டுத் திருமணத்திற்கு சாட்டர்ஜி அவர்கள் ஒருமுறை வந்தபோது இது பற்றிக் கூறியிருக்கிறேன். இப்படி

இந்தத் திருமணம் மாத்திரம் சுயமரியாதை திருமணம் அல்ல, இதுபோல இந்தியா முழுவதும் நடைபெற வேண்டும், சுயமரியாதைக் கொள்கையின்படி நடைபெறுகின்ற இந்தச் சீர்திருத்தத் திருமணங்கள் அகில இந்திய அளவிலே நடைபெறுவதற்கு தாங்கள் வழிசெய்ய வேண்டும் என்று நான் நம்முடைய சாட்டர்ஜி அவர்களிடம் கேட்டுக்கொண்டிருக்கிறேன். மறந்திருக்கமாட்டார்கள் என்றும் நான் நம்புகிறேன். எனவேதான், ஒருவேளை மறந்திருந்தால் அதை நடத்துவதற்கு அவர்கள் தூண்டுகோலாக அமைவார்கள் என்று இங்கே நான் இந்த அவையிலே, இந்தப் பாராட்டு விழாவிலே நான் அவரைக் கேட்டுக்கொள்கின்றேன்.

இங்கேதான், தமிழ்நாடு என்ற பெயர் சூட்டப்பட்டது. ஏற்கெனவே தமிழ்நாடு காங்கிரஸ் என்று இருந்தாலுங்கூட, அச்சடிக்கப்பட்ட புத்தகங்களிலே, தமிழ்நாடு அரசு என்று இருந்தாலுங்கூட, நாட்டிற்கு, இந்த மண்ணுக்கு தமிழ்நாடு என்று பெயரிடப்படவில்லை. இதற்கு தமிழ்நாடு என்று பெயரிட வேண்டுமென்ற கோரிக்கையை, பேரறிஞர் அண்ணா அவர்கள், இந்த அவையிலே நிறைவேற்றி – நிறைவேற்றியது மாத்திரமல்ல, அவரே ஒரு தொண்டரைப் போல நின்றுகொண்டு – முதலமைச்சராக அல்ல – நான் தமிழ்நாடு என்பேன், எல்லோரும் வாழ்க என்று கூறவேண்டுமென்று எல்லோரையும் கேட்டுக்கொண்டு – அவர் தமிழ்நாடு என்று கூற எல்லோரும் வாழ்க, வாழ்க என்று ஒலித்த மாமன்றமும் இந்த மாமன்றம்தான்.

அதைப்போலவே, இரு மொழித் திட்டம் – இனி ஆதிக்க மொழிகளுக்கு இடமில்லை, ஆங்கிலம், தமிழ் என்ற இரண்டு மொழிகளுக்குத்தான் இடம், ஆதிக்க மொழிகள், கட்டாய மொழிகள் நம்மீது எதுவும் திணிக்கப்பட மாட்டாது என்பதற்கு அறிகுறியாக இரு மொழித் திட்டத்தை நிறைவேற்றியதும் இந்த மாமன்றத்திலேதான்.

**பேருந்துகள் நாட்டுடைமை**

நான் நேற்றைக்கு கவர்னர் அவர்களுடைய தலைமையிலே, இந்த விழாவிலே பேசும்போது சொன்னேன். இந்த அவையில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகள், உருக்கமான நிகழ்ச்சிகள், வேடிக்கையான நிகழ்ச்சிகள், தமாஷான நிகழ்ச்சிகள், நகைச்சுவை நிகழ்ச்சிகள் என்று இவைகளைப் பற்றியெல்லாம் நேற்று நான் விவரித்தேன். இன்றைக்கு இங்கே நிறைவேற்றப்பட்ட சட்டங்களைச் சொன்னால், இந்த மாமன்றத்தினுடைய மகிமை, பெருமை தெரியும், தெரிய வேண்டுமென்பதற்காக அவைகளையெல்லாம் எல்லாம் சொல்கிறேன்.

பேருந்துகளை நாட்டுடைமையாக்க, முதல் தடவையாக இந்தியாவிலே இந்த மாமன்றத்திலேதான் – தமிழ்நாட்டிலே தான் சட்டம் நிறைவேற்றப்பட்டது. மின்சார விளக்கு இல்லாத கிராமங்களே இருக்கக் கூடாது என்று சூளுரைத்து, அனைத்துக் கிராமங்களுக்கும் மின் இணைப்பு தருவதற்கான திட்டம் இங்கேதான் வகுக்கப்பட்டது. இரண்டு அல்லது மூன்று இலட்சம் மக்களுக்கு குடியிருப்பு மனை – அவர்கள் இருக்கின்ற குடியிருப்புக்கான மனை எந்த நேரத்திலும் முதலாளி பார்த்து, மிராசுதாரர் பார்த்து, பிரித்துக் கொண்டு போ என்று சொன்னால், பிரித்துக்கொண்டு போக வேண்டிய தற்காலிக நிலையில் இல்லாமல், யார் சொன்னாலும் அது அவர்களுக்கான சொந்த மனைதான் என்று குடியிருப்பு மனை, குடியிருப்போருக்கே சொந்தம் என்று விவசாயத் தொழிலாளர்களுக்காக ஆக்கியதும் இந்தச் சட்டமன்றத்திலே தான்.

அதைப்போல, தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல – கை ரிக்‌ஷாக்களை ஒழித்து, அதற்குப் பதிலாக இலவச சைக்கிள் ரிக்‌ஷா வழங்கியதும், அதற்கான திட்டம் தீட்டப்பட்டதும் இந்த மாமன்றத்திலேதான்.

நில உச்சவரம்புச் சட்டம் – பெருந்தலைவர் காமராஜர் காலத்திலே கொண்டு வந்த சட்டம் – 30 ஸ்டாண்டர்டு ஏக்கரா சட்டம் – அதை 15 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்று ஆக்கி அந்தச் சட்டத்தை நிறைவேற்றிய இடமும் இந்த இடம்தான்.

பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே இஸ்லாமிய மக்களையும் இணைக்க வேண்டும் என்று குரல் எழுந்ததும், இங்கே தான். அப்படிக் குரல் எழுந்தபோது, அதற்கு சட்டத்திலே இடமில்லை என்று ஒரு அமைச்சர், என் தலைமையிலே இருந்த ஒரு அமைச்சர், உண்மை நிலையை எடுத்துச் சொன்ன போது, இஸ்லாமிய நண்பர்கள், உறுப்பினர்கள் சோர்ந்து உட்கார்ந்த போது, சட்டத்திலே இடம் இல்லாவிட்டாலும், என் இதயத்திலே இடம் இருக்கிறது என்று சொல்லி அவர்களையெல்லாம் பிற்படுத்தப்பட்ட பிரிவிலே சேர்த்ததும் இந்த மாமன்றத்திலேதான்.

உள்ளாட்சி அமைப்புகளிலே பெண்களுக்கு 33 சதவிகிதம் ஒதுக்கீடு செய்ததும் இந்த மாமன்றத்திலேதான்.

பெரியாரின் கொள்கையாக சமத்துவக் கொள்கையை நிறைவேற்ற பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம் நிறைவேற்றுவதற்கு வழிவகுத்ததும் இந்த மாமன்றத்திலேதான்.

உருது அகாடமி உருவாகியதும் இந்த மாமன்றத்திலேதான்.

உழவர் சந்தை திட்டம் உருவானதும் இந்த மாமன்றத்திலேதான்.

இதுமாத்திரமல்ல. புறம்போக்கு நிலங்களிலே குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா கிடைக்கும் என்று சட்டம் செய்ததும் இந்த மாமன்றத்திலேதான்.

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்று ஆணை பிறப்பித்து தந்தை பெரியாருடைய நெஞ்சிலே இருந்த முள்ளை அகற்றுவதற்கு செய்த ஏற்பாடும் இந்த மாமன்றத்திலேதான்.

மத மாற்றத் தடைச் சட்டத்தை இரத்து செய்து சட்டம் கொண்டுவந்ததும் இந்த மாமன்றத்தில்தான்.

**ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு உதவி**

விவசாயத் தொழிலாளர்களுக்கு – விவசாயத் தொழில் புரிகின்ற இல்லங்களிலே வாடிக்கொண்டிருக்கின்ற ஏழைப் பெண்களுக்கு – தாய்மார்களுக்கு இந்த அரசு என்றும் பாதுகாப்பாக இருக்கும் என்பதற்கு அடையாளமாக, அவர்கள் கருவுற்றால், அவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வீதம், குழந்தை பிறப்பதற்கு முன்பு மூன்று மாதங்களுக்கும், குழந்தை பிறந்த பிறகு மூன்று மாதங்களுக்கும் மொத்தம் ஆறாயிரம் ரூபாய் அவர்களுக்கு வழங்கப்படும் என்று அறிவித்ததும் இந்த மாமன்றத்திலே தான்.

இந்த மாமன்றத்திலே நான் நுழைந்தபோது, என்னைப் பார்த்து சிரித்து வரவேற்ற, முதலமைச்சராக இங்கே உட்கார்ந்த பெருந்தலைவர் காமராஜர் – அந்தப் பெருந்தலைவர் காமராஜரிடத்திலே எனக்கு சில நேரங்களிலே, பல நேரங்களிலே கொள்கைரீதியாக, அரசியல் நடப்புரீதியாக பல வேறுபாடுகள் ஏற்பட்டாலும்கூட, வணக்கத்திற்குரியவர், போற்றுதலுக்குரியவர், பின்பற்றுவதற்கு உரியவர் என்ற நிலையிலே அவருடைய புகழ் மேலும் மேலும் பரவிட வேண்டும் என்பதற்காக, காமராஜர் பிறந்த நாள் ஜூலை 15 ஆம் தேதியை, அவருடைய பிறந்த நாளை சட்டப்பூர்வமாக எல்லாப் பள்ளிகளிலும் கொண்டாட வேண்டும், கல்விக் கண் திறந்த காமராஜருடைய பிறந்த நாளைக் கொண்டாட வேண்டும், என்று அறிவித்து, அறிவித்த பிறகு இடைக்காலத்திலே அது கிடப்பிலே போடப்பட்டு – இது சாதாரண அறிவிப்பாக இருப்பதால்தானே இடையிலே வருபவர்கள் கைவிட்டு விடுகிறார்கள் என்று இதனைச் சட்டமாகவே ஆக்குகிறேன் என்று இனி ஜூலை 15, காமராஜர் பிறந்த நாள், சட்டப்படி கல்விக் கண் திறந்த நாள் என்று சட்டம் நிறைவேற்றப்பட்ட இடமும் இந்த மாமன்றம்தான்.

**புரட்சிகரமான அத்தியாயங்கள்**

எனவே, இந்த மாமன்றத்தின் வரலாற்றிலே இப்படிப்பட்ட பல அத்தியாயங்கள் – சீர்திருத்த அத்தியாயங்கள் – புரட்சிகரமான அத்தியாயங்கள் – நாட்டை முன்னேற்ற வேண்டிய அத்தியாயங்கள் – பலப்படுத்தக்கூடிய அத்தியாயங்கள். அனைத்தும் நிறைவேறியிருக்கின்றன. அதற்கெல்லாம் ஒரு பெருமையாக இன்றைக்கு நம்முடைய பார் புகழும், பாராளுமன்றத்தில் வீற்று, இவருக்கு நிகராக இன்னொருவர் இருக்கிறாரா கொள்கை உறுதியில் என்ற கேள்விக்கே இடம் இல்லாத அளவிற்கு வாழ்ந்துகொண்டிருக்கின்ற நம்முடைய சாட்டர்ஜி அவர்கள், இந்த விழாவிலே கலந்துகொண்டு என்னை வாழ்த்துவதும் ஒரு வரலாறுதான்.

அழைப்பிற்கு இணங்கி அமைச்சர் பெருமக்கள், மத்தியிலே உள்ள அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் எல்லாம் வந்து குழுமியிருக்கிறீர்கள். நீங்கள் அமர்ந்திருக்கின்ற இடங்களைப் பார்க்கின்றேன். உங்களுக்கு இடம் போதுமானதாக இல்லை என்பது புரிகிறது. என்ன இன்னமும் இவ்வளவு சிறிய இடம்தானே இருக்கிறது, பொன் விழா கொண்டாடிய பிறகுகூட பெரிய இடம் வேண்டாமா என்று உங்களில் பலர் எண்ணுவது எனக்குப் புரிகிறது. ஆகவே சட்டமன்றத்திலே நம்முடைய உறுப்பினர்கள் எல்லாம் விடுத்த வேண்டுகோளை இன்றைக்குத் தொகுத்து, பொன் விழா நாள் அறிவிப்பாக, ஒரு புதிய சட்டமன்றக் கட்டிடம் விரைவில் பழமையைப் பாதுகாப்போம், புதுமையை நாடுவோம் என்ற அந்த மொழிக்கேற்ப வெகு விரைவிலே அதற்கான அடிக்கல் நாட்டப்படும் என்பதையும் அது எந்தக் கல்விக் கூடங்களையும் இடித்தோ எந்தப் பல்கலைக் கழகங்களையும் பாழ்படுத்தியோ இல்லாமல் தனியாக ஒரு இடத்தில், பரவாயில்லை, நல்ல இடத்தைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்று எல்லோரும் சொல்லத்தக்க அளவிற்கு அந்த இடம் விரைவில் அமையும், அதனுடைய திறப்பு விழாவும் நடைபெற்று, நாமெல்லாம் அங்கே அமர்ந்து இன்னொரு விழா நடத்த இந்த ஆட்சி நடைபெறும்போதே அந்த இனிய வாய்ப்பு உங்களுக்கும் எனக்கும் எல்லோருக்கும் கிடைக்கும் என்று கூறி, என்னை நம்முடைய பெரியவர் சோம்நாத் சாட்டர்ஜி அவர்கள் வாழ்த்தியதன் மூலம் எனக்கு அளித்துள்ள ஊக்கத்திற்கு, உற்சாகத்திற்கு என்னுடைய இதயமார்ந்த நன்றியை அவருக்கு காணிக்கையாக்கி இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். ★



# தமிழகத்திற்கு மட்டுமல்ல இந்தியாவிற்கும் கலைஞர் அவர்கள் ஆற்றியுள்ள பணி சிறப்பானது

நான் இன்று மாலை சென்னையில் இருப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியாகும். கலைஞர் அவர்களின் சட்டமன்றப் பொன்விழாவை இன்றைக்கு நாம் சிறப்பாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். தமிழ்நாட்டிற்கும், தமிழ் மக்களுக்கும் ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் கலைஞர் அவர்கள் ஆற்றியிருக்கும் பணி சிறப்பானது மட்டுமல்ல; வேறு யாராலும் ஈடுசெய்ய முடியாத ஒன்றாகும்.

கலைஞர் அவர்கள் நமது நாட்டு அரசியல் நிருவாகத் தூண்களில் ஒருவர் என்பதோடு மிகச் சிறந்த நாட்டுப்பற்றாளரும், நாட்டின் கட்டமைப்பாளரும் ஆவார். அவர் நீண்ட நாள் உடல் ஆரோக்கியத்துடன் வெற்றிகரமான வாழ்க்கையை பன்னெடுங்காலம் வாழ வேண்டும் என்று வாழ்த்துவதற்காக இங்கே நான் வந்திருக்கிறேன்.

**இந்தியாவின் சிறந்த மனிதர்**

தமிழ்நாட்டின் சிறந்த குடிமகனாகவும், இந்தியாவின் சிறந்த மனிதராகவும், வாழ்ந்து வரும் கலைஞர் அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்வதற்காக இங்கு நான் வந்திருக்கிறேன். உண்மையில் நாம் இங்கு இருவேறு ஆண்டு விழாக்களைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். கலைஞர் அவர்கள் தமிழக சட்டப்பேரவை உறுப்பினராகப் பொறுப்பேற்று ஐம்பது ஆண்டுகள் ஆகிவிட்டன. அதே நேரத்தில் அவர் பொது வாழ்வில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு எழுபது ஆண்டுகள் நிறைந்துவிட்டன.

தனது 14ஆவது வயதில் தன்னையொத்த சிறுவர்கள் மகிழ்ச்சியுடன் விளையாட்டுக்களில் ஈடுபட்டிருக்கும் காலகட்டத்தில் கலைஞர் அரசியலில் புகுந்து தமிழ் மாணவர் மன்றத்தைத் தொடங்கினார். 1946ஆம் ஆண்டில் தந்தை பெரியாருடன் இணைந்து திராவிடர் கழகக் கொடியை வடிவமைத்த காலம் முதல் இன்று வரை ஒரு கர்வமிக்க இந்தியனாக தமிழ்நாட்டின் கொடி தாழாமல் உயர்த்திப் பிடித்துக் கொண்டிருக்கிறார்.

இந்திய நாட்டின் வரலாற்றிலும் தமிழ்நாட்டின் வரலாற்றிலும் கலைஞர் அவர்களின் பெயர் பொன்னெழுத்துக்களால் நிரந்தரமாகப் பொறிக்கப்பட்டிருக்கும்.

நாம் நமது நாட்டின் அறுபது ஆண்டுகால வளர்ச்சியை உற்று நோக்கினால், தமிழ்நாடு மிக வளர்ந்த மாநிலங்களில் ஒன்றாக, முற்போக்கான மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்வது தெரியும். தமிழ்நாட்டின் இத்தகைய வளர்ச்சிக்கு மூதறிஞர் ராஜாஜி, பெருந்தலைவர் காமராசர், அறிஞர் அண்ணா, கலைஞர் போன்ற சிறந்த தலைவர்கள்

**சென்னை, தீவுத்திடலில்**
**11.05.2007 அன்று நடைபெற்ற**
**"சட்டப்பேரவையில் கலைஞர் பொன்விழா" நிகழ்ச்சியில்**
**மாண்புமிகு இந்தியப் பிரதமர்**
**டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள்**
**ஆற்றிய உரை**

அடித்தளம் அமைத்திருக்கின்றனர். சிறப்புமிக்க அரசியல் மேதைகள் உலாவரும் பால்வீதியில் கலைஞர் அவர்கள் ஒளிமிக்க நட்சத்திரமாக விளங்குவதை வரலாறு நிச்சயம் பதிவு செய்யும்.

**இந்தியாவின் "டெட்ராய்ட்"**

தமிழக முதலமைச்சராக கலைஞர் அவர்கள் 15 ஆண்டு காலம் பணியாற்றியுள்ள இக்காலகட்டத்தில் தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு ஏற்றத் தலைமையை வழங்கியுள்ளார். இன்று தமிழகம் இந்தியாவின் 'Detroit' என்று அழைக்கப்படுகிறது. உங்களிடம் வளர்ந்துவரும் மோட்டார் வாகனத் தொழில் உள்ளது. உங்களிடம் வளர்ந்து வரும் ஆடை மற்றும் தோல் தொழில் உள்ளது. உங்களிடம் வளர்ச்சிபெற்று வரும் தகவல் தொழில்நுட்பத் தொழில் உள்ளது. தமிழ்நாடு அறிவுசார் பொருளாதாரத் துறையில் முன்னணி இடம் பெற்றுள்ளது.

இந்த மாநிலத்தின் தொழில்துறை முன்னேற்றத்தில் அவருடைய பங்களிப்பிற்காக மட்டும் நான் கலைஞர் அவர்களைப் பாராட்டவில்லை. அறிஞர் அண்ணா அவர்களுடனும் பெருந்தலைவர் காமராசர் அவர்களுடனும் இணைந்து தமிழக மக்களின் கல்வி மற்றும் சமூக வளர்ச்சியில் அவர் மிக முக்கியப் பங்கு வகித்திருப்பதோடு வளர்ச்சித் திட்டங்களின் முன்னோடியாகவும் திகழ்கிறார். மேலும், மகளிருக்கு அதிகாரம் வழங்குவதிலும் விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயர்வதிலும் அவருடைய பங்களிப்பு சிறப்பானதாகும்.

**கலைஞரின் பன்முகப் பரிமாணம்**

கலைஞர் அவர்கள், கலை, இலக்கியம், அரசியல் ஆகிய மூன்று துறைகளிலும் ஒரே நேரத்தில் ஈடுபட்டு வெற்றி பெற்றிருக்கிறார். அவர் மிகச் சிறந்த கவிஞர், மிகச் சிறந்த எழுத்தாளர். 'முரசொலி' ஏட்டின் நிறுவனராகவும், ஆசிரியராகவும் அவர் வாசகர்களைக் கவர்ந்திருக்கிறார். சங்க இலக்கியங்களுக்கு அவர் வழங்கியுள்ள நவீன உரைகள் மூலம் இவ்விலக்கியங்கள் ஒவ்வொரு தமிழனின் வீட்டிலும் இடம் பெற்றுள்ளன. அவர் மிகச்சிறந்த பத்திரிகையாளர், கருத்தப்பட ஓவியர் மற்றும் சிறந்த கதை வசன ஆசிரியர். அவருடைய ஆளுமையில் உள்ள இந்த பன்முகப் பரிமாணமே அவரை மிகச் சிறந்த தலைவராக உயர்த்தியிருக்கிறது.

கலைஞர் அவர்களே! நான் உங்களை வாழ்த்துகிறேன். உங்களது நாட்டுப் பற்றுக்காக உங்களை வாழ்த்துகிறேன். ஏழை மக்களின் நலனில் நீங்கள் காட்டும் ஈடுபாட்டுக்காக உங்களை வாழ்த்துகிறேன். பெண்களின் முன்னேற்றத்தில் நீங்கள் காட்டும் ஈடுபாட்டுக்காக நான் உங்களை வாழ்த்துகிறேன். உயர் தனிச் செம்மொழியாம் தமிழ்மொழியை மீட்கவும் வளர்ச்சியடையச் செய்யவும் நீங்கள் கொண்டுள்ள அக்கறைக்காக நான் உங்களை வாழ்த்துகிறேன்.

தமிழ்நாட்டின் வளர்ச்சியில் நீங்கள் கொண்டுள்ள அக்கறைக்காக உங்களை வாழ்த்துகிறேன். உங்களுடைய மனிதாபிமானத்துக்காக நான் உங்களை வாழ்த்துகிறேன். இந்திய நாட்டின் ஒற்றுமையிலும் ஒருமைப்பாட்டிலும் வளர்ச்சியிலும் நீங்கள் கொண்டிருக்கும் அளவற்ற அக்கறைக்காக நான் உங்களை வாழ்த்துகிறேன். கலைஞர் அவர்களின் தலைமையில் தமிழ்நாடு மேலும் மேலும் வலிவுபெறும் என்று நான் உறுதியாக எண்ணுகிறேன். வெற்றியிலும், நல வாழ்விலும் தமிழக மக்கள் புதிய உயரங்களை அடைவதை நான் காண விழைகிறேன்.

**சிறந்த அறிஞர்களின் தாய்வீடு**

இந்தியாவின் கலாச்சாரம், சமுதாயம், அறிவாற்றல், அரசியல் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்காக தமிழ் மக்கள் மிகப் பெரிய அளவில் பங்களிப்பு நல்கியிருக்கிறார்கள். பல துறைகளில் அவர்கள் சிறந்து விளங்குகிறார்கள். நம் நாட்டின் அறிவியல் அறிஞர்கள், கணித மேதைகள், சமுதாய விஞ்ஞானிகள், மருத்துவர்கள், பொறியியல் வல்லுனர்கள், வங்கியாளர்கள், தொழில்துறைத் தலைவர்கள் ஆகியோரில் பலர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாவர். நமது நாட்டைச் சிறந்த நாடாக உயர்த்துவதில் தமது பங்களிப்பை நல்கியிருக்கும் சிறந்த அறிஞர்கள் பலருக்கு தமிழ்நாடு தாய்வீடாகும். தமிழ்நாட்டு மக்களின் வெற்றிகளை எண்ணும்போது நாம் பெருமிதம் கொள்கிறோம்.

எனவே, நான் இன்றைக்கு இம்மாபெரும் நகரில் இருப்பதை எண்ணிப் பெருமகிழ்ச்சி அடைகிறேன். நான் ஏற்கெனவே குறிப்பிட்டது போல, இம்மாநிலத்தின் மிகச் சிறந்த குடிமகனாக கலைஞர் அவர்களைப் பாராட்டுவதற்காக வந்திருக்கிறேன் என்று எண்ணும்போது எனக்குப் பெருமகிழ்ச்சி ஏற்படுகிறது.

இன்றைய தினம் இங்கே நீங்கள் பேசும்போது, இன்னமும் நிறைவேறாமல் இருக்கிற பல்வேறு பிரச்சினைகள் குறித்து குறிப்பிட்டீர்கள்.

சமமாக நதிநீர்ப் பங்கீடு குறித்த பிரச்சினை சட்டமன்ற, நாடாளுமன்றங்களில் மகளிர் இடஒதுக்கீட்டுப் பிரச்சினை; கல்வி நிலையங்களில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இடஒதுக்கீடு பிரச்சினை ஆகியவைகள் குறித்து நீங்கள் பேசும்போது குறிப்பிட்டீர்கள்.

எனக்கு நம்பிக்கை இருக்கிறது. ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் அனைத்து உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் அந்தப் பிரச்சினைகளுக்கு செயல்படுத்தக்கூடிய சாத்தியமான தீர்வு கண்டறியலாம்.

நான் மீண்டும் உங்களை வெற்றிகரமான வாழ்க்கை வாழ வாழ்த்துகிறேன். கலைஞர் அவர்களே! தமிழ்நாட்டுக்கு நீங்கள் தேவைப்படுகிறீர்கள். இந்தியாவுக்கு நீங்கள் தேவைப்படுகிறீர்கள். நாங்கள் முன்னேற்றப் பாதையில் செல்லும்போது வழிநடத்த நீங்கள் எங்களுக்கு தேவைப்படுகிறீர்கள்.

கலைஞர் அவர்கள் பல்லாண்டு வாழ்க!

வணக்கம். ✶

# கலைஞருடைய தாக்கம் மூன்று தலைமுறையாக தமிழகத்திலே இருக்கின்றது



சென்னை, தீவுத்திடலில் 11.5.2007 அன்று நடைபெற்ற "சட்டப்பேரவையில் கலைஞர் பொன்விழா" நிகழ்ச்சியில் திருமதி. **சோனியாகாந்தி** அவர்கள் ஆற்றிய உரை :

பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களே, மரியாதைக்குரிய டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களே, அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களே, மேடையிலே அமர்ந்திருக்கின்ற பெரியோர்களே, தாய்மார்களே, நண்பர்களே,

டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் சட்டமன்றத்தில் நுழைந்து 50 ஆண்டுகள் நிறைவு செய்திருக்கின்ற அற்புதமான நிகழ்வை கொண்டாடுவதற்காக நாம் எல்லோரும் இங்கே குழுமியிருக்கின்றோம்.

பல வகையில் இது ஒரு வரலாற்றுப் புகழ்மிக்க நிகழ்வு. இந்திய வரலாற்றில் 50 ஆண்டுகள் சட்டமன்றத்தில் ஒருவர் பணிசெய்த முன்னுதாரணங்கள் கிடைப்பது மிக அரிது. இது எல்லாவற்றிற்கும் மேலாக 1957–இல் இருந்து தான் போட்டியிட்ட அத்தனை தேர்தலிலும் வெற்றி பெற்று சாதனை படைத்த ஒரு மிகப்பெரிய சரித்திர நாயகராக டாக்டர் கலைஞர் அவர்கள் திகழ்கிறார்.

இன்னும் அதிகமாகச் சொல்லப்போனால் இத்தகைய வெற்றிகள் தமிழகம் மிகப் பெரிய போராட்டக்காலங்களில் இருந்த போது பல்வேறு அரசியல் கட்சிகள் உருவாகவும், பல்வேறு தலைமைகள் உருவாகி வாழ்ந்து வீழ்ந்த காலத்திலே டாக்டர் கலைஞர் அவர்கள் மட்டும் ஐம்பது ஆண்டுகள் சரியாத மனிதராக அனைத்துத் தேர்தலிலும் நின்று வெற்றிப் பெற்றிருக்கிறார் என்று சொன்னால் அதை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பகுத்தறிவு இயக்கத்தினுடைய கொள்கைக் குன்றாக இருப்பவர் கலைஞர் அவர்கள். ஆதிக்க

சக்திகளின் அடித்தளத்தை அசைத்துப் பார்ப்பதிலே தன்னுடைய இளமையை செலவழித்துக் கொண்டவர். அற்புதமான எழுத்தாளர். அருமையான பேச்சாளர். சட்டமன்றத்திலே உள்ளே நுழைந்தபொழுது இந்தப் பேச்சுத்திறமையும், எழுத்துத் திறமையும் சில பேருக்கு நீர்த்துப்போகும். ஆனால் கலைஞர் அவர்கள் சட்டமன்றப் பணி, அவருடைய பேச்சுத் திறமையையும், எழுத்துத் திறமையையும் அதிகமாக வளர்த்து அவருடைய அற்புதமான விவாதங்களும், வினாக்களும் அன்றைக்கு இருந்த ஆளுகின்ற கட்சிகளை எழுந்து உட்கார வைத்து மக்கள் பணியாற்ற வைத்தது என்பதிலே மாற்றுக் கருத்து இல்லை.

பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய காலத்தை தமிழகத்தினுடைய பொற்காலம் என்று சொன்னால் அப்படிப்பட்ட ஒரு பொற்கால ஆட்சி அமைவதற்கு விழிப்புணர்வு உள்ள எதிர்க் கட்சியாக அன்றைய தினம் கலைஞர் அவர்களும் தி.மு.கழகமும் செயல்பட்டது. மற்றொரு நல்ல உதாரணம் என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

தி.மு.கழகத்தின் தலைமையை ஏற்றபிறகு அறிஞர் அண்ணா அவர்களின் மாணாக்கராக அவர்களுடைய கட்சிக்கும், ஆட்சிக்கும் தலைமை ஏற்று நடத்திய அந்த நாட்கள் மிகப்பெரிய வரலாற்றுப் புகழ்மிக்க நாட்கள். 2004ஆம் ஆண்டு நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலை இந்த நிகழ்வோடு நினைத்துப் பார்க்க வேண்டும். தமிழகத்திலே ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக்கு தலைமையேற்று ஒரு வரலாற்றுப் புகழ்மிக்க வெற்றியை 39 இடங்களில் போட்டியிட்டு 39 இடங்களையும் அருகிலே இருக்கின்ற புதுச்சேரியில் ஒரு இடத்திலும் போட்டியிட்டு 40–க்கும் 40 என்ற வெற்றியைத் தந்த அவர்களுடைய சலியாத உழைப்பு, தேர்தல் பிரச்சாரம், அவருடைய கூர்ந்த எழுத்து இவற்றையெல்லாம் நான் நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக்கு அடித்தளமாக இங்கு இருக்கின்ற அடிப்படையான கொள்கைகள், மதச்சார்பற்ற அரசியல், எல்லோரும் ஓரினம், எல்லோருக்கும் சம வாய்ப்பு, பண்பு நிறை கலாச்சாரம், ஒரு நல்ல நோக்கம் உள்ள வெளிப்பாடு, விஞ்ஞான கண்ணோட்டம் இவைகள் தி.மு.கழகத்தையும், காங்கிரஸ் பேரியக்கத்தையும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் இருக்கின்ற மற்றக் கட்சிகளையும் இணைக்கின்ற கொள்கைப் பாலமாக இருந்து வருகிறது.

கலைஞர் அவர்களுடைய தலைமையிலே தி.மு.கழகம் பல்வேறு வரலாற்றுப் புகழ்மிக்க சரித்திர நிகழ்வுகளைச் சாதித்திருக்கிறது. அவருடைய எதார்த்தமான நடைமுறை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையால் அந்த இயக்கம் பெற்ற வெற்றிகள் அநேகம். இதற்கான ஏராளமான முன்னுதாரணங்களை நான் சொல்ல முடியும்.

இன்று தமிழகம் அதனால் எல்லா நிலையிலும் அது வாகன உற்பத்தியாக இருந்தாலும் சரி, கணினி மென்பொருளாக இருந்தாலும் சரி, கணினி வன்பொருளாக இருந்தாலும் சரி, தொழிற்பொருளாக இருந்தாலும் சரி, ஜவுளித் தொழிலாக இருந்தாலும் சரி, விவசாயமாக இருந்தாலும் சரி, அத்தனைத் தொழில்களிலும் தமிழகம் முதன்மையாக நிற்கிறது என்று சொன்னால் அதற்குப் பின்னால் கலைஞர் அவர்களுடைய உழைப்பும், தியாகமும் நிறைந்து நிற்கின்றது என்பதை இந்த நல்ல நேரத்தில் நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

கலைஞர் அவர்களுடைய தீர்க்கமான பார்வை, அவருடைய தொலைநோக்குச் சிந்தனை, அவர்கள் இந்திய தேசத்திற்குத் தந்த மகத்தான வளமை இதற்காக நான் அவரை மனப்பூர்வமாக பாராட்டுகிறேன். ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு சில அடிப்படையான கொள்கைகளுக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்திருக்கிறது. இந்த தேசத்தில் இருக்கின்ற விவசாயிகள், தொழிலாளிகள், தொழில்முனைவோர், தொழில் வல்லுனர்கள், விஞ்ஞானிகள் எல்லோருக்கும் இந்த தேசத்தின் முன்னேற்றத்திற்கு பாடுபட வேண்டும் என்ற உணர்வோடு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி செயல்படுகிறது.




இந்த வாய்ப்புகளை நாம் விரிவாக்கிக் கொள்ளும்போது அதிகமான மக்கள் இந்த நாட்டின் வளர்ச்சிக்கும், பொருளாதாரத்திற்கும் தங்கள் பங்களிப்பை அளிக்கிறார்கள். டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆத்மார்த்தமான ஈடுபாடும், அவர்கள் தொழில் துறைக்கு தந்திருக்கின்ற மகத்தான ஆதரவும், எல்லோருடைய வளர்ச்சிக்கும் அவர் தந்திருக்கின்ற பங்களிப்பும் மகத்தானவை. நான் அவருக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். இதை தன்னுடைய மாநிலத்திற்கு மட்டுமல்ல, இந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணியினுடைய அரசின் மகத்தான தூணாக விளங்கக்கூடிய கலைஞர் அவர்களை நான் நெஞ்சாரப் பாராட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

டாக்டர் கலைஞர் அவர்கள் அரசியல் தலைவர் மட்டும் அல்ல, இன்று தமிழகத்திலே இருக்கின்ற மிகப் பிரபலமான எழுத்தாளர். அவர்களுடைய எழுத்து, அவருடைய உரைநடை, அவருடைய கவிதை, அவருடைய சிறுகதை, அவருடைய நாடகங்கள், அவருடைய இலக்கிய விமர்சனம், அவருடைய திரைப்பட வசனங்கள், அவருடைய நாவல்கள் இவைகள் எல்லாம் என்றும் அழியாத தன்மையை இலக்கியத்தில் பெற்றிருக்கின்றன. திருக்குறளுக்கு உரை எழுதிய குறளோவியம், தொல்காப்பியத்திற்கு அவர் எழுதிய விளக்கவுரை, தமிழகத்தின் பழமையும், நாகரிகத்தையும் என்றும் அழியாத வரலாறாக மாற்றியதிலே இந்த இரண்டு இலக்கியங்களுக்கும் அவர் அளித்த உரைகளுக்கும் மிகப்பெரிய பங்கு உண்டு.

அவருடைய திறமையை, அவருடைய ஆர்வத்தைப் பார்த்து நான் வியந்து போய் இருக்கிறேன். என்னுடைய நன்றியைச் சொல்லுவதற்காக, என்னுடைய தனிப்பட்ட பாராட்டைச் சொல்லுவதற்காக நான் டெல்லியில் இருந்து ஓடோடி வந்திருக்கிறேன். அவருடைய தாக்கம் மூன்று தலைமுறையாக தமிழகத்திலே இருக்கின்றது என்பதை நான் உணர்ந்து கொண்டிருக்கிறேன். இந்தக் கூட்டத்தில் இருக்கின்ற உங்கள் ஒவ்வொருவருடனும் நான் என்னை இணைத்துக் கொண்டு இந்த மகத்தான மனிதருக்கு என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்து அவருக்கு நீண்ட நெடிய ஆயுளையும், உடல் நலத்தையும் தரவேண்டும் என்று இறைவனை வேண்டி விடைபெறுகிறேன். ✶


# மாநிலங்களுக்கிடையிலான நதிகளை தேசிய மயமாக்க வேண்டும்

**மா**ண்புமிகு பிரதமர் அவர்களே!
தேசிய வளர்ச்சிக் குழுவின் உறுப்பினர்களே!

உங்கள் அனைவருக்கும் எனது உளம் கனிந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெறும் வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த துறைகளுக்கான அணுகுமுறைகள் பற்றி விவாதிப்பதற்காக இன்று இங்கு நாம் கூடியுள்ளோம். மாட்சிமை மிகுந்த இந்த மன்றம், தேசிய வளர்ச்சிக் குழுவின் துணைக்குழு அளித்த அறிக்கையின் அடிப்படையில் உணவு மற்றும் வேளாண்மை வளர்ச்சி குறித்துத் தனது கவனத்தைச் செலுத்துவது குறித்து நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். வேளாண்மைக்குப் புத்துயிர் அளிக்காவிடில், ஊரகப் பகுதிகளில் வாழும் ஏராளமான மக்களுக்கு, உயரளவிலான பொருளாதார வளர்ச்சி என்பது அர்த்தமற்றதாகிவிடும்.

2. நீர், மிகவும் அரிதான ஓர் ஆதாரமாகும். வேளாண்மை உற்பத்தியின் தற்போதைய அளவைப் பேணிக்காப்பதற்குக்கூடத் தேவையான நீர் உரிய நேரத்தில் கிடைப்பது அரிதாகி வருகிறது. நதிநீரைப் பங்கிட்டுக்கொள்ளும் மாநிலங்களுக்கு இடையே முரண்பாட்டை ஏற்படுத்தக்கூடிய பல நிகழ்வுகளைக் கடந்த சில மாதங்களாக நாம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள்
புதுதில்லியில் 29.5.2007 அன்று
நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில்
நிகழ்த்திய ஆங்கில உரையின் தமிழ்வடிவம்.




சந்தித்து வருகிறோம். "மாநிலங்களுக்கு இடையிலான நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையில், அந்தப் பிரச்சினைக்குள்ளான அனைத்துத் தரப்பினரின் நலனையும் கவனத்தில் கொண்டு, விரைவில் ஒரு சுமூகமான தீர்வு எட்டப்பட்டு உறுதி செய்வதற்காக, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்" எனக் குறைந்தபட்ச தேசிய பொதுத்திட்டத்தில் உறுதி அளிக்கப்பட்டுள்ளது. மாநிலங்களுக்கு இடையிலான நதிகளை நிர்வகிப்பதற்கான நமது தற்போதைய நிறுவன நடைமுறை செயலிழந்து போய்விட்டதாகத் தெரிகிறது. புதிய ஒரு நிறுவன நடைமுறையை நாம் ஏற்படுத்தாவிடில், நதி நீர்ப் பங்கீடு என்பது மாநிலங்களுக்கு இடையே முரண்பாட்டை ஏற்படுத்தும் ஒரு பிரச்சினையாக மாறலாம். இது சரியான நேரத்தில் முறையாகக் கவனிக்கப்படாவிடில், எதிர்வரும் காலங்களில் தேசிய ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தலாகக்கூட அமைந்துவிடக்கூடும். மாநிலங்களுக்கு இடையிலான நதிகளைத் தேசியமயமாக்குவது மத்திய அரசின் அதிகார வரம்பிற்குள் இருப்பதாக அரசியலமைப்புச் சட்டம், மத்திய பட்டியலில் 56–ஆவது பதிவில் காணப்படுகிறது. நதிகளைத் தேசியமயமாக்குவது மட்டுமே, இந்தச் சிக்கலுக்கு நீண்ட காலத் தீர்வாக அமையும். எனவே இதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென மாண்புமிகு பிரதமர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

3. குடிநீர் மற்றும் விவசாயத்திற்குத் தேவையான தண்ணீருக்காக கர்நாடகம், கேரளம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய அண்டை மாநிலங்களையே தமிழ்நாடு சார்ந்துள்ளது. அந்த மாநிலங்களிலிருந்து இங்கே வந்திருக்கும் நண்பர்களிடத்தே நான் மிகுந்த மரியாதை கொண்டுள்ளவன் எனினும் இருதரப்பு ஒப்பந்தம், நடுவர் மன்றம், நீதிமன்றத் தீர்ப்புகள் ஆகியவற்றின் நோக்கங்கள் நீரைப் பொறுத்த வரையில் நிறைவேறவில்லை என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்லியாக வேண்டும். நீர் பற்றாக்குறை பற்றி நீண்ட

காலமாக நாம் பேசிக் கொண்டிருந்தாலும், தேவைக்கு அதிகமாக நீர்வசதியுள்ள இந்த மாநிலங்கள், கடுமையான தண்ணீர்ப் பற்றாக்குறையால் அவதியுறும் தனது அண்டை மாநிலமான தமிழகத்திற்கு, இயற்கை ஆதாரங்களைப் பகிர்ந்து அளிப்பதற்குத் தயக்கம் காட்டி வருகின்றன. இது, நமது கூட்டாட்சி அமைப்பின் சிறப்பினைப் பறைசாற்றுவதாக இல்லை. தற்போதைய நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அறுவை சிகிச்சை அவசியம் என்றாலும், அதைக் குணப்படுத்துவதற்குத் தேவையான ஒரு வேளை மருந்து கூட தமிழ்நாட்டிற்குக் கிடைத்திட இதுவரை வழி செய்யப்படவில்லை. எனவே, தண்ணீருக்காக ஏங்கித் தவிக்கும் தமிழ்நாட்டிற்கு, அதன் அண்டை மாநிலங்களோடு உள்ள மிகவும் தொன்மை வாய்ந்த உறவுக்கு எந்தவித குந்தகமும் ஏற்படாத வண்ணம், உதவிக்கரம் நீட்ட முன்வருமாறு மத்திய அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

4. வேளாண்மையைப் பொறுத்தமட்டில், பல்வேறு ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டும், பல வல்லுநர்களும், தொழில்நுட்ப நிறுவனங்களும் நீண்ட அறிக்கைகளைத் தயாரித்திருந்தும், மானாவாரி விவசாயத்தில் எந்த ஒரு




பெரிய மாற்றமும் இதுவரை ஏற்படவில்லை. தேவையான நேரத்தில் தேவையான அளவு தண்ணீர் கிடைக்க வழிசெய்வதே, வேளாண் உற்பத்தியையும், விவசாயிகளின் வருமானத்தையும் பெருக்குவதற்குத் திறவுகோலாகும்; சிறந்த பயிர் வளர்ப்பு முறைகள் மட்டுமே போதாது. கடந்த தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில், தீபகற்ப நதிகளை இணைப்பதன் உடனடி தேவைபற்றி வலியுறுத்தி இருந்தேன். "குறைந்த செலவில் தேவையான இடங்களில் நீர்ப்பாசன வசதியை விரிவுபடுத்த" திட்டக்குழுவின் அணுகுமுறை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தென்னக நதிகளிலிருந்து தொடங்கி, நதி நீர் இணைப்புகளுக்கான சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்குக் குறைந்தபட்சத் தேசிய பொதுத் திட்டத்தில் உறுதி அளிக்கப்பட்டுள்ளது. நீர்வள ஆதார அமைச்சகத்தின்கீழ் இயங்கி வரும் தேசிய நீர் மேம்பாட்டு முகமை, தீபகற்ப நதிகளை இணைப்பதற்கான சாத்தியக்கூறு அறிக்கையை ஏற்கெனவே தயாரித்து அளித்துள்ளது. தேவைக்கு அதிகமாக நீர் உள்ள ஆற்றுப்படுகையிலிருந்து பற்றாக்குறைப் பகுதிகளுக்கு நீரைக் கொண்டு செல்வது தொழில்நுட்ப ரீதியாக சாத்தியம் எனவும், பொருளாதார ரீதியாக நிலைத்து நிற்கக் கூடியது எனவும் அது தனது முடிவுரையில் கூறியுள்ளது. வேளாண்மையை முன்னேற்றமடையச் செய்வதில் நாம் தீவிரமாக இருப்பது உண்மை என்றால்,



நாம் மேலும் காலதாமதமின்றி, உடனடியாகச் செயல்பட வேண்டும். இந்தப் பதினோராவது திட்டத்தில் வேளாண்மை துறைக்கான அணுகுமுறைகளில், தீபகற்ப நதிகளை இணைப்பதற்கான செயல் திட்டம், சேர்க்கப்பட்டு அதற்கு நிதி வழங்கப்பட வேண்டும்.

5. தண்ணீர்ப் பற்றாக்குறையைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டில் நிலவும் மோசமான நிலையினை நான் சுட்டிக் காட்டிட விரும்புகிறேன். இந்த மாநிலத்திற்குள்ளாகவே உற்பத்தியாகும் வற்றாத ஜீவநதி என ஒன்றுகூட தமிழ்நாட்டில் இல்லை. மற்ற மாநிலங்கள் விடுவிக்கும் நீரைத்தான் தமிழ்நாடு முழுமையாகச் சார்ந்து நிற்கிறது. அவ்வாறு பிற மாநிலங்களிலிருந்து நீரைப் பகிர்ந்து கொள்ளுவதில் உள்ள நிறுவனப் பிரச்சினைகளை (institutional problems) நான் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளேன். தமிழகத்தில், நில மேற்பரப்பு நீர் ஆதாரம் மட்டும் குறைவாக இல்லை; நிலத்தடி நீர்ப் பற்றாக் குறையினாலும் தமிழகம் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. மாநிலத்தில் உள்ள 385 வட்டாரங்களுள், 175 வட்டாரங்கள் நீர் ஆதாரங்களை முற்றிலும் பயன்படுத்தியுள்ளதுடன் அவை அப்பகுதிகளில் தீரும் நிலையிலும் உள்ளன. தமிழ்நாட்டில் மழைபெய்யும் அளவும் குறைவாகவே உள்ளது. தமிழ்நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மரபு வழியில் விவசாயத் தொழிலைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. தேசிய வளர்ச்சிக் குழுவின் துணைக்குழு, நமது நாட்டை 15 வேளாண்–வானிலைப் பகுதிகளாக (agro - climatic regions) வகைப்படுத்தி உள்ளது. தமிழ்நாட்டில் தண்ணீர்ப் பற்றாக்குறையால் நிலவும் பிரச்சினைகளை கவனத்தில் கொண்டு மற்ற 15 பகுதிகளுக்கும் கூடுதலாக, தமிழ்நாட்டை, மேலும் ஒரு தனி வேளாண்–வானிலைப் பகுதியாக அறிவிக்க வேண்டும். தமிழ்நாட்டில் தண்ணீர்ப் பற்றாக்குறை தொடர்பாக நிலவும் அவசர அவசியச் சூழ்நிலைகளையும், அதன் தற்போதைய சிரமமான சூழ்நிலைகளையும் மத்திய அரசு உணர்ந்திட வேண்டும். இத்தகைய சூழ்நிலையில் தமிழகத்தின் தண்ணீர்த் தேவையைப் பூர்த்திசெய்ய, தற்போது நடைமுறையில் உள்ள பல்வேறு நிபந்தனைகளுக்குட்பட்ட மத்திய அரசின் திட்டங்கள் போதுமானவை அல்ல. எனவே, தண்ணீர்ப் பற்றாக்குறையில் மத்திய அரசின் சிறப்புக் கவனத்திற்குரிய மாநிலம் என்ற நிலையில் தமிழகம் உள்ளது. தமிழ்நாட்டில், வேளாண்–காடுவளர்ப்பு, தோட்டக்கலை மற்றும் குறைந்த அளவு நீரில் வளரும் பயிர்கள் ஆகியவற்றை அறிமுகப்படுத்தும் திட்டத்திற்குச் சிறப்பு மத்திய உதவியை (special central assistance) வழங்கும்படி மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

6. தமிழ்நாடு போன்ற நீண்ட கடற்கரைகளைக் கொண்டுள்ள மாநிலத்தில் வேளாண்மை தவிர, கால்நடை பராமரிப்பு மற்றும் மீனளம் ஆகியவற்றிற்குள்ள முக்கியத்துவத்தை நாம் மறந்து விடக்கூடாது. திட்டத்தில், அவைகளுக்கு உரிய இடம் அளிக்கப்பட்டிருக்கும் என்று நான் நம்புகிறேன். இலங்கையில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலையால் தமிழக மீனவர்கள் சந்தித்து வரும் பிரச்சினைகளை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாட்டில் மீன்துறையின் வளர்ச்சி பாதிக்காத வகையில் மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும்படி மத்திய அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

7. வேளாண் வளர்ச்சியைப் பற்றிப் பேசுகையில், விவசாயிகளின் நலனில் முழுக்கவனம் செலுத்துவதை நாம் உறுதி செய்ய வேண்டும். நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் உள்ள விவசாயிகள் கடன் சுமையால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இது மிகுந்த கவலையளிக்கக்கூடிய அம்சமாக உள்ளது. சில மாநிலங்களில் தற்கொலை நிகழ்வுகள் நடைபெறவும் வழிவகுத்துவிடுகிறது. தமிழகத்தில் எங்கள் அரசு பொறுப்பேற்ற உடன், 7,000 கோடி ரூபாய் அளவிலான பயிர்க்கடனைத் தள்ளுபடி செய்வதற்கான ஒரு துணிச்சலான முடிவினை நாங்கள் எடுத்துச் செயல்படுத்தியுள்ளோம். இந்த முடிவு, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உடனடியான நிவாரணத்தை அளித்ததோடல்லாமல், அவர்கள் மீண்டும் வேளாண் கடன் வசதியைப் பெறுவதற்கும் ஏதுவாக அமைந்துள்ளது. தொடர்ச்சியாக, மூன்று ஆண்டுகள் இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும் இடங்களில், சிறு, குறு மற்றும் குத்தகை விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று தேசிய வளர்ச்சிக் குழுவின் துணைக்குழு பரிந்துரை செய்துள்ளதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த அடிப்படையில், தமிழ்நாடு அரசு அறிவித்துச் செயல்படுத்தியுள்ள விவசாயிகளின் கூட்டுறவு கடன்களைத் தள்ளுபடி திட்டத்தில் மத்திய அரசு பங்குகொள்ள வேண்டுமென்ற எனது கோரிக்கையினை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

8. நம்முடைய நாடு ஒரு மிகப் பெரிய நாடாகும். ஒவ்வொரு பகுதிக்கும் எடுக்கப்பட வேண்டிய குறிப்பிட்ட நடவடிக்கைகள் வெவ்வேறாக இருக்கும். மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், அதிகப்படியான நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவைகளாக உள்ளன; அவைகள் அந்தந்த மாநிலப் பிரச்சினைகளைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. பல திட்டங்கள் செயல்படுத்தப்படுவதால், நிருவாகச் செலவுகளும் அதிகமாக உள்ளது. எனவே இந்தத் திட்டங்களைச் செயல்படுத்தும் நடைமுறைகளை எளிமைப்படுத்துவது அவசியமாகிறது. தற்போது பிரித்து வழங்கப்படும் நிதிகளுக்கு மாறாக, ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒப்புக்கொள்ளப்பட்ட நடைமுறையை அடிப்படையாகக் கொண்டு, ஒரு மொத்த மத்திய நிதியுதவியினை வழங்குவது பொருத்தமாக இருக்கும். இவ்வாறு வழங்குவது மத்திய நிதியுதவியினை மேலும் பயனுள்ளதாக ஆக்கும்.எனவே, வரும் நிதியாண்டிலிருந்து இந்த மாற்றத்தினை அறிமுகப்படுத்துமாறு திட்டக்குழுவை நான் கேட்டுக்கொள்கிறேன்.

9. விவசாயிகள் முன்னேறாமல், இந்தியா முன்னேற முடியாது. விவசாயிகளும் விரைவான வளர்ச்சியில் பங்குகொள்ளும் வகையில் ஒரு புதிய இந்தியாவை நாம் உருவாக்குவதற்கான ஒரு நல்ல விவாதத்தினை இங்கு நான் எதிர்பார்க்கின்றேன்.

நன்றி!

★



# மரபு சாரா எரிசக்தித் துறையில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதல் இடத்தை வகிக்கிறது

பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களே, மத்திய மின்துறை அமைச்சர் சுசுஷில் குமார் ஷிண்டே அவர்களே, மாநிலங்களின் முதலமைச்சர்களே மற்றும் மத்திய மின்துறை அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகளே.

இந்த முதலமைச்சர்களின் கூட்டத்தில் பங்குபெற்று தமிழ்நாட்டின் மின் துறை பற்றிய என்னுடைய கருத்துக்களை எடுத்துரைக்க எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

மின் தேவைகளை எதிர்கொள்வதில் தன்னிறைவு பெற்ற மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாக திகழ்கிறது. தமிழ்நாட்டில் எந்த ஒரு பகுதியிலும், மின்வெட்டு இல்லை. மின் உற்பத்தி, மின் தொடர் அமைப்பு மற்றும் மின் பகிர்மானம் ஆகியவை ஒருங்கிணைந்து தமிழ்நாடு மின்சார வாரியத்தால் மேற்கொள்ளப்படுகிறது. தமிழ்நாடு மின்சார வாரியம் நாட்டில் சிறப்பாக பணியாற்றிடும் மின்சார வாரியங்களில் ஒன்றாக திகழ்கிறது. இதன் மின்தொடர் மற்றும் மின் பகிர்மான இழப்பானது 18 விழுக்காடுகளாகவும், மின் பட்டியல் மற்றும் வசூலின் திறன் 99 விழுக்காடாகவும் இருக்கிறது.

தமிழ்நாட்டின் மொத்த மின் உற்பத்தி நிறுவு திறன் இன்றுள்ளபடி 10,098 மெகாவாட்டாகும். தமிழ்நாடு மரபு சாரா எரிசக்தித் துறையில் இந்தியாவிலேயே முதல் இடத்தை வகிக்கிறது. தமிழ்நாட்டின் காற்றாலை மின் உற்பத்தித் திறனான 3,456 மெகாவாட்டானது இந்தியாவின் மொத்த

காற்றாலை மின் உற்பத்தித் திறனில் சுமார் 60 விழுக்காடாகும்.

தமிழ்நாட்டின் உச்ச மின் தேவை மற்றும் ஒரு நாளில் உச்ச மின் பயனீட்டளவானது இன்றுள்ளபடி முறையே 8,826 மெகாவாட் மற்றும் 191.283 மில்லியன் யூனிட்டுகளாகும்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் மொத்தம் 185.82 இலட்சம் மின் பயனீட்டாளர்கள் உள்ளனர். இதில் 18.02 இலட்சம் விவசாய மின் பயனீட்டாளர்கள் ஆவர்.

பிரதமர் அவர்களே, தூத்துக்குடி, மேட்டூர் மற்றும் வடசென்னை ஆகிய இடங்களில் உள்ள அனல்மின் நிலையங்கள் மிக நன்றாக செயல்பட்டு வருகின்றன என்பதை தெரிவித்துக் கொள்ள நான் பெருமைப்படுகிறேன்.

மூன்று 1,000 மொகவாட் திறன் கொண்ட மின் திட்டங்களை அதாவது 1) சென்னையில் தேசிய அனல் மின் கழகத்திற்கும், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் இடையே கூட்டுத் துறையில் 2) தூத்துக்குடியில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்கும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் இடையே கூட்டுத் துறையில் மற்றும் 3) நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தால் ஜெயம்கொண்டத்தில் அமைத்து தமிழ்நாட்டில் மின் உற்பத்தியைப் பெருக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த அனல் மின் திட்டங்கள் 115ஆவது திட்டக்காலத்தில் இயக்க வைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்சொன்ன திட்டங்களைத் தவிர தமிழ்நாடு மின்சார வாரியம் கீழ்க்கண்ட வகையில் தனது மின் உற்பத்தித் திறனை அதிகரிக்க திட்டங்களைத் தீட்டியுள்ளது. 1) தற்போதுள்ள அனல் மின் நிலையங்களில் மொத்தம் 2,500 மெகாவாட் அளவிற்கு கூடுதல் மின்உற்பத்தி அலகுகளை அமைத்தல் 2) 665 மொகாவாட் திறன் கொண்ட குந்த நீரேற்று நிலையத்தை அமைத்தல் 3) தூத்துக்குடிக்கு அருகே உடன்குடியில் 1,600 மெகாவாட் (2 ஒ 800) திறன்கொண்ட ஒரு புதிய அனல் மின் நிலையத்தை அமைத்தல்.

தொழில்நுட்ப மற்றும் வணிக மின் இழப்பை பொருத்த வரை இந்தியாவின் சராசரி இழப்பைவிட தமிழ்நாட்டில் குறைவாக உள்ளது. தற்போது உள்ள மின் இழப்பான 18 விழுக்காடானது உயர் அழுத்த மற்றும் தாழ்வழுத்த மின் கம்பிகளின் விகிதத்தை உயர்த்துதல், புதிய துணை மின் நிலையங்களை அமைத்தல் மற்றும் மின்பகிர்மாற்றிகளில் தாழ்வழுத்த மின்னாக்கிகளை பொருத்துதல் ஆகிய பணிகளை செய்வதின் மூலம் 11ஆவது திட்டக்கால இறுதிக்குள் 15 விழுக்காடுகளாக குறைக்கப்படும்.

தற்போது நான் கீழ்க்கண்ட பிரச்சனைகளை தங்களின் கனிவான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

தமிழ்நாடு அரசு கூட்டுத் துறை ஒப்பந்தத்தில் முன்னரே சொன்னவாறு இரண்டு மகா அனல் மின் திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத்திற்குண்டான ஒப்பந்தங்கள் கையெழுத்தாகிவிட்டன. மேலும், இத்திட்டங்களின் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேற்சொன்ன 1,000 மெகாவாட் திறனுடையதாக உள்ளதாலும் மாநிலங்களுக்குள் மின்சாரத்தை வழங்க இருப்பதாலும் இவை மகா மின் திட்டத்திற்குண்டான வரைமுறைகளை அடைகிறது.

எனினும், இத்திட்டங்களுக்குண்டான சுங்க வரியை தள்ளுபடி செய்ய மத்திய மின்துறை அமைச்சகம் கீழ்க்கண்ட நிபந்தனையை பூர்த்தி செய்ய வலியுறுத்தி வருகிறது. அதாவது, மின்சாரத்தை கொள்முதல் செய்யும் மாநிலமானது ஒரு மில்லியன் மக்கட் தொகைக்கு மேலே உள்ள நகரங்களின் மின் பகிர்மானத்தை மின்துறை அமைச்சகம் நிர்ணயிக்க உள்ள கால வரைக்குள் தனியார்மயமாக்கப்படும் என்று கொள்கை அளவில் ஒப்பந்தம் மேற்கொள்ள வலியுறுத்தி வருகிறது.

இதன் தொடர்பாக நான் கூறிக்கொள்ள விரும்புவது தமிழ்நாடு மின்சார வாரியமானது மின் பகிர்மானத்தை மின்வெட்டு இல்லாமலும் மின் தடங்கல் இல்லாமலும் நன்றாக சமாளித்து வருகிறது. மின் கட்டண பட்டியல் மற்றும் வசூலின் திறன் சுமார் 99 விழுக்காடாக உள்ளது. அனைத்து புதிய மின் இணைப்புகளும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் வரையறுக்கப் பட்டுள்ள காலவரைக்குள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், தமிழ்நாடு மின்சார வாரியமும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் கூறப்பட்டுள்ளபடி தரமான மின்சாரத்தை வழங்குகிறது.

மேற்சொன்ன குறிப்புகளின்படி தமிழ்நாடு மின்சார வாரியத்தின் திறமையானது தனியார் மின்மயமாக்கல் செய்யப்பட்டால் அடையப்படும் திறனைவிட அதிகமாகவே உள்ளது. எனவே, இந்த மகா மின்திட்டங்களை செயலாக்குவதில் தாமதம் ஏற்படும் என்பதால் தனியார் மயமாக்கும் நிபந்தனையை வலியுறுத்த வேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள நான்கு அனல் மின் நிலையங்களுக்கும் வருடத்திற்கு சுமார் 15 மில்லியன் டன் நிலக்கரி தேவைப்படுகிறது. இதில் இந்திய நிலக்கரி நிறுவனமானது வருடத்திற்கு சுமார் 13 மில்லியன் டன் அளவிற்கு மட்டுமே நிலக்கரியை விநியோகம் செய்கிறது. நிலக்கரி பற்றாக்குறையை சமாளிக்க வருடத்திற்கு சுமார் இரண்டு மில்லியன் டன் நிலக்கரியானது இறக்குமதி செய்யப்படுகிறது. ஆனால், இந்த மின்பற்றாக்குறையை நிரந்தரமாக சமாளிக்கும் பொருட்டும் உத்தேசிக்கப்பட்டுள்ள மின்நிலையங்களுக்கான கூடுதல் நிலக்கரி தேவைகளுக்காகவும், தமிழ்நாடு மின்சார வாரியம் ஒரு தன்பயன் நிலக்கரி சுரங்கத்தை பெற வேண்டியுள்ளது.

தமிழ்நாடு மின்சார வாரியம் ஒரிஸா மாநிலத்தில் தால்ச்சர் பகுதியிலுள்ள நவகான் நிலக்கரி சுரங்கத்தை ஒதுக்கித் தருமாறு மத்திய நிலக்கரி நிறுவனத்திடம் கேட்டது. ஆனால், மத்திய நிலக்கரி நிறுவனமானது சட்டீஸ்கர் மாநிலத்திலுள்ள ''காரி பல்மா செக்டர் இரண்டு'' என்ற நிலக்கரி சுரங்கத்தை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும், மகாராஷ்டிரா மாநில சுரங்க கார்ப்பரேஷன் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கும் இடையே கூட்டாக எடுத்துக் கொள்ளுமாறு கோரியது. இந்த மேற்கூறிய சுரங்கத்தில் கட்டமைப்புகள் வசதிகள் மேற்கொள்ளப் படாததால் ஒரிஸா மாநிலத்தில் தால்ச்சர் பகுதியில் இருந்து தன்பயன் சுரங்கத்தை ஒதுக்கீடு செய்தால் இது நிலக்கரியை அனல்மின் நிலையங்களுக்கு கொண்டு செல்வதற்குண்டான போக்குவரத்துச் செலவு குறைந்த செலவில் மேற்கொள்ளப்படும் என்பதை கூறிக் கொள்கிறேன்.

ஒரிஸா மாநிலத்தில் தால்ச்சர் பகுதியிலுள்ள மகாநதி கோல் பீட்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்திடமிருந்து ஒரு தன்பயன் நிலக்கரி சுரங்கத்தை ஒதுக்கி தருமாறு நான் மத்திய அமைச்சகத்திடம் கேட்டிருந்தேன்.

இதற்கிடையில் இந்திய அரசின் நிலக்கரி அமைச்சகமானது மின் உற்பத்திக்காக பத்து சுரங்கங்களை ஒதுக்கீடு செய்து அதில் ஐந்து சுரங்கங்கள் தால்ச்சர் பகுதியில் உள்ளதாகவும் இதில் ஒன்றை தேர்வு செய்து அனுப்புமாறும் கேட்டுக் கொண்டது. தமிழ்நாடு மின்சார வாரியம் இந்திய அரசின் நிலக்கரி அமைச்சகத்திடம் தால்ச்சர் பகுதியிலுள்ள செண்டிப்பாடா 1, செண்டிப்பாடா 2 மற்றும் நைநி ஆகிய மூன்று நிலக்கரி சுரங்கங்களிலிருந்து ஒன்றை ஒதுக்கி தருமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

தற்போது, நைநி சுரங்கமானது குஜராத் மினரல் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட் ஏற்கெனவே ஒதுக்கப்பட்டுள்ளது என்பது அறியப்படுகிறது. தற்போது தால்ச்சர் பகுதியிலுள்ள மாந்தாகினி என்ற சுரங்கத்தை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒதுக்கி தருவதற்கான கருத்துரு இந்திய அரசிடம் உள்ளது என்று அறிகிறேன். இதற்குண்டான ஆணையை விரைவில் வழங்குமாறு நான் பிரதமர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

மின்சார சட்டம் 2003இன் பிரிவு 31 மற்றும் 39ன் படி மாநில மின்சார வாரியங்கள் அதன் மின் தொடர் பணிகளையும் மாநில மின் சுமை அனுப்புகை மையப் பணிகளையும் பிரித்து ஒரு தனி நிறுவனத்தை ஏற்படுத்த வேண்டும்.

நன்றாக செயல்படும் மாநில மின்சார வாரியங்களையும், நன்றாக செயல்படாத மாநில மின்சார வாரியங்களையும் ஒரே கண்ணோட்டத்தில் வைத்து அவைகளை சீர்திருத்தத்தை மேற்கொள்ள சொல்வது சரியான அணுகுமுறை அல்ல. அந்தந்த மாநில மின்சார வாரியங்கள் அதன் பலம் மற்றும் நலிவு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சீர்திருத்த வரைவை தீர்மானிக்க அனுமதி அளிக்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த வரைவை செயல்படுத்த எந்த காலவரைக் கெடுவும் வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியம் 92.2 மெகா வாட் திறனுள்ள வாயுசுழலி மின் திட்டத்தை கூடுதலாக வழுதூர் எனும் ஊரில் இராமநாதபுரம் மாவட்டத்தில் நிறுவி வருகின்றது. மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் நாளொன்றுக்கு 4.38 இலட்சங்கள் கன மீட்டர் இயற்கை எரிவாயுவினை இந்த திட்டத்திற்கென ஒதுக்கியுள்ளது. மேலும், இத்திட்டம் எதிர்வரும் நவம்பர் 2007இல் மின்சாரத்தைத் தொடங்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. தமிழகத்தில் கிடைக்கும் அனைத்து இயற்கை எரிவாயுவினை தமிழ்நாடு மின் வாரியத்திற்கு மட்டுமே ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று தமிழக அரசு வேண்டுகோள் விடுத்திருந்தும் அந்த வேண்டுகோள் ஏற்கப்படாமல் தனியார் திட்டங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றது.

எனவே, இதற்கு மாறாக இனி வரும் எதிர்காலத்திலாவது தமிழகத்தில் கிடைக்கும் அனைத்து இயற்கை எரிவாயுவினையும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கே ஒதுக்கீடு செய்ய வேண்டும் என கோரப்படுகிறது.

இதனூடே மின் உற்பத்தியில் தடை கடந்த டிசம்பர் 2006இல் குத்தாலம் இயற்கை எரிவாயு சுழலி மின் நிலையத்தில் எதிர்பாராமல் ஏற்பட்டதால் அந்த மின் நிலையம் தற்காலிகமாக மின் உற்பத்தி செய்யாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்த மின் நிலையம் எதிர்வரும் செப்டம்பர் 2007இல் மீண்டும் மின் உற்பத்தியைத் தொடங்கும் என எதிர் பார்க்கப்படுகிறது. எனவே, இந்த மின் நிலையத்திற்கு செய்யப்பட்டுள்ள நாளொன்றுக்கு 4.5 இலட்சங்கள் கன மீட்டர் இயற்கை எரிவாயுவினை பிள்ளைப்பெருமாள்நல்லூர் மின் உற்பத்திக் குழுமத்திற்கு இந்திய எரிவாயு குழுமத்தின் ஒப்புதலின்பேரில் தற்காலிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்திய எரிவாயு குழுமத்தினுடன் ஏற்றுக்கொண்ட ஒப்பந்த உடன்படிக்கையின்படி 80 சதவிகித விழுக்காடு ஒதுக்கீடான எரிவாயுவினை மின்சார வாரியம் முழுவதும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் அல்லது அதற்குண்டான தொகையினை அளிக்க வேண்டும். இது ஒரு குறைந்த அளவு பொறுப்பேற்று ஒப்பந்த அளவு சார்ந்த விதிமுறையாகும்.

குத்தாலம் எரிவாயு மின் நிலையத்திற்கான எரிபொருள் விலையினை பிள்ளைப்பெருமாள் நல்லூர் மின் உற்பத்திக் குழுமமே இந்திய எரிவாயு குழுமத்திற்கு செலுத்தி வருகின்றது. எனவே, பிள்ளைப் பெருமாள் நல்லூர் மின் உற்பத்திக் குழுமம் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை ஏற்கெனவே ஏற்றுக்கொண்ட ஒப்பந்தப்படி தமிழ்நாடு மின்சார வாரியமே பெற்றுக் கொள்கிறது. எரிபொருள் விலையினை ஏற்றுக் கொள்வதால் எரிவாயுவின் விலையினை தமிழ்நாடு மின்சார வாரியம் பிள்ளைப் பெருமாள் நல்லூர் மின் உற்பத்திக் குழுமத்திற்கு ஈடுசெய்கின்றது. எனவே, குத்தாலம் மின் நிலையத்தில் பயன்படுத்தாத எரிவாயுவிற்கு ஈடாக இந்திய எரிவாயு குழுமத்திற்கு அளிக்கும் தொகை இரட்டிப்பான முறையில் பணம் செலுத்துவதாக அமைகின்றது. இவற்றையெல்லாம் தவிர்க்கும் முகத்தான் தமிழக அரசு ஏற்கெனவே இந்த குறைந்த அளவு ஒப்பந்த ஈடுகட்டிற்கான ஒப்பந்த உடன்படிக்கையிலிருந்து தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு விலக்கு அளிக்க வேண்டும் என கோரியுள்ளது.

மேலும், இதுவரை ரூ.400 கோடி இத்திட்டத்திற்கு செலவிடப்பட்டுள்ளது. மேற்கொண்டும் இந்த நிலையத்தை மீண்டும் மின் உற்பத்தி தொடங்குவதற்கான வேலைகளுக்கு ஆயுதப்படுத்த மேலும் ரூ.75 கோடி தேவைப்படும் எனவே, மேற்கூரிய கோரிக்கையினை நமது மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

அ. இந்திய அரசு அதனுடைய மத்திய மி நிலையங்களிலிருந்து அனைத்து மாநிலங்களுக்கும் மின்சாரத்தை பிரித்துக் கொடுக்க ஒதுக்கியிருக்கிறது. மாநிலங்களுக்கு மின்சாரத்தை பிரித்து கொடுத்த பிறகும் மீதமுள்ள ஒதுக்கப்படாத மின்சாரத்தை மத்திய மின் அமைச்சகம் தன்னிடமே வைத்துக் கொண்டு மாநிலங்களின் தேவைக்கேற்ப பிரித்துக் கொடுக்கிறது. 180 மெகாவாட் மின்சாரம் காயங்குளம் அணு மின் நிலையத்திலிருந்து தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த அதிக விலையுள்ள மின்சாரத்திற்கு ஈடுசெய்யும் வகையில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கிழக்கு மண்டலத்திலிருந்து 31.3.2007 வரை 150 மெகா வாட் மின்சாரம் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் மின்சார தேவை நாளுக்கு நாள் தற்போது நிலவும் தட்பவெப்ப சூழ்நிலை காரணமாக வளர்ந்து வருகிறது. இதன் காரணமாக மாண்புமிகு மத்திய மின்துறை அமைச்சர் அவர்களை ஏற்கெனவே இருந்த கிழக்கு மண்டலத்திலிருந்தான 180 மெகா வாட் சிறப்பு ஒதுக்கீட்டை 31.3.2207 லிருந்து மேலும் இரண்டு வருடங்களுக்கு நீட்டிக்குமாறும் காயங்குளம் அனு மின் நிலையத்திலிருந்தான 180 மெகாவாட் மின்சார ஒதுக்கீட்டை மேலும் இரண்டு வருடங்களுக்கு நீட்டிக்குமாறும் நான் கேட்டுக் கொண்டுள்ளேன். தற்போது மத்திய மின்துறை இந்த ஒதுக்கீட்டை மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டித்திருக்கிறது. தமிழ்நாடு மின்சார வாரியத்தில் கோடை காலங்களில் 400 மெகாவாட் முதல் 800 மொகவாட் வரை மின் பற்றாக்குறை ஏற்படுவதால் நான் மத்திய மின் துறை அமைச்சகத்தை மத்திய மின் நிலையங்கள் தொகுப்பில் உள்ள ஒதுக்கப்படாத மின்சாரத்தை தமிழகத்திற்கு ஒதுக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளேன்.

ஆ. மேலும் மத்திய மின்துறை அமைச்சரிடம் டிசம்பர் 2006 கைகா மின் நிலையத்திலிருந்து தரவேண்டிய 115 மெகாவாட் மின்சாரத்தை மத்திய மின் தொகுப்பிலிருந்து ஒதுக்கப்படாத மின்சாரத்திலிருந்து ஒதுக்குவதற்கு ஏற்கெனவே கோரிக்கை வைத்துள்ளோம். இதற்கான அனுமதியை விரைந்து தருமாறு மத்திய மின்துறை அமைச்சரை கேட்டுக்கொள்கிறேன்.

இ. மத்திய மின்துறை அமைச்சகம் கூட்டு முயற்சியில் தயாராகும் மின்சாரத்திலிருந்து மின்சாரத்தை ஒதுக்குவதாக முடிவெடுத்துள்ளது. கூட்டு முயற்சி நிறுவனங்களிடம் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி கூட்டு முயற்சியில் தயாராகும் மின்சாரத்திலிருந்து தமிழக மின்சார வாரியம்

100 சதவிகிதம் எடுத்துக் கொள்ளலாம். ஆயினும் தமிழக மின்சார வாரியம் அதிலிருந்து 75 சதவிகிதம் மட்டுமே எடுத்துக்கொள்ள முடிவெடுத்துள்ளது. அப்போதுதான் அந்த நிறுவனங்களுக்கு மிகப்பெரிய மின் திட்டத்திற்கான தகுதி வந்து அவற்றால் மாநிலங்களுக்கிடையேயான மின்சார பரிவர்த்தனை செய்ய ஏதுவாகும். மத்திய மின்துறை ஆணையமும் புரிந்துணர்வு ஒப்பந்ததில் தலையிடாது என்று தெரிவித்துள்ளது. தமிழக அரசு மத்திய மின் துறை அமைச்சகத்தை இந்த நிறுவனங்களை மத்திய மின் துறை நிறுவனங்களாக கருதாமல் கூட்டு முயற்சி மின் துறை நிறுவனங்களாக கருதி அதிலிருந்து 75 சதவிகிதம் தமிழக மின்சார வாரியத்திற்கு ஒதுக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

மத்திய அரசு, மாநில மின்வாரியங்களுக்கு விரைவுபடுத்தப்பட்ட மின்மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டம் மற்றும் இராஜீவ் காந்தி கிராமப்புற மின்மயமாக்கல் திட்டம் ஆகியவற்றின் கீழ் நிதிஉதவி அளித்து வருகிறது. இத்திட்டங்கள் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின்தொடர் மற்றும் மின்பகிர்மான வலையை மேம்படுத்தவும் வெகுதொலைவில் உள்ள கிராமங்களை மின்மயமாக்கவும் உதவுகின்றன. இருப்பினும், இந்திய அரசு இந்த இரண்டு திட்டங்களின் கீழ் நிதி உதவி பெற்று செயல்படுத்தப்படும் திட்டங்களை ஒட்டு மொத்த திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறது. கிராமப்புற மின்மயமாக்கலில் சுயஉதவிக் குழுக்களையும், உரிமம் அமைப்புகளையும் ஏற்படுத்துமாறு வலியுறுத்துகிறது. இந்த தேவைகள் திட்டங்கள் திறமையற்றும் காலதாமதமாகவும் செயல்படுத்தப்படும் பட்சத்தில் முக்கியமாக இருக்கலாம். ஆனால், தமிழ்நாடு மின்சார வாரியத்தை பொருத்தவரை இத்திட்டங்களை விரைவாகவும், தரமாகவும் குறைந்த செலவிலும் செயல்படுத்த வல்லமை இருக்கிறது. இது குத்தகை அடிப்படையில் விடப்பட்டால், வாரியத்திற்கு கூடுதல் செலவு ஏற்படுத்தப் படுவதோடு இத்திட்டங்களின் பலன்கள் உரிய காலத்தில் எய்துவதில் சிரமம் ஏற்படும். அதைப்போலவே சுயஉதவிக் குழுக்கள் அமைக்கும் திட்டம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு பயனுள்ளதாக இருக்காது. ஏனெனில், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின்கட்டணப் பட்டியல் மற்றும் வசூலின் திறன் 99 விழுக்காடு அளவில் உள்ளது. மேலும், தங்கு தடையற்ற மின்சாரத்தை விநியோகம் செய்வதில் உறுதியாக உள்ளது. எனவே, குத்தகை முறை மற்றும் உதவிக் குழுக்கள் ஆகியவைகளை வலியுறுத்த வேண்டாம் என்றும் அப்படி வலியுறுத்தப்பட்டால் இது தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கூடுதல் செலவை ஏற்படுத்தும் என்றும் திட்டங்கள் காலதாமதமாகும் என்றும் கூறிக்கொள்கிறேன்.

இந்திய அரசு விரைவுப்படுத்தப்பட்ட மின்மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்தி மாநில மின்சார வாரியங்களுக்கும் இத்திட்டங்களின் மூலம் வாரியத்தின் நிதிநிலைமை அதாவது பண இழப்பு குறைக்கப்பட்டதன் மூலம் உயர்ந்துள்ளது என்பதை எடுத்துக்காட்டும் வாரியங்களுக்கும் ஊக்கத் தொகையை அளித்து வருகிறது. தமிழ்நாடு அரசு மொத்தம் ரூ.485.5 கோடி அளவிற்கு ஊக்கத் தொகை பெறுவதற்கு கருத்துரு அனுப்பியுள்ளது. நான் பிரதமர் அவர்களை இந்த ஊக்கத்தொகையான ரூ.485.5 கோடி யை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அளிக்க தங்கள் செல்வாக்கை பயன்படுத்த கேட்டுக்கொள்கிறேன். இந்த ஊக்கத்தொகை இந்த மாநிலத்தின் மின்தொடர் மற்றும் மின்பகிர்மான வலையை மேம்படுத்தி மின் இழப்பை மேலும் குறைக்க முதலீட்டாக பயன்படுத்தப்படும்.

இந்தியாவில் பன்னாட்டு ஒப்பந்தப்புள்ளிகள் முறையில் செயல்படுத்தப்படும் மின் திட்டங்களின் அனுபவத்தை மதிப்பீடு செய்யப்படவேண்டும். குறைந்த கட்டணத்தை அடிப்படையாகக் கொண்ட மின் திட்டங்களின் ஒப்பேறு வாய்ந்த நிலை மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றின் சந்தேகங்கள் எழுந்துள்ளன. மின் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு தற்போதுள்ள பன்னாட்டு ஒப்பந்தப் புள்ளிகளின் அடிப்படையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் வாயிலாக தெரிந்தெடுப்பு உரிமையை மேற்கொள்ள மாநிலங்களுக்கு ஒப்புதல் அளிக்க கேட்டுக் கொள்கிறேன்.

கூடங்குளம் அணு மின் திட்டத்தின் 1,000 மெகாவாட் திறனுடைய முதல் பிரிவின் இயக்கமானது டிசம்பர் 2007லிருந்து டிசம்பர் 2008க்கு தாமதப்படுத்தப்பட்டிருக்கிறது. இத்திட்டமானது 2008ஆம் ஆண்டின் கோடை காலத்திற்கு மின் தேவையை எதிர்கொள்ள எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இந்த காலதாமதத்தால் தமிழ்நாடு மக்களுக்கு மிகுந்த இன்னல்களை ஏற்படுத்தும். எனவே, பிரதமர் அவர்களை இந்த அணுமின் திட்டத்தை விரைந்து இயக்கி வைக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

ஒரு மகா மகா மின் திட்டத்தை அமைக்க நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள விலுந்தமாவடி கிராமத்தில் சுமார் 3,500 ஏக்கர் நிலம் கண்டறியப் பட்டுள்ளது. கீழ்க்கண்ட காரணங்களின் அடிப்படையில் விலுந்தமாவடி கிராமத்தில் மகா மகா மின் திட்டத்தை அமைக்க சம்பந்தப்பட்ட

துறைக்கு அறிவுறுத்துமாறு பிரதமர் அவர்களை வேண்டிக் கொள்கிறேன்.

அ. பெரும்பாலான நிலங்கள் புறம்போக்கு நிலங்களாகும்.

ஆ. குறுகிய காலத்தில் நிலங்களை கையகப்படுத்த முடியும்.

இ. நிலத்தின் மதிப்பு குறைவாக உள்ளது.

ஈ. இந்த இடமானது தொழில் துறையில் பின் தங்கிய பகுதியாக உள்ளது.

உ. இதனால் அப்பகுதி மக்களின் பொருளாதாரம் உயரும்.

ஊ. சேதுசமுத்திர திட்டத்தோடு புதிய பல் வானிலை துறைமுகம் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மூன்று தனியார் மின் உற்பத்தி நிலையங்கள் மிக்க அடர்த்தியும், குறைந்த கந்தகமும் உள்ள எரிஎண்ணெயை (LSHS) பயன்படுத்தி மின் உற்பத்தி செய்கின்றன. அவை உற்பத்தி செய்யும் மின்சாரம் அனைத்தும் தமிழ்நாடு மின்வாரியத்திற்கே வழங்கப்படுகிறது. இந்த தனியார் மின் உற்பத்தி நிலையங்கள், பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களிலிருந்து சுங்க வரிவிலக்கு பெற்று 1.7.2005 வரை மிக்க அடர்த்தியும், குறைந்த கந்தகமும் உள்ள எரி எண்ணெய்யை (LSHS)ஐ பயன்படுத்தி வந்தன. அந்த வரி விலக்கின் மூலம் மின் உற்பத்திச் செலவு குறைவதால் மின்சார வாரியத்திற்கு கிடைக்கும் மின்சாரத்தின் விலையும் குறைகிறது. 1.7.2005க்குப் பிறகு மேற்படி சுங்க வரி விலக்கு இரத்து செய்யப்பட்டதால் தனியார் மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் கிடைக்கும் மின்சாரத்தின் விலை அதிகரிக்கிறது. எனவே, கீழ்க்கண்டவாறு, சுங்கவரி செலுத்துவதில் விலக்கு அளிக்க இந்திய நிதித்துறை அமைச்சகத்திற்கு பல கடிதங்கள் எழுதப்பட்டுள்ளன.

அ. 1.3.2006க்கு முன் மிக்க அடர்த்தியும், குறைந்த கந்தகமும் உள்ள எரி எண்ணெயை (LSHS)ஐ பயன்படுத்தும் தனியார் மின்னுற்பத்தி நிலையங்களுக்கு சுங்கவரி விலக்களித்தல்.

ஆ. 2.7.2005 முதல் மிக்க அடர்த்தியும், குறைந்த கந்தகமும் உள்ள எரி எண்ணெய்யை (LSHS)ஐ பயன்படுத்தும் தனியார் மின் உற்பத்தி நிலையங்களுக்கு சுங்கவரி விலக்களித்தலை தொடர்தல்.

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு உட்பட்ட தூத்துக்குடி, வடசென்னை மற்றும் எண்ணூர் அனல் மின் நிலையங்களில் குளிர்விப்பானை (condenser) மூலம் நீராவியை குளிர்விப்பதற்காக கடல் நீர் பயன்படுத்தப்படுகிறது. கடலிலிருந்து எடுக்கப்பட்டமேற்படி நீர் அப்படியே கடலுக்குள் மீண்டும் திருப்பி விடப்படுகிறது. சிறிதளவு கடல் நீர் மட்டுமே அனல் மின் நிலையத்தில் சாம்பலை கரைக்க உபயோகப்படுத்தப்படுகிறது. ஆனால் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் கடலிலிருந்து எடுக்கப்படும் நீர் மொத்தத்திற்கும் தண்ணீர் வரிச்சட்டம் 1977இன்படி வரி விதித்து வருகிறது. இதனால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஆண்டுதோறும் சுமார் ரூ.6 கோடி நிதிச் சுமை ஏற்படுகிறது.

ஆனால் தண்ணீர் வரிச்சட்டம், 1977இல் அல்லது தண்ணீர் வரி (தடுப்பு மற்றும் மாசுக்கட்டுப்பாடு) விதிமுறைகள் 1978இல் கடல் நீர் உபயோகம் பற்றி குறிப்பிட்டு சொல்லப் படவில்லை. எனவே, தண்ணீர் வரிச் சட்டம், 1977இல் தகுந்த திருத்தத்தை கொண்டு வந்து அதிலிருந்து அனல் மின்நிலையங்களுக்கு விலக்கு அளிக்கவோ அல்லது அனல்மின் நிலையங்களில் உபயோகப்படுத்தப்படும் கடல் நீருக்கு மட்டும் வரி விதிக்க ஏற்பாடு செய்யுமாறு பிரதமர் அவர்களை நான் வேண்டிக் கொள்கிறேன்.

இந்த மாநாட்டை ஏற்பாடு செய்ததற்காக மீண்டும் ஒருமுறை பிரதமர் மற்றும் மத்திய மின்துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் எழுப்பிய கோரிக்கைகள் அனைத்தும் மிக விரைவில் பரிசீலிக்கப்படும் என உறுதியாக நம்புகிறேன்.

புதுதில்லியில் 28.5.2007 அன்று
நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள்
ஆற்றிய உரை

# மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிட கலைஞர் அரசு எப்போதும் காத்திருக்கிறது



**நாகப்பட்டினத்தில் 28.4.2007 அன்று சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கான குடியிருப்புகளை திறந்து வைத்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை**

கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் தேதி இதுவரை நாம் சந்திக்காத பெரிய கொடுமை அன்றைக்கு நாம் சந்தித்தோம். கடலோர மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அவர்கள் சந்தித்த கொடுமைகளை நாம் மறந்திட முடியாது. அந்த சுனாமி பேராபத்து வந்த நேரத்தில், குறிப்பாக நாகை மாவட்டத்தில் 6,065 பேர் அந்த கொடுமையிலே சிக்கி பலியானார்கள். இப்படி பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு உதவிகள் செய்திட வேண்டும் என்ற நோக்கில் பன்னாட்டு தொண்டு நிறுவனங்களும் தமிழ்நாட்டைச் சேர்ந்த தொண்டு நிறுவனங்களும் பல்வேறு உதவிகள் செய்ததை நாம் மறந்திட முடியாது.

இங்கே நமது சட்டமன்ற உறுப்பினர்களும், மற்றவர்களும் குறிப்பிட்டு சொன்னார்கள். இந்த சுனாமி எனும் பேராபத்து வந்த நேரத்தில், அன்றைக்கு தமிழகத்திலே பொறுப்பேற்றிருந்த அ.தி.மு.க. ஆட்சி முழு முயற்சியுடன் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டதா என்று கேட்டால் நாம் எல்லோருடைய பதிலும் இல்லை என்று தானிருக்கும். கடந்த கால ஆட்சி சரியான முறையில் நிவாரணப் பணிகளில் ஈடுபடவில்லை என்பதை இந்த மக்களும் அறிவார்கள்.

ஆனால், தற்போது தலைவர் கலைஞர் ஆட்சி அமைந்ததற்கு பின்னால், நமது தலைவர் அவர்கள் முதலமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்ட பின்பு உடனடியாக சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர்கள் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட சிறப்பு அதிகாரிகளை உடனடியாக அழைத்து ஒரு அவசர ஆலோசனை கூட்டம் நடத்தினார். சுனாமியால் பாதிக்கப் பட்டிருக்கக் கூடிய மக்களின் தற்போதைய நிலைமை என்ன ? அவர்களின் பிரச்சனைகள் என்னென்ன தீர்க்கப்பட்டிருக்கிறது இன்னும் என்னென்ன பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் ஏறக்குறைய ஒரு ஏழு மணி நேரம் இது குறித்து நமது ஆட்சித்தலைவர்களோடு ஆலோசனை நடத்தினார்கள்.

அப்படி ஆலோசனை நடத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகள் கட்டித் தர வேண்டும். அதற்கு என்னென்ன பிரச்சினைகள் இருந்தாலும், என்ன சட்ட சிக்கல்கள் இருந்தாலும், அவைகள் எல்லாம் உடனடியாக கலைந்திட வேண்டும் என்று உத்தரவிட்டு அந்தப் பணியை நமது முதலமைச்சர் அவர்கள் முடுக்கி விட்டார்கள். அதன் அடிப்படையில் தான் நாகப்பட்டினம் மாவட்டத்தில் 19,641 நிரந்தர குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. இதுவரை 10,216 முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள வீடுகள் பல்வேறு நிலைகளில் கட்டப்பட்டு வருகின்றன.

இவை அனைத்தும் விரைவில் முடிக்க இந்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த நிரந்தர குடியிருப்புகளை அரசு கட்டுவதற்கு ரூ.21.26 கோடி செலவில் நிலம் வாங்கியுள்ளது. இதில் தனியாரிடமிருந்து இலவசமாக 10 எக்டேர் நிலமும் 11 எக்டேர் அரசு புறம்போக்கு நிலமும் ஆக மொத்தம் 236 எக்டேர் நிலம் வழங்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் கூட கட்டமுடியாத நிரந்தர குடியிருப்புகளை அதனை அரசே முன்வந்து கட்டித்தரப்படும் என அறிவித்து 1,891 நிரந்தர குடியிருப்புகளை ராஜீவ்காந்தி சுனாமி மறுவாழ்வு திட்டத்தின் கீழ் ரூ.27.11 கோடி மதிப்பீட்டில் கட்டுவதற்குள் நடவடிக்கை எடுக்கப்பட்டு விரைவில் கட்டித்தரப்பட உள்ளது.

அந்த அடிப்படையிலே தான் டாட்டா ரீலீப் கமிட்டி என்ற பெயரில் சுனாமி பாதிக்கப்பட்ட 5 மாவட்டங்களில் குறிப்பாக 42 கிராம ஊராட்சிகளில் குறுகிய கால நிவாரண உதவிகளையும் நீண்ட கால நிவாரண உதவிகளையும் இந்த அமைப்பு மேற்கொண்டுள்ளது பாராட்டுதற் குரியதாகும். அந்த அடிப்படையில் ஏறத்தாழ இதுவரை 1,182 வீடுகளை ரூ.29.52 கோடி மதிப்பீட்டில் கட்டியுள்ளது. இரண்டு மாதங்களுக்கு முன் நெல்லை மாவட்டத்தில் ராதாமங்கலம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்டுள்ள கூத்துபனை கிராமத்தில் இதே டாட்டா நிறுவனத்தால் ரூ.2.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட வீடுகளை திறந்து வைக்க சென்றிருந்தேன். அதன் தொடர்ச்சியாக அக்கரைப்பேட்டை மீனவ மக்களுக்கு 828 வீடுகள் அடிப்படை வசதிகளுடன் கூடிய வீடுகள் டாட்டா நிறுவனத்தால் ரூ.22 கோடியில் இங்கே கட்டப்பட்டுள்ள வீடுகளை திறந்து வைப்பதில் உங்களோடு சேர்ந்து மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த முயற்சியிலே ஈடுபட்டு வெற்றியடைந்துள்ள இந்த நிறுவனத்திற்கு கழக அரசின் சார்பில் தலைவர் கலைஞர் அவர்களின் சார்பில் பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். டாட்டா நிறுவனத்தின் சார்பில் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்தாலும், இந்த வீடுகளில் பயன்படுத்தக் கூடிய அன்றாட வசதிகளை தீர்த்து வைப்பதில் நம்முடைய அரசு எந்த அளவிற்கு பாடுபட்டு வருகிறது என்பதை உங்களுக்கு சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பகுதியில் ரூ.44 இலட்சம் செலவில் கழிவு நீர் வசதிகள் ரூ.28 இலட்சம் செலவில் சமுதாயக் கூடமும் ரூ.25 இலட்சம் செலவில் சூரிய மின்விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இதுதவிர 1 இலட்சம் மரக்கன்றுகள் நடப்படவுள்ளன.

இந்த டாட்டா நிறுவனத்தால் கட்டப்பட்டு உள்ள வீடுகள் எழில்மிக்க நகரை உருவாக்கியுள்ளது. நாம் இந்த பகுதியைப் பார்க்கின்ற நேரத்தில், நாம் சென்னை நகரத்தில் இருக்கிறோமோ என்று சந்தேகம் வருகின்ற அளவிற்கு அழகாக கட்டப்பட்டுள்ளது என்பதையும் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நிரந்தர குடியிருப்பு பகுதிகளுக்கு அரசின் சார்பில் ரூ.5.5 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளது.




அது மட்டுமல்ல. இந்த குடியிருப்பு பகுதியில் குடிநீர் வசதி 2.5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட உயர்மட்ட தொட்டி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 30 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. மின்வசதி அத்தோடு மின்சார வசதியை பொறுத்தவரை தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலமாக ரூ.12.28 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிருவாகத்துறையின் சார்பாக ரூ.2.20 இலட்சம் செலவிலும், சாலை வசதி ரூ.92 இலட்சம் செலவிலும், தெருவிளக்கு ரூபாய் 94,000 மதிப்பீட்டிலும் அமைக்கப்படவுள்ளது. சட்டமன்ற உறுப்பினர் கோரிக்கையைக் குறிப்பிட்டுக்காட்டி அதனை அரசு மூலம் நிறைவேற்றித்தர வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளார்கள். நாடாளுமன்ற உறுப்பினரும் அந்த கோரிக்கையை குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்.

அதிலும், குறிப்பாக இந்தக் குடியிருப்பில் வாழ்கின்ற குழந்தைகள் 3.5 கி.மீ. தூரம் சென்று படிக்க வேண்டியுள்ளது என்றும், அதற்கு டாட்டா நிறுவனத்தின் மூலமாக இலவசமாக பேருந்து வசதி ஏற்படுத்தி தர வேண்டும் என கேட்டுள்ளார்கள். ஏன் 3 கி.மீ தூரம் சென்று படிக்க வேண்டும் இங்கேயே பள்ளிக்கூடம் கட்டித்தர வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் கேட்டுள்ளார். பள்ளிக்கூடம் கட்டுவதற்கு அதற்குரிய நிதியினை தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்தால் கல்வித்துறை அமைச்சருக்கு, பரிந்துரை செய்து கட்டித்தரும் முயற்சிகளில் ஈடுபட நான் காத்திருக்கிறேன்.

இந்தப் பகுதியினுடைய மக்களுக்கு என்னென்ன அடிப்படை பிரச்சினைகள் உண்டோ அவற்றையெல்லாம், செய்து கொடுக்க இந்த அரசு காத்திருக்கிறது. இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில் உங்களுக்காக நடைபெறக்கூடிய ஆட்சி, உங்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆட்சி. எனவே, தலைவர் கலைஞருடைய கரத்தை வலுப்படுத்தக்கூடிய வகையிலே, நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும்.

* * *



# பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான 27 சதவிகித இடஒதுக்கீட்டைப் பாதுகாக்க நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் விவாதித்து உடனடி நடவடிக்கை எடுப்பீர்!

**மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கடிதம் (23.04.2007)**

மத்திய கல்வி நிறுவனங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான 27 சதவிகித இடஒதுக்கீட்டுப் பிரச்சினையில் இன்றைக்கு உச்ச நீதிமன்றம் தடையாணையை ரத்து செய்ய மறுத்துள்ளது.

என்னுடைய **2.4.2007** தேதியிட்ட கடிதத்தில் நான் பல்வேறு சட்ட நிபுணர்களிடமும், மூத்த வழக்கறிஞர் களிடமும் கலந்து பேசியதன் அடிப்படையில் பல்வேறு மாற்று நடவடிக்கைகளை தங்களுக்கு எழுதியுள்ளேன். மத்திய உயர் கல்வி நிறுவனங்களில் இதர பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 சதவிகித இட ஒதுக்கீடு வழங்குவதை மத்திய அரசு செயல்படுத்தத் தடையில்லை; ஏனெனில் உச்ச நீதிமன்றம் இந்த இடஒதுக்கீட்டை நிறுத்தி வைப்பது விரும்பத்தக்கது என்றுதான் கூறியுள்ளதே தவிர தடை விதிக்கவில்லை என்ற நிலைப்பாட்டை நாம் ஏற்கெனவே எடுத்துள்ளோம்.

ஆனால், தற்போது உச்சநீதிமன்றம், தடையாணையை ரத்து செய்ய வேண்டும் என்ற மத்திய அரசின் கோரிக்கையை நிராகரித்துவிட்ட நிலையில் தற்போது நமக்குள்ள ஒரே வழி நாடாளுமன்றத்தின் இரு அவைகளையும் உடனடியாகக் கூட்டி இதுகுறித்து விவாதித்து உரிய விரைவான முடிவெடுத்து உயர்கல்வி நிறுவனங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டுக் கொள்கையில் எந்தவிதப் பின்னடைவும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பது தான். உண்மையில் நாடாளுமன்றத்தின் இரு அவைகளையும் கூட்டி விவாதிக்க வேண்டும் என்று தமிழக சட்டப் பேரவையில் 30.3.2007 அன்று தீர்மானம் முன் மொழியப்பட்டு ஒரு மனதாக நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

தமிழ்நாடு, புதுச்சேரி, ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் 29.3.2007 அன்றைய உச்சநீதிமன்றத் தீர்ப்பிற்குப் பிறகு முழு அடைப்பு (பந்த்) கடைப்பிடிக்கப்பட்டது தங்களுக்குத் தெரியும். உயர் கல்வி நிறுவனங்களில் இதர பிற்படுத்தப்பட்ட மக்களுக்கென இடஒதுக்கீட்டுப் பிரச்சினையில் தற்போதைய நிகழ்வுகள் குறித்து தமிழ்நாட்டு மக்கள் கட்சி மாறுபாடுகளைக் கடந்து கொந்தளித்துப் போயுள்ளனர்.

இத்தகையச் சிக்கலானத் தருணத்தில் இதர பிற்படுத்தப்பட்ட மக்களைக் கைவிட்டுவிடாமல் அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டிக் கைதூக்கி விடுகின்ற கடமை நமக்கு இருக்கிறது.

எனவே, மத்திய கல்வி நிறுவனங்கள் (இட ஒதுக்கீடு) சட்டம் 2006ன் அடிப்படையில் இதர பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள 27 சதவிகித இட ஒதுக்கீட்டைப் பாதுகாக்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று நான் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். ✱

# மறைந்த நான்கு பத்திரிகையாளர்களின் குடும்பங்களுக்கு ரூ.7 இலட்சம் நிதியுதவி

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்

தமிழகத்தில் பத்திரிகைத் துறையில் பணியாற்றி வருவோரின் நலன் கருதி அவர்கள் பணியாற்றும் காலத்தில் இறந்துவிடுவார்களே யானால் அவர்களின் குடும்ப நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு, இருபது ஆண்டுகள் பணிபுரிந்து இருந்தால் அவர்கள் குடும்பத்திற்கு 2 இலட்சம் ரூபாயும், 15 ஆண்டுகள் பணிபுரிந்திருந்தால் ஒன்றரை இலட்சம் ரூபாயும், பத்து ஆண்டுகள் பணிபுரிந்திருந்தால் ஒரு இலட்சம் ரூபாயும், ஐந்து ஆண்டுகள் பணிபுரிந்திருந்தால் 50 ஆயிரம் ரூபாயும் பத்திரிகையாளர் குடும்பநல நிதியுதவியாக முதலமைச்சர் பொதுநிவாரண நிதியில் இருந்து நிதியுதவி வழங்கிடும் புதிய திட்டம் 19.9.2006 முதல் இந்த அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டப்படி, திருநெல்வேலி 'மக்கள் செய்தி' இதழில் செய்தியாளராக 26 ஆண்டுகள் பணியாற்றி 20.3.2001 அன்று இயற்கை எய்திய எஸ்.மாரியப்பன் என்பவரின் துணைவியார் திருமதி. எம். தனலெட்சுமி அவர்களுக்கு 2 இலட்சம் ரூபாயும், சென்னை 'தினகரன்' இதழில் செய்தியாளராக 26 ஆண்டுகள் பணியாற்றி 13.12.2004 அன்று இயற்கை எய்திய து. பால்ராஜ் என்பவரின் மனைவி திருமதி.பா. காஞ்சனமாலா அவர்களுக்கு 2 இலட்சம் ரூபாயும், சேலம் 'தினத்தந்தி', 'மாலைமலர்' இதழ்களில் 23 ஆண்டுகள் செய்தியாளராகப் பணியாற்றி, 5.1.2007 அன்று இயற்கை எய்திய ஏ.ஜக்கையன் என்பவரின் மனைவி திருமதி.ஜெ. அந்தோணியம்மாள் அவர்களுக்கு 2 இலட்சம் ரூபாயும், வேலூர் 'மணிச்சுடர்' இதழில் 11 ஆண்டுகள் செய்தியாளராகப் பணியாற்றி 12.4.2004 அன்று இயற்கை எய்திய சையது அஹமது என்பவரின் துணைவியார் திருமதி.பிபி.ஜான் அவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாயும் பத்திரிகையாளர் குடும்ப நலநிதி உதவியாக முதலமைச்சர் பொது நிவாரண நிதியில் இருந்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 18.5.2007 அன்று வழங்கினார்.



□ □ □

# தமிழகத்தில் அர்ச்சகர் பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டன



சென்னை, திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் நடத்தப்படும் வைணவ அர்ச்சகர் பயிற்சி நிலையத்தினை 18.5.2007 அன்று மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள் ஆய்வு செய்தார். உடன் தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறைச் செயலாளர் திரு து. இராசேந்திரன், இ.ஆ.ப., மற்றும் இந்துசமய அறநிலையத் துறை சிறப்பு ஆணையர் திரு த. பிச்சாண்டி, இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர்.

இந்து சமயத்தினைச் சார்ந்த அனைத்து சமுதாயத்தினரும் அர்ச்சகர் ஆகலாம் என்று தமிழக அரசு அறிவித்ததனைத் தொடர்ந்து தமிழகத்தில் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பாக சென்னை, திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதர் சுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் வைணவ அர்ச்சகர் பயிற்சி நிலையமும், பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், மதுரை, அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோயில் மற்றும் திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் சைவ அர்ச்சகர் பயிற்சி நிலையங்களும் 11.5.2007 அன்று தொடங்கப்பட்டன. இதற்கான தொடக்க விழாவில் சென்னை, அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் இந்துசமய அறநிலையத் துறை சிறப்பு ஆணையர் திரு த. பிச்சாண்டி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு து. இராசேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் இப்பயிற்சி நிலையத்தினை குத்துவிளக்கு ஏற்றி துவங்கி வைத்தார். மதுரை. திருச்செந்தூர், பழனி, ஸ்ரீரங்கம், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இப்பயிற்சி நிலையங்களை துவக்கி வைத்தார். இந்த விழாக்களில் திருக்கோயில்களின் அறங்காவலர்கள், அறநிலையத் துறை அலுவலர்கள், திருக்கோயில் பணியாளர்கள், மாணவர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் பொதுமக்களும் திரளாக கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். இப்பயிற்சி நிலையங்களில் சென்னையில் 28 மாணவர்கள், மதுரையில் 29 மாணவர்கள், ஸ்ரீரங்கத்தில் 35 மாணவர்கள், திருச்செந்தூரில் 39 மாணவர்கள், திருவண்ணா மலையில் 34 மாணவர்கள் மற்றும் பழனியில் 35 மாணவர்கள் மற்றும் பயிற்சியினை நடத்த இருக்கும் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சி நிலையத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு தங்குவதற்கு இடமும், சீருடையும், பயிற்சிக்கான பாடப்புத்தகங்களும் மற்றும் பெட்டி, தலையணை, பாய் போன்ற உபகரணங்களும் இலவசமாக வழங்கப்படுகிறது. மேலும், மாணவர்களுக்கு உதவித் தொகையாக மாணவர் ஒருவருக்கு தலா ரூ.500 மாதந்தோறும் வழங்கப்படுகிறது. ஆசிரியர்களுக்கு அரசு பள்ளிகளில் வழங்கப்படும் சம்பளத்திற்கு இணையான சம்பளம் வழங்கப்படுகிறது. இந்த பயிற்சி முதல்நிலை அர்ச்சகருக்கான சான்றிதழ் பயிற்சி. இதன் பயிற்சிக் காலம் ஓராண்டாகும். ★



# குழந்தை வளர்ப்பு

கவியரசர் கண்ணதாசன்

பிள்ளைச் செல்வங்கள் – அவை
பேசும் தெய்வங்கள்
உள்ளம் வெள்ளை உலவும் முல்லை
கொஞ்சும் கிள்ளை கொடுமைகள் இல்லை
– பிள்ளைச்...

தாயின் பாலைத் தந்து வளர்த்தால்
தங்கம் போல் வளரும்
தழுவும் போதே தட்டி வளர்த்தால்
தன்னை உணர்ந்து விடும்!

நோயில்லாமல் காத்து வளர்த்தால்
நூறு வயது வரும்
நோக்கம் ஒன்றைச் சொல்லி வளர்த்தால்
பாரில் உயர்ந்து விடும்!

காலம் அறிந்து உணவு கொடுத்தால்
கவலை பறந்து விடும்
கல்விக் கடலில் மூழ்கிட வைத்தால்
காலத்தை வென்று விடும்!

பாலைப் போன்ற பிள்ளை மனதில்
எதுவும் பதிந்து விடும்
பயந்து பயந்து வீட்டுக்குள் வைத்தால்
பயனின்றி மாறி விடும்!

அன்பை அதிகம் காட்டி வளர்த்தால்
அதுவும் அன்பாகும்
ஐந்து வயதில் கற்பவை எல்லாம்
ஆயுள் வரை வளரும்!

பண்பாடுள்ள பிள்ளைகளைத் தான்
பாரதம் வேண்டுவது
பாரத நாட்டுத் தாய்மார்க் கெல்லாம்
வேறென்ன கூறுவது!...

பெற்றால் மட்டும் போதாதம்மா
பிள்ளை வளர்க்கவும் தெரியோணும்
கற்றால் மட்டும் போதாதம்மா
கல்வியின் பெருமை அறியோணும்!

# சீர்மரபினர் - தமிழ்நாடு பழங்குடியினர் - மீனவர் - நாட்டுப்புறக் கலைஞர்கள் - ஊனமுற்றோர் - கிராமக்கோயில் பூசாரிகள் - மண்பாண்டத் தொழிலாளர்கள் - தமிழ்நாடு தூய்மைப் பணிபுரிவோர் - சலவைத் தொழிலாளர் மற்றும் தமிழ்நாடு பொற்கொல்லர் நல வாரியங்கள் அமைப்பு

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு**

## சீர்மரபினர் நல வாரியம்

சமூக, பொருளாதார, கல்வி நிலைகளில் திட்டமிடப்பட்ட உறுதியான முன்னேற்றத்தை சீர்மரபினர் அடைவதற்கென அவர்களுக்கு தனியாக ஒரு நல வாரியம் அமைத்து அனைத்து சலுகைகளும் வழங்கப்படும் என இந்த அரசு 18.4.2007 அன்று சட்டப்பேரவையில் அறிவித்ததைத் தொடர்ந்து 19.4.2007 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் – சீர்மரபினர் நலவாரியத்திற்கு பின்வருவோரை தலைவராகவும், துணைத் தலைவராகவும், உறுப்பினர்களாகவும் நியமனம் செய்து அறிவித்துள்ளார்.

இதன் தலைவராக மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர், மிக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் அவர்களும், துணைத் தலைவராக திரு.மின்னல்கொடி, செல்லூர், மதுரை அவர்களும்,

உறுப்பினர்களாக மதுரை செல்லூர் திரு.என்.பாலு, மதுரை மாவட்டம் பூதிபுரம் திரு.வி.கல்யாணி, தேனி மாவட்டம் திரு.வைகை சேகர், மதுரை அண்ணாநகர் திரு.பி.வி.கதிரவன், மதுரை திருப்பரங்குன்றம் திரு.கே.கந்தசாமி, திருச்சி புள்ளம்பாடி திரு.வி.செல்வராசா, கரூர் திரு.க.குணசேகரன், மதுரை மாவட்டம் உசிலம்பட்டி, சேலம் மாவட்டம் நாவக்குறிச்சி திரு.எம்.மகேந்திரன், திரு.அய்யாவு, திருநெல்வேலி மாவட்டம் பெரியகோவிலான்குளம் திரு.கி.துரைராஜ், இராமநாதபுரம் மாவட்டம் பாண்டுகுடி திரு.எஸ்.முருகப்பன் ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.

❖ ❖ ❖

## தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம்

சமூக, பொருளாதார, கல்வி நிலைகளில் திட்டமிடப்பட்ட உறுதியான முன்னேற்றத்தை பழங்குடியினர் அடைவதற்கென அவர்களுக்கு தனியாக ஒரு நலவாரியம் அமைத்து அனைத்து சலுகைகளும் வழங்கப்படும் என இந்த அரசு 18.4.2007 அன்று சட்டப்பேரவையில் அறிவித்ததைத் தொடர்ந்து 19.4.2007 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் – பழங்குடியினர் நலவாரியத்திற்கு பின்வருவோரை தலைவராகவும், உறுப்பினர்களாகவும் நியமனம் செய்து அறிவித்துள்ளார்.

இவ்வாரியத்தின் தலைவராக மாண்புமிகு ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களையும், உறுப்பினர்களாக சேந்தமங்கலம்

சட்டமன்ற உறுப்பினர் திரு.பொன்னுசாமி, ஏற்காடு சட்டமன்ற உறுப்பினர் திரு.தமிழ்ச்செல்வன், உப்பிலியாபுரம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.ஆர்.ராணி, சோலூர், நீலகிரி மாவட்டம் திரு.சத்தியராஜ், நீலகிரி மாவட்டம் புதுகோத்தகிரி திரு.சி.கே.ராஜு, நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை திரு.எஸ்.இராஜேந்திரன், கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை, எடவநல்லி திரு.கெம்பன், சென்னை மேற்கு தாம்பரம் திரு.என்.பழனிசாமி, சென்னை ஊரப்பாக்கம் திரு.கி.பழங்குடிபாலு, வேலூர் மாவட்டம் புதூர்நாடு, ஆலங்காயம் திரு.எஸ்.கே.காளி, திருவண்ணாமலை மாவட்டம் ஜமுனாமரத்தூர், திரு.ப.கேசவன், சேலம் மாவட்டம் செம்மநத்தம், ஏற்காடு திரு.தங்கசாமி, திண்டுக்கல் மாவட்டம் பூதமலை, கொடைக்கானல் திரு.ஜீவா ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.

❖ ❖ ❖

## மீனவர் நல வாரியம்

**நா**ள்தோறும் இயற்கையோடு போராடி வாழ்க்கைப் பயணம் நடத்தும் மீனவர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள இந்த அரசு அவர்களுக்குத் தேவையான சமூகப் பாதுகாப்பை வழங்கும் வகையில், விவசாயத் தொழிலாளர்கள் நலன் காக்க அமைக்கப்பட்டுள்ள நலவாரியம் போன்றே, மீனவர் நல வாரியம் அமைத்து, அதைப்போன்றே அனைத்து உதவிகளையும் வழங்கும் என 20.1.2007 அன்று சட்டப்பேரவையில் ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டததைத் தொடர்ந்து 19.4.2007 அன்று மீனவர் நலவாரியத்திற்கு பின்வருவோரை தலைவர், துணைத்தலைவர், உறுப்பினர்களை நியமனம் செய்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதன் தலைவராக மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்களும், துணைத் தலைவராக குளச்சல் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.பெர்னார்டு அவர்களும்

உறுப்பினர்களாக சென்னை தண்டையார் பேட்டை திரு.கு.நற்குணம், சென்னை திருவொற்றியூர் திரு.எல்.எம்.சரவணன், இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம் திரு.எஸ்.முருகானந்தம், திருநெல்வேலி மாவட்டம் கூடுதாளை திரு.த.சுகுமார், நாகர்கோவில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜே.ஹேமச்சந்திரன், நாகர்கோவில் திரு.என்.பசலியான், நாகை மாவட்டம் சீர்காழி திரு.ஏ.அருமைராஜ கோபால், சென்னை பாலவாக்கம் திரு.டி.விஜயபாலன், தூத்துக்குடி மாவட்டம் புதூர் பாண்டியாபுரம் திரு.டி.சந்திரன், விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் திரு.பி.செல்வராஜ், கடலூர் மாவட்டம் சிதம்பரம் திரு.ஆர்.சத்தியமூர்த்தி, சென்னை இராயபுரம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.வேணு கோபால் ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.

❖ ❖ ❖

## நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம்

**ச**ட்டப்பேரவையில் 20.4.2007 அன்று 110ஆவது விதியின் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் படித்த அறிக்கை வருமாறு: 2007–2008ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தமிழர் திருநாளாம் பொங்கல் விழா கொண்டாட்டங்களின் போது சென்னையிலும், மாவட்டத் தலைநகரங்களிலும் ஏனைய நகரங்களிலும் மற்றும் பேரூர்களிலும், தமிழ்க் கலாச்சாரத்தின் சிறப்புக்களை பறைசாற்றும்

பண்பாட்டுச் சின்னங்களாக விளங்கும் தமிழகத்தின் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படும் என்றும்; சுற்றுலாத் துறையும் தமிழக அரசின் இயல், இசை, நாடக மன்றத்தின் தகுதிச் சான்றிதழ் பெற்ற தனியார் அமைப்புகளும் இணைந்து நடத்தும் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளுக்கும் இந்த அரசு தொடர்ந்து ஆதரவளிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிவிப்பினையொட்டியும், கடந்த 13.4.2007 அன்று சென்னையில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் முன்னிலையில் நாட்டுப்புறக் கலைஞர்கள் பேரணி நடத்தி அளித்த கோரிக்கையினைக் கருத்தில் கொண்டும், பாரம்பரிய கலைகளை வளர்த்து அந்தக் கலைகளையே வாழ்வாதாரமாகக் கொண்டிருக்கும் நாட்டுப்புறக் கலைஞர்களுக்கென தனியே ஒரு நலவாரியம் அமைப்பதென்று தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

இதன் தலைவராக மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களும், அலுவல் சார்ந்த சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் உறுப்பினர்களாக துறை செயலாளர், நிதித்துறைச் செயலாளர், இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவர், இயல், இசை, நாடக மன்றத்தின் செயலாளர் அவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அலுவல்சாரா உறுப்பினர்களாக முனைவர் கே.ஏ.குணசேகரன் , தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு. வி.தமிழ்ச்செல்வன், பாளையங்கோட்டை சேவியர் கல்லூரி திரு.ஆர்.தனஞ் செயன், சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் திரு.வி.அரசு, கூத்துப் பட்டறை திரு.முத்துச்சாமி, திண்டுக்கல் சிஸ்டர் சந்திரா, சிலம்பாட்டக் கலைஞர் திரு.ஜான் பாபா, திருமதி. ஜெயா அருள்பதி, திருமதி. சின்னப்பொன்னுகுமார் ஆகியோர் நியமிக்கப் படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

## ஊனமுற்றோருக்கான நலவாரியம்

2007 ஆம் ஆண்டுக்கான ஆளுநர் உரையிலும், 2007–2008ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையிலும் ஊனமுற்றோருக்கான முழுமையான சமூகப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் அவர்களுக்கென தனி நலவாரியம் ஒன்று அமைக்கப்பட்டு, அவர்களுக்கான நலத்திட்ட உதவிகள் அந்த வாரியத்தின் மூலமாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, "ஊனமுற்றோருக்கான நலவாரியம்" ஒன்றினை 22.4.07 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

இதன் தலைவராக மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களும், அலுவல் சார்பு உறுப்பினர்களாக சமூகநலத்துறைச் செயலாளர், ஊனமுற்றோருக்கான மாநில ஆணையாளர் ஆகியோரும்

அலுவல் சாரா உறுப்பினர்கள் திரு. எஸ்.எம்.ஏ.ஜின்னா, திரு. பேராசிரியர் சகாதேவன், திரு. எம்.சி.கோமகன், திரு. நா.கருணாநிதி, டாக்டர் சகோதரி ரீட்டா மேரி, திருமதி. சரஸ்வதி நாராயணசாமி, டாக்டர் பி.வீரமணி, சிம்மச் சந்திரன், ரெ. தங்கம், ஜெ.பி.கே. பிரேம்நாத், கி.கோபிநாத்,எஸ். ராமகிருஷ்ணன், திருமதி. பார்வதி விஸ்வநாதன், டாக்டர். சி. ராமசுப்பிரமணியம் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

❖ ❖ ❖

## கிராமக்கோயில் பூசாரிகள் நல வாரியம்

2007–2008 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் கிராமக்கோயில்களில்உள்ள பூசாரிகள் நலனுக்காக ஒரு தனி நல வாரியம் அமைக்கப்பட்டு, அவர்களுக்கான நலத் திட்ட உதவிகள் அந்த வாரியத்தின் மூலமாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, ''கிராமக் கோயில் பூசாரிகள் நல வாரியம்'' ஒன்றினை 22.4.07 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

இதன் தலைவராக மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களும்,

அலுவல் சார்பு உறுப்பினர்களாக இந்து சமய அறநிலையத்துறைச் செயலாளர், நிதித்துறைச் செயலாளர், வருவாய்த்துறைச் செயலாளர், சமூக நலத்துறை செயலாளர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர், தொழிலாளர் நலத்துறை ஆணையாளர், நில நிருவாகத் துறை இணை ஆணையாளர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை கூடுதல் ஆணையாளர் ஆகியோரும்

அலுவல் சாரா உறுப்பினர்களாக கிராமக்கோயில் பூசாரிகள், பேரவை நிருவாக அறங்காவலர் எஸ்.வேதாந்தம், கோவை ஏ.கே. சௌந்தராசன், திரு.சி.கனகராசன், திரு.ஆர்.மாரியப்பன், திரு. எம்.ராஜாமணி, திரு. ஆ.ப.வி.எஸ். மணியன், திரு. கண்நடராஜன் பூசாரி, திரு. பட்டாபி பூசாரி, திரு. நடராஜன் பூசாரி ஆகியோரும் நியமிக்கப் பட்டுள்ளார்கள்.

❖ ❖ ❖

## மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியம்

2007–2008 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் மண்பாண்டத் தொழிலாளர் நலனுக்காக ஒரு தனி நல வாரியம் அமைக்கப்பட்டு அவர்களுக்கான நலத்திட்ட உதவிகள், அந்த வாரியத்தின் மூலமாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, ''தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியம்'' ஒன்றினை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.

இந்த வாரியத்தின் தலைவராக தமிழ்நாடு மண்பாண்ட உற்பத்தியாளர் சங்கத்தைச் சேர்ந்த சே.ம. நாராயணன் அவர்களும்,

வேலை அளிப்போர் பிரதிநிதிகளாகிய திருவில்லிப்புத்தூர் கோனரி நாராயணன், சென்னை பழைய வண்ணை டன்லப் பி. ரவி, முசிறி தமிழ்மன்னன், திருநெல்வேலி வேல்முருகன், சென்னை, பெரம்பூர் பேரக்ஸ் சாலை சு. தீனதயாளன் ஆகியோரும், தொழிலாளர் பிரதிநிதிகளாகிய கரூர் பள்ளப்பாளையம் அ.துரைசாமி, மதுரை ஏ.அழகர், விருதுநகர் ஆர்.முத்துவேலு, சென்னை கே. தங்கமணி, திருவண்ணாமலை துரை.சண்முகம், இராமநாதபுரம் கி.அறிவழகன் ஆகியோரும் இவ்வாரியத்தின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

❖ ❖ ❖

## தமிழ்நாடு பொற்கொல்லர் நல வாரியம்

2006 – 2007 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் அறிவித்தவாறு அமைப்புச் சாராத் தொழிலாளர்கள் நலத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு பொற்கொல்லர் நல வாரியம் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாரியத்தின் தலைவராக தமிழக அரசின் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களையும்,

இந்த வாரியத்தின் அரசுப் பிரதிநிதிகளாக தொழிலளார் ஆணையர், நிதித்துறைச் செயலாளர், சட்டத்துறை செயலாளர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை இயக்குநர், சமூக நலத்துறை இயக்குநர் ஆகியோரையும்,

வேலையளிப்போர் பிரதிநிதிகளாக சென்னை டாக்டர் கவிஞர் இரவி பாரதி, மதுரை திரு. எம்.ஆர். இராஜவேல், சென்னை திரு. பி.என். விஸ்வநாதன், விழுப்புரம் திரு. கே. வி. செல்வம், சென்னை திரு. ஆ. துரைவேலு, தருமபுரி திரு. எம். மூர்த்தி, நாகர்கோயில் திரு. என்.எஸ்.ராஜா ஆகியோரையும்

தொழிலாளர் பிரதிநிகளாக சென்னை திரு. வி.சிவநேசன் கோவை திரு. பி. சந்திரன், சென்னை திரு. என். செல்வராஜ், போளூர் திரு. எம். ராமச்சந்திரன், தென்காசி திரு. திருமலைக்குமாரசாமி யாதவ் ஆகியோரையும் தமிழ்நாடு பொற்கொல்லர் நல வாரிய உறுப்பினர்களாக நியமனம் செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.

❖ ❖ ❖

## தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் நல வாரியம்

2006 – 2007 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையிலும் அறிவித்தவாறு அமைப்புச் சாராத் தொழிலாளர்கள் நலத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் நல வாரியம் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 22.4.2007 அன்று மீண்டும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாரியத்தின் தலைவராக தமிழக அரசின் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களையும், இந்த வாரியத்தின் அரசுப் பிரதிநிதிகளாக செயலாளர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை இயக்குநர், சமூக நலத்துறை இயக்குநர் ஆகியோரையும், வேலையளிப்போர் பிரதிநிதிகளாக சென்னை திரு. கே.எஸ். ஜானகிராஹசயைஒ

மன், நெல்லை திரு. ஆர். மகாராஜன், மதுரை திரு. பி. முருகன், சென்னை திரு. ஆர்.ரங்கநாதன், காஞ்சிபுரம் திரு. சுப்பிரமணி ஆகியோரையும்,

தொழிலாளர் பிரதிநிதிகளாக விழுப்புரம் திரு.வி.சண்முகம், சென்னை தண்டையார்பேட்டை திரு.எம்.எம்.சாமி, நங்கநல்லூர் திரு. ஈ.பொன்முடி, செங்கோட்டை திரு. ஏ. சாமி, சென்னை தியாகராய நகர் திரு. இலா. பாஸ்கரன், விருதுநகர் திரு. பெ. லட்சுமணன் ஆகியோரையும் தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் நல வாரிய உறுப்பினர்களாக நியமனம் செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.

❖ ❖ ❖

## தமிழ்நாடு தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியம்

அமைப்புச் சாராத் தொழிலாளர்கள் நலத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்காக பல்வேறு தொழிலாளர் நல வாரியங்கள் இந்த அரசினால் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. அதன்படி, துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் தூய்மைப் பணிபுரிவோரின் நலன்களை பாதுகாத்திடும் வகையில் 'தமிழ்நாடு தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியம்' ஒன்றினை ஏற்படுத்திடும், தமிழக அரசின் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களை இவ்வாரியத்தின தலைவராகவும், ஆதிதிராவிட நலத்துறை இயக்குநர், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் நலத்துறைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை செயலாளர், பள்ளிக்கல்வித்துறை செயலாளர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறைச் செயலாளர், பழங்குடியினர் நலத்துறை ஆணையர், தாட்கோ மேலாண்மை இயக்குநர், பேரூராட்சிகள் துறை ஆணையர், ஊராட்சிகள் துறை ஆணையர், ஊரக வளர்ச்சித்துறை ஆணையர் ஆகியோரை அலுவல் சார்ந்த பிரதிநிதிகளாகவும், மதுரை திரு. கே. கோவிந்தசாமி, சென்னை திரு. பென்சிலையா, திருநெல்வேலி திரு. ஜி.காளிமுத்து, சேலம் குகை திருமதி. பி.விஜயலட்சுமி, கோவை திரு. பி.இராமமூர்த்தி, சென்னை திரு. என். திருநாவுக்கரசு, திண்டுக்கல் திரு.கே.ஆர்.கணேசன், தூத்துக்குடி திரு. பி. சம்பத், கிருஷ்ணகிரி திரு. ஜே. நடேசன், ஈரோடு திரு. கே. செம்பன், மதுரை திரு. கனி அமுதன் ஆகியோரை அலுவல் சாராத பிரதிநிதிகளாகவும், தமிழ்நாடு தூய்மைப் பணிபுரிவோர் நல வாரிய உறுப்பினர்களாக நியமனம் செய்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.

❖ ❖ ❖


# சிறுபான்மையினர் முன்னேற்றத்தில் சிறப்புக் கவனம் செலுத்திட தனி இயக்குநர் அலுவலகம்

மாண்புமிகு முதலமைச்சர்

**கலைஞர்** அவர்கள் அறிவிப்பு


**சி**றுபான்மையினரின் சமூக, பொருளாதார, கல்வி முன்னேற்றத்திற்கு அரசின் தனி கவனம் தேவை என்பதைக் கருத்தில் கொண்டு, அவர்களின் நலனுக்கென ஒரு தனி இயக்குனரகம் அமைக்கப்படும் என்று 2007–2008 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, ''சிறுபான்மையினர் நல இயக்ககம்" ஒன்றினை அமைத்திட அனுமதித்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 6.4.2007 அன்று அறிவித்துள்ளார்.

இந்த இயக்ககம் ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவரை இயக்குநராகக் கொண்டு, உரிய பணியாளர் களுடன் தனித்து இயங்கும்; சிறுபான்மைச் சமுதாய மக்களின் சமூக, பொருளாதார, கல்வி முன்னேற்றத்திற்கான திட்டங்களில் சிறப்புக் கவனம் செலுத்தி, அத்திட்டங்களை விரைந்து நிறைவேற்றுவதற்குப் பாடுபடும். ★


கோ-ஆப்டெக்ஸ்
விக்ரமாதித்தன் வேதாளத்திற்கு சொல்லும் பதில்
நான் கேட்கிற 3 கேள்விகளுக்கு சரியான பதில் இல்லன்னா உன் தலை வெடிச்சிடும்.
கோ-ஆப்டெக்ஸ் பட்டுப் புடவைகளுக்கும் மற்ற கடைகளில் உள்ள பட்டுப் புடவைகளுக்கும் வித்தியாசம் என்ன?
கோ-ஆப்டெக்ஸ்ல இருக்கிற பட்டு சேலைகள் எல்லாமே 3 பட்டு இழைகள் சேர்த்து முறுக்கிய பட்டு நூலினால் நெய்யப்படுகிறது. ஆனால் மற்ற இடங்களில் ஒரே நூலில் நெய்யறாங்க. ஆதலால் கோ-ஆப்டெக்ஸில் வாங்குகிற பட்டுப் புடவைகள் தரமானதாகவும், நல்லாவும் உழைக்கும்.
கோ-ஆப்டெக்ஸில் துணி வாங்குவதால் யாருக்கு லாபம்?
கோ-ஆப்டெக்ஸ்ல துணி வாங்கினா அந்தப்பணம் நேரடியா 2 இலட்சம் நெசவாளர் குடும்பங்களுக்கு போய் சேரும்.
கோ-ஆப்டெக்ஸில் துணிகளின் தரத்திற்கு என்ன உத்திரவாதம்?
கோ-ஆப்டெக்ஸ் துணிகளின் தரமே அதற்கு உத்திரவாதம். பட்டுக்கு சில்க் மார்க், கைத்தறி துணிகளுக்கு கைத்தறி மார்க் சான்றிதழ்கள் கிடைக்கப்பெற்ற முதல் நிறுவனம் கோ-ஆப்டெக்ஸ் தான்.
பதில் டக்கரா இருக்கு
சிறப்புத் தள்ளுபடி 30%
தலைமுறைகளாய் தொடரும் பந்தம் - கோ-ஆப்டெக்ஸ்

தமிழரசு

R.N.I. No.21446/70-Regn.No.TN/ARD/48/06-08
TN/PMG(CCR) WPP-518/06-08





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்,
20 தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி
அவர்தம் மரபுரிமையினருக்கு ரூ.1.75 கோடி
பரிவுத் தொகைக்கான காசோலையினை
வழங்கினார்கள் (26.05.2007).

தமிழரசு
அலுவலகப் பிரதி



சட்டப் பேரவையில்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

# கலைஞர் மு.கருணாநிதி அவர்கள்

2007-2008ஆம் ஆண்டிற்கான காவல் துறை மற்றும் தொழில் மற்றும்
தகவல் தொழில்நுட்பவியல் துறை மானியக் கோரிக்கையின் மீது நடைபெற்ற
விவாதத்தின்போது ஆற்றிய பதிலுரை

தமிழரசு
அலுவலகப் 

சட்டப்பேரவையில்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்

2007-2008ஆம் ஆண்டிற்கான காவல்துறை (26.4.2007) மற்றும்

தொழில் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை (8.5.2007)

மானியக் கோரிக்கையின் மீது

நடைபெற்ற விவாதத்தின்போது ஆற்றிய பதிலுரை

வெளியீடு :

இயக்குநர்,

செய்தி-மக்கள் தொடர்புத்துறை,

சென்னை.

சிறப்பு வெளியீடு எண்.7

தமிழரசு இலவச வெளியீடு

ஜூன் 2007

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
சென்னை – 600 002.

## சட்டப்பேரவையில்
## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
## கலைஞர் **மு. கருணாநிதி** அவர்கள்
## 2007-2008ஆம் ஆண்டிற்கான காவல் துறை மானியக் கோரிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்தின்போது ஆற்றிய பதிலுரை (26.4.2007)

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பதிலுரையைத் தொடங்குவதற்கு முன்பு ஒரு பசுமையான நினைவை இங்கே என் நெஞ்சிலும், அவையோர் நெஞ்சிலும் படர விடுகின்றேன். **12-7-1962** அன்று இதே மன்றத்தில் காவல் துறை மானியத்தில் அன்றைய எதிர்க்கட்சியின் துணைத் தலைவராக இருந்த நான் ஆற்றிய உரையை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அப்பொழுது பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக வீற்றிருந்தார். அன்று நான் ஆற்றிய உரையின் ஒரு பகுதி இது. சொல்லப் போனால், முதல் பகுதி இது. தொடக்கப் பகுதி இது.

"நமது போலீசார் ஒரு பெரிய தியாகப் பரம்பரையை நம் நாட்டில் உருவாக்கி வருகின்றவர்கள். பொதுவாக, தமிழகத்தைப் பொறுத்தவரையில் சொல்ல வேண்டுமானால் வேறு எந்த நாட்டிலும் இல்லாத அளவிற்கு இந்தியத் துணைக் கண்டத்தில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு நமது மாநிலத்தில் இருக்கின்ற போலீசார் தங்களுடைய கடமையை ஆற்றி வருகிறார்கள் என்பதை நான் இங்கு சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது." மறந்துவிடக் கூடாது. அப்பொழுது நான் எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர். எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் ஆளுங்கட்சி

வரிசையிலே பெருந்தலைவர் காமராஜர் போன்றவர்கள் அமர்ந்திருந்தபோது போலீசாரைப் பற்றி கூறிய வாசகம் இது.

"கடும் மழையிலும், கொடிய வெயிலிலும், நள்ளிரவிலும், தங்கள் பணியினை, கொலைகாரர்கள் மத்தியிலும், கள்வர்கள் இடையிலேயும், தங்கள் உயிரைப் பற்றிய கவலையில்லாமல் மரணத்தைத் துச்சமாக மதித்து கடுமையாகப் போரிடுகின்ற அந்தத் தியாக சீலர்களை திராவிட முன்னேற்றக் கழகம் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட உழைப்பின் மேன்மையை உணர்ந்து அவர்களுக்கு மேலும் பல சலுகைகள் வழங்க வேண்டுமென்று கேட்பதுதான் இந்த வெட்டுப் பிரேரணைமீதும், இந்த மானியத்தின்மீதும் நான் எழுப்பும் குரல் என்பதை முதற்கண் தெரிவித்துக் கொள்கின்றேன்."

நேற்றைக்கு வெட்டுத் தீர்மானத்தைப் பற்றிப் பெரிய பிரச்சினை இங்கே வந்தது. அதனைப் பற்றி விளக்கம் அளிக்கும்போது ஒன்றைச் சொல்ல விட்டுவிட்டார்கள். வெட்டுப் பிரேரணையினுடைய வாசகம் எப்படி இருக்க வேண்டுமென்றால், கல்வித் துறைக்கு அல்லது நீர்ப்பாசனத் துறைக்கு ரூ.2,000 கோடி என்று ஒதுக்கியிருப்பதிலிருந்து 100 ரூபாயை வெட்ட வேண்டும் என்றுதான் தீர்மானம் கொடுப்பவர்கள் கொடுப்பார்கள். எதிர்க்கட்சிக்காரர்கள் கூட்ட வேண்டுமென்றுதான் சொல்ல வேண்டும். ஆனால், வெட்டுத் தீர்மானம் 100 ரூபாயைக் குறைக்க வேண்டும் என்று இருக்கும். அப்படிச் சொன்னால்தான் அவர்களுக்குப் பேசும் வாய்ப்பு. கூட்ட வேண்டுமென்று கேட்பதற்குப் பதிலாக, குறைக்க வேண்டுமென்று கேட்டு அந்த வெட்டுத் தீர்மானத்தின்மீதுதான் எதிர்க்கட்சிக்காரர்கள் பேசுவார்கள்.

ஆனால் பேசும்பொழுது, இங்கே நம்முடைய எதிர்க்கட்சியினுடைய தலைவர்களும் மற்றும் தோழமைக் கட்சிகளுடைய தலைவர்களும், உறுப்பினர்களும் எடுத்துரைத்ததைப்போல, இன்னும் காவல் துறையினருக்குத் தேவை, தேவை, இவைகளையெல்லாம் தாருங்கள் என்று கேட்பதைப்போலத்தான் கேட்பார்கள். அப்படிப்பட்ட அந்த நிகழ்விலேதான் நான் இந்த அவையில் எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவராக நின்று, பெருந்தலைவர் காமராஜருக்கு முன்பு, பக்தவத்சலனாருக்கு முன்பு, சி. சுப்பிரமணியம் அவர்களுக்கு முன்பு கேட்டேன்; காவல் துறையினருக்கு இன்னும் பல வசதி வாய்ப்புகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டேன்.

இங்கே நம்முடைய ஜி.கே. மணி அவர்கள் பேசும்பொழுது சொன்னார்கள்; அவர்களுக்குச் சம்பளத்தையாவது உயர்த்திக் கொடுக்கக் கூடாதா? என்ன செய்யப் போகிறீர்கள்? இப்போதாவது, அவர்கள் ஏங்கித் தவிக்கிறார்களே என்று சொன்னார். அவர்கள் ஏங்கித் தவித்தார்களோ, இல்லையோ, அவர்களுக்காக ஜி.கே. மணி அவர்கள் இங்கே ஏங்கித் தவித்த காட்சியை நானும் கண்டேன், எல்லோரும் கண்டார்கள். ஆனால், ஒன்றை நினைவுபடுத்த விரும்புகின்றேன். 1967–க்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி உருவாகி, நம்முடைய வாய்ப்புக் குறைவின் காரணமாக பேரறிஞர் அண்ணா அவர்களை நாம் இழந்து, அதற்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பை நான் ஏற்க வேண்டிய சூழ்நிலை உருவாகி, ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன், காவல் துறையினருடைய கஷ்ட நஷ்டங்களை எண்ணிப் பார்த்து, அவர்களுக்கு என்ன செய்யலாம் என்று யோசித்து, இந்தியாவிலேயே முதன்முதலாக போலீஸ் கமிஷன்

அமைத்த மாநிலம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடந்த இந்த மாநிலம்தான்.

ஒரு காரியத்தைச் செய்தவர்கள் மார் தட்டிக்கொள்வதிலே தவறில்லை. அந்த வகையிலேதான் முதன்முதலாகத் தமிழகத்தில் காவல் துறைக்காக ஒரு கமிஷன், கோபாலசாமி அவர்களுடைய தலைமையில் – அவர் I.A.S. அல்ல I.C.S.—அவருடைய தலைமையில் அமைத்து, அதனுடைய பரிந்துரைகளை நிறைவேற்றினோம். சரியாகச் சொல்ல வேண்டுமேயானால், அப்போது காவலர்களுடைய மாதச் சம்பளம் 65 ரூபாய். அந்த முதல் காவல் துறை கமிஷன் செய்த சிபாரிசின்படி மாதச் சம்பளம் 200 ரூபாயாக உயர்ந்தது. அதற்குப் பிறகு இன்னொரு போலீஸ் கமிஷன்–நான் போட்டதெல்லாம் போலீஸ் கமிஷன்தான், நான் வேறு கமிஷனை நாடிப் போகவில்லை. அப்படிப்பட்ட இரண்டாவது கமிஷனில் 200 ரூபாய் என்பது 500 ரூபாயாக உயர்த்தப்பட்டது. அதற்குப் பிறகு, மத்திய அரசு ஊழியர்களுக்கு ஐந்தாவது ஊதியக் குழு வாயிலாக ஊதியங்களை உயர்த்தித் தந்தபோது, 65 ரூபாய் மாதச் சம்பளத்தில் இருந்த காவலர்களுக்கு இன்றையதினம் மாதம் 6,500 ரூபாய் கிடைக்கிறது என்றால், இது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே எடுத்த முதல் முயற்சியினுடைய விளைவு என்பதை அரசியல்வாதிகளாக இருப்பவர்கள் வேண்டுமானால் அரசியலுக்காக ஒத்துக்கொள்ளாமல் இருக்கலாம், ஆனால், மனசாட்சி உள்ள காவல் துறை நண்பர்கள் நிச்சயமாக இதை உணர்வார்கள், உணர்ந்து, நன்றி பாராட்டுவார்கள்.

இங்கே நம்முடைய நண்பர் ஜெயக்குமார் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். காவலர்களுக்குக் குடியிருப்பு அம்மா ஆட்சியில், அதாவது அ.தி.மு.க. ஆட்சியில் கட்டித் தந்ததைப்போல் நீங்கள் கட்டித் தரவில்லை என்று சொன்னார்கள். எனக்கு இதிலே யார் காவலர்களுக்கு அதிகம் செய்தார்கள், யார் செய்யவில்லை என்ற போட்டா போட்டிக்கு நான் வரவும் இல்லை, அதிலே ஜெயக்குமாரோடு எனக்கு அல்லது செங்கோட்டையனோடு எனக்கு வம்பு, தும்பு எதுவும் இல்லை. இரண்டு பேரும் எதைச் சொல்கிறோம், ஒருவருக்கொருவர் குறை சொல்லி, ஆளுங்கட்சி எதிர்க்கட்சியையும், எதிர்க்கட்சி ஆளுங்கட்சியையும் குறை சொல்லி, இன்னும் நிரம்பச் செய்ய வேண்டுமென்று, அந்த இலாபத்தை நாம் இரண்டு பேரும் சேர்ந்து கொடுப்பது பாதிக்கப்பட்டிருக்கின்ற காவல் துறையினருக்குத்தான். அதைத்தான் இன்றைக்கு நாம் செய்திருப்பதாக நான் கருதுகின்றேன்.

அவர்கள் சொன்னார்கள், அ.தி.மு.க. ஆட்சியிலே கட்டித் தரப்பட்ட குடியிருப்புகளைவிட காவலர்களுக்குத் தி.மு.க. ஆட்சியில் குறைவாகத்தான் குடியிருப்புகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். என்னிடத்திலே உள்ள புள்ளிவிவரத்தின்படி, **1991–1996**, என்ற **5** ஆண்டு கால ஆட்சியில், அ.தி.மு.க. ஆட்சியில், காவலர்களுக்குக் குடியிருப்புகள் **3,503** கட்டித் தர ஆணையிடப்பட்டிருக்கின்றது. **1996–2001**இல், இந்த **5** ஆண்டு கால ஆட்சியில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் **12,103** குடியிருப்புகள் கட்டித் தர ஆணையிடப்பட்டிருக்கின்றது. **12** ஆயிரம் என்பது மூவாயிரத்தைவிடக் குறைவானது என்று சொன்னால், நான் ‘ஆமாம்’ என்று ஒத்துக்கொள்கின்றேன். அது மாத்திரமல்ல,

அதற்குப் பிறகும் 2006–2007இல் தி.மு.க. ஆட்சியில், 3 ஆயிரம் வீடுகள் கட்டித்தர ஆணையிடப்பட்டுள்ளது. 2007–2008இல் தி.மு.க. ஆட்சியில் மேலும் இரண்டாயிரம் வீடுகள் கட்டித்தர ஆணையிடப்படவுள்ளது. எனவே, யார் அதிக வீடுகளைக் கட்டித் தந்தார்கள் என்பதல்ல முக்கியம். இந்தப் போட்டா போட்டி ஆளுகின்ற கட்சிக்கும், ஆளப் போகிறோம் என்று எண்ணிக்கொண்டிருக்கிற எதிர்க்கட்சிக்கும் இடையிலே இருந்தால், அது இடையிலே இருப்பவர்களுக்கு நல்லதுதான். அந்த வகையிலேதான் நான் இந்தப் போட்டா போட்டியையும் வரவேற்கின்றேன். இதை நான் தவறு என்று கருதவில்லை.

இன்னொன்று சொன்னார்கள். குற்றங்கள் பெருகிவிட்டன தி.மு.க. ஆட்சியில், அம்மா ஆட்சியில் அமைதிப் பூங்காவாகத் தமிழகம் இருந்தது, இந்த ஆட்சியிலே பூங்காவில் புயல் வீசிக்கொண்டிருக்கிறது என்று; இப்பொழுது புயல் எங்கே வீசுகின்றது என்று எல்லோருக்கும் தெரியும். இங்கே வீசவில்லை புயல். இருந்தாலும், அம்மாவின் ஆட்சியிலேதான் அமைதியாக இருந்தது என்று சொன்னார்கள். நான் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன், ஒரு புள்ளிவிவரத்தை.

அ.தி.மு.க. ஆட்சியில் ஜூன் 2005 முதல் டிசம்பர் 2005 வரையிலான காலகட்டத்திலும், கழக ஆட்சியில் ஜூன் 2006 முதல் டிசம்பர் 2006 வரையான காலக்கட்டத்திலும் தமிழகத்தில் நடைபெற்ற பல்வேறு குற்றங்களை ஒப்பிட்டுப் பார்த்தால், கழக ஆட்சியில் குற்றங்கள் குறைந்துள்ளன என்பதை அறியலாம்.

கன்னக் களவுகள், அ.தி.மு.க. ஆட்சியில் 2,235, கழக ஆட்சியில் 2,061. திருட்டு, அ.தி.மு.க. ஆட்சியில் 9,304, கழக ஆட்சியில் 8,079. கொலைச் செயல்கள், அ.தி.மு.க. ஆட்சியில் 759, கழக ஆட்சியில் 749. காயம், கொடுங்காயம் ஏற்படுத்திய் நிகழ்ச்சிகள், அ.தி.மு.க. ஆட்சியில் 8,238, கழக ஆட்சியில் 7,794. பெண்களுக்கு எதிரான கற்பழிப்புக் குற்றங்கள், அ.தி.மு.க. ஆட்சியில் 318, கழக ஆட்சியில் 264. ஆள் கடத்தல், அ.தி.மு.க. ஆட்சியில் 476, கழக ஆட்சியில் 458. வரதட்சணை மரணங்கள், அ.தி.மு.க. ஆட்சியில் 140, கழக ஆட்சியில் 107. கணவர் அல்லது அவரது உறவினர்களால் ஏற்பட்ட கொடுமைகள், அ.தி.மு.க. ஆட்சியில் 1,086, கழக ஆட்சியில் 764. பெண்களை மானபங்கப்படுத்தல் அ.தி.மு.க. ஆட்சியில் 1,050, கழக ஆட்சியில் 666. நம்பிக்கை மோசடி, அ.தி.மு.க. ஆட்சியில் 115, கழக ஆட்சியில் 100. தீ வைப்பு நிகழ்ச்சிகள், அ.தி.மு.க. ஆட்சியில் 304, கழக ஆட்சியில் 239. ஏமாற்றுதல், அ.தி.மு.க ஆட்சியில் 1,554, கழக ஆட்சியில் 1,026. குற்றங்களைக் கண்டுபிடித்தல், அ.தி.மு.க. ஆட்சியில் 88 சதவிகிதம், கழக ஆட்சியில் 93 சதவிகிதம். கண்டுபிடிக்கப்பட்ட களவு போன சொத்தின் மதிப்பு, அ.தி.மு.க. ஆட்சியில் ரூ.24 கோடி, கழக ஆட்சியில் ரூ.27 கோடி. மீட்கப்பட்ட சொத்து, அ.தி.மு.க. ஆட்சியில் ரூ.19 கோடி, கழக ஆட்சியில் ரூ.23 கோடி. இந்திய தண்டனைச் சட்டத்தின்கீழ் பதிவான பிற வகை வழக்குகள், அ.தி.மு.க. ஆட்சியில் 64,701, கழக ஆட்சியில் 60,535. இதிலே பெரிய வித்தியாசம் ஒன்றும் இல்லை. ஒரு 100, 200 தான் வித்தியாசம் இருக்கும் அந்த ஆட்சிக்கும், இந்த ஆட்சிக்கும்.

அப்படியிருக்கும்போது, நாம் நினைப்பதைப்போல எதிர்க்கட்சியிலே இருக்கிற நீங்களும் நினைத்தால், இரண்டு பேரும் சேர்ந்து, எல்லோரும் சேர்ந்து நாட்டில் நல்லுறவை வளர்க்கலாம், நாட்டில் தீமைகளை ஒழிக்கலாம். அதை விட்டுவிட்டு, நீதான் தீமையை அதிகமாகச் செய்தாய் நாங்கள் செய்ததெல்லாம் நன்மைகள்தான், நாங்கள்தான் அமைதியாக இந்த நாட்டை வைத்திருக்கிறோம் என்று இப்படிப் பேசுவது, யார் அமைதியை நிலைநாட்டுவது என்பதிலே நமக்குள்ளே வாக்குவாதம் வந்து, அதுவே முற்றி, அதுவே தகராறாக ஆகி, அதுவே பெரிய போர்க்களமாக ஆகி, நமக்குள்ளே அபிப்பிராய பேதங்களை மேலும் மேலும் வளர்ப்பதற்குத்தான் அது வழிவகுக்கும் என்பதையும், இதிலே போட்டா போட்டி வேண்டாம் என்று எதிர்க்கட்சி நண்பர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இன்னொன்று நம்முடைய ஜெயக்குமார் சொன்னார், காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்திற்கு நிதி குறைக்கப்பட்டுவிட்டது என்றார். நேற்றையதினம் நம்முடைய செங்கோட்டையன் அவர்களும் அதையே குறிப்பிட்டார். அவர்கள் இந்தப் புத்தகத்திலே இருக்கின்ற அந்தக் குறிப்புகளை வைத்துக்கொண்டு அதைச் சொன்னார்கள். அவர்கள் அதை வைத்துக்கொண்டு சொன்னதிலே தவறு இல்லை. ஆனால் அதை ஆழமாகப் பார்த்தால், 2002–2003இல் அ.தி.மு.க. ஆட்சியில் 136.20 கோடி ரூபாய். 2003–2004இல் அதே அ.தி.மு.க ஆட்சியில் 89.14 கோடி ரூபாய். ஆக, இந்தக் குறைவு அ.தி.மு.க ஆட்சியிலேயே ஏற்பட்டுவிட்டது. ஆகவே, நான் அ.தி.மு.க. ஆட்சியைக் குறை கூறவில்லை. மத்திய சர்க்கார் தந்த உதவியைக்கூட, percentage விகிதத்திலேதான் தந்தார்கள். அப்படித்

தந்தபோது, 50:50 என்று தந்தபோது நிறைவாக இருந்தது. பிறகு 60:40 என்று தந்தபோது, மாநில அரசினுடைய பங்கு குறைந்து, அது ஒன்றுக்கொன்று வித்தியாசமாக இருந்தது. அதனால்தான் அ.தி.மு.க. ஆட்சியிலே மீண்டும் குறைக்கப்பட்டது என்பதற்கான விவரமாகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காவலர்களுடைய காலியிடங்கள் நிரப்பப்படவில்லை. எப்போது நிரப்புவீர்கள் என்று நம்முடைய ஜெயக்குமார் அவர்களும், எதிர்க்கட்சி சார்பிலே பேசியவர்களும், தோழமைக் கட்சியின் சார்பிலே பேசியவர்களும் பேசினார்கள். காலியிடங்களை நிரப்பிட, கடந்த ஆண்டு 5,000 பேரைத் தேர்ந்தெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, இப்போது நடைமுறையிலே அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் 5,000 பேரை இந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப் போகிறோம் என்ற நல்ல செய்தியையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காவலர்களுக்கு Feeding charges குறைந்து வருகிறது; குறைக்கப்பட்டுள்ளது என்று ஜெயக்குமார் மெத்தவும் கவலைப்பட்டார். அவருக்குத் தெரியும். அரிசி விலை குறைந்து இருக்கிற காரணத்தால், அந்தக் கணக்கில் அது குறைவாகத் தெரிகிறது. அது தெரியும் அவருக்கு. தெரிந்தாலும் ஒரு விவாதத்திற்குச் சொல்லி வைக்க வேண்டுமே என்பதற்காகச் சொல்கிறார். Feeding குறைவாக இருக்கிறது என்றால் யாராவது நம்ப முடியுமா? அதுவும் ஜெயக்குமாரைப் பார்த்தால், feeding குறைவு என்று யாராவது சொல்வார்களா?

பொதுவாக, தமிழகத்தில் காவல் துறையில் **1962** ஆம் ஆண்டு Total strength **29,560** பேர். **1964–ல் 35,000** பேர். **1969–ல் 41,337** பேர், **1989–ல் 66,856** பேர், **2001–ல் 91,340** பேர், **2006–ல் 98,897** பேர். காவல் துறையிலே Total strength **2007–ல்**, இப்பொழுது **99,774** பேர். வெகு விரைவில் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சம் என்ற இலக்கை அடையும் என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவர்களுக்குத்தான் அந்தக் காலத்தில் மாதம் **65** ரூபாய் என்று ஊதியம் இருந்து, இன்றையதினம் **6,000** ரூபாய் என்கிற அளவிற்குமேல் உயர்ந்து இருக்கிறது என்றால், ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு கட்சியினுடைய அரசும் அவர்களாலான உதவிகளை, சம்பள உயர்வைக் காவலர்களுக்குத் தந்ததன் காரணமாகவும், ஒன்றிரண்டு அரசுகள் அதைப் பற்றிக் கவலைப்படாமல் இருந்தாலும், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்தவரையில் நானே அந்தக் காலத்திலே போலீஸ்காரர்களுக்காகப் பாடி, பாட்டு எழுதி, நாடகமே நம்முடைய பெரியவர் பக்தவத்சலம் அவர்களால் தடை செய்யப்பட்டு, தடைசெய்யப்பட்ட நாடகத்தினுடைய பாடலை இதே அவையில் நீங்கள் தடை செய்தாலும் இங்கே பாடுகிறேன், கேளுங்கள் என்று,

> “போலீசு வேலைக்கென்று போகின்ற நொப்பனுக்கு,
> புத்திரனாய் வந்துதித்த தரித்திரமே கண் வளராய்!
> சேப்புத் தொப்பி மாட்டிக்கிட்டு
> காக்கி உடை போட்டுக்கிட்டு
> போகின்ற நொப்பனிடம்
> பழைய கடன்காரன் வந்து

பாக்கி கேட்டால்
கமண்டலமும் வேணுமடா,
காவி உடை வேணுமடா''

என்று பாடிய அந்தப் பாட்டையெல்லாம் பெரியவர் பக்தவத்சலனார் அவர்களுக்கு நேராகவே பாடிக் காட்டி, நாடகம் நடித்தால் கைது செய்வேன் என்று சொன்னீர்களே, உங்களுக்கு நேராகவே இப்பொழுது பாடி நடித்திருக்கிறேன், கைது செய்யுங்கள், பார்க்கலாம் என்று நானும் பேச, அவரும் அதை வேடிக்கையாக அன்றைக்கு எடுத்துக்கொண்டார்கள்.

இன்றைக்குப்போல் இவ்வளவு ஆக்ரோஷங்கள் அன்றைக்கு நம்முடைய அவையிலே இல்லை. கோபம் இருக்கும். குமுறல் இருக்கும். ஆத்திரப் பேச்சுக்கள் இருக்கும். ஆனாலும், உள்ளூர வெறுப்பு இருக்காது. ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்தாலே இன்றைக்குப் பயப்படுகிறார்களே, அப்படிப்பட்ட நிலைமை அன்றைக்கு இல்லை. ஒரு தோழமை உணர்வோடு, நட்புணர்வோடு – இங்கே நம்முடைய அமைச்சர் எடுத்துக் காட்டியதைப்போல், மீனாட்சி வழக்கு நீண்ட காலமாக புரியாமலே இருந்தது. இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்த பிறகுதான் அந்த வழக்கு என்னவென்று வெளிப்பட்டு, தண்டனையும் வழங்கப்பட்டிருக்கிறது; எதிரிகளுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது.

அதேபோன்று, தருமபுரியிலே மூன்று மாணவிகள் கொளுத்தப்பட்டார்களே, அந்த வழக்கும் நீண்ட நாள் நடைபெற்று, விசாரணை நடத்தி முடிக்கப்பட்டு, எதிரிகள் மூன்று பேருக்குத் தூக்குத் தண்டனையும், எதிரிகள் 25 பேருக்குக் கடுங்காவல் தண்டனையும் வழங்கப்பட்டிருக்கிறது.

அவர்கள் மேல்முறையீட்டுக்குச் சென்றிருக்கிறார்கள். ஆனாலும், அது தள்ளித் தள்ளிப் போய்க் கிடப்பிலே போடப்பட்ட வழக்கு எடுக்கப்பட்டு, இன்றைக்கு அதற்குத் தண்டனையும் வழங்கப்பட்டிருக்கிறது.

ஒரு புதுவிதக் கொள்ளையர்கள். திடீரென்று கேள்விப்பட்டோம். Grill கொள்ளையர்கள் என்று ஒரு புதுவிதமான கொள்ளையர்கள். அவர்கள் பல இலட்சக்கணக்கான மதிப்புள்ள பொருட்களையெல்லாம் கொள்ளையடித்து, அதன் காரணமாக எந்தவிதமான தண்டனையும் தர முடியாத சூழ்நிலையில், போலீஸ்தான் அவர்களைத் தேடித் தேடி அலைந்து, கடந்த கால ஆட்சியிலே அவர்கள் பிடிபடாமல், இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகுதான், அவர்கள் எல்லாம் பங்களாதேஷ் நாட்டைச் சேர்ந்தவர்கள், இங்கே வந்து கொள்ளையடிக்க வந்திருக்கிறார்கள் என்று புரிந்துகொண்டு, மூன்று பெண்கள் உட்பட 14 குற்றவாளிகளைக் கொல்கத்தா சென்று கைது செய்து, அவர்கள் இன்றைக்குத் தண்டிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இவர்கள் சம்பந்தப்பட்ட 66 வழக்குகளில் திருடு போன தங்க நகைகள் 184 சவரன் மற்றும் வெள்ளி நகைகள் 400 கிராம் மற்றும் ரூ.43,000 ரொக்கம் ஆகியவை கைப்பற்றப்பட்டு இருக்கின்றன. இது Grill கொள்ளை. இன்னொன்று பீரோ புல்லிங். பீரோக்களை வெளியிலேயிருந்து இழுத்து, அதில் இருக்கிற பணத்தை, நகை நட்டுக்களைத் திருடுவது, அது பீரோ புல்லிங். அந்தக் களவுகளில் ஈடுபட்டுத் தொடர்ந்து காவல் துறைக்குப் பெரும் அறைகூவலாக இருந்தவன் விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த நாகமணி என்பவன் கைது செய்யப்பட்டு, அவனிடம், 69 வழக்குகளிலே

களவு போன தங்க நகைகள் 438 பவுன், வெள்ளி நகைகள் 650 கிராம் மற்றும் ரொக்கம் 51,000 ரூபாய் கைப்பற்றப்பட்டது.

அண்மையிலேதான் நம்முடைய தலைமைச் செயலகத்தில், திருடு போன சொத்துக்கள் மீண்டும் கொண்டு வரப்பட்டு, உரியவர்களுக்கெல்லாம் ஒப்படைக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சி நடந்தது. அதிலே நான் கலந்துகொண்டபோது, அங்கே வரிசை, வரிசையாகக் கொலு வைப்பதைப்போல அந்த நகைகளையும், பொருட்களையும் வைத்து, அதை இழந்தவர்கள் வந்து வாங்கிக்கொண்டு போனபோது, எவ்வளவு ஆனந்தக் கண்ணீர் வடித்தார்கள் என்பதை நான் நேரிலே கண்டவன்.

ஆக, மாநிலத்தில் 2006 ஆம் ஆண்டு 89 சதவிகித சொத்து வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, 81 சதவிகித சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளன என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன். 2005 ஆம் ஆண்டு 86 சதவிகித சொத்துக்கள் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டன. 78 சதவிகித சொத்துக்கள் மட்டுமே 2005–ல் மீட்கப்பட்டன. அதைவிட அதிகமாக நாம் கண்டுபிடித்து, அவர்களை எல்லாம் தண்டித்து இருக்கிறோம். இதிலே நான் போட்டி போட விரும்பவில்லை. அன்றைக்கு இருந்த செயல்முறையில் அவர்களுக்குக் கிடைத்த வெற்றி; அவர்கள் 4 furlong முன்னேறினார்கள் என்றால், நாம் 6 furlong முன்னேறினோம் என்றால், அந்த 4 furlong–ஐயும் கடந்துதான் 6 furlong முன்னேறியிருக்கிறோம் என்ற அந்த உணர்வோடுதான் இங்கே பேசுகின்றேனே அல்லாமல், நீங்கள் ஒன்றும் பெரிதாகச் செய்துவிடவில்லை; நாங்கள்தான் செய்தோம் என்று, இந்த போலீஸ் துறை மானியம் பேசுகின்ற நேரத்தில் தீயணைப்புத்

துறைக்கு வேலையைக் கொடுக்க நான் விரும்பவில்லை. ஆனால் நான் எப்போதும் சொல்வதுண்டு. போலீஸ் துறையையும், தீயணைப்புத் துறையையும் ஒன்றாக வைத்திருப்பதற்கே காரணம், இதிலே ஏற்படுகின்ற சூடு, இதிலே மூளுகின்ற அனல், இதிலே பற்றி எரிகின்ற தீ, இவற்றை அணைப்பதற்குத் தீயணைப்புப் படை உடனே தேவை என்பதற்காகத்தான் இரண்டு மானியங்களையும் ஒன்றாக வைத்திருக்கிறார்கள் என்று நல்ல வேளை, இங்கே தீயணைப்புத் துறை உள்ளே வராமலே, அணைந்து போயிருக்கிறது நெருப்பு. அணைந்து போனது வெளியில் தெரியாமல் இருக்கலாம். ஆனாலும், அணைந்துபோனது அணைந்ததுதான். அந்த நிம்மதியோடு நான் என்னுடைய பேச்சைத் தொடருகின்றேன்.

சட்டம் ஒழுங்குப் பராமரிப்பைப் பற்றிப் பேசும்பொழுது நம்முடைய ஜி.கே. மணி அவர்களும், நம்முடைய சுதர்சனம் அவர்களும், செங்கோட்டையன் அவர்களும், வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களும், வேல்முருகன் அவர்களும் கள்ளச் சாராயத்தைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். அவைகளையெல்லாம் ஒடுக்க வேண்டும் என்று சிவபுண்ணியம் சொன்னார், நம்முடைய விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவர் செல்வமும் சொன்னார். நான் அவர்களுக்கெல்லாம் சொல்வது, கள்ளச் சாராயம் என்பது ஒழிக்க முடியாத ஒன்று என்பதுதான். என்ன இப்படி சவால் விடுகிறீர்கள் என்று என்னிடத்திலே கேட்பீர்களேயானால், சொல்லுகிறீர்களே, காமராஜர் ஆட்சி வர வேண்டும், காமராஜர் ஆட்சி வர வேண்டும் என்று. அந்தக் காமராஜர் ஆட்சியிலேயே ஒழிக்க முடியாத ஒன்று இது. பெருந்தலைவர் காமராஜர்

ஆட்சியிலேயே அது எந்த அளவுக்கு இருந்தது, பக்தவத்சலம் ஆட்சியிலே எந்த அளவுக்கு இருந்தது என்பதைப் புள்ளிவிவரம் போட்டு, எனவே இதை ஒழிக்க முடியாது; இத்தனை இலட்சம் பேர் கள்ளச் சாராயப் பேர்வழிகள் தண்டிக்கப்பட்டுச் சிறையில் இருக்கிறார்கள் என்றெல்லாம் கூறப்பட்டுள்ளது. அது மாத்திரமல்ல இதே அவையிலே நான் பேசி இருக்கின்றேன். அன்றைக்கு முதலமைச்சர் நிலையிலே இருந்து பேசியிருக்கின்றேன். என்ன பேசினேன் என்றால், போர்பந்தரில், மகாத்மா காந்தி பிறந்த ஊரில் அவருடைய வீட்டுக்குப் பக்கத்திலேயே ஒரு பெரிய கிணறு தோண்டி, அதிலே கள்ளச் சாராயத்தைக் காய்ச்சி, அதை விற்றுக்கொண்டு இருந்தார்கள் என்பதை நான் அல்ல, இந்தியப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்கள் டெல்லி பாராளுமன்றத்திலே சொல்லி வருத்தப்பட்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டேன். ஆனால், இந்திரா காந்தி வருத்தப்பட்டாலும் சரி, இன்றைக்கு அந்தக் கட்சியிலே இருக்கின்ற கடைசித் தொண்டன் வருத்தப்பட்டாலும் சரி, அறவே கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடியாததற்குக் காரணம், மதுவிலக்குத் திட்டத்தில் நாம் மற்ற நாடுகளோடு போட்டி போடுவது என்றால், அவர்களைவிட இன்னும் நல்ல சரக்குகளை இங்கே உற்பத்தி செய்ய வேண்டும் என்பதிலேதான் வெற்றிபெற முடியுமே தவிர, வேறு வழியிலே வெற்றிபெற முடியாது என்பதற்கு இன்றைய உலக நிலை, உலகப் பண்பாடு, உலகக் கலாச்சாரம் சாட்சியாக இருக்கின்றது.

நான் இன்றைக்கும் சொல்லுகின்றேன். டாஸ்மாக் ஊழியர்களைப் பற்றியெல்லாம் பேசினீர்கள். நான்கூட நம்முடைய கோவிந்தசாமியிடத்திலேயோ,

சிவபுண்ணியத்திடத்திலேயோ வேடிக்கையாகக் கேட்கலாம் என்று எனக்கு ஒரு ஆசை. நம்முடைய டாக்டர் ராமதாஸ் அவர்களுடைய பேச்சைக் கேட்டுக்கொண்டு, ஜி.கே. மணி அவர்களுடைய அன்புக் கட்டளையை ஏற்று, மதுவிலக்குத் திட்டத்தைக் கொண்டு வந்துவிடலாமா என்பதுதான் அந்த யோசனை. நீங்கள் எல்லாம் சரி என்று சொன்னால், நான் அதற்குக்கூடத் தயாராக இருக்கின்றேன், ஒரு 7 ஆயிரம் கோடி ரூபாய் நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை என்று. ஆனால், அந்த டாஸ்மாக் ஊழியர்கள் அப்போது என்ன ஆவார்கள் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

கள்ளச் சாராயத்தை ஒழிக்கவில்லை என்று மிகக் கடுமையாக நம்முடைய செங்கோட்டையன் அவர்கள் இந்த அரசின்மீது குற்றஞ்சாட்டினார். குற்றஞ்சாட்டிவிட்டு அதற்குமேல் போகவில்லை; அதோடு நிறுத்திவிட்டார். நான் அவருக்கு ஒரு புள்ளிவிவரத்தைச் சொல்ல விரும்புகிறேன். கள்ளச் சாராயம் குடித்துப் பாதிக்கப்பட்டோர், 2001 ஆம் ஆண்டு 3 சம்பவங்களில் இறந்தவர்கள் 98 பேர், மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டவர்கள் 250 பேர். 2003 ஆம் ஆண்டு ஒரு சம்பவம், இறந்தவர்கள் 17 பேர், மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டவர்கள் 89 பேர். 2004–ல் 2 சம்பவங்கள், கள்ளச் சாராயம் குடித்த சம்பவங்கள், அதிலே இறந்தவர்கள் 5 பேர், மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டவர்கள் 5 பேர். 2005–ல் 2 சம்பவங்கள், இறந்தவர்கள் 10 பேர், மருத்துவமனையிலே அனுமதிக்கப் பட்டவர்கள் 37 பேர் ஆக 2006 ஏப்ரல் முடிய, அந்த ஆட்சியில், அ.தி.மு.க ஆட்சியில், உங்களுக்கு எல்லாம் புரியம்படிச் சொல்ல வேண்டுமேயானால், நீங்கள் அன்போடு சொல்கின்ற அம்மா ஆட்சியில் 134 பேர் – கள்ளச் சாராயம்

குடித்து இறந்தவர்களுடைய எண்ணிக்கை 134. மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டவர்கள் 387. ஆனால், தி.மு.க. ஆட்சியில், 2006 மே மாதம் தி.மு.க. ஆட்சி வந்தது முதல் டிசம்பர் வரையில், கேவலம், ஒரேயொரு ஆள்தான் இறந்திருக்கிறார் இந்தக் கள்ளச் சாராயம் குடித்து என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காக நான் கள்ளச் சாராயத்தை ஆதரிக்கிறேன்; அதற்கு நான் வக்காலத்து வாங்குகிறேன் என்று யாரும் கருதக் கூடாது. கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு நாமும், காவல் துறை நண்பர்களும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என்பதிலே அசையாத கருத்து எனக்குண்டு. அதற்காக எத்தகைய கடுமையான தண்டனையையும் விதிப்பதற்கும், நடவடிக்கை எடுப்பதற்கும் இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதையும் நான் சொல்ல விரும்புகிறேன்.

இன்னொன்று சொன்னார்கள். செங்கோட்டையன் அவர்கள் நேற்று ஆரம்பப் பேச்சிலேயே சொன்னார்கள். மணல் கொள்ளை நடைபெறுகிறது, மணல் திருட்டு நடைபெறுகிறது, அதைச் சரியாக நிருவகிக்கவில்லை என்று சொன்னார்கள். அதையும் வாங்கிப் பார்த்தேன். 2005–2006ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் விற்கப்பட்ட மணல்மூலம் அரசாங்கத்திற்குக் கிடைத்த வருவாய் ரூ.78.50 கோடி–ரூ.78 கோடி. 2006–2007, தி.மு.க. ஆட்சியில் மணல்மூலம் அரசாங்கத்திற்குக் கிடைத்த வருவாய் ரூ.130.49 கோடி. அன்று ரூ.78 கோடி, இன்றைக்கு ரூ.130 கோடியாகப் பெருகியிருக்கிறதே அல்லாமல், மணல் பிரச்சினையில் நாம் ஒன்றும் ஏமாந்து போய்விடவில்லை. அதைச் சரியாகத்தான் நிருவகித்துக்கொண்டிருக்கிறோம் என்பதற்காக இதைச் சொல்ல விரும்புகின்றேன்.

நம்முடைய சுதர்சனம் அவர்களும், ஞானசேகரன் அவர்களும் மற்றும் நம்முடைய ஜெயக்குமார் அவர்களும் பேசும்போது, வேறு சிலரும் பேசும்போதுகூட, Rocket Launcher பற்றியெல்லம் பேசினார்கள். 11–7–2006 அன்று மும்பையில் நடந்த தொடர் குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்தும், சென்ற சுதந்திர தினத்தை முன்னிட்டு பயங்கரவாத இயக்கங்களினுடைய அச்சுறுத்தல் வந்தபோதும், குறிப்பாக, கல்பாக்கம் அணுமின் நிலையத்தையே தாக்கிச் சேதம் விளைவிக்கவுள்ளதாகத் தகவல் கிடைத்தபோதும், மாநிலத்திலே முக்கியத்துவம் வாய்ந்த அனைத்து மையங்களிலும் தக்க பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, எந்தவிதமான அசம்பாவிதச் சம்பவங்களும் நிகழாமல் தடுக்கப்பட்டுள்ளது. 17–12–2006 அன்று, அடையாளம் தெரியாத நபர்களால் இந்து முன்னணி தென்காசி நகரத் தலைவர் குமார் பாண்டியன் என்பவர் கொலை செய்யப்பட்ட வழக்கில் சம்பந்தப்பட்ட 3 எதிரிகளை அரசு கைது செய்து, அவர்களில் 2 பேரை தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தடுப்புக் காவலில் வைத்தது.

இவை எல்லாம், தீவிரவாதத்தை, மத வெறியின் காரணமாக நடைபெறுகின்ற வன்முறை வெறியாட்டங்களைத் தடுப்பதற்கு இந்த அரசு எடுத்த கடுமையான நடவடிக்கைகள்.

அதேபோல, பயங்கரவாதச் செயல்கள். வெளிநாட்டிலிருந்து இந்தியாவிற்குள்ளே வருவது, இந்தியாவில் இருக்கிறவர்களைப் பயன்படுத்திக்கொண்டு தங்களுடைய வன்முறைச் செயல்களுக்கு ஏதாவது வழி இருக்கிறதா என்று பார்ப்பது; அவர்களை இந்த அரசு விட்டு வைக்கவில்லை. இதிலே குறிப்பாக Rocket launcher–இதை 7–9–2006 அன்று ஆந்திர மாநிலத்திலே சாக்கு

மூட்டைகளிலே ஏற்றிச் சென்றபோது, இது பிடிக்கப்பட்டதாகத் தகவல். அதைப் பற்றி விசாரித்தால், 7–9–2006, நம்முடைய ஆட்சி வந்த பிறகு பிடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அம்பத்தூரிலேயிருந்து அது கடத்தப்பட்டது Granthi Travels மூலமாக, 10–8–2005, 11–5–2006, 9–9–2006 ஆகிய தேதிகளில் நடந்துள்ளதாகத்தான் தெரியவந்துள்ளது. இதன்மூலம், 2005 ஆம் ஆண்டிலிருந்து நடந்து வந்த இந்த சதிச் செயலை மிகவும் திறமையாகச் செயல்பட்டு ஒரே வாரத்திலே முறியடித்தது நம்முடைய அரசின் காவல் துறையினரே என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

நம்முடைய ஞானசேகரன் அவர்கள் இந்த வன்முறையாளர்களைப் பற்றி பயங்கரவாதிகளைப் பற்றிப் பேசக் குறிப்பு தயாரித்திருக்கிறார். அவருக்கு வெகு சுலபமாகக் கிடைத்த குறிப்பு, நம்முடைய தமிழ்நாடு காவல் துறையின் மானியக் கோரிக்கையிலே கிடைத்துவிட்டது. அதிலேயிருந்து குறிப்பு எடுத்தார் பாருங்கள், எடுத்து, நாம் எங்கெங்கே வன்முறையாளர்கள், யார், யார் பயங்கரவாதிகள் என்று அவர்கள்மீது நடவடிக்கை எடுத்தோமோ, அவர்களையெல்லாம் விடுதலைப் புலிகள் என்று இவர் மாற்றிவிட்டார். நான் படித்துப் பார்த்தேன். ஒரு வேளை நாம் படித்த பிறகு யாரும் proof திருத்தியிருப்பார்களோ, நம்முடைய அலுவலகத்திலே என்று படித்துப் பார்த்தால், அதே பயங்கரவாதிகள்தான் என்றுதான் இருந்தது, விடுதலைப் புலிகள் என்று இல்லை. ஞானசேகரனுடைய கண்ணுக்கு பயங்கரவாதிகள் என்றாலே விடுதலைப் புலிகள் என்று தெரிகிறது. அதற்காக நான் விடுதலைப் புலிகளை ஆதரிப்பவன் அல்ல. அதுவும் அவருக்குத் தெரியும்.

விடுதலைப் புலிகள் — தமிழ்நாட்டிலே இனி அவர்களுக்கு வேலையில்லை, அந்த வேலையிலே அவர்கள் ஈடுபடவும் இல்லை; ஈடுபடவும் கூடாது என்பதிலே நான் மிகத் தீவிரமாக ஞானசேகரனுக்குக் கூறிக்கொள்கிறேன்.

ஆனால் இங்கு அவர் சொல்லிக் காட்டிய இத்தனை நிகழ்ச்சிகளிலும் வருகின்றவர்கள் அந்தக் கதாநாயகர்கள் எல்லாம் வேறு கதாநாயகர்கள்; இவர் அவர்களையெல்லாம் விடுதலைப் புலிகளாக இங்கே கற்பித்துச் சொன்னார். நண்பர் ஞானசேகரன் அவர்களே, அவர்கள் விடுதலைப் புலிகள் அல்ல. உங்களுடைய ஞானத்திற்கு வேண்டுமானால் அப்படித் தெரிந்திருக்கலாம். நீங்கள் சேகரித்துக் கொடுத்த தகவல்களில் உண்மையான தகவல்களைச் சேகரித்துக் கொடுக்க வேண்டுமே தவிர, அவர்கள் எல்லாம் விடுதலைப் புலிகள் என்று சொன்னதை நீங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டீர்கள் என்று கருதுகின்றேன். அவர்கள் விடுதலைப் புலிகள் அல்ல. விடுதலைப் புலிகள் என்றால், அவர்களுடைய போக்கு வேறு, அவர்களுடைய நோக்கு வேறு. அது நமக்கு நன்றாகத் தெரியும். ஆனால் அவர்களுடைய எந்தவிதமான வன்முறைச் செயல்களும் இந்த இந்தியாவிற்கே, இந்தத் தமிழகத்திற்கே தீங்கு விளைவிக்கக்கூடிய எந்த ஒரு காரியமாக இருந்தாலும், நான் சொல்கின்றேன், உறுதியாகச் சொல்கின்றேன், அறுதியிட்டுச் சொல்கின்றேன்; இந்த அரசு அத்தகைய காரியங்களுக்கு இடம் அளிக்காது, அளிக்காது, அளிக்காது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் சொன்னார்கள். இராமநாதபுரத்திலே அகதிகள் முகாம் இருக்கிறது. நம்முடைய சுதர்சனம் அவர்கள் இங்கே சொன்னார்கள். நான் உடனடியாக

இராமநாதபுரத்திற்குத் தொடர்புகொண்டு அங்குள்ள அதிகாரிகளைக் கேட்டபோது வந்த செய்தியைச் சொல்கின்றேன். மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிறுவனத்தின் தெற்குக் கடற்கரையில் சிறிய வெள்ளை நிற தெர்மாகோல் பெட்டி ஒன்று கரை ஒதுங்கியது. அதைக் காவல் துறையினர் கைப்பற்றித் திறந்து பார்த்ததில், 8 அங்குல நீளமும், 2 அங்குலச் சுற்றளவும்கொண்ட 5 சிவப்பு நிற பிளாஸ்டிக் குழாய்கள் இருப்பதைக் கண்டு, மதுரையிலிருந்து வெடிகுண்டு நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு, சோதனை செய்யப்பட்டது. சோதனையில் அந்த பிளாஸ்டிக் குழாய்கள், கப்பல்களில் பயன்படுத்தப்படும் சமிக்ஞைத் தோட்டாக்கள் (Signal cartridges) என்று தெரிய வந்தது. அந்தப் பெட்டியிலிருந்த 5 சமிக்ஞைத் தோட்டாக்களில் ஒரு தோட்டாவை வெடிக்க வைத்துப் பார்த்ததில், அது உயரே சென்று வெளிச்சத்தை ஏற்படுத்தி, சிறிய பாராசூட்போல விரிந்து கீழ் நோக்கி வந்தது. மேலும், இராமேஸ்வரம் கடற்படை அதிகாரி Biswal என்பவரும் சோதனை செய்து, இவை அனைத்துத் தரப்புக் கப்பல்களிலும் பொதுவாகப் பயன்படுத்தக்கூடிய சமிக்ஞைத் தோட்டாக்கள்தான் (Signal cartridges) என்றும், வேறு ஆபத்து இதனால் எதுவுமில்லை என்றும் தெரிவித்தார். இது தொடர்பாக, மண்டபம் காவல் நிலையத்தில் குற்ற எண் 74/07, பிரிவு 102, குவி.ந.ச.–வின்கீழ் வழக்குப் பதிவு செய்து, விசாரணை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்ற செய்தி எனக்குக் கிடைத்திருக்கின்றது. ஆகவே, அது கண்டு பீதியடைய வேண்டியதில்லை; பதட்டப்படத் தேவையில்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த வகையிலே, கடலோரத்திலே நம்முடைய தமிழகம், இந்தியாவினுடைய பாதுகாப்பைப் பலப்படுத்திக்கொள்கின்ற

வகையில், தொடர்ந்து நம்முடைய காவல் துறையினுடைய பணி மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு விஷயத்தைச் சொன்னார்கள்; மத்திய நிதி அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள், 'காவலர்களுக்குக் கடன் கொடுக்கக் கூடாது' என்று ஒரு தாக்கீது அனுப்பியிருக்கிறார் என்று, அதை ஒரு குற்றச்சாட்டைப்போல அவர்கள் சொன்னார்கள். அது பற்றி உடனடியாக நாங்கள் விசாரித்தபோது, அப்படியொரு தாக்கீது அனுப்பப்படவில்லை என்று நம்முடைய நிதி இலாகாவிற்குச் செய்தி வந்திருக்கின்றது. வேறு பல இலாகாக்களையும் விசாரித்தபோது, திரு. ப. சிதம்பரம் அத்தகைய எந்தத் தாக்கீதையும் அனுப்பவில்லை; போலீசாருக்குக் கடன் கொடுக்கக் கூடாது என்று அவர் சொல்லவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, போலீசாரைப் பற்றியும், அவர்களுடைய செயல்பாடுகளைப் பற்றியும், அவர்களை வைத்து நடத்துகின்ற ஆட்சியினரைப் பற்றியும், இரு தரப்பிலும் நம்முடைய கருத்துகளைப் பரிமாறிக்கொண்டிருக்கின்றோம்.

இதற்குமேல் நம்முடைய செல்வப்பெருந்தகை நேற்றுப் பேசும்போது, கடந்த கால ஆட்சியில் வேண்டுமென்றே தன்மீது ஒரு பெரிய விசாரணை நடத்தி, அதை விசாரித்த காவல் துறையினர் காவல் துறையினர்தானே? அப்படிக் குற்றச்சாட்டு எதுவுமேயில்லை என்று சி.பி.ஐ. சொல்லிவிட்டார்கள் என்று குறிப்பிட்டார். நேற்றுக் குறிப்பிட்டதோடு மட்டுமல்லாமல், இப்பொழுது என்னிடத்திலே கடிதமும் கொடுத்திருக்கிறார். இதைப் பற்றி, தன்மீது ஒரு தவறான, வேண்டுமென்றே, திட்டமிட்டுச் சாட்டப்பட்ட குற்றச்சாட்டைப் பற்றி விசாரணை

நடத்த வேண்டும் என்று கேட்டிருக்கிறார். தக்கவரைக் கொண்டு, சரியான ஒருவரைக் கொண்டு விசாரணை நடத்தப்படும் என்று நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவற்றிற்கெல்லாம் முத்தாரம் வைப்பதைப்போல், சில அறிவிப்புகளை இங்கே சொல்ல விரும்புகின்றேன். முதல் அறிவிப்பாக, நம்முடைய திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், நம்முடைய திரு. கி. ஆறுமுகம் அவர்களும் இந்த அவையிலே ஒரு பரிந்துரையை வைத்தார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலேயிருந்து கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற 12 மீனவர்கள், கடந்த 1½ மாத காலமாகக் காணாமல் போய்விட்டது குறித்து இதே அவையிலே பிரச்சினை எழுப்பட்டபோது, அவர்களைக் கண்டுபிடிப்பதற்கான பணி தொடர்ந்து நடைபெறும் என்றும், அவர்கள் கண்டுபிடிக்கப்படும் வரை அந்தக் குடும்பங்களுக்கு நிவாரண உதவித் தொகை வழங்கப்படும் என்றும் அறிவித்திருந்தேன். அதன்படி, காணாமல் போன அந்த 12 மீனவக் குடும்பங்களுக்கு, அவர்கள் இல்லம் திரும்பும் வரை அல்லது காணாமல் போன மீனவர்களுடைய குடும்பம், அரசிடமிருந்து முழு நிவாரண உதவித் தொகை பெறும் வரை, மாதந்தோறும் தலா ஒரு குடும்பத்திற்கு ரூ.1,500/- உதவித் தொகை வழங்குவது என்று முடிவெடுத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கடலோரப் பாதுகாப்பிற்குப் புதிய பணியிடங்கள்:** கடலோரப் பாதுகாப்பிற்காக 12 கடலோரக் காவல் நிலையங்கள், 12 புறநகர்க் காவல் நிலையங்கள் மற்றும் 40 சோதனைச் சாவடிகள் ஆகியவற்றிற்குக் கட்டடங்கள் கட்ட

தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கான செலவில் 50 சதவிகிதம் மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும். அனைத்துக் கட்டடங்களும் இந்த ஆண்டு இறுதிக்குள் கட்டி முடிக்கப்படும். இந்த நிலையங்களில் காவலர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களை நியமிக்க ரூ.5 கோடி செலவிடப்படும்.

**புறக்காவல் நிலையங்கள் தரம் உயர்த்துதல்:** 2006–2007 ஆம் நிதியாண்டில் பல்வேறு இடங்களில் 10 புறக்காவல் நிலையங்கள் முழுமையான காவல் நிலையங்களாகத் தரம் உயர்த்தப்பட்டன. இன்றைய நிலவரப்படி மாநிலத்தில் 106 புறக்காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் பின்வரும் 12 புறக்காவல் நிலையங்கள் முழுநேரக் காவல் நிலையங்களாக சுமார் ரூ.3.8 கோடி செலவில் தரம் உயர்த்தப்படும்:

| வ. எண் | நகரம்/மாவட்டம் | தரம் உயர்த்தப்பட வேண்டிய புறக்காவல் நிலையம் |
|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் மாவட்டம், மாகரல் | 5ஆம் வகை |
| 2. | விழுப்புரம் மாவட்டம், கீழ்க்குப்பம் | 5ஆம் வகை |
| 3. | திருச்சி மாவட்டம், இனாம் குளத்தூர் | 5ஆம் வகை |

4. புதுக்கோட்டை மாவட்டம்,
செம்பட்டுவிடுதி 5ஆம் வகை

5. தருமபுரி மாவட்டம்,
பஞ்சப்பள்ளி 5ஆம் வகை

6. கிருஷ்ணகிரி மாவட்டம்,
கிருஷ்ணகிரி அணை 5ஆம் வகை

7. மதுரை மாவட்டம்,
எம். சத்திரப்பட்டி 5ஆம் வகை

8. இராமநாதபுரம் மாவட்டம்,
தெற்குவேலி 5ஆம் வகை

9. கன்னியாகுமரி மாவட்டம்,
பளுகல் 5ஆம் வகை

10. மதுரை மாநகரம்,
அரசு இராஜாஜி மருத்துவமனை 5ஆம் வகை

11. திருவண்ணாமலை மாவட்டம்,
புதுப்பாளையம் 5 ஆம் வகை

12. திருவண்ணாமலை மாவட்டம்,
பாச்சல் 5 ஆம் வகை

**15 காவல் நிலையங்களைத் தரம் உயர்த்துதல்:** சென்னை மாநகரக் காவல் ஆணையாளர் மற்றும் மண்டலக் காவல் துறைத் தலைவர்கள் மேற்கொண்ட ஆய்வின்படி, மாநிலம் முழுவதும் 100 காவல் நிலையங்கள் தரம் உயர்த்தப்பட வேண்டிய நிலையில் உள்ளன. 2006–2007

ஆம் ஆண்டில் 14 காவல் நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டன. 2007–2008 ஆம் ஆண்டில் 15 காவல் நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு, பணியாளர்களுடைய எண்ணிக்கை ரூ.6.19 கோடியில் அதிகரிக்கப்படும்.

| வ. எண். | நகரம் / மாவட்டம் |
|---|---|
| 1. | காஞ்சிபுரம் மாவட்டம் – திருப்பெரும்புதூர் |
| 2. | கடலூர் – பண்ருட்டி |
| 3. | திருவண்ணாமலை – ஆரணி நகரம் |
| 4. | திருச்சி – திருவெறும்பூர் |
| 5. | தஞ்சாவூர் – தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை |
| 6. | திருச்சி நகரம் – காந்தி மார்க்கெட் |
| 7. | திருச்சி நகரம் – கே.கே. நகர் |
| 8. | கோயம்புத்தூர் – திருப்பூர் வடக்கு |
| 9. | கோயம்புத்தூர் – திருப்பூர் ஊரகம் |
| 10. | நாமக்கல் – நாமக்கல் |
| 11. | கோயம்புத்தூர் நகரம் – குனியமுத்தூர் |
| 12. | மதுரை – அவனியாபுரம் |
| 13. | திண்டுக்கல் – பழனி நகரம் |
| 14. | இராமநாதபுரம் – கமுதி |
| 15. | தூத்துக்குடி – கோவில்பட்டி மேற்கு |

தூத்துக்குடி மாவட்டத்தில் பேரூரணியில் உள்ள காவல் பயிற்சிப் பள்ளியை மேம்படுத்துதல்: தூத்துக்குடி மாவட்டத்தில் பேரூரணியிலே உள்ள காவல் பயிற்சிப் பள்ளியில் 400 காவலர்களுக்குப் பயிற்சியளிக்க வசதியுள்ளது. இந்தப் பள்ளி 54 ஏக்கர் நிலப் பரப்பளவில் அமைந்துள்ளது. தற்போதுள்ள கட்டமைப்பு வசதிகளை ரூ.4.38 கோடியில் மேம்படுத்தி 600 காவலர்களுக்குப் பயிற்சியளிக்கும் அளவுக்குப் பயிற்சித் தரம், பள்ளித் தரம் உயர்த்தப்படும்.

காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடத்தில் புதிய காவல் நிலையம் உருவாக்குதல்: காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடம் கிராமத்தில் சிப்காட் மூலம் தொழில் மையங்கள் அமையவுள்ளன. மேலும், டெல்பி, டி.வி.எஸ்., எம்.எம். போர்ஜிங் இந்தியா நிறுவனம் ஆகிய பன்முக வெளிநாட்டு நிறுவனங்கள், கூடிய விரைவில் ஒரகடத்தில் தொழிற்சாலைகள் நிறுவவுள்ளன. ரூ.1,400 கோடியில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள தேசிய தானியங்கி சோதனை ஆய்வு மற்றும் வளர்ச்சி திட்டமும் இந்த இடத்தில் நிறுவப்படவுள்ளது. புதிய தொழிற்சாலைகள் உருவாக்கப்படும்போது வாகனப் போக்குவரத்து அதிகரிக்கும் என்பதாலும், ரோந்துப் பணி அதிகரிக்கப்பட வேண்டியிருக்கும் என்பதாலும், ஒரகடத்தில் வகை–1 காவல் நிலையம் புதிதாக சுமார் ஒரு கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும். அதோடு, சுங்குவார்சத்திரத்தில் தற்போது உள்ள வகை 5 காவல் நிலையம், வகை–1 ஆகத் தரம் உயர்த்தப்படும்.

காவல் பணியாளர்களுக்கு 2,000 புதிய குடியிருப்புகள்: தமிழ்நாடு காவல் பணியில் பணியாற்றும் காவலர்களுக்குத் தற்போது 42,556 குடியிருப்புகள் உள்ளன. மொத்தமுள்ள பணியாளர்களின் எண்ணிக்கையில் இது 43.03 சதவிகிதம்

ஆகும். இந்த ஆண்டில் கூடுதலாகக் காவல் பணியாளர்களுக்கு 2,000 குடியிருப்புகள் சுமார் 110 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

இரண்டாம் நிலைக் காவலர்களை முதல் நிலைக் காவலர்களாக நிலை உயர்த்துதல்: பத்து ஆண்டுகள் பணியை நிறைவு செய்யும் 7,320 இரண்டாம் நிலை ஆண் காவலர்களும், 3,231 இரண்டாம் நிலைப் பெண் காவலர்களும் முதல் நிலைக் காவலர்களாக நிலை உயர்த்தப்படுவார்கள். இதன் காரணமாக, ஆண்டு ஒன்றுக்கு ரூ.6.13 கோடி அரசுக்குக் கூடுதலாகச் செலவாகும்.

முதல் நிலைக் காவலர்களைத் தலைமைக் காவலர்களாக நிலை உயர்த்துதல்: 5 ஆண்டுகள் பணியை நிறைவு செய்துள்ள 293 முதல் நிலைக் காவலர்கள் தலைமைக் காவலர்களாக நிலை உயர்த்தப்படுவார்கள்.

தலைமைக் காவலர்களை சிறப்பு உதவி ஆய்வாளர்களாக நிலை உயர்த்துதல்: 114 தலைமைக் காவலர்கள் சிறப்பு உதவி ஆய்வாளர்களாக நிலை உயர்த்தப்படுவார்கள்.

தமிழ்நாடு சிறப்புக் காவல் படை பணியாளர்களுக்கு கூடுதல் நேர ஊதியம் வழங்குதல்: தற்போது ஆயுதப் படை, உள்ளூர் மற்றும் சிறப்புப் பிரிவுகள் காவல் பணியாளர்களுக்குக் கூடுதல் நேர ஊதியமாக நாளொன்றுக்கு ரூ.150 வழங்கப்படுகிறது. இந்தக் கூடுதல் நேர ஊதியம் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் பணியாற்றுபவர்களுக்கு அளிக்கப் படுவதில்லை. தமிழ்நாடு சிறப்புக் காவல் படைப் பணி, பயிற்சி மையம் மற்றும் சிறப்புப்

படையில் உள்ள பணியாளர்களுக்கும் கூடுதல் நேர ஊதியம் வழங்கப்படும். இதன் காரணமாக, 12,690 பேர் பயன்பெறுவார்கள்.

கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுக் காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களை இரண்டாம் நிலைக் காவலர்களாகத் தேர்வு செய்தல்: காவல் துறையில் இளநிலை உதவியாளர், தட்டச்சர் பதவிகளுக்குக் கருணை அடிப்படையில் பணியமர்த்தப் படுவதற்கு 1,460 பேர் காத்திருப்போர் பட்டியலில் உள்ளார்கள். இவர்களில் காவலர் பதவிக்குத் தேவையான கல்வி மற்றும் உடற்தகுதி உள்ளோருக்கு இரண்டாம் நிலைக் காவலர் பதவி அளிக்கப்படும்.

கருணை அடிப்படையில் தொகுப்பூதியத்தில் பணியமர்த்தப்பட்டுள்ள தகவுப் பதிவாளர்களுக்குக் கால முறை ஊதியம் வழங்குதல்: கடந்த 2002 ஆம் ஆண்டில் கருணை அடிப்படையில் பணி கேட்டுக் காத்திருப்போர் பட்டியலில் இருந்த 805 பேர் தகவுப் பதிவாளர்களாகத் தேர்வு செய்யப்பட்டு, மாதம் ரூ.2,500 தொகுப்பூதியத்தில் பணியமர்த்தப்பட்டார்கள். கடந்த 4 ஆண்டுகளுக்குமேல் இவர்கள் தொடர்ந்து தொகுப்பூதியத்தில் பணியாற்றுகின்றார்கள். இடைக்காலத்தில் ஒரு சிலர் தட்டச்சர் மற்றும் இளநிலை உதவியாளர் பதவிகளில் கால முறை ஊதிய விகிதத்தில் மாற்றப்பட்டுள்ளனர். மீதமுள்ள சுமார் 650 நபர்களுக்கு கால முறை சம்பள விகிதம் இந்த ஆண்டு நிர்ணயிக்கப்படும்.

சேலம் சரகம் அலுவலகத்திற்கு அமைச்சுப் பணியாளர்கள் பதவிகளை ஏற்படுத்துதல்: 2000 ஆம்

ஆண்டில் தொடங்கப்பட்டு, காவல் துறைத் துணைத் தலைவர் பதவியுடன் சேலத்தில் காவல் சரகம் இயங்கி வருகிறது. இந்த அலுவலகத்திற்கு அமைச்சுப் பணியாளர் பதவிகள் எதுவும் இல்லாமல் இருக்கும் சூழ்நிலை இருக்கிறது. அதனால், இந்த அலுவலகத்தின் நிர்வாகப் பணியை கவனிக்க அயற்பணி அடிப்படையில் அமைச்சுப் பணியாளர்கள் சரகத்தின் பிற மாவட்டங்களிலிருந்து பணியமர்த்தப்படுகின்றார்கள். இந்த நிலைமையைச் சரி செய்ய, சேலம் காவல் சரகத்தில் அமைச்சுப் பணியிடங்கள் புதிதாக உருவாக்கப்படும்.

வெடிகுண்டு கண்டறிதல் மற்றும் செயலிழக்கச் செய்தல் படையில் முன்னாள் படை வீரர்களை நிரந்தரம் செய்தல்: காவல் துறையில் சிறப்புப் பிரிவில் மாதாந்திர ஒப்பந்த ஊதியத்தில் நியமிக்கப்பட்ட 42 முன்னாள் இராணுவத்தினரை நிரந்தரமாகப் பணியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

தூத்துக்குடி, திருநெல்வேலி, நாகர்கோவில் இடையே இலக்க முறை நுண்ணலைத் தொடர்பு வசதி ஏற்படுத்துதல்: 1997 ஆம் ஆண்டில் தூத்துக்குடி, நெல்லை, நாகர்கோவில் இடையே இலக்க முறை நுண்ணலைத் தொடர்பு வசதி (Digital Microwave Communication) உருவாக்கப்பட்டது. 8 ஆண்டு காலம் உபயோகத்தில் இருந்து வந்த இந்தத் தொலைத் தொடர்பு இப்போது பழுதடைந்தும், உதிரிப்பாகங்கள் சந்தையில் கிடைக்காத சூழ்நிலை உள்ளதாலும் பழைய கருவிகளை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ரூ.2.35 கோடி செலவில் இந்த வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

மன்னார்குடியில் உள்ள மறுஅஞ்சல் தொலைத் தொடர்பு நிலையக் (Repeater Station) கட்டடம்கட்டுதல்: மன்னார்குடியில் உள்ள 1973 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட மறுஅஞ்சல் தொலைத் தொடர்பு நிலையமானது (Repeater Station) தற்போது முழுவதும் சேதமடைந்து, பயன்பாட்டுக்கு உதவாத நிலையிலே உள்ளது. மிக நவீனக் கருவிகள் இந்தக் கட்டடத்தில் வைக்கப்பட்டிருப்பதாலும், பணியாளர்கள் நாள் முழுவதும் அங்கு பணியாற்றுவதாலும், பழைய கட்டடத்தை இடித்துவிட்டு, புதிய மறு அஞ்சல் நிலையக் கட்டடம் கட்டப்படும்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புதிய நுண்ணலை தொலை தொடர்பு இணைப்புகள் நிறுவுதல்: தருமபுரி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகக் கொண்டு, கிருஷ்ணகிரி மாவட்டம் ஏற்படுத்தப்பட்டது. அந்த மாவட்டத்திலுள்ள காவல் துறை அலுவலர்களுக்கு நுண்ணலைத் தொலைத் தொடர்பு இணைப்பு வசதி ஏற்படுத்தித் தர வேண்டியது அவசியமாகிறது. இந்த வகையில் கருவிகள் நிறுவவும், கட்டடங்கள் கட்டவும் ரூ.94.58 இலட்சம் நிதி ஒதுக்கப்படுகிறது.

சேலம் மாவட்டத்தில் காவல் கண்காணிப்பாளர் அலுவலகக் கட்டடம் கட்டுதல்: சேலம் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் தற்போது பழுதடைந்த நிலையில் உள்ளது. சுமார் 3.5 கோடி ரூபாய் செலவில் காவல் கண்காணிப்பாளர் அலுவலகக் கட்டடம் ஒன்று சேலத்தில் புதிதாகக் கட்டப்படும்.

தமிழ்நாடு சிறப்பு காவல் படை ஒன்று புதிதாக ஏற்படுத்துதால்: ரூபாய் 16.52 கோடி செலவில் சுமார் ஆயிரம்

பேர்கொண்ட தமிழ்நாடு சிறப்புக் காவல் படை ஒன்று புதிதாகவே உருவாக்கப்படும்.

இரண்டாம் நிலை காவலர்கள் பணியிடங்களை நிரப்புதல்: தற்போது சுமார் 14,000 இரண்டாம் நிலைக் காவலர்கள் பணியிடங்கள் காவல் துறையில் காலியாக உள்ளன. இவற்றில் 5,000 பணியிடங்களை நிரப்ப தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு மேலும் 5,000 பணியிடங்களும், 2008–2009ஆம் ஆண்டில் மீதமுள்ள 4,000 பணியிடங்களும் நிரப்பப்படும்.

திருவாரூர் மாவட்டத்தில் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு கட்டடம் கட்டுதல்: திருவாரூர் மாவட்டத்தில் தற்போது மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்கான சொந்தக் கட்டடம் ரூ.3.44 கோடி செலவில் இந்த ஆண்டு கட்டி முடிக்கப்படும்.

மற்றும் ஒரு பெரிய அறிவிப்பு. காவல் நிலையக் கட்டடங்கள்.

| வ. எண் | மாவட்டம் | இடம் |
|---|---|---|
| 1. | கோயம்புத்தூர் மாவட்டம் | ஆலந்துறை |
| 2. | கோயம்புத்தூர் | மகாலிங்கபுரம் |
| 3. | கோயம்புத்தூர் நகரம் | பி.1 பஜார் |
| 4. | திருவண்ணாமலை | செய்யாறு அனைத்து மகளிர் காவல் நிலையம் |

| | | |
|---|---|---|
| | | மகளிர் காவல் நிலையம் |
| 5. | தூத்துக்குடி | கடம்பூர் அனைத்து மகளிர் காவல் நிலையம் |
| 6. | தூத்துக்குடி | புதுக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையம் |
| 7. | தூத்துக்குடி | கழுகுமலை |
| 8. | தூத்துக்குடி | எப்போதும்வென்றான் |
| 9. | மதுரை | உசிலம்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலையம் |
| 10. | மதுரை | சமயநல்லூர் அனைத்து மகளிர் காவல் நிலையம் |
| 11. | மதுரை | திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலையம் |
| 12. | மதுரை | பாலமேடு |
| 13. | இராமநாதபுரம் | எமனேஸ்வரம் |

இவை தவிர, மாண்புமிகு அமைச்சர்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், பின்வரும் 25 இடங்களில் காவல் நிலையங்களுக்குக் கட்டடம் கட்டக் கோரிக்கை வைத்துள்ளார்கள். இவற்றில், அரசு நிலம் இருக்கும் இடத்தில் உடனடியாகக் கட்டடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு.கோ.சி.மணி – மருவூர்

டாக்டர் க.பொன்முடி – சின்னசேலம்

திரு. எ.வ. வேலு – திருவண்ணாமலை கிழக்கு

திரு. என்.கே.கே.பி.ராஜா – கருங்கல்பாளையம்

திரு. தங்கம் தென்னரசு – மல்லாங்கிணறு

திரு. வெள்ளக்கோயில் சாமிநாதன் – மூலனூர்

டாக்டர் (திருமதி) பூங்கோதை – ஆலங்குளம்
அனைத்து மகளிர் காவல் நிலையம்

திரு. கே.சி. பழனிச்சாமி – கரூர்

திரு. கு. பிச்சாண்டி – திருவண்ணாமலை
நகரக் காவல் நிலையம்

திரு. எஸ்.பி. விஜயகுமார் – சந்தவாசல்

திரு. அர. சக்கரபாணி – அம்பிளிக்கை

திரு. செ.குருசாமி – அம்மாப்பேட்டை

திரு. டி. இராமச்சந்திரன் – தளி

திரு. கே.பி. இராமசுவாமி – மங்களாபுரம்

திரு. ஜி.கே.மணி – மேட்டூர் தாலுகா

திரு. கு. சின்னதுரை – கெங்கவல்லி

திரு. வை. சிவபுண்ணியம் – தலையாயமங்கலம்

திரு. கரி. ராமசாமி – திருவாடானை

திரு. டி. செங்குட்டுவன் – இராயக்கோட்டை

திரு.ஞா.ஜான்ஜோசப் – நித்திரவிளை

திரு. வ. முல்லைவேந்தன் – அ.பள்ளிப்பட்டி

திரு. கே. உலகநாதன் – திருத்துறைப்பூண்டி

திரு. ம.அ. கலீலுர் ரஹ்மான் – அரவக்குறிச்சி

திரு. எஸ்.எஸ்.சிவசங்கர் – ஆண்டிமடம்

திருமதி.டி.யசோதா – திருப்பெரும்புதூர்

புதிய காவல் நிலையங்கள் ஏற்படுத்துதல்: மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் புதிதாக காவல் நிலையங்கள் அமைக்கக் கோரிக்கைகள் தொடர்ந்து வந்தவண்ணம் உள்ளன. மாநிலத்தில் ஏற்கெனவே 1,432 காவல் நிலையங்கள் உள்ளன. தேவையின் அடிப்படையில் புதிதாக பின்வரும் இடங்களில் காவல் நிலையங்கள் சுமார் ரூ.3.2 கோடியில் வழங்கப்படும்.

| வ. எண் | மாவட்டம் | இடம் |
|---|---|---|
| 1. | திருவண்ணாமலை | மேல்மா கூட்ரோடு |
| 2. | விழுப்புரம் | பகண்டை கூட்டுசாலை |
| 3. | நாமக்கல் | நல்லிப்பாளையம் |

| | | |
|---|---|---|
| 4. | சென்னை | நொளம்பூர் |
| 5. | திண்டுக்கல் | ரெட்டியார்சத்திரம் |
| 6. | விழுப்புரம் | காணை |

வேலூர் மாவட்டம், காட்பாடியில், காவல் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் புதிதாகக் கட்டப்பட வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று, 18 இலட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடம் ஒன்று கட்டப்படும்.

சென்னையில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் புதிய கோட்டம் ஏற்படுத்துதல்: சென்னை மாநகரத்தில் தற்போது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் வடசென்னை மற்றும் தென் சென்னை ஆகிய 2 கோட்டங்கள் உள்ளன. சென்னை மாநகரில் பல மாடிக் கட்டடங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்திற்கொண்டும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் செயலாக்கத்தை மேலும் விரிவுபடுத்தவும், சென்னை மாநகரில் தற்போது செயல்பட்டு வரும் வட சென்னை மற்றும் தென் சென்னைக் கோட்டங்களைப் பிரித்து சென்னை நகர மத்தியக் கோட்டம் என்ற புதிய கோட்டம் உருவாக்கப்படும்.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் அலுவலர்களுக்குச் செல்லிடத் தொலைபேசி கட்டணம் வழங்குதல்: தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் தற்போது துணை இயக்குநர்கள், கோட்ட அலுவலர்கள், உதவிக் கோட்ட அலுவலர்கள், நிலைய அலுவலர்களுக்கு 100 செல்லிட தொலைபேசி இணைப்புகள்

வழங்கப்பட்டுள்ளன. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளை மேலும் விரைவாகச் செயல்படுத்த எஞ்சியுள்ள 304 அலுவலர்களுக்கு மாதம் ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.500/ – வீதம் செல்லிடத் தொலைபேசி வசதி செய்து தரப்படும்.

**தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுதல்:** தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 282 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களில் 161 நிலையங்கள் சொந்தக் கட்டடங்களிலும், 30 நிலையங்கள் பகுதி நிரந்தரக் கட்டடங்களிலும், 92 நிலையங்கள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. பகுதி நிரந்தரக் கட்டடங்களிலும், வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வரும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்குப் படிப்படியாக சொந்தக் கட்டடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் பின்வரும் இடங்களில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களுக்குக் கட்டடம் கட்டக் கோரிக்கை அளித்துள்ளார்கள்.

திரு. எ.வ. வேலு – தண்டராம்பட்டு

திரு. அ. தமிழரசு – ஓமலூர்

திரு. ஆர். சிவானந்தம் – ஆரணி

திரு. குத்தாலம் க. அன்பழகன் – குத்தாலம்;

திரு. நா. இராமகிருஷ்ணன் – கம்பம்;

திரு. கே. உலகநாதன் – திருத்துறைப்பூண்டி;

திரு. த. தியோடர் ரெஜினால்டு – தக்கலை

திரு. அர. சக்கரபாணி – ஒட்டன்சத்திரம்

இந்தக் கோரிக்கைகளை ஏற்று, இந்த ஆண்டு, இரண்டு கோடி ரூபாய் செலவில் கட்டடங்கள் கட்டப்படும்.

மாமன்ற உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற வேண்டுமென்று மெத்த பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

❖ ❖ ❖

## சட்டப்பேரவையில்
## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
## கலைஞர் **மு. கருணாநிதி** அவர்கள்
## 2007-2008 ஆம் ஆண்டிற்கான தொழில் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை மானியக் கோரிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்தின்போது ஆற்றிய பதிலுரை (8.5.2007)

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் மானியங்களின் மீது இந்த அவையில் நடைபெறுகின்ற இந்த விவாதத்தின் இறுதிப் பகுதியாக என்னுடைய விளக்கங்கள் சிலவற்றை வழங்க முன்வந்திருக்கின்றேன்.

முதலில் விவாதத்தைத் தொடங்கி வைத்த திரு. தம்பிதுரை அவர்கள், சில புள்ளிவிவரங்களை மானியக் கோரிக்கைப் புத்தகத்திலேயிருந்து எடுத்துக்காட்டி, அவற்றிலே உள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டி, இந்த வேறுபாட்டிற்கு என்ன காரணம் என்றெல்லாம் வினா எழுப்பினார். ஒன்றை நான் சொல்ல விரும்புகின்றேன். பிழைகளைச் சுட்டிக்காட்டுவதும், அவற்றைத் திருத்துகின்ற அந்த வாய்ப்பை எதிர்க்கட்சி ஆளுங்கட்சிக்கோ அல்லது ஆளுங்கட்சி எதிர்க்கட்சிக்கோ தருவது ஜனநாயக முறையிலே ஒன்றும் மாபெரும் பாவம் அல்ல, ஏற்றுக்கொள்ளக்கூடியதுதான். அந்த வகையிலே, அவர் சொன்னது நியாயமான குறைபாடாக இருந்தால், அதை நான்

ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால் அவர், கரும்பு அரைவையைப் பொறுத்தவரையிலே, இந்த மானியக் குறிப்புப் புத்தகத்திலே வந்துள்ள அந்த வரியைப் படித்துக்காட்டிவிட்டு, அ.தி.மு.க. ஆட்சியில் கரும்பு அரைவை 63 இலட்சம் டன் என்று படித்துவிட்டு, தற்போது தி.மு.க. ஆட்சியில் 31–3–2007 வரையில் 46 இலட்சம் டன்தான் என்று சொல்லி, நீண்ட நேரம் கைத்தட்டலை அவருடைய பகுதியிலேயிருந்து பெற்றுக்கொண்டார்.

எனக்கு என்ன பயமென்றால், இந்தக் கைத்தட்டலைப் பார்க்கும்பொழுது, இங்கும் சரி, அங்கும் சரி-இந்த ஆட்சி தொடங்கியதற்குப் பின்பு, தேர்தல் நடைபெற்றதற்குப் பின்பு- நான் பலமுறை இந்த அவைக்கு வந்து, இந்த இருக்கைகள், மேஜைகள் இவைகளையெல்லாம் வேறொரு மாதிரிப்போட்டு, அமைத்து, யாரும் உடனுக்குடன் ஒருவரையொருவர் நெருங்கிவிட முடியாமல், தகராறு வருகின்ற நேரத்திலும் அப்படிப்பட்ட சம்பவங்கள் எதுவும் ஏற்பட்டுவிடாத, ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பதற்காக, அடிக்கடி வந்து பல சீர்திருத்தங்களைச் செய்திருக்கிறேன்.

ஏன் இந்த மேஜையை இவ்வளவு அகலமாகப் போட வேண்டும், ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையிலே இவ்வளவு அகலம் ஏன் இருக்க வேண்டும் என்றெல்லாம் எனக்குத் தோன்றியதற்குக் காரணம் – எனக்குத்

தோன்றவில்லை. எனக்கு அந்த அறிவுரையைச் சொன்னவர் அன்றைய பிரதமர் இராஜீவ் காந்தி அவர்கள். எப்படி இந்த அறிவுரையைப் பெற்றாய் என்று கேட்டால், அதற்கு முன்பு நடைபெற்ற ஒரு சம்பவம், அது இராஜீவ் காந்தியினிடத்திலே வேறு விதமாகச் சொல்லப்பட்டபோது, நான் இங்கே நடைபெற்ற சம்பவங்களுக்கான புகைப்படங்களையெல்லாம் அவரிடத்திலே எடுத்துக்காட்டி "இதோ பாருங்கள் நாங்கள் எங்கே இருக்கிறோம், அவர்கள் எங்கே இருக்கிறார்கள், எப்படி இதெல்லாம் நடந்திருக்க முடியும்" என்றெல்லாம் சொல்லி, ஒன்றிரண்டு பெயர்கள் ஆள் மாறாட்டத்திலே தவறாகச் சொல்லியிருக்கக்கூடும். நான்கூட செங்கோட்டையனை அன்றைக்குக் குற்றஞ்சாட்டினேன். மறுநாளே செங்கோட்டையன் என்னிடத்திலே கண்கலங்க, "நானா அப்படிச் செய்வேன்? என்னையா நீங்கள் சொன்னீர்கள்" என்று சொல்லி, வேறு ஒரு சட்டமன்ற உறுப்பினர்தான் அப்படிச் செய்தார் என்று குறிப்பிட்டார்.

அவர் சொல்லாவிட்டாலும், நான் தெரிந்துகொண்டேன். அப்படியே இருக்கட்டும். அந்த சட்டமன்ற உறுப்பினர் இப்பொழுது இல்லை. அந்தியூர்க்காரர், அவர் இப்பொழுது இல்லை. அதனால் நான் அதை விரிவாக சாட்சியங்களோடு நிரூபிக்க வேண்டுமென்றும் விரும்பவில்லை. ஏன் இந்த மேஜைகளின் அமைப்பு இப்படி மாற்றப்பட்டது என்பதற்காகச்

சொன்னேனேயல்லாமல், வேறல்ல. இப்படி மாற்றப்பட்ட இந்த அமைப்பில், இப்பொழுது சில நேரங்களில் தகராறு, அமளி ஏற்பட்டாலும்கூட, முன்புபோல அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெறாமல் பார்த்துக்கொள்வதற்கு இந்த அமைப்பு பயன்படுகிறது என்பதிலே எனக்கு மிகவும் திருப்தி. அந்தத் திருப்தியோடுதான் இங்கே நடைபெறுகின்ற விவாதங்களையெல்லாம் நான் கவனித்துக் கொண்டிருக்கின்றேன். இதற்கு மேல் எதுவும் நடக்காது என்ற நம்பிக்கையோடு நான் பார்த்துக் கொண்டிருக்கின்றேன். ஆனாலும், சில நேரங்களில் வார்த்தைகள், வாசகங்கள் கொஞ்சம் தடித்த நிலையிலே வெளிப்பட்டுவிடுகிற காரணத்தால், நம்முடைய அவையினுடைய மரபுக்கும், அவையினுடைய ஜனநாயக ஆரோக்கியத்திற்கும் பழுது ஏற்பட்டுவிடுமோ என்கின்ற அந்த அச்சம் எனக்கு இல்லாமல் இல்லை. அந்த அச்சத்தோடுதான், ஒவ்வொரு நாளும் இந்த அவையிலே நான் நடைபெறுகிற நிகழ்ச்சிகளை முழு நேரமும் இருந்து கவனிக்க வேண்டுமென்ற அந்த அக்கறையோடு இருந்து, சென்றுகொண்டிருக்கின்றேன். உடல்நிலை இடம் தராவிட்டாலும்கூட, உள்ளம் இடம் தராத காரணத்தால், எதுவும் நடந்து விடக்கூடாது என்பதற்காக நான் இங்கே அமர்ந்து ஒவ்வொரு நாளும் நடப்பதைக் கவனிக்க வேண்டியவனாக இருக்கிறேன். எல்லோரும் சேர்ந்து நம்முடைய அவையின் கண்ணியத்தைக் காப்பாற்ற வேண்டும்.

“நீங்கள் நேரம் கொடுத்துவிட்டு, இப்பொழுது மறுக்கிறீர்கள்” என்று சபாநாயகரைப் பார்த்தே அவர்கள் சொன்னார்கள். சபாநாயகருடைய அறையிலேதான் அந்த விவாதமே நடைபெற்றது. காலையில் நான் வந்தபொழுது, இன்றைக்குப் பேசுவதற்கு மொத்தமே ஏழு பேர்தான் என்று முதலிலே குறிக்கப்பட்டிருந்தது. அதற்குப்பிறகு அந்த ஏழு, பத்தாக மாற வேண்டுமென்று வாதிடப்பட்டது. நம்முடைய வேல்முருகன் போன்றவர்கள், நம்முடைய செங்கோட்டையன் போன்றவர்கள் எல்லாம் வந்து வாதிட்டார்கள். தம்பிதுரைகூட கோபித்துக் கொண்டு போனார், வேண்டாம் எனக்கு என்று. நான் அதைப் புரிந்துகொண்டேன், கோபமாகப் போகிறார் என்று. நான் தம்பிதுரையினுடைய கோபத்தைத் தாங்க முடியுமா என்ன? என்னோடு பழகியவர் அவர். ஆகவே, அந்தக் கோபத்தைத் தாங்க முடியாமல், உடனே சபாநாயகரிடத்தில், சரி, கொடுத்துவிடுங்கள், எல்லோருக்கும் கொடுத்துவிடுங்கள் என்று சொல்லி, அதற்குப் பிறகு எல்லோருக்கும் நேரம் ஒதுக்கப்பட்டு, அவை நடந்து கொண்டிருக்கிறது.

திரு. தம்பிதுரை பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார். நான் அதை இங்கே சுட்டிக்காட்டினேன். அ.தி.மு.க. ஆட்சியில் **63** இலட்சம் டன் கரும்பு அரைவை என்று சொல்லி, தி.மு.க. ஆட்சியில் **46** இலட்சம் டன்தான் என்று சொன்னார். அவர் எவ்வளவு தந்திரமாக உண்மையை மறைக்கக் கற்றவர் என்பது

அந்தப் புத்தகத்தைப் பார்த்தாலே தெரியும். அதிலே என்ன இருக்கிறது என்றால், அ.தி.மு.க. ஆட்சியில் கரும்பு அரைவை ஓராண்டு காலத்தில் **63** இலட்சம் டன் என்றும், தற்போது **46** இலட்சம் டன் என்பது 31–3–2007 வரையிலேதான். அதாவது ஆறு மாதக் காலம்தான். அ.தி.மு.க. ஆட்சியில் **12** மாதக் காலம். அப்போது **63** இலட்சம் டன் இருந்தது உண்மை. இங்கே ஆறு மாத காலம்தான் என்பதால் **46** இலட்சம் டன் என்று இருக்கிறது என்பதை, நான் நண்பர் தம்பிதுரை அவர்களுக்கு எடுத்துக்கூற கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்னொன்றை அவர்கள் சொன்னார்கள். ஹுண்டாய் கார் தொழிற்சாலைக்கு M.o.U. அம்மா ஆட்சியில்தான் கையெழுத்திட்டதாக அவர்கள் கூறினார்கள். என்னுடைய நினைவு, தெளிவான நினைவு, அதற்கு **18–7–1996** திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் ஹுண்டாய் கார் தொழிற்சாலைக்கு கையெழுத்திடப்பட்டது. அதற்கு முன்பு வேண்டுமானால் ஆட்சியாளர்கள் அவர்களோடு பேசியிருக்கலாம். ஒருவேளை அவர்களோடு பேசியிருக்கலாம். ஆனால் அந்தப் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து M.o.U. போடப்படவில்லை. புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்படவில்லையென்பதற்கு சாட்சியம், நம்மிடத்திலே இருக்கின்ற அந்த ஆவணம்தான். **18–7–1996**ல் தான், தி.மு.க. ஆட்சியிலேதான், ஹுண்டாய் ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று.

அதைப்போல செயின்ட்கோபெயினுக்கும் அம்மா ஆட்சியிலேதான் M.o.U. போடப்பட்டது என்று திரு. தம்பிதுரை அவர்கள் சொன்னார்கள். அதையும் எடுத்துப் பார்த்தால் சரியான ஆவணம் கிடைத்தது. M.o.U. கையெழுத்தானது, **6-1-1997** மற்றும் **22-1-1998** இந்த இரண்டு நாட்களில்தான் பேசி முடிவு செய்து **22-1-1998**ல் இறுதியாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் கையெழுத்திடப்பட்டது. இதிலே ஒன்று, நான் அன்றைக்குச் சொன்னதைப்போல நான் பெருமைப்பட்டுக்கொள்ள விரும்பவில்லை. தேதி தவறு. அதைத் தவிர செய்தி தவறு அல்ல. நாங்கள் இந்தத் தொழிற்சாலைகளைக் கொண்டுவர திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காரணமாக இருந்தது என்பதைச் சொல்லி பெருமைப்பட்டுக்கொள்ள விரும்பவில்லை. எப்படியோ தமிழ்நாட்டிலே தொழில் வளர்ந்தால், பெருகினால், எல்லோருக்கும் இலாபம்தான். எல்லோருக்கும் மகிழ்ச்சிதான். அந்த மகிழ்ச்சியை எல்லோரும் பங்கிட்டுக்கொள்ளலாம். அதிலே எனக்கென்று அல்லது தம்பிதுரைக்கென்று, வித்தியாசம் இல்லை. அனைவரும் அதிலே பங்கிட்டுக் கொள்ளலாம். ஆனால் கட்சி மாச்சரியங்களால் உண்மைகள் மறைந்துவிடக் கூடாது என்ற அந்தக் கவலையோடுதான் இவற்றை நான் சொல்கிறேனேயல்லாமல் வேறல்ல.

இறுதியாகப் பேசிய நம்முடைய திரு. ஜெயக்குமார் அவர்கள்கூட இந்தியாவிலேயே திராவிட முன்னேற்றக் கழக



தமிழரசு
வலகப் பிரதி

ஆட்சியைவிட அதிகமாக, அ.தி.மு.க ஆட்சியில் இந்தியா பெருமை பெற தமிழ்நாட்டில் தொழில் வளத்தைப் பெருக்கியவர் அம்மாதான் என்று குறிப்பிட்டார். அந்தப் பெருமையை பேசிக்கொள்ள நாங்கள் யாரும் குறுக்கே நிற்கவில்லை. ஆனால், உண்மை ஒன்றுதான் குறுக்கிடுகிறது. நான் குறுக்கிடவில்லை அல்லது வேறு யாரும் குறுக்கிடவில்லை. உண்மை, நிதர்சனமான உண்மை குறுக்கிடுகிறது. இந்திய பொருளாதார கண்காணிப்பு மையம் என்று ஒன்று இருக்கிறது. சி.வி.மி.ணி. என்று அதைக் குறுகலான வார்த்தைகளால் அழைப்பார்கள். அந்த சி.வி.மி.ணி. ஏப்ரல் 2001ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இந்தியா பெற்ற மொத்த முதலீட்டில், தமிழ்நாடு 10.69 சதவிகிதம், அதாவது மூன்றாவது இடம் என்று சி.வி.மி.ணி. குறிப்பிடுகிறது. அதே C.M.I.E., அ.தி.மு.க. ஆட்சியில் மார்ச் 2006ல் இந்தியா பெற்ற முதலீட்டில், தமிழ்நாடு 5.79 சதவிகிதம், ஏழாவது இடம் என்று குறிப்பிடுகிறது. இதற்கு நாம் என்ன செய்ய முடியும்? சி.வி.மி.ணி. குறிப்பிடுகிறது. அ.தி.மு.க. 2006–லே ஏழாவது இடத்தில் இருக்கிறது; தி.மு.க. 2001–லே மூன்றாவது இடத்திலே இருந்தது என்று குறிப்பிடுகிறது. இது நம்முடைய குற்றமல்ல. வேண்டுமானால், C.M.I.E.–ஐக் குறை கூறலாம். அதற்குக் கண்டனம் தெரிவிக்கலாம். ஒரு கூட்டம்கூட போட்டுத் தீர்மானம் நிறைவேற்றலாம்.

நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், சென்னையிலேயே எல்லா தொழில் வளங்களும் குவியக்கூடாது என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். இதை நாம் யாரும் மறந்துவிடவில்லை. அப்படி மறக்காத காரணத்தினாலேதான், முன்பு இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் தூத்துக்குடியிலே ஸ்பிக் தொழிற்சாலை வந்தது என்பதை அவர் மறந்திருக்கமாட்டார். இராணிப்பேட்டையிலே சிப்காட் வளாகம்—இராணிப்பேட்டையிலே எப்படி சிப்காட் வளாகம் வந்ததென்றால், ஆட்சி மாறி, 1967—லே அண்ணா தலைமையிலே தி.மு.க. ஆட்சி வந்த பிறகு, அன்றைய தொழில் துறை அமைச்சராக இருந்த மாதவனோடு நாம் இராணிப்பேட்டைக்குச் சென்று, இங்கே ஒரு இடம் திரு. வெங்கட்ராமன் அவர்களுடைய காலத்திலே வாங்கப் பட்டதாமே, அவர் தொழில் அமைச்சராக இருந்தபொழுது. அது என்ன ஆயிற்று என்று விசாரித்தபொழுது, அதை வெங்கட்ராமன் அவர்கள், தொழில் நடத்த உகந்த இடம் அல்ல என்று கூறியதால் அதை விற்றுவிடுவதற்கு ஏற்பாடு நடைபெறுவதாக அங்குள்ளவர்கள் சொன்னார்கள். விற்க வேண்டாம் என்று அங்குள்ள அதிகாரிகளிடம் சொல்லிவிட்டு, அந்த இராணிப்பேட்டையை, – இப்பொழுது சிப்காட் வளாகம் இருக்கிறதே, அந்த இடத்தை விற்காமல், இன்றையதினம் பெரும் தொழில் வளாகமாக இராணிப்பேட்டை விளங்குகிறது

என்றால், அதற்கு அன்றையதினம் நாங்கள் எடுத்த முயற்சிதான் காரணம்.

அதைப் போலவே, திரு. பீட்டர் அல்போன்ஸ் சொன்னதைப்போல, சென்னையிலே மாத்திரம் அல்ல டைடல் பார்க். அது கோவையிலும் வர வேண்டும், சேலத்திலும் வர வேண்டும், மதுரையிலும் வர வேண்டும், திருச்சியிலும் வர வேண்டும், நெல்லையிலும் வர வேண்டும் என்ற முனைப்பான முயற்சியோடுதான் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் உருவாக இருக்கின்றன என்ற நல்ல செய்தியையும் நான் அவருக்குச் சொல்ல விரும்புகின்றேன்.

ஒரு நாடு அல்லது நம்மைப் போன்ற ஒரு மாநிலம் வளர வேண்டுமேயானால்—இது விவசாயத்தை நம்பி இருக்கின்ற நாடு. வேளாண்மை வளம் கொழிக்கின்ற நாடு. வேளாண்மையை அடிப்படையாக வைத்துதான் எதுவும் இங்கே நடைபெற வேண்டும் என்றாலும்கூட, வேளாண்மையை மாத்திரம்தான் நாம் பேணிப் பாதுகாப்போம். அதை மாத்திரம்தான் வளர்த்து, நம்முடைய பொருளாதாரத்தை, வளத்தைப் பெருக்கிக்கொள்வோம் என்று இல்லாமல், நம்முடைய உள் கட்டமைப்புகளையெல்லாம் வளர்த்து, பெருக்கி, அதன்மூலமாக போக்குவரத்து, துறைமுகம், இரயில்வே, விமானம் போன்ற அத்தனை வசதிகளையும் பெருக்கி,

நம்முடைய நாட்டில் நாம் வளத்தைப் பெருக்க வேண்டும். அப்படிப் பெருக்குவதற்கு தொழில்தான் பயன்படும். வெறும் விவசாயத்தை மாத்திரம் நான் ‘வெறும்’ என்று சொன்ன அந்த வார்த்தைக்காகக்கூட நீங்கள் மன்னித்துக்கொள்ள வேண்டும். விவசாயத்தை மாத்திரம் நம்பி நாம் பெறும் வளத்தை இங்கே பெருக்கி, மற்ற நாடுகளோடு போட்டி போட முடியாது. நாம் ஜப்பான் நாட்டோடு போட்டி போட வேண்டுமானால், சீன நாட்டோடு போட்டி போட வேண்டுமானால் பக்கத்திலே இருக்கின்ற பகை நாடுகளோடு போட்டி போட வேண்டுமானால், நட்பு நாடுகளோடு போட்டி போட வேண்டுமானால், நாம் விவசாயத்தை வளர்ப்பது மாத்திரமல்ல, அதே நேரத்திலே தொழில் வளத்தையும் பெருக்கியாக வேண்டும்.

ஒரு காலத்திலே, எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது: நம்முடைய பேராசிரியருக்கும் ஞாபகம் இருக்கும் நிச்சயமாக. நாங்கள் மேடைகளில் அப்பொழுது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, திராவிட இயக்கத்தின் சார்பாக நடைபெறுகிற கூட்டங்களிலெல்லாம் தவறாமல் சொன்ன ஒரு கவிதை உண்டு. பட்டினப்பாலையிலே வருகின்ற வரிகள்:

‘‘நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்

குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடற் துகிரும்
கங்கை வாரியும், காவிரிப் பயனும்
ஈழத்துணவும் காழகத்தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகின்''

என்ற பட்டினப்பாலையைப் பாடி, இப்படி இருந்தது நம்முடைய காவிரிப்பூம்பட்டினம் துறைமுகம்.

அந்தத் துறைமுகத்திலே வந்திறங்காத பொருள் இல்லை. வெளிநாட்டுக் குதிரைகள் எல்லாம் வந்து இங்கு இறங்கும். இங்கே குதிரைகள் இல்லை, அதனால் வெளிநாட்டுக் குதிரைகள் நம்முடைய படைகளுக்காகத் தருவிக்கப்பட்டன. இப்படிக் குதிரைகள் எல்லாம் வந்து இறங்கும். கருங்கறி மூடை, மிளகு, மயில் துத்தம் இப்படிப் பல பொருள்கள் இங்கே வந்து இறங்கும். அப்படிப்பட்ட துறைமுகத்தைப் பெற்றிருந்த நாம் இன்றைக்கு இறக்குமதிக்கோ, ஏற்றுமதிக்கோ எதைப் பெற்றிருக்கிறோம் என்று கவலைப்பட்டு பேசிப் பேசி, அப்படிப் பேசியதன் விளைவாகத்தான் நாம் போர்க்குரல் எழுப்பி, உரிமைக் குரல் எழுப்பி, அப்படி எழுப்பியதன் விளைவாகத்தான் இன்றையதினம் அந்தத் திட்டம், இந்தத் திட்டம், எந்தத் திட்டம் என்றாலும் அந்தத் திட்டம் தமிழகத்திற்கு வர வேண்டும் என்று

வலியுறுத்தி சேது சமுத்திரத் திட்டம் வரையிலே நாம் இன்றைக்குப் பெற்றிருக்கிறோம்.

அறிஞர் அண்ணா முதலமைச்சர் பொறுப்பை ஏற்றவுடன் என்ன செய்தார்? பவனி சென்றாரா, ஊருக்கு ஊர், 'நான் முதலமைச்சராக ஆகியிருக்கிறேன், பார், பார்' என்று. அல்ல. அவருடைய முதல் குரலே எழுச்சிக் குரல். தமிழ்நாட்டின் எழுச்சிக்காக 'எழுச்சி நாள் கொண்டாடு' என்று உத்தரவிட்டார். எதற்காக எழுச்சி நாள்? நாம் நீண்ட நாளாகக் கேட்டு வருகின்ற நெய்வேலி நிலக்கரிக்காக, சேலம் இரும்புத் தொழிற்சாலைக்காக, சேது சமுத்திரத் திட்டத்திற்காக எழுச்சி நாள் கொண்டாட வேண்டுமென்று அன்றைக்கு உத்தரவிட்டார். அந்த உத்தரவை தலைமேல் தாங்கி, இரு வரிசையிலும் உட்கார்ந்திருக்கிற நாம் நடத்திய கூட்டங்கள் ஒன்றல்ல, இரண்டல்ல. நாம் இருவரும் சேர்ந்துபட்ட பாடுதான் இந்த சேது சமுத்திரத் திட்டம். ஆனால், இன்றைக்கு அந்தப் பங்கு வேண்டாம் என்று போகிறீர்கள், எங்களுக்கும் சேது சமுத்திரத் திட்டத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்கிறீர்கள், இருக்கிற சம்பந்தத்தை இல்லை என்று மறுக்கிறீர்கள். இந்த இராமனுடைய பாலம் வந்து கெடுக்கிற கேடு இந்தக் கேடு.

இவ்வளவு திட்டங்களையும் இன்றைக்கு நாம் பெற்றிருக்கிறோம் என்றால், அகில இந்திய அளவிலே பொருளாதாரத்திலே நம்மைவிட மிக்கார் யாரும் இல்லை என்று

எண்ணுகிற அளவுக்கு வளரக்கூடிய வாய்ப்புகளையெல்லாம் நாம் இழந்து விடக்கூடாது. சேலம் திட்டத்திற்காக எப்படிப் போராடினோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அண்ணா மறைந்து விடுகிறார்; நானும் மதியழகனும், அவர் நிதித் துறை அமைச்சராக, நான் முதலமைச்சராக டெல்லியிலே நடைபெறுகின்ற முதலமைச்சர் மாநாட்டிலே கலந்துகொள்கிறோம்; அந்த மாநாட்டிலே இந்திரா காந்தி அம்மையார் பிரதமர், தலைமை வகிக்கிறார், முதலமைச்சர் மாநாட்டில். மொரார்ஜி தேசாய் துணைப் பிரதமர், அவரும் அந்த அவையிலே இருக்கிறார். அப்போது, Draft Plan–வரைவுத் திட்டம், அதை ஒவ்வொரு முதலமைச்சருடைய கையிலும் வழங்குகிறார்கள். அதைப் பிரித்துப் பார்த்த நான்—என்னைப் பேசச் சொல்லி அழைக்கிறார்கள்—சேலம் திட்டம் இடம் பெறாத இந்த வரைவுத் திட்டத்தை தமிழ்நாடு ஏற்றுக்கொள்ளாது என்று அங்கேயே எடுத்துக் கொடுத்துவிட்டு, walk–out செய்வார்களே, அப்போதே நான் walk–out செய்தேன்; செய்யக் கூடாது, முறை அல்ல. முதலமைச்சர்கள் மாநாட்டில் walk–out செய்தது கருணாநிதி அல்ல, தமிழ் உணர்ச்சி அன்றைக்கு walk–out செய்தது. அது நடந்த அடுத்த வாரம், விமானத்திலே நானும், சி. சுப்ரமணியமும் வந்தோம். சி. சுப்ரமணியம் அவர்கள் என்னைவிட அனுபவஸ்தர் அல்லவா? அவர்கள் சொன்னார்கள், "என்ன இப்படிச் செய்துவிட்டீர்கள், walk–out செய்யலாமா, செய்யக்கூடாதே, இன்னும் கொஞ்சம் அழுத்தம்

திருத்தமாகக் கேட்டிருக்கலாமே?'' என்றார்கள். ''இல்லை, இல்லை. தமிழ்நாட்டு மக்களுடைய உணர்ச்சியை எத்தனை முறைதான், எத்தனை தடவைதான் காட்டுவது என்பதற்காகத்தான் இப்படிச் செய்தேன்'' என்று சொன்னேன். அதற்கு அடுத்த வாரம் டெல்லியிலே இருந்து அழைப்பு வந்தது; சென்றோம். அம்மையார், இந்திரா காந்தி அவர்கள், என்னை அழைத்து ''சேலம் திட்டம் கொடுத்துவிட்டேன், என்றைக்குத் தொடக்க விழா வைத்துக்கொள்ளலாம்'' என்று கேட்டார்கள். நானும், சேலத்து நண்பர் இராசாராம் அவர்களும், இங்கிருந்து அம்மையார் அவர்களை அழைத்துக்கொண்டு சேலத்திற்குச் சென்றோம். நம்முடைய வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் எல்லாம் இருந்து பெரிய விழா நடத்தினார்கள்; அப்போது அடிக்கல் நாட்டினோம். இப்படி வந்ததுதான் சேலம் இரும்புத் தொழிற்சாலைத் திட்டம்.

இதைப்போல சேது சமுத்திரத் திட்டம். எந்த அளவிற்குக் கஷ்டப்பட்டோம் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். சேது சமுத்திரத் திட்டத்திற்காக எந்த அளவிற்குக் குரல் கொடுத்தோம் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அந்தத் திட்டமும் இன்றைக்குக் கிடைத்திருக்கிறது. இப்படிப் பல திட்டங்கள் நம்முடைய வளத்தைப் பெருக்கக்கூடிய திட்டங்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன.

தொழில் வளர்ச்சி, விவசாயத்தைப்போல ஒரு நாட்டுக்கு மிக முக்கியமான வளர்ச்சி என்பதை உணர்ந்திருக்கின்ற காரணத்தினால்தான்—அத்தனைபேருக்கும் விவசாயத்தால் வேலைவாய்ப்பு அளித்திட முடியாது. விவசாயம் பெருகினால் ஒரு குடும்பத்திலே இருப்பவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும். பசி, பட்டினி இல்லாமல் வாழ முடியும். வளமாகக்கூட வாழ முடியும். ஆனால், தமிழ்நாட்டில் இருக்கின்ற அத்தனை பேருக்கும். மக்கள்தொகை பெருகப் பெருக, அதுவும் பெருகுவது சாதாரணமாகவா பெருகுகிறது? இப்படிப் பெருகப் பெருக, அத்தனைபேருக்கும், அவர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்பு அளிப்பது என்பது, வெறும் விவசாயத்தை மாத்திரம் நம்பிப் பயனில்லை. தொழில் துறையிலும் நாம் முன்னேறவேண்டும் என்று கருதி, அதற்காக பாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். அவ்வாறு பாடுபட்டதனுடைய பலன்தான், இன்றைக்கு நாம் தொழில் துறையின் வாயிலாக தமிழகத்திலே முன்னேற்றம் பெறுவதற்கு முனைப்பு காட்டிக்கொண்டிருக்கின்றோம்.

முக்கியமாக நம்முடைய தம்பிதுரை கேட்டார், கொள்கை வகுத்தீர்களா? தொழில் துறைக்கு கொள்கை வகுத்திருக்கிறீர்களா என்று கேட்டார். நாங்கள் அந்த உண்மையை ஒப்புக்கொள்கின்றோம். இங்கே குறிப்பிலேயும் சொல்லியிருக்கின்றோம், இன்னும் கொள்கை வகுக்க

வில்லையென்று. ஆனாலும், கொள்கை வகுக்கப்பட்டு தயாராக இருக்கின்றது. அது எங்களுடைய தொழில் துறை செயலாளரால் மீண்டும் ஒருமுறை பார்க்கப்பட்டு, முறைப்படி அமைச்சரவைக் கூட்டத்திலே ஒப்புதல் பெறப்பட்டு வெளியிடப்படவிருக்கிறது. அதற்கிடையிலே தொழில் துறை செயலாளர் உடல் நலமில்லாத காரணத்தால், அவர் மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டிருக்கின்றார். அவர் சுகம் பெற்று விரைவில் திரும்பவேண்டுமென்று நான் தொழில் துறை மானியம் பற்றிப் பேசுகின்ற நேரத்தில் என்னுடைய விழைவை வெளிப்படுத்துகின்றேன். அவர் இப்பொழுது வெளிவந்து அந்தக் காரியத்தை செய்ய முடியாத காரணத்தால், அந்த அறிவிப்பை இந்த மானியத்தோடு சேர்த்து வழங்க முடியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதற்காக நீங்கள் கொள்கை அறிவிப்பே, தொழில் துறை பற்றிய அறிவிப்பே கிடையாதா என்றால், முதன்முதலாக **1996** ஆம் ஆண்டு தொழில் கொள்கையை அறிவித்த அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதை ஞாபகப் படுத்துகின்றேன். நாங்கள் அறிவித்ததைப்போல நீங்களும் அறிவித்திருக்கின்றீர்கள். இரண்டு பேருக்கும் சரியாகப் போயிற்று. யாரும் இதில் பெருமைப்பட்டுக் கொள்வதற்கு ஒன்றும் கிடையாது. ஆனால், நீங்கள் அறிவித்த அந்தக் கொள்கையின் அடிப்படையில் சில காரியங்களை நாங்களும் செய்திருக்கின்றோம். நாங்கள் அறிவித்திருந்த கொள்கையின்

அடிப்படையில், நீங்களும் சில காரியங்களைச் செய்திருக்கின்றீர்கள். எனவே, இந்த இரண்டு காரியங்களும் நம்முடைய மாநிலத்தின் வளர்ச்சிக்காகச் செய்யப்பட்டதாக அமையும். ஆனால், அதிலே சில காரியங்கள் சரிவர நிறைவேறாமல், விமர்சனத்திற்கு உட்பட்டவையாக இருக்கும்.

நம்முடைய ஜெயக்குமார் திடீரென்று சொன்னார், டி.வி. பெட்டிகள் வாங்கியதிலே முறைகேடு நடந்திருக்கிறது என்று. இந்த ஒரு சிறு வார்த்தைகூட, ஒரு முணுமுணுப்புகூட, டி.வி. வாங்குவதைப்பற்றி வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான், மாநில அளவிலே ஒரு கமிட்டியைப் போட்டோம். அந்தக் கமிட்டியிலே நீங்களும் இருங்கள் என்று கேட்டோம். மறுத்துவிட்டீர்கள். ம.தி.மு.க.வைக் கேட்டோம். இணங்கவில்லை. அந்தக் கமிட்டியிலே காங்கிரஸ் சார்பாக, பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக, விடுதலை சிறுத்தைகள் சார்பாக, ஒவ்வொரு கட்சியின் சார்பாகவும் உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். ஒரு இலட்சம் பெட்டிகள் வாங்கலாமா என்று எண்ணினால், ஒவ்வொரு தடவையும் அந்தக் கூட்டத்தைக் கூட்டி, அவர்கள் அத்தனைபேரும் வந்து அமர்ந்து, அவர்களெல்லாம் கருத்து தெரிவித்து, அதற்குப் பிறகு எத்தனை இலட்சம் பெட்டிகள் வாங்குவது என்று முடிவெடுத்து, அந்த முடிவையும் இரகசியமாக வைக்காமல், open secret–என்பார்களே, அதைப்போல அதைத் திறந்த

ஒன்றாக வெளியிட்டு, அப்படி வெளியிட்டதை நிறைவேற்ற, உடனடியாக டெண்டர் அறிவித்து, அந்த டெண்டரை ஏற்று, யார் யார் எவ்வளவு ரூபாய்க்கு வழங்குகின்றார்கள் என்று அவர்கள் முன்வந்து, அவர்களையெல்லாம் அழைத்து, நாமக்கல் கவிஞர் மாளிகையிலே உட்கார வைத்து, அவர்களுடைய பேரங்கள் என்ன என்று கேட்டு, நம்முடைய கமிட்டி உறுப்பினர்கள் அவர்களிடத்திலே விசாரணை நடத்தி, அதற்குப் பிறகுதான் அது முடிவாகிறது.

இப்படி முடிவுசெய்யப்படுகின்றபடி, வாங்கப்பட்ட அந்த டி.வி. பெட்டிகள் எப்படி விநியோகிக்கப்படுகின்றன? மாவட்ட ஆட்சித் தலைவர்கள்மூலம், கீழே இருக்கின்ற அதிகாரிகள் மூலம், ஒவ்வொரு ஊரிலும் அதனை விநியோகிக்கின்றவர்கள், நகரசபையாக இருந்தால் சேர்மன், கிராமமாக இருந்தால் பஞ்சாயத்துத் தலைவர், அந்த ஊரிலே உள்ள முக்கியப் பிரமுகர்கள், ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்தவர்கள், பள்ளி தலைமை ஆசிரியர் இத்தனை பேரையும் அந்தக் குழுவிலே சேர்த்துத்தான் இந்த டி.வி. பெட்டிகள் விநியோகிக்கப் படுகின்றன. இதற்கே நீங்கள் முறைகேடு என்று சொன்னால், முறைகேட்டின் உருவாகவே இருக்கின்றார்களே சிலபேர், அவர்களை என்ன சொல்வீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

அரசு சார்பில் டி.வி. பெட்டி வாங்குவதற்காக, அரசின் சார்பில் நிதி, எல்காட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு, அவர்கள் டி.வி. கம்பெனிகளுக்கு அந்த பெட்டிகள் வாங்கும்போது, வாங்குகின்ற பெட்டிகளுடைய எண்ணிக்கைக்கேற்ப நிதியை வழங்குவார்கள். அதன்படி, எல்காட் நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி முழுவதும் தரப்பட்டுவிட்டது. எல்காட் நிறுவனம், அரசுக்கும் டி.வி. பெட்டிகள் விற்பவர்களுக்கு மிடையே இருந்து இந்தப் பணியை ஆற்றுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறையில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி எத்தகைய சாதனைகளைப் புரிந்துள்ளது என்பதை நானோ அல்லது இங்கே உரையாற்றிய தோழமைக் கட்சிகளின் தலைவர்களோ கூறியதைவிட ஒன்றை உங்களுக்கு நினைவூட்டுகிறேன். இந்த ஆட்சியை நான் ஒப்பிட்டு பேசி எது சிறந்தது, எது சிறப்பில்லாதது என்றெல்லாம் இந்த நேரத்தில் சொல்ல விரும்பவில்லை என்று முதலிலே குறிப்பிட்டு, அந்த ஒப்பிட்டுக் காட்டுகின்ற முறையைக் கைவிட்டிருந்தேன். "ஆனால் நீ என்ன கைவிடுவது, ஒப்பிட்டுக்காட்டு" என்று சொல்வதைப்போல நம்முடைய அ.தி.மு.க. நண்பர்கள், தலைவர்கள் இங்கே பேசியிருக்கின்றார்கள். எனவே, ஒன்றை மாத்திரம் சொல்ல விரும்புகின்றேன். கடந்த அ.தி.மு.க.

ஆட்சியில் 5 ஆண்டு காலத்தில் 5 நிறுவனங்களோடு 2,220 கோடி ரூபாய் முதலீட்டுக்கான திட்டங்களுக்கு M.o.U கையெழுத்திடப்பட்டுள்ளது. அதாவது 5 நிறுவனங்களுடன் 2,220 கோடி ரூபாய் முதலீட்டுக்கு M.o.U கையெழுத்தானது இது 5 ஆண்டு கால ஆட்சியில். கடந்த 12 மாதங்களில், இந்த ஆட்சியில், 8 பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களோடு 6,985 கோடி ரூபாய் முதலீடுள்ள திட்டங்களுக்கு M.o.U புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. இந்துப் பத்திரிகை, 26–4–2007ல் எழுதுகிறது "Good show by automobile, IT sectors: CII survey. Double–digit growth rate in October 2006–March 2007 period. The information technology and automobile industries in Tamil Nadu have registered an impressive performance with double–digit growth during the October 2006–March 2007 period, according to a survey conducted by the Confederation of Indian Industry (CII)–Southern Region."

அதாவது, வாகன உற்பத்தித் தொழிலிலும், தகவல் தொழில்நுட்பத் துறையிலும் சிறப்பான சாதனை 2006 அக்டோபர் முதல் 2007 மார்ச் வரை நடைபெற்றிருக்கிறது என்று இந்தியத் தொழில் கூட்டமைப்பு மதிப்பீடு செய்து அறிவித்திருக்கிறது. இந்தியத் தொழில் கூட்டமைப்பு நடத்திய மதிப்பீட்டின்படி தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பத் தொழிலும்,

வாகன உற்பத்தித் தொழிலும் 2006 அக்டோபர் முதல் 2007 மார்ச் வரையிலான கால கட்டத்தில் இரட்டை இலக்கு வளர்ச்சியை அடைந்து மிகச் சிறப்பான சாதனையை ஏற்படுத்தியுள்ளது என்று குறிப்பிடப்படுகிறது.

"While the I.T. Industry increased its revenue by 25 percent, the automobile and auto component Industry registered an 18 percent growth in production according to the Bi-annual Industry Monitor Survey. Export recorded an excellent growth of 40 percent during this period." என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அரையாண்டு மதிப்பீட்டின்படி தகவல் தொழில்நுட்பத் தொழிலில் 25 சதவிகிதம் வருவாயும், மோட்டார் வாகனம், வாகன உதிரி பாகத் தொழிலில் 18 சதவிகித வருவாயும் அதிகரித்துள்ளது. இந்த அரையாண்டில் ஏற்றுமதி 40 சதவிகிதம் அளவுக்கு அதிகரித்து மிகச் சிறப்பான சாதனையைத் தமிழகம் ஏற்படுத்தியுள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறது. நான் அந்த 8 அல்லது 9 நிறுவனங்களுடைய பெயர்களை எல்லாம் சொல்லி, அதிலே எவ்வளவு பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது என்றெல்லாம் குறிப்பிட்டு, நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. நேரம் வீணாகாது, இருந்தாலும் உங்களுடைய நேரத்தை கெடுக்க நான் விரும்பவில்லை.

மேலும் இந்த அரசின் சார்பாகத் தொழில் வளம் பெருக்க என்னென்ன செய்யப் போகிறோம் என்றால் தொழில் வளத்தைப் பொறுத்தவரையிலே சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் '2007–2008 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் விருதுநகர் மாவட்டத்தில் தொழில் மையம் ஒன்று உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அந்தத் திட்டத்திற்கான நிலங்கள் எல்லாம் கண்டறியப்பட்டுவிட்டன. அந்த மையம் அமைப்பதற்கான விண்ணப்பம் மத்திய அரசிடம் நிலுவையிலே உள்ளது. தொழில் வளர்ச்சியிலே மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள பகுதியின் பொருளாதார வளர்ச்சியில் இத்திட்டம் மிகப் பெரிய முன்னேற்றத்தை உறுதியாக ஏற்படுத்தும் என்று விருதுநகர் மாவட்டத்திலே உள்ள தொழில் விரும்புவோருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்னொன்று, gas pipe line. சில மாதங்களுக்கு முன்பு மத்திய அமைச்சர்கள் சென்னைக்கு வந்து, அந்த pipe line எப்படி function செய்கின்றது என்பதை எல்லாம் எங்களிடத்திலே காட்டினார்கள். நானும், நண்பர் வீராசாமி அவர்களும், அமைச்சர்களும், மற்றவர்களும் அதைப் பார்த்தோம். கிருஷ்ணா, கோதாவரி ஆற்றுப்படுகையில் கிடைக்கும் எரிவாயுவை ரிலையன்ஸ் நிறுவனம் குழாய் மூலமாகச் சென்னைக்கு வழங்கும் திட்டத்தை நிறைவேற்ற கருத்துரு ஒன்று மத்திய அரசுக்கு 2006–2007 ஆம் ஆண்டில்

பரிந்துரை செய்யப்பட்டு அதற்கான அனுமதியும் கிடைத்துள்ளது. அதேபோல், கடந்த ஆண்டு தொழில் துறை மானியக் கோரிக்கையில் அறிவித்தவாறு TIDCO நிறுவனம் குஜராத் பெட்ரோல் நிறுவனத்தோடு இணைந்து மற்றொரு எரிவாயு இணைப்புத் திட்டத்தை உருவாக்க பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. இப்பேச்சுவார்த்தையின் விளைவாக, எரிவாயு மற்றும் எண்ணெய் வளங்களைக் கண்டறிந்து, உற்பத்தி செய்து, தமிழகத்திற்குக் குழாய் மூலம் வழங்கும் பணிகளை மேற்கொள்ள குஜராத் பெட்ரோல் நிறுவனத்தோடு இணைந்து இத்துறையிலே ஒரு புதிய நிறுவனத்தை அமைக்க தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத்திட்டத்தின் முதல் கட்டப் பணிகளுக்காக ஏறத்தாழ 500 கோடி ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. குஜராத் மாநில பெட்ரோலியக் கழகம் தனது இசைவையும் இதற்காகத் தெரிவித்துள்ளது. இத்திட்டத்தின் மீது மாநில அரசு உன்னிப்பான தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதே காலகட்டத்தில், 2005–2006 ஆம் ஆண்டில் ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை தமிழ்நாடு ஏற்றுமதி செய்த பொருட்களின் மதிப்பு 26,237 கோடி ரூபாய். 2006–2007 ஆம் ஆண்டு, இந்த கால கட்டத்தில் ஏற்றுமதி செய்த பொருட்களுடைய மதிப்பு 35,231 கோடி ரூபாய். இது கடந்த ஆண்டைவிட 34.27 சதவீதம் அதிகமாகும்.

சர்க்கரைத் துறையில் தமிழ்நாட்டில் தற்போது 35 ஆலைகள் செயலாக்கத்திலே உள்ளன. கரும்பு அரைக்கப்பட்டது 2005–06ல் 63 இலட்சம் டன். 2006–07ல் திரு. தம்பிதுரை சொன்னதைப்போல 45 இலட்சம் டன் அல்ல, 81 இலட்சம் டன் அதாவது 29 சதவீதம் அதிகம்.

சர்க்கரை உற்பத்தி 2005–06ல் 21 இலட்சம் டன். 2006–07–ல் 26 இலட்சம் டன். 20 சதவீதம் அதிகம். சர்க்கரை உற்பத்தி அதிகமாக ஆகியிருக்கிறது.

நாங்குநேரி பற்றிப் பேசப்பட்டது. முரசொலி மாறன் மத்திய அமைச்சராக இருந்தபோது அதற்கான அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்றது. அப்போது திரு. கிருஷ்ணன் என்ற நண்பர் சி.பி.ஐ. கட்சியைச் சேர்ந்தவர் அங்கே சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். அவரும், அவருடைய கட்சியினரும் மற்றும் அந்த வட்டாரத்துப் பெருமக்களும் அந்த நாங்குநேரித் திட்டத்தை எந்த அளவுக்கு வரவேற்கிறார்கள் என்பதை நேரிலே கண்டு நாங்கள் மகிழ்ந்திருக்கிறோம். ஆனால், அதைக் கிடப்பிலே போட்டுவிட்டார்கள் என்று இங்கே குற்றம் சாட்டப்பட்டது. இடையிலே 5 ஆண்டுகாலம் அது கிடப்பிலே போடப் படுவதற்குக் காரணம் ஆயிற்று. 5 ஆண்டு காலம் கிடப்பிலே கிடந்தும் திட்டம் துருப்பிடிக்கவில்லை. அதை இப்போது நாங்கள் மீண்டும் எடுத்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றப்

போகிறோம். தற்போது அமெரிக்காவினுடைய ATMAC நிறுவ்னம், இந்திய நிறுவனமான A.M.R. நிறுவனம் இரண்டும் இணைந்து இத்திட்டத்தைச் செயல்படுத்த முன்வந்துள்ளார்கள். இதற்கு எவ்வளவு செலவாகும் என்று மதிப்பீடு செய்ததில், 1,025 கோடி ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. மத்திய அரசுக்கு இந்தத் திட்டத்திற்கான விண்ணப்பம் அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் விரைவில் கிடைக்கும். கிடைத்தவுடன் திட்டப் பணிகள் தொடங்கும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், சில அறிவிப்புகள். ஒரகடத்தில் வளர்ச்சி மையத்தில் 285 ஏக்கர் பரப்பளவில் புதிய மின்னணுப் பொருள்களுக்கான ஏற்றுமதி மையம் ஒன்றை சிப்காட் நிறுவனம் உருவாக்கும். இந்தப் புதிய ஏற்றுமதி மையம் தொடக்க நிலையில் சுமார் 1,300 கோடி ரூபாய் முதலீட்டினை ஈர்க்கும். இதன்மூலம் 23,000 பேர் நேரடி வேலைவாய்ப்புகளைப் பெறுவார்கள். இது மையம் என்றதும் திரு. ஜி.கே. மணி அவர்கள் பயப்பட வேண்டாம். இது ஒரகடம். ஒரகடத்திலே உங்கள் அய்யா அனுமதித்திருக்கிறார். அதனாலே ஒரகடத்திலே 285 ஏக்கர் பரப்பளவிலே இது அமையும். சிப்காட் நிறுவனம் இதை அமைக்கும், உருவாக்கும்.

பெருந்துறையில் சிப்காட்டின் வளர்ச்சி மைய விரிவாக்கம். பல தொழிற்சாலைகளை நிறுவவும், புதிய வேலைவாய்ப்புகளை

உருவாக்கும் அவசியத்தைக் கருத்தில்கொண்டு, மேலும் கூடுதலாக 1,256 ஏக்கர் பரப்பளவில் பெருந்துறை தொழில் வளர்ச்சி மையத்தை சிப்காட் நிறுவனம் நடப்பாண்டிலேயே விரிவாக்கம் செய்யும்.

மோட்டார்கள், பம்புசெட்டுகள், போர்ஜிங்குகள், வார்ப்படங்கள் போன்ற பொறியியல் சாதனைங்களை விற்பனை செய்ய புதிய ஏற்றுமதி மையம் ஒன்று பெருந்துறை வளர்ச்சி மையத்தில் 250 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படும்.

ஸ்ரீபெரும்புதூர் – இருங்காட்டுக்கோட்டை – ஒரகடம் தொழிற்சாலைகளுக்குக் கழிவுநீர் மறுசுழற்சி (Recycling) அடிப்படையில் நீர் வழங்கும் திட்டம். தொழிற்சாலை நீரை உற்பத்தி செய்ய மூன்றாம் கட்ட சுத்திகரிப்பு மற்றும் எதிர்மறை சவ்வூடு பரவல் (Tertiary Treatment and Reverse Osmosis) நிலையத்தை அமைக்க சிப்காட் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் இத்திட்டம், இரண்டு ஆண்டுகளில் முழுமையாக நிறைவேற்றப்படும்போது ஸ்ரீபெரும்புதூர், இருங்காட்டுக்கோட்டை மற்றும் ஒரகடம் பகுதிகளின் தொழிற்சாலைகளுக்கான நீர்த் தேவையை முற்றிலும் நிறைவு செய்யும்.

செய்யாறு தொழிற்சாலை வளாகத்தை விரிவுபடுத்துதல். பின்தங்கிய செய்யாறு பகுதியில் வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தந்திடவும், அந்தப் பகுதியை மிகப் பெரிய தொழில் பகுதியாக மாற்றவும் செய்யாறு சிப்காட் தொழில் பூங்கா, மேலும் 2,250 ஏக்கரில் விரிவுபடுத்தப்படும்.

ஸ்ரீபெரும்புதூரில் (Bio–IT Park) தகவல் தொழில்நுட்பப் பூங்கா. 100 ஏக்கர் நிலப்பரப்பில் இந்திய மென்பொருள் தொழில் பூங்கா, சிங்கப்பூரிலுள்ள அசெண்டாஸ் நிறுவனம் ஆகியவற்றோடு இணைந்து, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் உயிரியல் தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றை அமைக்க முடிவு செய்துள்ளது. மொத்தம் 500 கோடி ரூபாய் செலவில் அமையும் இந்த உயிரியல் தகவல் தொழில்நுட்பக் பூங்கா, இந்தியாவிலே இத்தகைப முதல் உயிரியல் தகவல் தொழில்நுட்பப் பூங்கா என்ற சிறப்பைப் பெறும். இத்தொழில் பூங்காவில் ஏறத்தாழ எட்டாயிரம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்படும்.

தரமணியில் கருத்தரங்கு மையத்தோடு கூடிய மூன்றாவது டைடல் பூங்கா. சர்வதேச கருத்தரங்கு மையம், தங்கும் அறை உள்ளிட்ட வசதிகளோடு கூடிய தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளுக்கான மூன்றாவது டைடல் பூங்காவினை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்திற்கு ஏறத்தாழ ரூபாய் 800 கோடி செலவாகும்.

இத்திட்டம் 12,000 மென்பொருள் வல்லுநர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கும்.

இதிலே இரண்டாவது பூங்கா தொடர்பாக வேலை நடந்துகொண்டு இருக்கிறது. இந்த மூன்றாவது பூங்காவினுடைய வேலை ஆரம்பம் ஆகிறது என்பதை இந்த அவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

தரமணியில் டைசல் உயிரியல் பூங்காவை விரிவுபடுத்துதல். உயிரியல் ஆராய்ச்சி நிறுவனங்களின் அதிகப்படியான தேவையைச் சமாளிக்கும் வகையில், கூடுதல் ஆய்வகப் பகுதி ஒன்றை உருவாக்க சுமார் 5 இலட்சம் சதுர அடி பரப்பளவில் 250 கோடி ரூபாய் செலவில், டைசல் உயிரியல் பூங்கா விரிவுபடுத்தப்படும். இந்த விரிவாக்கத் திட்டம் கூடுதலாக 2000 உயிரியல் தொழில்நுட்பம் மற்றும் மருந்துத் துறை விஞ்ஞானிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்கும்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கையாக தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தால் சிறிய சிமெண்ட் தொழிற்சாலை அமைத்தல். கரூர் காகித ஆலைப் பகுதியில் தூய்மையான சுற்றுப்புறச்சூழலை உருவாக்கும் நோக்கத்தோடு 45 கோடி ரூபாய் செலவில் நாள் ஒன்றுக்கு 400 டன் உற்பத்திச் செய்யும் சிமெண்ட் ஆலையை தமிழ்நாடு செய்தித்தாள் காகித

நிறுவனம் அந்த வளாகத்திலேயே அமைக்கும். மேலும், சுண்ணாம்புக் கசடு மற்றும் உலைச் சாம்பலினால் ஏற்படும் தூசி பாதிப்பைத் தடுக்கும். இது செயல்படுத்தப்பட்டவுடன் செய்தித்தாள் துறையிலே வீணாகும் பொருட்களிலிருந்து உயர் ரக சிமெண்ட் தயாரிக்கும் முதல் நிறுவனமாகத் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் இடம் பெறும்.

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்பப் பூங்கா. தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பத் தொழில்களில் ஏற்பட்டு வரும் மகத்தான வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, அம்பத்தூர் தொழிற்பேட்டை வளாகத்தில் காலியாக உள்ள தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்திற்குச் சொந்தமான நிலப் பகுதியில் 4 இலட்சம் சதுர அடிப் பரப்பில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றை 80 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் அமைக்கும். இத்திட்டத்தின் மூலம் 4,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

புவியியல் மற்றும் சுரங்கத் துறையில் தனி ஆய்வுப் பிரிவு அமைப்பது. மாநிலத்தில் கனிம இருப்புகள் குறித்து விரிவாக ஆய்வு செய்ய தனியாக ஆய்வுப் பிரிவு ஒன்று, ஓர் துணை இயக்குநரின் கீழ் புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் தலைமை அலுவலகத்திலே தொடங்கப்படும்.

மணலியிலே உள்ள தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் வெட்டுதல் மற்றும் மெருகேற்றும் தொழிற்பிரிவை நவீனப்படுத்த 20 கோடி ரூபாய் செலவிடப்படும்.

செய்யாறு மற்றும் எம்.ஆர்.கே. கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் வடிப்பகத்துடனான எத்தனால் தொழிற்பிரிவுகள் அமைக்கப்படும். 72 கோடி ரூபாய் செலவில் இது நடத்தப்படும்.

பெரும்பாக்கத்தில் தகவல் தொழில்நுட்ப நகரம் அமைத்தல். காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் மற்றும் பெரும்பாக்கம் கிராமங்களில் 213 ஏக்கர் நிலப் பரப்பில் ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்பவியல் நகரம் அமைக்கப்படும்.

கோயம்புத்தூர் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா விரிவாக்கப்படும். கோவை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் 33 ஏக்கர் நிலப் பரப்பில் ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்ப வளாகம் நிறுவப்படும்.

மதுரையில் வடபழஞ்சி மற்றும் கிண்ணிமங்கலம் கிராமங்களில் 240 ஏக்கர் நிலப்பரப்பிலும், திருச்சி மாவட்டம், நவல்பட்டு கிராமத்தில் 135 ஏக்கர் நிலப்பரப்பிலும், சேலம் மாவட்டம் ஜாகிர் அம்மாபாளையம் கிராமத்தில் 164 ஏக்கர் நிலப் பரப்பிலும், நெல்லை மாவட்டம், கங்கைகொண்டான் கிராமத்தில் 100 ஏக்கர் நிலப்பரப்பிலும் தகவல்

தொழில்நுட்பவியல் கட்டடங்கள் தவிர, குடியிருப்பு மற்றும் சமூக வசதிகள் அடங்கிய ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்ப வளாகம் நிறுவப்படும்.

தமிழ் இணையப் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தக் கட்டடம் அமைக்கப்படும். மைலாப்பூர்–திருவல்லிக்கேணி வட்டம், கோட்டூரில் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்திற்கென இரண்டு ஏக்கர் நிலத்தில் சொந்தக் கட்டடம் உருவாக்கப்படும்.

புதிய அறிவிப்புகள் விரிவாக அச்சிடப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த அறிவிப்புகளை நான் படித்ததாகக் கருதி அவைக் குறிப்பேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த விளக்கங்களோடு என் உரையை நிறைவு செய்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கைகளையாவது அமைதியாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

* * *

to introduce [illegible] with the [illegible]

financial year.

India cannot prosper if farmers do not prosper. I look forward to fruitful deliberations so that we can create a new India in which farmers join in rapid growth.

Thank you.

* * *